செல்வி. சிவகாமிக்கு

அன்புடன்

அப்பரமணியன்

26.5.'78

# தொன்னூல் விளக்கம்

ச. வே. சுப்பிரமணியன்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

''என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ்செய்யு மாறே''

தமிழ்ப் பதிப்பகம்
2, கால்வாய்க்கரைச் சாலை, கஸ்தூரிபாய் நகர்
அடையாறு சென்னை-600 020

## BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| 1. Title of the book | — | Tonnūl viḷakkam |
| 2. Author | — | Dr. S. V. Subramanian, Director and Chief Professor, I.I.T.S, Adaiyaru, Madras-600 020. |
| 3. Language | — | Tamil |
| 4. Edition | — | First |
| 5. Date of Publication | — | May 1978 |
| 6. Copyright holder | — | Tamil pathippakam |
| 7. Paper used | — | 15.2 Double demy |
| 8. Size of the book | — | 22.5×18.5 Cms |
| 9. Printing types used | — | 10, 12 |
| 10. Number of Pages | — | 185 |
| 11. Number of Copies printed | — | 2000 |
| 12. Printer | — | Novel Art Printers, Madras-600014 |
| 13. Binding | — | Card Board |
| 14. Price | — | Six Rupees |
| 15. Publisher | — | Tamil Pathippakam 2, Canal Bank Road, KasturiBai Nagar, Adaiyaru, Madras-600 020. |
| 16. Subject | — | Grammar–A Critical study |
| 17. Summary | — | A Critical study with Original and Notes. |

The Paper used for this book was supplied by the Government of India at concessional rates.

## என்னுரை

தொன்னூல் விளக்கத்தை வெளியிட வேண்டும் என்ற எண்ணம் நீண்ட நாட்களாக இருந்து வந்தது. இப்பொழுது அதற்கு வாய்ப்புக் கிடைத்துள்ளது. எனவே தற்பொழுது நூல் வடிவில் தங்கள் கைகளில் காண்கின்றீர்கள்.

தொன்னூல் விளக்க நூலாசிரியரும் உரையாசிரியரும் வீரமா முனிவரே. முழுஉரையோடு வெளியிட வேண்டும் என்ற ஆர்வ முண்டு. ஆயின் பொருள் நிலையில், குறைந்த செலவில் இந்நூலைப் பெற்று பயன்பெறவேண்டும் என்ற நோக்கம் காரணமாக இது இவ் வடிவில் வெளிவருகின்றது. இந்நூலுள் வீரமா முனிவர் வாழ்க்கை வரலாறும், தமிழ்த் தொண்டும், தொன்னூல் விளக்கம் பற்றிய திறனாய்வும், தொன்னூல் விளக்கம் மூலமும் விளக்கமும் அமைந் துள்ளன. மூலத்தையாவது தமிழ் மக்கள் அனைவரும் கற்று வீரமா முனிவர் எண்ணங்களைத் தெரிந்து கொள்ளுதல்வேண்டும் என்பதே நோக்கம்.

பத்தாவது அனைத்திந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் கருத்தரங்கு மாநாட்டை யொட்டி இந்நூல் வெளிவருவது மகிழ்ச் சியைத் தருகிறது.

தொன்னூல் விளக்கம், தொடர்பான நூல்கள் அனைத் தையும் தந்து உதவிய மறைமலை அடிகள் நூலகர் திரு. முத்துக் குமாரசாமி அவர்கட்கும், பலவேலைகளுக்கிடையே உரிய காலத் தில் குறித்த நேரத்தில் இந்நூலை அச்சிட்டுத்தந்த நாவல் ஆர்ட் அச்சகத்தார்க்கும் என்னுடைய அன்பு கலந்த நன்றியைத் தெரி வித்துக் கொள்கின்றேன்.

கோயம்புத்தூர் அன்பன்
28-5-78 ச. வே. சுப்பிரமணியன்

# உள்ளே


| | பக்கம் |
|---|---|
| வீரமாமுனிவர்—வாழ்க்கை வரலாறு | 1 |
| வீரமாமுனிவர்—தமிழ்த் தொண்டு | 6 |
| தொன்னூல் விளக்கம் | 22 |
| திறனாய்வு | 25 |
| உரையாசிரியர் | 55 |
| தொன்னூல் விளக்கம் மூலமும் விளக்கமும் | 71 |
| எழுத்ததிகாரம் | 74 |
| சொல்லதிகாரம் | 83 |
| பொருளதிகாரம் | 109 |
| யாப்பதிகாரம் | 125 |
| அணியதிகாரம் | 155 |
| நூற்றொகை | 172 |
| சூத்திர முதற்குறிப்பு அகராதி | 177 |

## வீரமாமுனிவர்—வாழ்க்கை வரலாறு

பிறநாட்டில் பிறந்து தமிழ்நாடு போந்து தமிழுக்குத் தொண்டாற்றிய பலருள் வீரமாமுனிவர் முதன்மையானவர். தன் முப்பதாம் அகவையின்பின் பிறமொழியைக் கற்று அதில் பல சிறந்த நூல்களைப் படைக்கும் புலமை பெற்று விளங்கியதில் உலக வரலாற்றில் இவருக்கு ஒரு தனியிடம் உண்டு.

1680-ஆம் ஆண்டு நவம்பர் எட்டாம் நாள், இத்தாலி நாட்டு வெனிஸ் மாகாணத்தின் காஸ்திகிளியோன் என்னும் சிற்றூர் இவரைப் பெறும் பெருமையை அடைந்தது. இயற்பெயர் ஜோசப் கொன்சுடான் சியுசுபெஸ்கி. கொண்டால்போ பெஸ்கி, எலிசபெத் பெஸ்கி என்பவர் இவரது பெற்றோர். இவரது தந்தையார் பிரபுப் பட்டம் பெற்றவர்.

முதலில் தம் ஊர்ப்பள்ளியில் கல்வி கற்றார். பின் உரோமாபுரியில் இலக்கியம் கற்றுத் தேர்ச்சியடைந்தார். கிரேக்கம் எபிரேயம்,இலத்தீன்,பிரெஞ்சு, போர்த்துகீசு ஆகிய மொழிகளையும் பயின்றார். கலைப்பயிற்சியும் சமயப்பயிற்சியும் சிறுவயது முதலே பெற்ற பெஸ்கி இயேசு சமயத் தொண்டராதல் வேண்டும் எனத் துணிந்தார். தம் விருப்பினைப் பெற்றோர்களிடம் தெரிவித்து அவர்களின் அனுமதியுடன் 1698, அக்டோபர் இருபத்தொன்றும் நாள் தமது 18-வது வயதில் துறவு பூண்டு இயேசு சபையில் சேர்ந்தார்.

1700-1701-இல் ரவீனு நகரில் இலக்கணம் கற்பிக்கும் ஆசிரியராகப் பணிபுரிந்தார். 1701-இல் பொலோனு நகருக்கு அனுப்பப்

பட்டார். அங்கு 1703 வரை தத்துவம் பயின்று அதில் தேர்வு பெற்றார். 1703 முதல் 1706 வரை அங்கு ஆசிரியராகப் பணி புரிந்தார். 1701-இல் பொலோஞு நகர் கல்லூரியில் 'The great Sodality of the alumni'-இன் உதவி இயக்குநராகத் தேர்ந் தெடுக்கப்பட்டார். 1705-1706-இல் அதன் இயக்குநரானார்.

1706 முதல் 1710 வரை வேத சாஸ்திரம் கற்றார். 1709 செப் டம்பரில் அவருக்குக் குருக்கள் பட்டம் வழங்கப்பட்டது (1710 என்பாரும் உளர்). குருக்கள் பட்டம் பெற்ற பெஸ்கி இயேசு வின் எழில் நெறியை இந்தியாவினுள் பரவச் செய்ய வேண்டும் என்ற எண்ணம் கொண்டார். தம் எண்ணத்தைச் சமயத் தலைவர் களிடம் வெளியிட்டார். அவர்களும் பெஸ்கியாருடைய நிலையைப் பாராட்டித் தமிழ் வழங்கும் மதுரை மாநகர்ப் பகுதிக்கு அனுப்புவ தென்று முடிவு செய்தனர்.

இவர் இந்தியாவிற்கு வந்தடைந்த ஆண்டினைக் கூறுவதில் வரலாற்றாசிரியர்கள் முரண்படுகின்றனர். 1710-இல் இத்தாலி யிலிருந்து புறப்பட்டு 1711-இல் இந்தியாவிற்குள் நுழைந்ததாக ஆர்.எல். ஆரோக்கியம் பிள்ளையும், ஜி. பொனிபாசும் கூறுவர். பெஞ்சமின் பேபிங்டன், போப் முதலானோர் 1700 என்பர். ஜார்ஜ் வில்லியம் மாஹன் என்பார் 1707-இல் இந்தியாவை அடைந்த தாகக் கூறுவர். பெஸ்ஸே என்பவர் 1710-இல் செப்டம்பர் அல்லது அக்டோபரில் இந்தியா வந்தடைந்ததாகக் கூறுவர். 1710 அல்லது 1711-இல் வந்ததாகக் கொள்ளலாம். பண்டாரம் நம்பியார், போர்த்துக்கல் நாட்டு லிஸ்பன் துறைமுகத்திலிருந்து புறப்பட்ட தாகக் கூறுவர்.

கோவாவிலிருந்து கொச்சி மூலமாகப் பெஸ்கி அம்பலக்காடு மடத்தை அடைந்தார். அம்பலக்காட்டில் இயேசுசபைக் குருக் களைப் பயிற்றுவிக்கும் வேத சாஸ்திரக் கல்லூரி ஒன்று இருந்தது. மதத் தொண்டிற்கு ஏற்றவாறு தம்மை ஆயத்தம் செய்துகொள்ள அக்கல்லூரியில் ஒருமாதம் தங்கிச் செபத்திலும் தபத்திலும் ஈடுபட்டார்.

பின்னர் மதுரைப்பகுதியிலுள்ள காமநாய்க்கன்பட்டி என்னும் சிற்றூரைத் தமது ஊழியக் களமாகத் தெரிந்து கொண் டார். எனினும் தொடக்க காலத்தில் ஆறு ஏழு ஆண்டுகட்கு நிலையான ஓரிடமின்றிப் பல இடங்களைச் சுற்றிச்சுற்றிப் போந்து வேலை செய்தார்.

மொழியால் கலந்தால்தான் தன் சமயப் பணிகள் இனிது நிறைவேறும் என்று எண்ணினார். வாய்ப்புக் கிடைக்கும் போதெல் லாம் அருந்தமிழை எழுதவும் பேசவும் படிக்கவும், தெளிவாகக்

கற்றூர். தேர்ந்த பழக்கத்திஞல் சமயச் சொற்பொழிவினையும் தமிழில் ஆற்றும் ஆற்றல் பெற்றூர். சுப்பிரதீபக் கவிராயர் இவரது தமிழாசான்களுள் ஒருவர். இக்காலத்தில் தெலுங்கு, கன்னடம், ஆரியம், இந்துஸ்தானி ஆகிய மொழிகளையும் கற்றூர்.

தமிழரொடு தமிழராய் வாழ நினைத்த பெஸ்கி தன் இத்தாலியப் பெயரைத் தைரியநாதர் என்று மொழிமாற்றம் செய்து கொண்டார். `இந்நாட்டில் அடியெடுத்து வைத்தது முதலே மது, மாமிசம், மீன் முதலியவற்றை உட்கொள்ளும் பழக்கத்தை அறவே ஒழித்தார். இந்திய முறைப்படி சமையல் செய்வதற்கு இரண்டு தமிழர்களை அமர்த்திஞர். அவர்களால் சமைக்கப் பட்டதை ஒருபொழுது மட்டுமே உண்டார்.

அவர் வீட்டிலிருந்தபொழுது தலையில் சிவப்புநிறப் பட்டுத் தொப்பி அணிந்திருப்பார். நெற்றியின் நடுவில் கோபிச் சந்தனத் தால் பெரிய திலகமிட்டிருப்பார். சிவப்புக் கரையும் காவி உடலும் பொருந்திய சோமன் ஒன்றை அரையில் கட்டியிருப்பார். மற்ருெரு செந்நிற ஆடையைத் தலைக்குல்லாவும் தோட் புயங் களும் மறையும்படி சால்வையாகப் போர்த்தியிருப்பார். காலடி களில் பாதணிகளும் பூண்டு பார்வையில் இந்துத் துறவி போன்றே தோன்றுவார். பதணிட்ட புலித்தோலிருக்கையில் அமர்ந்து பரமனைத் தொழுவார்.

வெளியில் செல்லும்பொழுது ஒரு கையில் தலைப்பூண் இட்ட கோலும் மற்ருெரு கையில் மறைநூல் அடங்கிய பெட்டியொன்றும் இருக்கும். சில நேரங்களில் கைக்கோலன்றி 'கண்ட கோடரியும்' பிடித்திருப்பார். காதில் கடுக்கனும், சுண்டுவிரலில் மோதிரமும் அணிந்திருப்பார். புலித்தோலினை விரித்த பூஞ்சிவிகையில் அமர்ந்து வெண்கொற்றக்குடையும் பிறவிருதுகளும் முன்னே செல்ல இருபக்கங்களிலும் ஏவலர்கள் மயில் விசிறியால் விசிறச் செல்வார்.

தைரியநாதர் பணிபுரிந்த இடங்களில் கயத்தாற்றுப் பாளையம் குருக்கள்பட்டி, திருச்சியிலுள்ள ஆவூர், தஞ்சையையடுத்துள்ள சிலவிடங்கள் ஆகியன குறிப்பிடத் தக்கனவாகும். 1713-இல் அவர் குருக்கள் பட்டியில் பணிபுரிந்து கொண்டிருந்தார்.

அஞ்ஞான்று போலிக் கிறித்துவன் ஒருவன் மதுரை நாயக்கரது சேனையிடம் சென்று தான் ஒரு முஸ்லீம் எனவும் தைரியநாதர் ஏராளமான பொன்னும் மணியும் வைத்துள்ளதாகவும் பொய் யுரைத்து, தனக்கு அவரைச் சார்ந்தோர் தீங்கிழைத்ததாகவும் கூறிஞன். இது கேட்ட படைத்தலைவன் தன்படையினரில் ஒரு பகுதியைத் தைரியநாதர் வைத்துள்ள பொருளைக் கவரவும் துன்

புறுத்தியவர்களைப் பிடிக்கவும் அனுப்பினன். அவர்களும் தைரிய நாதரை 1713-இல் டிசம்பர் 21-ஆம் நாள் கைது செய்து தலைவனிடம் அழைத்துச் சென்றனர். அங்கு அவருக்குக் மரண தண்டனை விதிக்கப்பட்டது.

கோயில் பொருட்கள் படைவீரர்களால் கொள்ளையடிக்கப் பட்டன. ஆயின் அவர்கள் எதிர்பார்த்த புதையல் கிட்டவில்லை, இடையில் செய்தியறிந்த குருக்கள்பட்டி கிறித்தவர்களால் படைத்தலைவனுடன் வாதாடப்பட்டு விடுதலை செய்யப்பட்டார். அங்கு இடிந்து தகர்ந்த கோவில்களைப் புதுப்பித்து விட்டு 1714-ஆம் ஆண்டின் முற்பகுதியில் கயத்தாற்று வட்டத்தினின்று வெளியேறி ஓராண்டளவு ஓய்வு எடுத்துக் கொண்டார்.

ஓய்வுக்குப்பின் இராமநாதபுரத்தில் தொண்டாற்றும்படி விதிக்கப்பட்டார். 1716-இல் தஞ்சை கொள்ளிடத்தின் கரையை அடுத்து அமைந்திருந்த ஏலாக்குறிச்சி என்னும் கிராமத்தை அடைந்தார். இவர் நாட்டிய சபைகளில் ஏலாக்குறிச்சி என்னும் காவலூர்ச்சபை முதன்மை வாய்ந்தது.

ஏலாக்குறிச்சியில்தான் அன்னைமேரிக்குத் திருக்காவலூர்க் கோயில் கண்டார். அவ்வாலயத்தின் திருப்பெயர் அன்னைமேரி என்பதாகும். அம்மேரியம்மையார் வடதிசை நோக்கி நின்று கலையுடுத்து, முடிதரித்து கையில் மணிமாலை தாங்கி, கருணை அலையெறியும் கண்களுடன் காட்சியளித்தாள். அக்காட்சியின் எழிற்தோற்றங்கண்டு முனிவர் அகங்குழைந்து 'அடைக்கல மாதா' என்றழைத்தார். அவ்வடைக்கலநாயகிமேல் வெண்கலிப்பா, அடைக்கலமாலை, திருக்காவலூர்க்கலம்பகம் முதலியன பாடினர். 1734-இல் அரியலூர் மழவராயன், சாசனம் வாயிலாக இக் கோவிலுக்கு மானியம் அளித்தான்.

1726-இல் தேம்பாவணியை இயற்றினர். இது மதுரையில் புலவர்களின் முன்னிலையில் அரங்கேற்றம் செய்யப்பட்டது. அதன் சிறப்பு நோக்கி அப்புலவர்களால் வீரமாமுனிவர் என்னும் பட்டம் பெற்றர். 1727-இல் தரங்கம்பாடித் தேனிய சபையார் முறைகேடாகக் கத்தோலிக்க சமயத்தைத் தாக்கி எழுதியதால் முனிவர் 1728-இல் வேத விளக்கம், பேதக மறுத்தல், லுத்தேரினத் தியல்பு என்னும் மூன்று உரைநடை நூல்கள் எழுதி அவர்கள் கொள்கைகளை வன்மையாகக் கண்டித்தார்.

ஏலாக்குறிச்சியை விட்டு வெளியேறி இருந்த காலங்கள் ஒன்றில் திருமுதுகுன்றத்தையடுத்த கோனன்குப்பம் என்னும் ஊரில் சமயப்பணி செய்து வருங்கால் அவ்வூரிலுள்ள இயேசு சபையில், கிறித்தவ மக்கள் தொழுவதற்கென்று ஒரு கோயில் அமைத்

தார். அக்கோவிலுள் தேவமாதாவின் திருவுருவத்தை எழுப்பித் தார். அத்தேவமாதா தமிழகத்து மாதினைப்போன்று உடை உடுத்திக் கொண்டு ஞானமகவாகிய இயேசு பெருமானைக் கையில் ஏந்தி நிற்கும் திருக்கோலத்தில் அமைக்கப்பட்டாள். அம்மாதா விற்குப் 'பெரிய நாயகி' எனப் பெயரிட்டு அழைத்தார். இவ் வன்னையின் அருள் கொண்டே தேம்பாவணி பாடியதாகவும் சிலர் கூறுவர்.

இவர் ஆவூரில் சமயப்பணி புரிந்து கொண்டிருந்தபொழுது அவ்வூர், பகைவர்களின் தாக்குதலுக்கு ஆளானது. கிறித்தவர்கள் அதிகமாகப் பாதிக்கப்பட்டனர். இவர் பாதிக்கப்பட்டவர்களுக் காகப் படைத்தலைவனிடம் சென்று உரையாடி பாதிப்புகளினின் றும் அவர்களைக் காப்பாற்றினார். அவ்வமயம் முகமதிய வீரர்கள் தங்கியிருந்த பாளையத்தின் காளைகளையும் பசுக்களையும் கள்வர்கள் கவர, வீரர்களால் ஆவூர் மக்கள் தண்டிக்கப் பட்டனர். முனிவர் அதனைத் தடுக்க முனைந்தார். அதனால் அவர்கள் அவரைத் தங்கள் தலைவனிடம் கொண்டு சென்றனர். அத்தலைவனுக்கு உண்மை நிலையினை உணர்த்திய வீரமாமுனிவர் அவன் மூலமாகச் சந்தாசாகி பின் நட்பினைப் பெற்றார். தைரியநாதர் பெயருக்கேற்ப வீரம் படைத்தவராகவே விளங்கியமையை இந்நிகழ்ச்சிகள் சுட்டு கின்றன.

சந்தாசாகிபோடு கொண்ட தொடர்பினை வலுப்படுத்த மூன்றே மாதங்களில் பாரசீக மொழியைப் பயின்றார். அவன் மூலமாக முஸ்லீம்கள் கிறித்துவர்களைத் தாக்குவதைத் தடை செய்தார். ஏனைய படைகளாலும், மக்களாலும் இடையூறு நேர்ந்தாலும் அதனை முகமதிய வீரர்கள் தடை செய்யுமளவிற்கு அங்கு வீரமாமுனிவர் செல்வாக்குப் பெற்றார். சந்தாசாகிபு மகா ராஷ்டிரர்களிடம் சரணடையும் வரை இவர்களது நட்பு நீடித்தது.

சந்தா சாகிபு இவருக்குத் திவான் பதவியும், இஸ்மாதி சந் நியாசி என்ற பட்டமும் கொடுத்துக் கௌரவித்தான். இஸ்மாதி சந்நியாசி எனும் இப்பாரசீகச் சொற்றொடர் 'தூயதுறவி' எனப் பொருள் தரும். இத்துடன் ஆண்டொன்றுக்குப் பன்னீராயிரம் ரூபாய் வருமானம் தரும் பூக்குளம், மால்வை, அரசூர், நல்லூர் எனும் நான்கு ஊர்களையும் மானியமாக அளித்தான். 350 சான் தோமை நாணயங்களை உபகாரச் சம்பளமாகவும் கொடுத்தான்.

1737 வரை திருச்சியிலும் அதனை அடுத்த குணம்பட்டியிலும் தொண்டாற்றிய முனிவர் தூத்துக்குடியை அடைந்தார். இங் கிருந்தே தமிழ்—இலத்தீன் அகராதியை முடித்தார் என்பர். சந்தாசாகிபு சரணடைந்தபின், திருநெல்வேலி மாவட்டத்தி

லுள்ளமணப்பாடு என்னும் ஊரை அடைந்தார். அங்கிருந்து 1746-இல் அம்பலக்காட்டிற்கு அனுப்பப்பட்டார். அங்குள்ள வேதசாஸ்திரக் கல்லூரியின் கண்காணிப்பாளரில் ஒருவராகப் பணிபுரிந்தார். 1747-இல் மணப்பாட்டில் பிப்ரவரி நான்காம் நாள் இவ்வுலக வாழ்வினை நீத்தார்.

சுமார் 37 ஆண்டுகள் வீரமாமுனிவர் இந்தியாவில் மதத் தொண்டும் தமிழ்த்தொண்டும் புரிந்தார். பல இலக்கிய, இலக்கண நூல்கள், உரைநடை நூல்கள், அகராதிகள் எழுதிய இவர் தமிழ் எழுத்துக்களிலும் சீர்திருத்தம் புரிந்துள்ளார். பன்மொழிகளிலும் புலமைபெற்ற இவரால் தமிழிலக்கியம் தழைத்தது.

இவரது வரலாற்றை1798-இல் சாமிநாதப் பிள்ளை எழுதியிருந் தார். அவர் எழுதிவைத்திருந்த குறிப்புகள், முனிவர் நூற்களைச் சேகரிக்கச் சென்றபொழுது கிடைத்த விபரங்கள், அவர் நூற்களி லிருந்து கிடைத்த செய்திகள் முதலியவற்றைக் கொண்டு அ.முத்து சாமிப்பிள்ளை என்பவர் முதன்முதலில் விரிவான வரலாற்றினை ஆங்கிலம் (1840) தமிழ் (1843) இரண்டிலும் எழுதினர்.

இராமசாமி சண்முகம் என்பவர் வீரமாமுனிவர் பிள்ளைத் தமிழ் பாடியுள்ளார். துரை. சுந்தரமூர்த்தி என்பார் வீரமா முனிவர் கலம்பகம் இயற்றியுள்ளார்.

## வீரமாமுனிவர்–தமிழ்த்தொண்டு

மதப்பணி புரிய தமிழ்நாடடைந்த வீரமாமுனிவர் தமிழ்ப் பணியும் புரிந்துள்ளார். ஒருவேளை தமிழ்ப்பணி புரியவே வந் தாரோ என எண்ணி வியக்குமளவிற்குப் பல அரிய நூல்களை இயற்றியுள்ளார். தமிழர்களின் பாராட்டைப் பெறும் முனிவர், உலகிற்குத் தமிழை அறிமுகப்படுத்த தன் அகராதி, இலக்கண நூல்கள் மூலம் பேருதவி புரிந்துள்ளார். இவரது புலமைக்குப் பல மொழியறிவு பெரிதும் துணை புரிந்துள்ளது.

தமிழாய்வு குறிப்பிட்ட சில வட்டங்களுக்குள்ளேயே சுழன்று வருவது வருந்துதற்குரியது. இவரது வரலாறு பற்றி அறிந்த அளவுகூட நூல்கள் பற்றித் தமிழர் உணரவில்லை. பெரும்பான் மையான நூல்களுக்குச் சிறந்த பதிப்புகளுமில்லை. இத்தாலிய ராய்ப் பிறந்து தமிழராய் வாழ்ந்து தமிழுக்குச் சிறப்பு செய்த முனிவரின் நூல்களைத் தமிழுலகு அறிதல் வேண்டும்.

மதநெறிக்கண் நின்று தொண்டாற்றிய புத்த, சமணத் துறவி கள் பல்வேறு இலக்கிய இலக்கணங்களை ஆக்கி அவ்வவ் நூல்கள் வாயிலாகத் தம்மதக் கொள்கைகளை மக்களிடையே பரவச் செய்த

முறையினை வீரமாமுனிவரும் பின்பற்றினர் எனக் கூறின் பிழையன்று.

முனிவரின் நூல்களைச் செய்யுள் இலக்கியம், உரைநடை இலக்கியம், இலக்கணம், அகராதி, மொழிபெயர்ப்பு, மருத்துவம் என வகைப்படுத்தலாம்.

*செய்யுள் இலக்கியம்*

தேம்பாவணிக் காப்பியமும் பிற சிற்றிலக்கியங்களும் பாடித் தன் புலமையை வெளிப்படுத்தியுள்ளார்.

*தேம்பாவணி :* இது 1726-இல் இயற்றப்பட்டது. இந்நூல் மதுரைப் புலவர்கள் முன்னிலையில் அரங்கேற்றம் செய்யப்பட்டு 'வீரமா முனிவர்' என்னும் சிறப்புப் பட்டத்தையும் பெற வைத்தது. மரி அகிர்தாள் எழுதிய 'சூசைமாமுனிவர் வரலாறு' என்னும் நூலின் வழி நூலே தேம்பாவணியாகும்

முதனூலைப் பின்பற்றித் தமிழ்மரபை யொட்டி எழுதியுள்ளார். தமிழ்நூற் முறைப்படி நாட்டுப் படலத்தோடு நவிலத் தொடங்கி மங்கலகரமான முடிசூட்டுப் படலத்தோடு முடிக்கிறார். நாடு நகர வருணனைகள் பெரும்பாலும் தமிழ்மரபைத் தழுவியே செல்கின்றன. ஐந்திணைப் பகுப்பும் திணைமயக்கமும் கூறுவர். நிலத்தின் மர இனங்களும் பயிர் வகைகளும் தமிழ் நிலத்திற்குரியனவேயாகும். சோலைகளையும் சோலைகளில் வாழ் பறவைகளையும் தமிழ் மயமே ஆக்கினர். கதைத்தொடர்பான ஆட்கள் பலருடைய பெயர்களையும் தமிழ்ப்பெயர்களாகவே திருத்திக் கொண்டார். வளன், சதாசிவன், அறஞ்சயன், காந்தரி, நகுலன் முதலிய பெயர்களும் தக்க சான்றுகளாகும்.

முனிவர் இந்நூலுக்கு இட்டபெயர் தேம்பாவணியே. தேம்பா அணி எனப்பிரித்து வாடாமாலை என்றேனும் தேம்பா அணி எனப் பிரித்து தேன்போன்ற பாக்களின் வரிசையென்றேனும் பொருள் படுத்தலாம். நூல் 36 படலங்களாகவும், 3615 செய்யுட்களாகவும் அமைந்துள்ளது. நூலை மூன்று காண்டங்களாகப் பிரித்தது முனிவர் அன்று; அதனை முதலாவதாகப் பதிப்பித்த (1851) டுபுயி சுவாமியாராவர் என்பர். இக்காண்டங்களுக்குப் பெயரில்லை. எனினும் யூதேயா காண்டம், எகிப்துசெல் காண்டம், வீட்டுப்பேறு காண்டம் என்று அழைக்கலாம் என்பது சிலர் கருத்து. ஒவ்வொரு காண்டத்திலும் 12 படலங்கள் உண்டு. இக்காப்பியத்துள் 90 வண்ணங்களும் (சந்தம்) நூற்றுக்கு மேற்பட்ட மறைக்கதைகளும் காணப்படுகின்றன.

ஒவ்வொரு படலத்தின் கண்ணும் நான்கைந்து வகைச் சந்தங்கள் உள்ள பாக்கள் உண்டு. பொருட்பிரிவுக்கியைந்தவாறு பத்தி பத்தியாகக் கட்டுரை ஆக்குவதற்கு நிகரச் சின்னஞ்சிறு பொருட் பிரிவுக்கும் ஏற்றவாறு வெவ்வேறு சந்த அமைப்புகளோடு கூடிய பாக்களாக அமைந்துள்ளது.

ஏனைய ஆசிரியர்கள் எழுதிப் போந்த காவியங்கட்கும் இதற்கும் இடையிட்டதோர் முரண்பாடொன்று உண்டு. ஏனைய இலக்கியங்கள் அகப்பொருள், புறப்பொருள் இலக்கணங்களைத் தழுவிச் செல்வன. இக்காவியம் அகப்பொருள் இலக்கணத்துள்ளோ புறப்பொருள், இலக்கணத்துள்ளோ அமைவது அன்று. ஈரறம் ஓரறமாகப் பொருந்தி இல்லறத் துறவிகளாய் இயைந்த காவிய நாயகனையும் நாயகியையும் கொண்டது.

சூசைமா முனியின் வரலாற்றைக் கூறிச்செல்லும் தேம்பாவணி கிறித்துவ நீதிநூலாகவும் விளங்குகின்றது. இயற்கை வனப்பில் இறைவனின் தோற்றம்,இல்லறம், துறவறங்களின் முதன்மை, தொழிலின் மாண்பு, கற்பின் தலைமை, கடவுளின் இலக்கணம், வானோரின் உயர்வு, நரகரின் தாழ்வு, பாவத்தின் கொடுமை, அறத்தின் அருமை, காமத்தின் தீமை, காதலின் பெருமை இவை யாவும் கொண்டிலங்குவது.

கத்தோலிக்கர் சிறப்பாகப் போற்றும் உண்மைகள் யாவும் காப்பியத்தில் விளக்கப்படுகின்றன. ஞானஸ்நானம் போன்றவற்றையும், கத்தோலிக்க மறைக்கு மனம் மாற்றுவதற்கு ஒருவன் கூறக் கூடியவற்றையும் கதைபோலும் தத்துவமாகவும் நவிலப் பட்டுள்ளது.

தேம்பாவணி நூலெங்கும் சிதறிக்கிடக்கும் சொல்லணிகளும் பொருளணிகளும் அளவிறந்தன. மடக்கு, சிலேடை, இரட்டுற மொழிதல் முதலிய பல்வேறு அலங்காரங்கள் காவியத்திற்குப் பேரலங்காரமாய் உள்ளன. ஆசிரியர் ஆங்காங்கே புகுத்தியிருக்கும் பழமொழிகள் அவரது பரந்த உலகியல் அறிவைக் காட்டும் பாங்கில் மிளிர்வன. குறள், சிந்தாமணி, கம்பன் கருத்துகளை மிகுதியாக ஆண்டுள்ளார். புறநானூறு, நாலடி, கலி போன்ற பிற இலக்கியங்களையும் இதனுள் காணலாம்.

தமிழ் இலக்கியங்களில் தலைசிறந்த காவியங்களில் நான்கினைத் தேரின் தேம்பாவணியும் அவற்றுள் ஒன்றாகும் என்பர் பிஷப் கால்டுவெல் ஐயர். இருபதாம் படலத்திற்குத் தாசோவின் 'எருசலேமின் விடுதலை' என்னும் காப்பியம துணைநூலாக அமைந்தது என்பர் டாக்டர் தனிநாயகம்.

கிறித்துவ தர்மங்களை இந்திய மக்கள் அறியவேண்டும் அறிந்து கடைப்பிடித்து உய்ய வேண்டும் என்பதனை நோக்கமாகக் கொண்ட இந்நூலிற்கு 1729-இல் உரை ஏற்பட்டது. இதனை ஆசிரியரே இயற்றினர் என்றும் அவரது மாணவர்தான் இயற்றினர் என்றும் இருவிதங்களாகக் கூறுவர். பாவுரைப் பதிகத்தினைக் கொண்டும் உரையிடையே காணப்படும் முரண்பாடுகளைக் கொண்டும் உரையை மாணவரே எழுதியிருக்க வேண்டுமெனப் பெரும்பான்மையோர் முடிவுரைக்கின்றனர். ஜெகராவு முதலியார் விருத்தியுரையும், ரா.லே. ஆரோக்கியம் பிள்ளை குறிப்புரையும் கூறியுள்ளனர். இவை முறையே 1901,1961—64-ஆம் ஆண்டுகளில் பதிப்பிக்கப்பட்டன.

இதற்குச் சுருக்கம் ஒன்றை மரிய அந்தோனி செய்து உரையும் நவின்றுள்ளார் (1960). மு. ஆரோக்கியசாமிப்பிள்ளை தேம்பாவணிக் கருப்பொருள் அல்லது சூசையப்பர் மான்மியம் என்னும் உரைநடை நூலை இயற்றியுள்ளார். மற்றும் சில வசன நூல்களும் தேம்பாவணி ஆராய்ச்சி, தேம்பாவணிச் செல்வம் போன்ற ஆய்வு நூல்களும் தோன்றியுள்ளன. பு. ஆரோக்கியநாதரின் தேம்பாவணிக் கீர்த்தனை (1863) என்னும் நூல் குறிப்பிடத்தக்கது. சுப்பிரதீபக் கவிராயரின் உதவியுடன் தேம்பாவணியை வீரமாமுனிவர் இயற்றியதாகப் போப் கூறியுள்ளார். எப்.டபிள்யூ. எல்லீஸ் ஆங்கிலத்தில் செய்த மொழிபெயர்ப்பை அ. முத்துசாமிப் பிள்ளை எடுத்துக் காட்டியுள்ளதாகக் குறிப்புள்ளது. ஆயின் முழுமையான விவரம் தெரியவில்லை.

கித்தேரியம்மாள் அம்மானை: வீரமாமுனிவர் இயற்றிய பிரபந்தங்களுள் முதன்மை வாய்ந்தது. பாமரர்களுக்காக எழுதப்பட்ட இந்நூல் பண்டிதரையும் கவர வல்லது. 1100 கண்ணிகள் கொண்டது.

போர்த்துக்கல் நாட்டு மன்னன் காயன் என்பவனின் மகள் கித்தேரி. வேதமதப் பற்றுதலுடையவள். உடன் பிறந்த எட்டுத் தமக்கையருடன் பெற்றோரால் கைவிடப்பட்ட கித்தேரி, வேத மதத்தை எதிர்த்த தந்தையால் இருமுறையும், புரோசன் என்ற சிற்றரசனால் ஒருமுறையும் சிறை செய்யப்பட்டு கடவுள் அருளால் அங்கிருந்து தப்பினாள். சர்வேசுவரனுக்கே தன் கற்பை நேர்ந்து தந்தை தீர்மானித்த மணத்தை வெறுத்தாள். சத்திய மறையைத் தழுவி அதைக் கைநெகிழ்ந்த புரோசனை மனந் திருப்பியதிலிருந்து அவள் இருப்பிடத்தை அறிந்த தந்தையின் ஆணையால் தான் தவ வாழ்வு, புண்ணிய வாழ்வு நடத்திய பொம்பேரு குன்றின் அடியில் தோழியர் முப்பது பேர்களுடன் கி.பி. 130-இல் சிரச்சேதம் செய்யப்பட்டாள்.

இவளின் விரிவான வரலாற்றுடன் உடன்பிறந்த எண்மரின் வரலாற்றினையும் சுருக்கமாகக் கூறுவதே இந்நூல். இலுசித்தானியா (போர்த்துக்கல்) நாட்டின் பெருமையைக்கூறிக் கதையைத் தொடருகிறார். 1849-இல் முதலில் அச்சிடப்பட்டது. தொடர்ந்து 1876, 1927, 1947-ஆம் ஆண்டுகளிலும் பதிப்பிக்கப்பட்டது. இந்நூலுக்கு ஜே. ஜி. சுந்தரம் (1947), இறைக்குருவனார் (1977) ஆகியோர் உரை எழுதியுள்ளனர்.

பிலிப்பைன் தீவிலுள்ள மணிலா நகரிலிருந்து தூய கித்தேரியம்மாளின் சொரூபம் பெற்றார் வீரமாமுனிவர். அச்சொரூபத்தினையும் திருக்காவலூர்க் கோவிலில் அமைத்தனர். அந்தப் புனிதவதியின் பரிந்துரையால், தாம்பெற்ற நலன்களுக்குப் பரிந்துரையாகவும் அன்னவளின் பக்தியைப் பரப்பும் வழியாகவும் அவளுடைய அற்புத சரிதையை அம்மானையாகச் செய்தார்.

*திருக்காவலூர்க் கலம்பகம் :* திருக்காவலூர் அம்மன் மீது 101 பாடல்கள் கொண்டது. பக்திச்சுவை நிரம்பியது. குலசேகராழ்வார் திருவேங்கடவன் மீது கொண்ட பக்தியை ஒத்தது வீரமாமுனிவர் திருக்காவலூர் அம்மன்மீது கொண்ட அன்பு.'தாளணிந்த மதி முதலாத் தமியனுமக் கமலத்தாள் தாங்கிலேனோ...' எனும் பாடல் இதனை உணர்த்தும், 'போதலரும் தண்சினைக்காப் பூங்காவல் ஊர் அரசி' எனவரும் அம்மானைப்பாடல் சிறப்புப் பெற்ற ஒன்றாகும். பல சந்தங்களைத் தன்னகத்தே கொண்ட இந்நூல் அரிய கருத்துகள், செயல்கள் ஆகியவற்றுடன் மடக்கு முதலிய சொல்லணிகளாலும் உவமை முதலிய பொருளணிகளாலும் சொற்சுவை, பொருட்சுவை பொருந்தச் செவ்விய நடையில் அமைந்துள்ளது.

இந்நூலுக்கு1872-இல் தஞ்சை அருளப்ப நாவலர் உரை எழுதியுள்ளார். திருச்சி தமிழிலக்கிய கழகத்தினரும் உரையுடன் நூலை வெளியிட்டுள்ளனர்.

*அடைக்கல மாலை:* திருக்காவலூர் அன்னையின் மீது முனிவர் பாடிய மற்றொரு பிரபந்தமே இது. முனிவர் அன்னையின் மீது கொண்டுள்ள பக்தியின் முழுநிலையினை இதில் காணலாம். வேண்டியவர்களுக்கு வேண்டியதையருளும் கருணைக்கடலாக, அனைவருக்கும் தாயாக இப்பிரபந்தத்தில் அன்னையைக் காட்டுகிறார்.

வீரமாமுனிவர் 60 கண்ணிகள் கொண்ட இந்நூலைப் பாடும் பொழுதே அன்னை காட்சி தந்தாள் என்பர். 41-வது கண்ணி பாடும்பொழுது காட்சி கண்டு பிறகு சந்தம் மாற்றி அன்னையைக் கண்ட ஆனந்தப் பெருக்கில் பிறவற்றைப் பாடினார் எனவும் கூறுவர். அன்னையின் பெருமைகளை அடுக்கிக் கொண்டே போய்,

தாயே இத்தனை சிறப்புகள் இருக்க உன்னிடம் இடம் இருக்கும் போது நானிருக்க இடமில்லையா என்றேங்குவது சிறப்புடைத்து.

வெண்கலிப்பா: திருக்காவலூரில் கோவில் கொண்டுள்ள அடைக்கலமாதாவின் மீதே இதுவும் பாடப்பெற்றது. நூலின் தொடக்கத்திலேயே அன்னையின் அழகைக்கூறி அவள்பால் நம்மை அழைக்கின்ருர். அஞ்சாது அவளை அணுக வேண்டுகிருர். தேவையில்லாவிட்டாலும் அழகுத்தாயின் அருள்முகங் காண அழைக்கிருர். இந்நூலில் அன்னையின் அருள்திறமும் ஆற்றலும் அன்பும் அழகும் ஐம்பது பாடல்களில் பேசப்பட்டுள்ளன. ஒரு பாடலில் திருக்காவலூருக்குச் சென்ற பக்தனுக்குத் தேவஅன்னை கருணை புரிவதைச் சிறப்பித்துள்ளார்.

அன்னையழுங்கல் அந்தாதி : இதுவும் அடைக்கல நாயகியின் மேல் பாடப்பட்டதே. தேவஅன்னை தன் உள்ளத்தில் நொந்ததை அந்தாதித் தொடையில் 100 கலிவெண்பாக்களில் பாடியுள்ளார்.

இப்பிரபந்தங்கள் 1731-33 ஆண்டுக்குள் பாடப்பட்டனவாகும்.

கருணும்பரப் பதிகம் : இது முனிவரின் மற்ருெரு பிரபந்தமாகும். அப்பதிகத்தின் ஒவ்வொரு பாவின் இறுதியிலும்.' உலகுன் தாள் பணியாவாறு என்னே?' என்ற வினு அமைந்துள்ளது. இப்பதிகம் தேவாரம் என்றும் வழங்கப்படுகிறது. இதன் முதற் பாட்டிலுள்ள முதலிரண்டு சீர்களான 'மூவா முதலா' என்பது சீவக சிந்தாமணியின் கடவுள் வாழ்த்துப் பாட்டின் முதற்சீர்களே என்பர். இறைவனின் பெருமையை, அவனது இரக்கத்தை மிகுதியாக இங்குப் பேசுகின்ருர். 12 பாடல்களைக் கொண்ட இந்நூலுக்குக் கோயம்புத்தூரைச் சேர்ந்த மறைத்திரு. சின்னப்பர் உரையெழுதியிருப்பதாகத் தெரிகிறது.

வண்ணக்கலைகள் : இந்நூல் வண்ணம் என்றும் வழங்கும்; ஒரே பாடல்தான் கொண்டது. எனினும் இவ்வண்ணம் வேறு எவராலும் அருணகிரிநாதருக்குப்பின் பாட இயலுமா என்று நாம் எண்ணும் வண்ணம் பாடியுள்ளார்.

இப்பிரபந்தங்கள் அனைத்தும் இணைந்து திருப்பாவணி என்றழைக்கப்படுகின்றன. இவை 1856-இல் புதுவையில் பதிப்பிக்கப்பட்டன. இப்பிரபந்தங்களுடன் தேம்பாவணியின் தொகுப்பும் இணைந்த 'தேம்பாமாலை' எனும் நூல் ஒன்றும் புதுவையில் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

### உரைநடை இலக்கியம்

கற்ருேரன்றிப் பாமரரும் எளிதில் புரிந்து கொள்ளும் பொருட்டு உரைநடை நூல்கள் ஆக்கித்தந்த பெருமை வீரமா

முனிவருக்குரியதாகும். பரமார்த்த குருவின் கதை இவர் படைத்த முதல் உரைநடை நூலாகும். மற்றும் பல சமயத் தொடர்பான உரைநடை நூல்களை இயற்றியுள்ளார். முனிவரின் உரைநடை மூவகை அமைப்புகளைக் கொண்டது. அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தின் விளைவாகத் தோன்றிய பரமார்த்த குருவின் கதை, நிருபம், திருச்சபைக் கணிதம் ஆகிய நூல்களில் கொச்சைச் சொற்களுடன் கூடிய கொடுந்தமிழ் நடையைக் காணலாம். சமயத் தொண்டர்களுக்காக இயற்றப்பட்ட வேதியர் ஒழுக்கம், வாமன் சரித்திரம் முதலியன செந்தமிழ் நடையைக் கொண்டமைவன. இலக்கண நூலான தொன்னூல் விளக்கத்திற்கு உரை யெழுதியவீரமாமுனிவர் அதில் செந்தமிழின் இலக்கியநடையைக் கையாண்டுள்ளார். மூவகையான உரை நடையினைப் பயன்படுத்தியுள்ள போதிலும் மணிப்பிரவாள நடையை நீக்கிக் கூடியவரையில் தனித்தமிழ்ச் சொற்களையே பயன்படுத்தினர். வேண்டும்பொழுது புதுச்சொற்களை உருவாக்க அவர் தயங்கவில்லை. ஆயின் அவை தமிழ் அடிச்சொற்களினின்றே பிறந்து தமிழ்ச்சொற்களாகவே அமைந்துள்ளன. வாக்கிய அமைப்பிலும் தமிழ்மரபினைப் பின்பற்றினர். தமிழ் உரைநடையின் தந்தையென்றசிறப்பினையும் பெற்றார்.

**பரமார்த்த குருவின் கதை :** இந்நூலுக்கு முனிவர் இலத்தீனில் முன்னுரை கூறியுள்ளார். அதில் பேச்சுத்தமிழின் இலக்கணம் படிக்கும் வெளிநாட்டு மதத்தொண்டருக்குப் பாடப்புத்தகமாக இந்நூலமைந்து கசப்பான இலக்கணத்தை இனிப்பாக நகைச் சுவையின் வழியே காட்ட வேண்டும்; இக்கதைநூலினை அச்சிட்டால் எழுத்துப்பிழைகள் எழுவதைத் தடுக்கலாம் என்பன போன்ற நோக்கங்களுடன் இந்நூலைப் படைத்துள்ளதாகக் கூறியுள்ளார். மொழி பயிலத் தொடங்குவோர் இதை எளிதில் பயன் படுத்த எல்லாக் கதைகளையும் இலத்தீனிலும் மொழி பெயர்த்துள்ளார்.

இந்துமத மடாதிபதிகளை ஏளனம் செய்வதற்காக இந்நூல் எழுந்தது என்று போப் அவர்களும், சீர்திருத்தக் கிறித்தவர்களைப் (புராட்டஸ்டண்டு) பரிகாசம் செய்ய என்று வேறுசிலரும் கூறும் கூற்றுகள் முனிவர் முன்னுரையால் பொருளற்றவைகளாகக் காணலாம். இந்நூலைச் சுப்பிரதீபக் கவிராயர் இயற்றினர் என்பதும் பொருந்தாக் கூற்றே.

ஆற்றைக் கடக்கச் செய்த சூழ்ச்சி, குதிரை முட்டை வாங்குதல், வாடகை மாட்டில் ஏறிப்போதல், குதிரை பிடிக்கத் தூண்டில் போடுதல், குரு குதிரை ஏறிப்போதல், சுங்கம் வாங்குவோன் வரி கேட்டல், பார்ப்பான் சோதிடம் சொல்லுதல்,

குரு குதிரை மேலிருந்து விழுதல், குருவைப் புதைத்தது ஆகிய கதைகளைக் கொண்டது.

ஆற்றைக் கடந்த கதையினைப் போன்று திரு. வி. க. அவர்களும் அறுவருக்குப் பதில் நூற்றுவர் எனக்கொண்டு வேறுசில மாற்றங்களுடன் ஒருகதையினைப் படைத்துள்ளார். வேதியர் ஒழுக்கத்தில் முனிவர் ஒரு கதையை உவமைக் கதையாகப் பயன் படுத்தியுள்ளார். பிரதாபமுதலியார் சரித்திரத்தில் வேத நாயகம் பிள்ளை மாட்டின் நிழலுக்கு வாடகை கேட்கும் கதையைப் பயன்படுத்தியுள்ளார்.

இந்நூல் கன்னடம், தெலுங்கு, மலையாளம், ஆங்கிலம், பிரெஞ்சு, ஜெர்மன், செக் ஆகிய மொழிகளில் மொழிபெயர்க்கப் பட்டுள்ளது. இலத்தீனில் முனிவரே மொழிபெயர்த்துள்ளார். ஆங்கில மொழிபெயர்ப்பு பெஞ்சமின் பேபிங்டன் என்பவரால் செய்யப்பட்டு 1822-இல் லண்டனிலும் 1859-இல் புதுவையிலும் பதிப்பிக்கப்பட்டுள்ளது. இவர்தன் முன்னுரையில் தான் இலத்தீன் மூலமாகிய தொன்னூல் விளக்கத்தினை ஆங்கிலத்தில் 1814-இல் மொழிபெயர்த்ததாகக் குறிப்பிட்டுள்ளார்.

ஜே.ஏ.டுபாய்ஸ் என்பவரால் பிரெஞ்சில் மொழிபெயர்க்கப் பட்டு 1877-இல் பாரிசில் வெளியிடப்பட்டது. கன்னட மொழி பெயர்ப்பு ஆங்கிலத்துடன் 1877-இல் ஜே. பரில்லே என்பவரால் பெங்களூரில் பதிப்பிக்கப்பட்டது. தெலுங்கு மொழி பெயர்ப்பு 1861-இல் பதிப்பிக்கப்பட்டது.

1845-இல் தமிழ்ப்பதிப்பு இலத்தீன் மொழிபெயர்ப்புடன் இணைந்து ஏற்பட்டது. இதன் மறுபதிப்பு 1851-இல் ஏற்பட்டது. 1859, 1865 ஆகிய ஆண்டுகளில் தமிழ்ப்பதிப்பு மட்டும் பாண்டிச் சேரியில் ஏற்பட்டது.

வேத விளக்கம் : உருவ வழிபாட்டுக் கொள்கையை மறுத் துரைத்த தரங்கம்பாடி லூதரன் சபையினருக்கு மறுப்பாக இந் நூலை இயற்றினார். இது 1727-இல் தோன்றியது என்பர். தமது மேலாளர் உத்தரவின்பேரில் இந்நூலை இயற்றினார். கத்தோலிக்க மார்க்க உண்மைகளை விரித்துரைப்பது இந்நூல். கிறித்துவ வேதக்கொள்கைகளை எவரும் மறுக்கமுடியாதபடி தெளிவாக 140 உட்பிரிவுகளில் எழுதினார். நூலின்பின் பொருளகர வரிசை வைத்த முதல் உரைநடைநூல் இதுவே ஆகும். ஆயின் இந்நூலினை லூதரன் சபையினர் 'திருச்சபைப் பேதகம்' என்ற நூலால் மறுத்துரைத்தனர். 1728-இல் இந்நூல் புதுவையில் வெளியிடப்பட்டது. 1842,1868 ஆண்டுகளில் மறுபதிப்புகள் ஏற்பட்டன.

*பேதகமறுத்தல்:* திருச்சபைப் பேதகத்தை அறவே மறுக்கும் மாண்புடன் வீரமாமுனிவர் இதனை எழுதினர். முனிவரின் கண்டன உணர்விற்கும், அங்கத உள்ளத்திற்கும் சிறந்த சான்ருக இந்நூலமைந்துள்ளது 25 அத்தியாயங்களை உள்ளடக்கியது. புதுவையில், 1858, 1868, 1898 ஆகிய ஆண்டுகளில் பதிப்பிக்கப் பட்டதாகத் தெரிகிறது.

*லுத்தேரினத்தியல்பு :* 23 சிறிய அத்தியாயங்களைக் கொண்ட இந்நூலும் திருச்சபைப் பேதகத்தின் மறுப்பாக1728-இல் தோன்றியதே.1842, 1847, 1868 ஆகிய ஆண்டுகளில் புதுவையில் பதிப்பிக்க பட்டது. 1858, 1868 ஆண்டுகளில் வேத விளக்கத்தின் பிற்சேர்க்கையாகவும் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

*வேதியரொழுக்கம் :* வேதத்தைப் புகட்டும் உபதேசி மார்களுக்கு ஞானத்தைப் புகட்டும் பொருட்டு வேதியர் ஒழுக்கம் என்னும் அரியநூலை 1730-இல் ஆக்கினர். இந்நூல் கத்தோலிக்கர் அல்லாத கிறித்தவர்களாலும் பாராட்டப் பெற்றது. 'பெஸ்கியாரின் உரைநடை நூல்களுள் வியத்தகுநூல் வேதியர் ஒழுக்கமே' என்பர் போப். 'இலக்கணம், அகராதி ஆகியவற்றிற்கு அடுத்த படியாகப் பெஸ்கியார் எழுதிய நூல்களுள் மிக அருமையான நூல் வேதியர் ஒழுக்கம்' என்பது வெலிசா குரு எலிசாகூல் ஐயர் கூற்ருகும். வேதியர் தொழிலியல்பு முதல் வேதியர் ஒழுக்கத்துக் குறுதி வரை 20 தலைப்புகளின்கீழ் இந்நூல் அமைந்துள்ளது.

1843-இல் புதுவையில் இது பதிப்பிக்கப்பட்டது 1858, 1888, 1898-இல் தொடர்ந்து பதிப்பிக்கப்பட்டது. இந்நூல் இலத்தீன் தெலுங்கு, கன்னட மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட சிறப்புடையது. இலத்தீன் மொழிபெயர்ப்பு 1861-இல் நாகபட்டனத்தில் பதிப்பிக்கப்பட்டது. ஜே.பி டிரிங்கால் மொழிபெயர்த்துள்ளார். தெலுங்கு மொழிபெயர்ப்பு (அத்தியாபகசீலமு) 1891-இல் திருத்தந்தை கென்னடியால் பதிப்பிக்கப்பட்டது. கன்னட மொழி பெயர்ப்பு (வேதபோதகாரகர்மா) மைசூர் பிஷப் சர்போன்னே என்பவரால் திருத்திப் பதிப்பிக்கப்பட்டது.

*ஞானக்கண்ணுடி :* வேதியர் ஒழுக்கத்தில் பிற்சேர்க்கையாக இணைக்கப்பட்டுள்ள 8 அத்தியாயங்களை இந்நூலாகக் கொள்வர். இதனுசிரியர் வீரமாமுனிவர்தானு என்பதில் ஐயங்கொள்வர் இந்நூல் கன்னடத்தில் 'ஞானதைப்பனு' என்ற பெயரில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

*திருச்சபைக் கணிதம் :* கத்தோலிக்கத் திருமறையில் ஐரோப்பியக் கணிதப்படியும் இந்துக் கணிதப்படியும் ஆண்டுதோறும் வரு

கின்ற ஆண்டுப்பிறப்பு, மாதப்பிறப்பு, வாரம்,தேதி ஆகிய வேற்றுமைகளை அறியவும், கடன்திருநாட்கள், ஒருசந்திநாட்கள், சுத்த போசன நாட்கள், திருநாட்கள் ஆகியவற்றைத் தெரிந்து கொள்வதற்கும் பயன்படும் பஞ்சாங்கக் கணிதமே இந்நூலாகும் இந்நூல் இலத்தீனில் எழுதப்பட்டு, தமிழ் - இலத்தீன் அகராதியில் நான்காவது பிற்சேர்க்கையாக அமைந்துள்ளது. அயல்நாட்டிலிருந்து இங்குத் தம்மதத்தினைப் பரப்ப வருபவர்களுக்காக இலத்தீனில் எழுதினர் போலும். இது பிரெஞ்சிலும் மொழிபெயர்க்கப் பட்டுள்ளது. 1745 சூனுக்குமுன் இது தோன்றியிருத்தல் வேண்டும். இது செய்யுளாலும் உரைநடையாலும் ஆனது. இதனைச் சோதிட நூலாக எலிஸாகூல் என்பார் கொள்வர்.

*வாமன் சரித்திரம்:* தேம்பாவணியின் 28-ஆம் படலத்தில் வரும் கிளைக்கதையே இஃதாகும். இதனை முனிவர் தனது தமிழ் - இலத்தீன் அகராதியில் மூன்றாவது பிற்சேர்க்கையாக அமைத்துள்ளார். செந்தமிழ்நடைக்குச் சான்றாக இதனை எழுதினர்.

*வாக்கிய சித்தாந்தம் :* முனிவர் இவ்வாறு ஒரு நூல் செய்ததாக முத்துசாமிப்பிள்ளை கூறியுள்ளார். இறந்துபட்டதாகக் கருதப்படும் இந்நூலினைப் பற்றி அறிய முடியவில்லை.

*ஞான விளக்கம் :* இப்படியொரு நூலை முனிவர் இயற்றியதாக அவரது வரலாற்றினை எழுதிய முத்துசாமிப்பிள்ளை கூறுவர். இந்நூல் ஆரம்பத்தில் கடவுளுக்கு இருக்க வேண்டிய பண்புகளாக ஆறினைக் கூறுகிறது. பின் இந்துமதப் புராணக் கதைகள் பலவற்றை எடுத்துக்காட்டி இந்துக்கடவுளர்களிடையே அப்பண்புகளில்லை என முடிவு செய்து, ஆகவே அவர்கள் தேவர்கள் இல்லையெனக் கூறுகிறது. இந்நூலுக்கும் ஆசிரியர் பேரில் ஐயமுண்டு.

*ஞான உணர்த்தல் :* இதனை ஞான உணர்ச்சி என்றும் வழங்குவர். இதனை 1727-இல் எழுதியதாகப் பெர்ட்ராண்டு என்பார் கூறுவர். 1728 என்பாரும் உளர். இது முனிவரின் வாக்குதானா என்பதில் ஐயங்கொள்வாரும் உளர். இதற்கிணையான ஒரு நூல் சிங்கள மொழியில் காணப்படுகிறது. இதற்கு இலத்தீன் மொழி பெயர்ப்பு, ஜே.பி.டிரிங்கால் என்பவராலும் (1861), தெலுங்கு மொழிபெயர்ப்பு எப்.செல்வம் என்பவராலும் (சூலை 1878) வில்லியம் டெய்லர் என்பவராலும், கன்னடத்தில் ஒரு மொழி பெயர்ப்பும் ஏற்பட்டுள்ளது.

*பதிதர் பேரில் நிரூபம் :* இது கடித இலக்கியமாகும். முனிவர் பதிதர் பேரில் திருக்கடையூர் நாட்டுத் திருச்சபைக்கு எழுதியதாகும். இக்கடிதமே அவர் எழுதிய கடிதங்களில் மிக நீண்டது.

பொதுமக்களுக்காக எழுதியதால் கொடுந்தமிழ்நடையாய் உள்ளது. இக்கடிதம் வேதியர் ஒழுக்கத்தில் குறிப்பிடப் பட்டிருப்பதால் 1725-க்கு முன் எழுதியிருக்கலாம் எனக்கருதப்படுகிறது. புதுவையில் பதிப்பிக்கப் பட்டிருக்கலாம் என்று பதிப்பிலும் ஐயமுள்ளது.

*இலக்கணங்கள்*

இலக்கியங்களில் தன்புலமையை நிலைநிறுத்திய வீரமாமுனிவர் இலக்கணங்களைப் படைப்பதிலும் தன் திறமையைக் காட்டியுள்ளார். இவர் நான்கு இலக்கண நூல்கள் செய்துள்ளார். தொன்னூல் விளக்கம் பற்றிய விளக்கம் தனியாக அமைத்துள்ளதால் இங்கு விடப்பட்டுள்ளது.

*கொடுந்தமிழ் இலக்கணம்:* 1728-இல் இலத்தீனில் இயற்றினார். 1738-இல் தரங்கம்பாடியில் அச்சிடப்பட்டது .அதன்பின் 1813-இல் சென்னையில் அச்சிடப்பட்டது. 1806-இல் ஹென்றி ஹார்ஸ்ட் என்பவர் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். ஆயின் அம்மொழி பெயர்ப்பு செவ்வையாக அமையவில்லை. 1831,1848 ஆகிய ஆண்டுகளில் அச்சிடப்பட்டது. இதன்பின் 1848-இல் ஜார்ஜ் மாஹன் என்பவரால் மொழிபெயர்க்கப்பட்டது. ஆங்கிலத்தில் இதன் சுருங்கிய மொழி பெயர்ப்பு பிரெஞ்சு — தமிழ் அகராதியில் இணைந்துள்ளது. அவ் வகராதிக் குரியவர் அங்க்யூபில் டியூபெரன் என்பவராவார்.

புதுவையில் அதிகமான பிழைகளுடன் மற்றொரு மொழி பெயர்ப்பு செய்யப்பட்டது. இந்நூலைப் பின்பற்றி இ.தி.இ. ரெனியஸ் (திருநெல்வேலி மிஷன்) என்பார் ரெனியஸ் தமிழ் இலக்கண நூலொன்றை எழுதி 1834-இல் வெளியிட்டார். பேச்சுத் தமிழ் கற்கும் வெளிநாட்டு மாணவர்களுக்குக் கொடுந்தமிழ் இலக்கணம், இலக்கண நூலாக அமைந்தது. இதன் ஆங்கில மொழி பெயர்ப்பினைக் கண்ணுற்ற போப்பையர் மூதறிவின் ஆராய்ச்சித் திறத்தால் எழுந்த இந்நூல் சாலவும் போற்றத்தக்கது என்று கூறியுள்ளார். சொல், செய்யுள் என்னும் இருபகுதிகளையுடையது இந்நூல்.

*செந்தமிழிலக்கணம்:* இதுவும் 1730-இல் இலத்தீனில் தோன்றிய இலக்கண நூலாகும். செந்தமிழ் கற்கும் வெளிநாட்டு மாணவர்களுக்கு உபயோகமாகும் பொருட்டு எழுதப்பட்டது. இதனைப் பெஞ்சமின் பேபிங்டன் என்பவர் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து 1822-இல் வெளியிட்டார். இரண்டாவது பதிப்பு 1917-இல் ஏற்பட்டது. ஹென்றி ஹார்ஸ்ட் என்பாரும், ஜார்ஜ் மாஹன் என்பாரும் இவ்விலக்கண நூலினையும் மொழிபெயர்த்துள்ளனர் என வி.மி. ஞானப்பிரகாசம் கூறுவர்.

கிளாவிஸ் : தமிழ் மொழியின் இலக்கணத்தை இலத்தீனில் கூறுவது. தொன்னூல் விளக்கம் போன்று இதுவும் ஐந்து அதிகாரங்களைக் கொண்டது. 1876-இல் தரங்கம்பாடி இவாஞ்சலிக்கல் லூதரன் பிரஸில் பதிப்பிக்கப்பட்டது. தம்மைப்பற்றியும் தம் நூல்களைப் பற்றியும் இந்நூலில் பிற நூல்களில் குறிப்பிட்டுள்ளதை விட அதிகமாகக் குறிப்பிட்டுள்ளார். வெளிநாட்டிலிருந்து வந்துள்ள மதபோதகர்களுக்காகத் தோன்றியது இந்நூல். திருக்காவலூர்க் கலம்பகத்தை அதிகமாக எடுத்துக் காட்டியுள்ளார்.

### அகராதிகள்

கற்றோரும் மற்றோரும் தமிழ் இலக்கிய அறிவு பெற்று இன்புறுதற்கு உதவியாக மேனாட்டு முறையில் முதன் முதல் அகராதியைத் தமிழ் உலகிற்கு அளித்தவர் வீரமாமுனிவர். அவ்வகராதி சதுரகராதியாகும். இதுதவிர மற்றும் 2 அகராதிகளைப் படைத்துள்ளார். இவர் செய்த தமிழ்த் தொண்டினுள் தலையாயது இஃதெனலாம்.

சதுரகராதி : 1732-இல் எழுதினார். பெயர், பொருள், தொகை, தொடை என்னும் நான்கு அதிகாரங்களைத் தன்னுட் கொண்டது. பெயரகராதி – சொல்லுக்குப் பலபொருள் கூறுவது. பொருளகராதி – ஒரு சொல்லுக்கு அதே பொருளுடைய பலசொற்களை நவில்வது. தொகையகராதி – செய்யுள், உலக வழக்கில் உள்ள தொகைச் சொற்களுக்கு விளக்கமும் பொருளும் புகலுவது. தொடையகராதி – செய்யுளியற்றுதற்குரிய தொடை வகைகளில் சிறந்து செய்யுளில் பயின்று வரும் எதுகைத் தொடைச் சொற்களைக் ககரமுதல் னகர வீறாக வகைப்படுத்திக் குறிலெதுகை, நெடிலெதுகை, குறிற்கீழெதுகை, நெடிற்கீழெதுகை எனப்பாகுபடுத்தியுரைப்பது.

சேந்தன் திவாகரம் முதலிய நிகண்டுகளில் முதல் பத்துத் தொகுதிகளில் கூறிய பொருள்களைப் பொருளகராதியாகவும், பதினொன்றும் தொகுதியில் எதுகைத் தொடையாகக் கூறிய பெயர்களைப் பெயரகராதியாகவும், தொடையகராதியாகவும் பன்னிரண்டாம் தொகுதியுள் கூறியவற்றைத் தொகையகராதியாகவும் அமைத்துள்ளார்..

இச்சதுரகராதியைப் பின்பற்றி வந்த பிற அகராதிகளுள் பெப்ரீசியஸ், ராட்லர், வின்சுலோ ஆகியோரின் அகராதிகளும் தமிழ் லெக்சிகனும் குறிப்பிடத்தக்கன. இதனை 1824-இல் தாண்டவராய முதலியாரும், ராமச்சந்திரக் கவிராயரும் இணைந்து பதிப்பித்தனர். 1880-இல் திருப்புசாமி முதலியாரும் 1886-இல் ஆறுமுக

சுவாமிகளும் பதிப்பித்தனர். 1834,1845,1848-ஆகிய ஆண்டுகளில் லண்டனில் ஜே. சுமித் என்பவரால் பதிப்பிக்கப்பட்டது 1861 1872, 1857 ஆகிய ஆண்டுகளிலும் முறையே சென்னை, புதுவை நகரங்களில் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

*தமிழ் - இலத்தீன் அகராதி :* 1741 அல்லது 1742-இல் இயற்றினார். 1746 என்றும் கூறுவர். 1827-இல் சென்னையில் வெளியிடப்பட்டது. இதில் 9000 தமிழ்ச் சொற்களுக்கு இலத்தீன் மொழியில் பொருள் கூறியுள்ளார்.

*போர்த்துக்கீசு—இலத்தீன்—தமிழ் அகராதி:* இரு பகுதிகளாக அமைந்துள்ள இந் நூலுள் 4353 போர்த்துக்கீசியச் சொற்களுக்குப் பொருள் கூறுகிறார். இலத்தீனில் எழுதியுள்ள முன்னுரையில் இந்தியாவில் உள்ளவர்களுக்குப் பெரும்பாலும் போர்த்துக்கீசிய மொழியே பொதுமொழியாக இருப்பதால் அதனை முதலில் அமைத்துள்ளதாகக் கூறுகிறார். இந்நூல் Abada-animal-காண்டா மிருகம் என்ற சொல்லில் தொடங்கி Zurzir-fustigare - வீசுகிறது, மாறுகிறது என்ற சொல்லில் முடிவுறுகிறது. இவ்வகராதியையும் தமிழ் இலத்தீன் அகராதியையும் பயன்படுத்தித் தங்கள் மதத்தினைப் பரப்பவந்த பிறர் Dictionnaire Francais Tamoul, Petit Dictionnaire Firancais Tamoul எனும் அகராதிகளைச் செய்ததாக வின்சன் என்பார் கூறுவர்.

*மொழிபெயர்ப்பு :* தமிழைப் பலதுறைகளிலும் வளர்த்த முனிவர் மொழிபெயர்ப்புத் துறையிலும் தன் கைவண்ணம் காட்டியுள்ளார். 1730-இல் திருக்குறளில் அறத்துப்பாலையும் பொருட்பாலையும் இலத்தீனில் மொழிபெயர்த்தார். இதனால் திருக்குறளை மேலை நாட்டவர்க்கு முதன்முதல் காட்டியவர் வீரமாமுனிவரே என்பது பலர் கருத்து. இம் மொழிபெயர்ப்பு ஏனைய ஐரோப்பிய மொழிகளில் குறள் வழங்குவதற்கு வழிகாட்டியது. ஜெர்மானிய மொழியில் திருக்குறளை முற்றும் மொழிபெயர்த்த கிரால் என்பவர்க்கும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த எல்லீசர்,போப் முதலிய அறிஞர்க்கும் பெருந்துணையாயிருந்தது.

தன் மொழிபெயர்ப்புக்குத் தெளிவான உரையும் இலத்தீனில் தந்துள்ளார். இந்நூல் வெளியிடப்படாவிடினும் போப் தன்னுடைய ஆங்கில மொழிபெயர்ப்பில் முனிவரின் மொழிபெயர்ப்பை இணைத்தே கொடுத்துள்ளார். தான் வீரமாமுனிவரின் மொழிபெயர்ப்பினைப் பின்பற்றியுள்ளதை முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார். இந்நூலுள் ஒரு பகுதியை வி. மி. ஞானப்பிரகாசம் மொழிபெயர்த்து வெளியிட்டுள்ளார். முழுவதும் வெளிவந்தால் தமிழுலகம் பயனடையும்.

**மருத்துவ நூல்கள்**

பாதர். காஷ்னல் ஜே. ஜே. என்பார் ஆகஸ்ட் 1899-இல் பாளையங்கோட்டையிலிருந்து எழுதிய கடிதத்தில் முனிவர் இரண்டு அல்லது மூன்று மருத்துவ நூல்கள் எழுதியிருப்பதாகவும் அவற்றுள் ஒன்று பதிப்பிக்கப்பட்டுள்ளதாகவும் கூறியுள்ளார். அந்நூல்கள் நீலக்கண்டி, வீரமெழுகு, வைத்தியமுறை என்பனவாக இருக்கலாம். பாதர் திவ்யானந்தா இரத்தினச்சுருக்கம், நசகாண்ட வெண்பா 100, மேகஞதிஎண்ணெய் என்று மேலும் மூன்று மருத்துவ நூல்களை முனிவருடையதாகக் காட்டுகிறுர்.

நசகாண்ட வெண்பாவிற்கு மாங்காட்டு வடிவேலு முதலியார் உரையெழுதியுள்ளார். இந்நூலை அடிகளே அருளியிருக்க வேண்டும் என்பதற்கு உறுதியான சான்றுகளாக அமைவன இறைவணக்கப் பாடல்களே என்பர் புது. செயப்பிரகாச நாராயணன். இவரின் பெயரால் சிந்தாமணி, குணபாடம் என்னும் மேலுமிரு மருத்துவ நூல்கள் கூறப்படுகின்றன.

இவைதவிர முனிவரால் மற்றும் சிலநூல்கள் எழுதப்பட்டதாக அறிகிறேம். தேவசிநேக முகாந்திரம், ஞானபோதகம், காலக் கண்ணுடி, A Poets catachism எனும் நூல்கள் அவற்றுள் சிலவாகும். போப்பையர் தன்னுடைய செய்யுட்டொகைக்கு முனிவரின் தமிழ்ச் செய்யுட்டொகையைப் பயன்படுத்தியுள்ளதாகக் கூறியுள்ளார்.

செயிண்ட் பர்த்லோமியூ மீது முனிவர் பாடிய பாடல்கள் முனிவரின் தமிழ் இலக்கணம் அகராதியுடன் ரோம்நகரின் விளம்பர நூலகத்தில் வைத்து பரிபாலிக்கப்படுவதாக (Library of the Propaganda; Rome) அறியப்படுகிறது. இந்நூல் முனிவரின் மற்ற சிறு நூல்களிலிருந்து வேறுபடுவதா அன்றி ஒன்றுபடுவதா என்பது தெரியவில்லை.

ஆன்குயேபி - டியூபரன் என்பார் முனிவரின் 'Explecation de la Dictrine des gentils' எனும் தமிழ்நூலை Bibliotheque nationale-இல் வைத்துள்ளதாகக் கூறுவர். ஆயின் இதுபற்றி வேறு இடங்களில் குறிப்பில்லை.

ரெவரண்ட எலிஸாகூல் என்பவர் 1844-இல் பதிப்பிக்கப்பட்ட வேதியர் ஒழுக்கத்தின் முன்னுரையில் முனிவரின் நூலாகத் தமிழ்-ஆங்கில அகராதியைக் குறிப்பிட்டுள்ளார்.

முனிவர் தெலுங்கு இலக்கணத்தை இலத்தீன் மொழிபெயர்ப்புடன் செய்ததாகவும் கூறுவர். தமிழ்நாட்டை விட்டு முனிவர் அகன்றதில்லையாதலாலும் தெலுங்கு தெரியாததாலும் இது முனி

வரின் நூலன்று என்பர் வின்சன். முனிவர்க்குத் தெலுங்கு தெரியுமாயினும் முனிவர் எழுதியிருப்பாரா என்பதும் ஐயமே.

முத்துசாமிப் பிள்ளை நாம் அறியாத இலத்தீன்-தமிழ் அகராதி யையும் முனிவர் இயற்றியதாகக் கூறியுள்ளார். திருச்சபைக்குப் பொது நிருபம் என்னும் கடிதம் ஒன்றும் முனிவர் அருளியதாகக் கூறப்படுகிறது. இங்குக் குறிக்கப்பட்டுள்ள நூல்களுள் உண்மை யில் முனிவர் இயற்றுததாக ஒருசில இருக்க வாய்ப்புண்டு. முழுமை யான ஆய்வு செய்து கண்டறிவதற்கும் இவற்றுள் பெரும்பான்மை அச்சிலின்மையும் ஏட்டுப்பிரதியின்மையும் தடையாய் அமை கின்றன.

வீரமாமுனிவரின் தமிழ்த்தொண்டினுள் என்றென்றும் தமிழறிஞர்களிடையே நினைவில் நின்று கூறவைப்பது அவர்செய்த எழுத்துச் சீர்திருத்தமே எனில் மிகையாகாது. எகர ஒகரக் குற்றெழுத்தின்மேல் நீண்ட புள்ளியும், மெய்யெழுத்துக்களின் மேல் சுழித்த புள்ளியும் வைக்கும் பழக்கத்தை உண்டாக்கினார். எகர ஒகர உயிர்மெய்க் குற்றெழுத்துக்களும் நெட்டெழுத்துக் களும் ஒரே மாதிரி எழுதப்பட்டபடியால் அவற்றின் வேறு பாட்டை எளிதில் தெரிந்துகொள்ளும் பொருட்டு நெட்டெழுத் துக் கொம்பை மேலே சுழித்தெழுதும் வழக்கத்தையும் ஏற்படுத்தி னார். இதைப்பற்றி முனிவர் தனது கொடுந்தமிழ் இலக்கணத்தின் முதல் அதிகாரத்தில் கூறியுள்ளார்.

உயர்தமிழ் கற்கும் வெளிநாட்டு மாணவர்களுக்குச் செந்தமிழ் இலக்கணம் இலக்கண நூலாகவும், வாமன் சரித்திரம் இலக்கிய மாகவும், சதுரகராதி அகராதியாகவும் அமைந்தது. அதே போன்று பேச்சுத்தமிழ் கற்கும் வெளிநாட்டு மாணவர்களுக்குக் கொடுந்தமிழ் இலக்கணம் இலக்கண நூலாகவும், தமிழ் இலத்தீன் அகராதி அகராதியாகவும், பரமார்த்த குருவின் கதை இலக்கிய மாகவும், அதாவது பேச்சுத்தமிழின் போக்கினைக் காட்டும் எடுத் துக்காட்டாகவும் பாடப்புத்தகமாகவும் அமைந்தது என்று முனி வரே தம் முன்னுரை ஒன்றில் கூறியுள்ளார்.

தம் மதத்தொண்டிலும், தமிழ்த்தொண்டிலும் 37 ஆண்டு களைக் கழித்த முனிவர் 30-க்கு மேற்பட்ட நூல்களை இயற்றினார். அகராதிகளையும் இலக்கணங்களையும் படைத்தார் என்பது தவிரப் பிறசான்றுகள் அவரின் தமிழ்ப்பற்றிற்குத் தேவையில்லை. தமிழை வளர்த்த அயல்நாட்டவருள் முதன்மையானவர் என்பதிலும் ஐயமில்லை; மறுப்புமில்லை.

மேற்கூறியவற்றை நோக்குங்கால் முனிவரின் பலதுறைப் புலமையும், பரந்துபட்ட அறிவும் புலனாகும். இம்முனிவரின்

நூல்கள் தக்கமுறையில் தமிழரிடையே நன்கு அறிமுகப்படுத்துதல் மிகத் தேவையானதாகும். தமிழினைப் பலவழிகளில் உயரச்செய்த முனிவரின் வளமிகு நூல்கள் இதுவரையில் தமிழரால் சிறிதளவு கூட அறியப்படாமல் இருப்பது நன்றன்று. தமிழ் மக்களுக்கு அவற்றை உணர்த்துவதே உண்மையில் நாம் அவரின் பெருமையை உணர்ந்து கொண்டதற்கு அடையாளமாகும்.

*முனிவர் தமிழ்த்தொண்டினையறிய உதவிய நூல்கள்*


1. Father Beschi of the Society of Jesus; His Times and his Writings; L. Besse; 1918.
2 வித்தகர் வீரமாமுனிவர் சிறப்புமலர் - மூன்றும் நூற்றாண்டு விழா; பாளையங்கோட்டை 1977. நவம்பர்.

# தொன்னூல் விளக்கம்

தன்னை நாடி வருவோரை யெல்லாம், 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்று வரவேற்று இடமளிக்கும் தமிழ்நாடு வீரமாமுனிவரையும் வரவேற்றது. வந்த நோக்கம் மதப்பணி யாயினும் தனக்கிடம் அளித்த நாட்டிற்குத் தன்னுளத்தில் இடம் கொடுத்தார். தன்னுடைய பணியை நிறைவேற்றிக் கொண்டே தமிழினை உலகிற்கு அறிமுகப்படுத்தும் பணியை மேற்கொண்டார்; அதில் வெற்றியும் பெற்றார். தெலுங்கு, கன்னடம், இந்துஸ்தானி போன்ற இந்திய மொழிகளையும், பாரசீகம், இலத்தீன், போர்த்துகீசு போன்ற பிறநாட்டு மொழிகளையும் நன்கு கற்று அவற்றுள் புலமை பெற்ற முனிவர் தமிழ்மொழிக்கு மட்டுமே முப்பதுக்கு மேற்பட்ட நூல்களை எழுதிச் சிறப்பித்தார் எனில் தமிழ்மேல் அவர் கொண்ட ஈடுபாட்டிற்கு வேறொரு சான்று தேவையில்லை.

முனிவரின் தமிழிலக்கணப் புலமைக்குச் சான்றாக அமைந்தது தொன்னூல் விளக்கம். இம்மரபுவழித் தோன்றிய ஐந்திலக்கண நூல் 1730-இல் தோன்றியது.

நூல் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என ஐந்து அதிகாரங்களில் 370 நூற்பாக்களைக் கொண்டது. தான் இலக்கணத்தை வகுத்துக்கொண்ட அடிப்படைக்குத் தக இயல்களை வகுத்துள்ளார்.

எழுத்ததிகாரம், (நூற்பாக்கள் 2-40) எழுத்தியல், எழுத்தின் வகுப்பு, எழுத்தின் விகாரம் என முப்பிரிவுகளை உடையது.

சொல்லதிகாரம் (41-142 நூற்பாக்கள்) 1. சொற் பொதுவியல் 2. பெயர் (வேற்றுமையியல், பகுபதப் பெயரியல், தொகைநிலைத் தொடர்மொழிப் பெயரியல், சுட்டு வினா) 3. வினைச்சொல்லியல் (முக்கால முற்றுவினை, ஏவல் வியங்கோள், ஈரெச்சம், வினைக்குறிப்பு) 4. இடைச்சொல்லியல் 5. உரிச்சொல்லியல் என ஐந்து பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு ஓரளவு வரையறுக்கப் பட்டுள்ளது.

பொருளதிகாரம் (143—200) பதிகம், காரணம், விரிவு, தொகையுந்துணிவும், உரிமை (கால உரிமை, இடவுரிமை, பண்புரிமை, சாதித்தொழிலுரிமை, பற்றுதலுரிமை, வடிவு முதலிய உரிமை, ஒழுக்க உரிமை, சொல்லுரிமை) என்ற பகுப்புகளைக் கொண்டுள்ளது. காலத்திற்குத்தகப் பல மாற்றங்களுடன் மரபையும் தழுவிப் பொருளதிகாரம் அமைக்கப் பட்டுள்ளது.

யாப்பதிகாரம் (201—300) 1. செய்யுளுறுப்பு (அசையிலக்கணம், சீரிலக்கணம், தளையிலக்கணம், அடியிலக்கணம், தொடையிலக்கணம்) 2. செய்யுளியல் (வெண்பா விலக்கணம், ஆசிரியப்பா விலக்கணம், வஞ்சிப்பா விலக்கணம், மருட்பா விலக்கணம், பாவினம், வெண்டுறை யிலக்கணம், ஆசிரியத்துறை யிலக்கணம், கலித்துறை யிலக்கணம், வஞ்சித்துறை யிலக்கணம் தாழிசை யிலக்கணம், விருத்தவிலக்கணம்) 3. செய்யுள் மரபியல் எனப் பகுக்கப் பட்டுள்ளது.

அணியதிகாரம் (301—370) 1. சொல்லணியியல் (மறிநிலையணி, சொன்மிக்கணி, சொல்லெஞ்சணி, சொல்லொப்பணி) 2. பொருளணியியல் என வகை செய்யப்பட்டுள்ளது.

ஒவ்வொரு தலைப்பின் கீழும் அதற்கு நேரான ஆங்கிலச் சொல்லும் பதிப்புகளில் கொடுக்கப்பட்டுள்ளது.

சிறப்புப் பாயிரத்தின் உரையில் தான் நூல் எழுதியதற்கான காரணத்தினையும் அமைத்துள்ள விதம் பற்றியும் கூறுகிறார். ‘மூத்தோர் புதைத்த நூல்நலம் விளக்கவும், கல்லாதவரும் பயன் கொண்டுணரவும் நானே அதன்மேல் கவித்த போர்வை நீக்கி அறிஞர்முன் கொளுத்தின தீபம் எவர்க்கும் எறிப்பக் கையிலேந்தினற்போல் அவர்முன் செந்தமிழ் மொழியான் மறைத்த இலக்கணநூலை இளந்தமிழுரையால் வெளிப்பொருளாக்க நினைத்தேனுயினும் முன்னோர் தந்த யாவையும் விரித்துரைத்தால் இந்நூலும் பெருகிக் கண்டவரஞ்சித் துணியாரென்று கருதி முனமிகவறிய வேண்டுவது ஒன்றைத் தெரிந்து தருவேன். நானும் மூத்தோர் சொன்னதை அவரவர் தாமே கண்டுபிடிக்க வேண்டுவதை மாத்திரம் விதி விரித்துரைப்பேன். ஈண்டு நானொரு புது நூலாயினுந் தொன்னூலிற்கொரு புதுவழியாயினுங் காட்டுவதுணரா துயர்ந்த முன்னோர் தந்த நூலை விளக்குதற் கருதித் தெளிவு வேண்டி வேறு வேறாய்ச் சூத்திரந்தரினும் மூத்தோர் உரைத்த பற்பல வற்றையும் பொருத்துதும். ஆயினுஞ் செந்தமிழ் உணர்ந்தோர் வழியே யன்றிப் புறனடையாச் சில விகற்பம் புற நூல் வழியே சென்று காட்டுவது மாகையால் முன்னோர் நூலின்

நடையினும் விகற்ப நடையினும் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணியென ஐந்திலக்கணங்களை ஐந்ததிகாரமாக ஈண்டுப் பிரித்துக் கூறுதும்' என்பது முனிவர் கூற்று.

மேற்கண்டதனுல் தொன்னூல்களை (இலக்கியங்களை) விளக்குவதற்குரிய விளக்குப் போன்றும், தொன்னூல்களாகிய இலக்கண நூல்களைப் புரிந்து கொள்வதற்குத் துணையாக நிற்கின்ற விளக்குப் போன்றும் அமைய வேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையில் படைத்து 'தொன்னூல் விளக்கம்' எனக் காரணப் பெயரினையும் சூட்டினுர் என நவிலலாம்.

மரபுவழியைப் பின்பற்றி நூலமைத்திருப்பதால் பழைய இலக்கண நூல்களைப் பெருமளவு பயன்படுத்தியுள்ளார். பொது நிலையில் நோக்குழிப் பெரும்பான்மையாக, எழுத்தும் சொல்லும் நன்னூலையும், பொருள், நம்பியகப் பொருள், இலக்கண விளக்கம் ஆகியவற்றையும், யாப்பு, பாட்டியல்களையும், அணி, தண்டியலங் காரத்தினையும் பின்பற்றி யமைந்துள்ளது.

இந்நூலாசிரியர் மரபினைப் பின்பற்றி வழக்கு செய்யுள் சென்ற இரண்டு நிலைகளுக்கும் இலக்கணம் அமைத்துள்ளார் என்பது தெளிவாகின்றது (33, 64, 93, 118, 194).

எழுத்தும் சொல்லும் இணைந்து 141 நூற்பாக்களில் 36 நூற்பாக்கள் நன்னூலிலிருந்து அப்படியே முழுமையாக எடுத்தாளப் பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

ஒவ்வொரு இயலின் ஆரம்பத்திலும் தெய்வவணக்கம் கூறுகிருர். அவை பொதுநிலையில் அமையினும்உரையில் தன்மத உணர்வினை வெகுவாகப் புலப்படுத்துகிருர். பொருள், யாப்பு, அணி எனும் சொற்களைக்கொண்டு அவ்வதிகாரங்களில் கடவுள் வணக்கம் செய்திருப்பது குறிப்பிடத்தக்கது.

உரையாசிரியரும் இவராகவே இருப்பதனுல் தான் கூற விரும்பும் கருத்தினை நூற்பாவில் சுட்டிவிட்டுத் தேவைப்படும் இடங்களிலெல்லாம் விரிவாக, விளக்கமாக உரையில் தெளிவாக்குவதற்கு வாய்ப்புப் பெற்றுள்ளார். ஆசிரியரின் எண்ணங்களை முழுமையாகப் புரிந்து கொள்ளவும் மாறுபட்ட கருத்துகளைத் தவிர்க்கவும் இந்நிலை உதவுகிறது. பல இலக்கணங்கள் இலக்கியங்களிடையே ஆசிரியர் பெற்றுள்ள பயிற்சியை உரை வெளிப்படுத்துகின்றது.

ஒவ்வொரு இயலிலும் கூறிய கருத்துகளை அவ்வியலின் இறுதி நூற்பாவில் தொகுத்துரைக்கின்ருர். தான் தொகுத்துக் கூறுவதைத் தெளிவாகக் கூறுவது இவரின் சிறப்பாகும். ஒவ்வொரு பகுதியிலும் காணப்படும் சிறப்புகள், பிற இலக்கணங்

களினின்றும் மாறுபாடுகள் போன்றன அவ்வப்பகுதிகளின் திறனாய்வில் விரிவாகச் சுட்டப்பட்டுள்ளன.

இந்நூல் முதலாவதாக 1838-இல் புதுவையில் பதிப்பிக்கப் பட்டதாகத் தெரிகிறது. 1864-இல் அமிர்தநாதர் நாகையில் பதிப்பித்துள்ளார். 1891-இல் உ. ஸ்ரீநிவாச ராகவாசாரியரவர்கள் பார்வையிட்டுத் தர, ஜி. மெக்கென்ஜி. காபின் அய்யர் பதிப்பித்தார். இந்நூல் சென்னையில் செயிண்ட் ஜோசப் அச்சகத்தில் யாகப் பிள்ளையால்அச்சிடப்பட்டுள்ளது.

## திறனாய்வு

### எழுத்து

1 - 1. எழுத்திலக்கணத்தைத் தொல்காப்பியம் இயல்பாகக் கூற, நேமிநாதம் ஏழாக வகுக்க, தொல்காப்பிய உரையாசிரியர்கள் எட்டு, எட்டிறந்த பல்வகை என விரிக்க, நன்னூலார் பன்னிரண்டாகப் பிரிக்க, (இ-தொ.எ.ப.10) தொன்னூல் விளக்கம் மொழியியல் அடிப்படையில் தோற்றம்(origin of sounds) வகுப்பு (classification of sounds) தோன்றும் விகாரம் (morpho - phonemics) எனத் தெளிவாகவும் சுருக்கமாகவும் மூன்று நிலைகளில் அடக்கியுள்ளது (2).

1 - 2. தொன்னூல் விளக்கம் எழுத்துக்களின் பிறப்பைப் பற்றிப் பேசும்போது தொல்காப்பியம் போன்று பிறக்கும் நிலைகளை இரண்டாகப் பகுத்துக் கொண்டு முதலிடம் (தலை, மிடறு, நெஞ்சு - தொல்; மிடறு, உரம், உச்சி—தொ.வி) துணையிடம்(பல், இதழ், நா, மூக்கு, அண்ணம்) என இரண்டாகப் பகுத்துப் பேசுகின்றது (3). தொல்காப்பியமும் தொன்னூல் விளக்கமும் 3+5 = 8 எனக்குறிக்க ஏனைய இலக்கணங்கள் 4+4 = 8 எனச் சுட்டுகின்றன (இ.தொ-எ.ப.48).

1 - 3. முதலெழுத்து, சார்பெழுத்து இவைகளை மரபைப் பின் பற்றி நன்னூல் கூறியாங்கு கூறுகின்றார் (4,5).

1 - 4. ''அன்றியும் தமிழ் நூற்கு அளவிலை; அவற்றுள் ஒன்றே ஆயினும் தனித்தமிழ் உண்டோ அன்றியும் ஐந்தெழுத்தால் ஒரு பாடை என்று அறையவே நாணுவர் அறிவுடையோரே'' என்று பேசுகின்றார் இலக்கணக் கொத்து ஆசிரியர் சுவாமிநாத தேசிகர். ஆயினும் பிற நாட்டினராகிய வீரமாமுனிவர் நன்னூலாரைப் பின் பற்றித் தமிழ்ச் சிறப்பெழுத்துக்கள் ஐந்தினையும், எண்வகைத் தமிழ்ச் சார்பெழுத்துக்களைக் கூறுவது எண்ணி இன்புறத்தக்கது(6).

1 - 5. எழுத்தின் பெயர் இடுகுறி, காரணம், பொது, சிறப்பென விளக்குகின்றார் (7).

1 - 6. உயிர், மெய், வல்லினம், மெல்லினம், இடையினம், மொழி முதல் எழுத்துக்கள், ஈற்றெழுத்துக்கள் உயிர்மெய் போன்றவற்றையும் மரபின்படி கூறுகின்றார் (8, 9,10,11).

1 - 7. எழுத்துக்களின் வரி வடிவத்தில் மாற்றத்தைச் செய்தார் தொன்னூல் விளக்க ஆசிரியர். 'மெய்யின் இயற்கை புள்ளியொடு நிலையல்' 'எகர உகரத் தியற்கையும் அற்றே' என்ற நிலையிலிருந்து

நீட்டல் சுழித்தல்

குறில் மெய்க்கு இருபுள்ளி (12) என்ற நிலைக்கு மாற்றினார்.

1 - 8. ஆய்தம், ஆய்தக்குறுக்கம் (13) குற்றியலிகரம் (14) குற்றிலுகரம் (15) ஐகாரஔகாரக்குறுக்கம் (16) மகரக்குறுக்கம் (17) அளபெடை (18) மாத்திரை (19) இவை பற்றி மரபைப் பின்பற்றியே கூறுகின்றார்.

1 - 9. உடம்படு மெய்யாகிய யகர வகரங்களைப் புணர்பெழுத்தெனப் பேசுகின்றார் (20). 'இ.ஈ ஐவழி யவ்வும்' என ஏனைய இலக்கணங்கள் உரைக்க 'இவர், இ, ஈ, எ, ஐ' என எகரத்தையும் இணைக்கின்றார் (20).

1 - 10. தொன்னூல் விளக்கம் புணர்ச்சியில் ஏற்படும் விகாரங்களை திரிபு, அழிவு, ஆக்கம், திரட்டு என நான்காகக் கூறுகின்றது. ஏனைய இலக்கண நூல்கள் மெய்பிறிதாதல் (திரிதல்) மிகுதல் (தோன்றல்) குன்றல் (கெடுதல்) என மூன்றாகக் கூறுகின்றன. திரட்டு என்பது வடமொழிப் புணர்ச்சியைக் குறிக்கத் துணை புரிகின்றது. வேதம் + ஆகமம் = வேதாகமம் (20).

1 - 11. அல்வழி, வேற்றுமை என்பதை விளக்குகின்றார் (22).

1 - 12. மகரப்புணர்ச்சியில் இன எழுத்து வருதலும் மகரம் கெடுதலும் திரிதலும் கூறப்படுகிறது (23). ண, ன இவற்றின் புணர்ச்சி கூறி (24) னகர ஈற்றுப்புணர்ச்சி, தேன், மின், பின். என், தன், குயின் போன்ற சொற்களுக்கும் தருகிறார் (25). லகர ளகரங்களின் விகாரம் பற்றித் தெளிவாகப் பேசுகின்றார் (26)

1 - 13. அகர ஐகாரப்போலி உரைக்கப்படுகிறது (27). உகரம் ஐகாரமாதல் பேசுப்படுகிறது (28). மரபைப் பின்பற்றி 'தெவ்' என்ற சொற்புணர்ச்சி கூறுகின்றார் (29). யரழ எழுத்துக்கள் புணர்ச்சியும் (30), சில, பல என்ற சொற்களின் புணர்ச்சியும் (31). ஆ, மா, மியா இவற்றின் இயல்பு புணர்ச்சியும் (32), செய்யுளில்

இரா—இரவு, நிலா—நிலவு ஆதலைப் பேசுகின்றார் (33). ‘தமிழ்’ என்ற சொல் வேற்றுமைப்புணர்ச்சியில் அகரச் சாரியை பெறுதலைக் காட்டுகின்றார் (34).

**1-14.** ஓரெழுத்துச் சொல்லாகிய ‘ஐ’ யும், யகர ஈறும், து, நொ, வும் நிலைமொழியாக நின்று வருமொழி மெல்லினமாயின் மெல்லெழுத்து மிகும் (35). தனிக்குறில் ஒற்று மிகும். ர,ழ,தனிக் குறிலொடு வராது எனவும் (36) குறிக்கின்றார்.

1-15. தனிமொழியில் புணர்ச்சியின்றி ஏற்படும் விகாரங் களாக மெலித்தல், வலித்தல், குறுக்கல், நீட்டல், தொகுத்தல், விரித்தல் ஆக ஆறும் மொழிமுதல், இடை, கடைக் குறைதலும் சேர்ந்து ஒன்பதெனப் பேசுகின்றார் (37).

1-16. வடமொழிப் புணர்ச்சியாகிய திரட்டினைத் தெளிவாகப் பல சான்றுகள் தந்து விளக்குகின்றார்(38).

1-17. ஒருசொல்லே இரட்டி வரும்போது ஏற்படும் விகாரத்தைத் தெளிவு படுத்துகின்றார் (39). கோணுகோணம் போன்று.

1-18. எழுத்திலக்கணங்கள் அனைத்தையும் தொகுத்துத் தருகின்றார்(40).

1-19. தொன்னூல் விளக்க ஆசிரியர் எழுத்திலக்கணத்தை, வகைப்படுத்தலில் தெளிவு இருப்பினும் புணர்ச்சி கூறும்போது தொல்காப்பியம் போன்று முறையாக உயிர்மயங்கியல், புள்ளி மயங்கியல், வகுத்துக்கொண்டு கூறவில்லை. விகாரத்துள் பல வற்றையும் கலந்து பேசுகின்றார்.

1-20. மெய்ம்மயக்கம் — அதாவது மொழியிடை எழுத்துக் கள் பற்றித் தொன்னூல் விளக்கம் குறிப்பிடவில்லை.

1-21. தொன்னூல் விளக்க ஆசிரியர், விகாரங்களை மூவகைப் படுத்துகின்றார். (1)புணர்ச்சிவிகாரம், திரிபு, அழிவு, ஆக்கம், திரட்டு என நான்கு 21).

(2) செய்யுள் விகாரம் - வலித்தல், மெலித்தல், குறுக்கல், நீட்டல், தொகுத்தல், விரித்தல், முதற்குறை, இடைக்குறை, கடைக்குறை என ஒன்பது(37).

(3) புணர்ச்சியில் விகாரம் என, தோன்றல், திரிதல், கெடுதல், நீளல், நிலைமாறுதல், மருவி வழங்குதல், ஒத்து நடத்தல் ஆகிய ஏழினைக்கூறுகின்றார் (37-உரை). இவ்வேழும் போலியில் அடங்கி விடுகின்றன. பிற இலக்கணிகள் போலி எனக்கூறியதை இவர் புணர்ச்சியில் விகாரம் எனப் பேசுகின்றார்.

1-22. வீரசோழியம் 25ஆம்நூற்பாவில் கூறும் இலக்கணத்தை இவர் தம் 39ஆம்நூற்பாவில் கூறுகின்றார். ஒரு சொல்லே இரட்டித்துவரும்போது ஏற்படும் விகாரத்தினை தருகின்றார்.

ஏனைய இலக்கண நூற்களில் இச்செய்தி இருப்பதாகத் தோன்றவில்லை.

1-23. தொல்காப்பியம், நன்னூல் ஆகியஇவ்விரு நூல்களினுமுள்ள பெரும்பான்மையான எழுத்திலக்கண செய்திகளைத் தொன்னூல் விளக்க ஆசிரியர் தம் உரையில் விளக்கியுள்ளார்.

## சொல்

2-0. ஒவ்வொரு அதிகாரத் தொடக்கத்திலும் முதல் நூற்பாவைத் தெய்வ வணக்கமாகவே அமைக்கின்றார் (41).

2-1. சொல்லதிகாரத்தைச் (1) சொற்பொதுவியல் (2) வேற்றுமையியல், பகுபதப்பெயரியல், தொகைநிலைத் தொடர்மொழிப் பெயரியல், சுட்டு வினு (3)வினைச்சொல்லியல் முக்கால வினைமுற்று, ஏவல், வியங்கோள், ஈரெச்சம், வினைக்குறிப்பு (4) இடைச்சொல்லியல் (5) உரிச்சொல்லியல் எனப்பகுத்துக் கொள்கின்றார்.

2-2. சொற்கள் பொதுநிலையில் பெயர், வினை, இடை, உரி என நான்காக அமையினும் (42) அவற்றை பன்னிரண்டாக ஒரு நிலையில் பகுத்து விளக்குகின்றார். இயற்சொல், திரிசொல், ஒருமொழி, தொடர்மொழி, பொதுமொழி, பகாப்பதம், பகுபதம், ஆகுபெயர், இருதிணை, ஐம்பால், மூவிடம்,சாரியை என (42).

2-3. வடசொல், திசைச்சொல்லை இவர் இங்குப் பேசவில்லை

2-4. எழுத்ததிகாரத்துட் கூறப்படும் சாரியையை இவர் சொல்லதிகாரத்தில் கூறுவதும் நினைக்கத்தக்கது.

2-5. நன்னூலார் பதவியலில் கூறும் செய்திகளை இவர் சொல்லதிகாரத்தில் பேசுகின்றார்.

2-6. மேற்கூறிய பன்னிரண்டையும் (43-52) விளக்கிச் செல்கின்றார்.

2-7. பெயர், வேற்றுமை பெற்று, இடம், பால், திணை காட்டி, தொழில் அல்லாதன-காலங் காட்டாது- மரபு, காரணம், ஆக்கம், ஆகுபெயர், குறி (இடுகுறிப்பெயர்) என நால்வகைப்படுமென்கிறார் (53).

2-8. நால்வகைப் பெயர்களையும் விளக்குகிறார் (54).

2-9. வேற்றுமை எட்டு (55). அவற்றின் உருபுகளையும், எவ்வெப்பொருள்களில் வரும் என்பதனையும் நன்னூலைப் பின்பற்றிப் பேசுகின்றார் (56-62).

2-10. பல இடங்களில் தமிழ் இலக்கணக்கலைச் சொற்களுக்கு இணையான வடமொழி இலக்கணக் கலைச்சொற்களை உரையில் கூறு கின்றார். "வேற்றுமையை வடநூலார் பிரத்தியம் என்பர்" (55-உரை). இவை தனியாக எடுத்துத் தரப்பட்டுள்ளன.

2-11. எழுவாய்க்கு ஆனவன், ஆகின்றவன், ஆவான் போன்ற சொல்லுருபுகள் உள என இலக்கணக்கொத்து ஆசிரியரைப் பின் பற்றி உரையில் கூறுகிறார் (56-உரை).

2-12. சில உருபுகள் ஏற்கும் சாரியைகள் பற்றியும் (63,65,66,67,68) அதன் விகற்பங்கள் பற்றியும் (64) மரபை யொத்துப் பேசுகின்றார்.

2-13. விளிவேற்றுமை பற்றியும் (69) என்னென்ன ஈறுகள் எவ்வெவ்வாறு திரியும் என்பதை நன்னூலைப் பின்பற்றி அதே நூற்பாக்களைத் தருகின்றார் (71-78).

2-14. உயர்திணையில் பலர்பாலுக்கு'கள்' விகுதிவரும் (79) என உரைக்கின்றார்.

2-15. தழுவு தொழிற்பெயர் எனக் கூறப்படுகின்ற அறிஞர், கிளைஞர், அரிநர் போன்ற வினையடிப் பெயர்களை நன்னூல்(141) வினைப்பெயர் அல்பெயர் எனப்பேசுகின்றது. இதற்கு இடைநிலை எந்நூலும் வெளிப்படையாகப் பேசவில்லை. தொன்னூல் விளக்க ஆசிரியர் 'ந' 'ஞ' (85) எனத் தருகின்றார்.

2-16. வடமொழிப் பகுபதங்களின் அமைப்பினைத் தெளிவு படுத்துகின்றார் (86).

2-17. முன் ஒட்டுக்கள் நமக்குச் சுட்டாக மட்டுமே அமையும். அப்பையன். இக்காளை போன்று. எதிர்மறை முன்ஒட்டுகள் வட மொழிக்குரியன. அதையும் தருகின்றார் (87). அநீதி, அனங்கன்.

2-18. தொகைநிலைத் தொடர்மொழிப் பெயரியலில் அறு வகைத் தொகைகள் பற்றிப் பேசுகின்றார் (89). இத்தொகை களுக்கு இரண்டு முதல் எழுவகை நிலைகளில் விரித்துப் பொருள் பேச முடியும் (90) எனக் குறிப்பிடுகின்றார்.

2-19. வேற்றுமைத் தொகையில் இயல், திரிவு, அழிவு ஆக்கம் நான்கும் பொருந்தி வரும் என்கிறார் (91).

2-20. பண்புச் சொற்களின் திரிபினைக் கூறுகின்றார் (92).

2-21. மரபு வழுவமைதி கூறுகின்றார்(93). நன்னூலைப் பின் பற்றி. அடைமொழி முதற்பொருளோடு வரல் வழக்கில். ஈரடை சினையொடு வரல் செய்யுளில். செய்யுட்கும், வழக்கிற்கும் உள்ள இலக்கணங்களை மரபைப் பின்பற்றியே அமைக்கின்றார்.

2-22. எண்ணுப் பெயர்களைப் பற்றியும் அவை வரும் முறை பற்றியும் முன்னோர் இலக்கண விதிகளையொட்டிப் பேசுகிறார் (94-97).

2-23. நாழி+உரி=நாடுரியாகும் என்ற விதியை இங்குப் பேசுகின்றார் (98).

2-24. திசைப் பெயர்களின் புணர்ச்சி கூறப்படுகின்றது (99).

2-25. சுட்டுவினா பற்றி விரிக்கின்றார் (100 - 102).

2-26. வினையின் வகைகள் கூறி இலக்கணமும் கூறுகின்றார் (103-104).

2-27. வினையில் அமையும் தன்மை, முன்னிலை, படர்க்கை விகுதிகள் பற்றி மரபு வழிப் பேசுகின்றார் (105 - 106). செய்யும் என்றும் முற்றுப் பற்றியும் (107), இறந்தகால (108) நிகழ்கால (109) வருங்கால (110) இடைநிலைகள் தரப்படுகின்றன.

2-28. எதிர்மறைக்கு இடைநிலையன்றி அடிச்சொல்லும் விகுதியும் அமையும் என்பதைத் தெளிவுபடுத்துகின்றார்(112).

2-29. ஏவல் பற்றித் தெளிவாக வரையறுத்துப் பேசுவது இந் நூலே (113) (இ. தொ-சொ. ப. 409).

2-30. எதிர்மறை ஏவல் விகுதிகளும் உரைக்கப்படுகின்றன (114).

2-31. ஈ, தா, கொடு என்ற சொற்களைப் பயன்படுத்தும் முறை (115) கூறப்படுகின்றது.

2-32. வாழிய என்ற சொல்லின் அமைப்பு (116).

2-33. பெயரெச்சம், வினையெச்சங்கள் பற்றிய நிலைகள் விளக்கப்படுகின்றன (117). உம் உந்து ஆதல் (118) செய்யுளில்.

2-34. வினையெச்சங்களை முந்தை இலக்கணிகள் வாய்பாட்டில் கூற இவர் விகுதிகளைக் கூறித் தெளிவு படுத்துகிறார் (119).

2-35. என வென் எச்சத்திற்கும், வான், பான், பாக்கு என வரும் எச்சத்திற்கும் ஒரு கருத்தா, இரு கருத்தா என்ற நிலையில் குறிப்பிடுவது (120) நினைக்கத்தக்கது.

2-36. எதிர்மறை வினையெச்சங்களுக்கும் விகுதி கூறு கின்றார் (121).

2-37. வரல், தரல், செலல், கொடை இச்சொற்கள் வரு மிடங்கள் மரபுவழிக் கூறப்பட்டுள்ளன (122).

2-38. வினைக்குறிப்பினை விளக்குகின்றார் (123). வினைக் குறிப்பு விகுதிகள் (124) அகரவிகுதி பெறல் (125) வினைக் குறிப்பு விகற்பங்கள் (126) பேசப்படுகின்றன.

2-39. இடம், பால், திணை, பொழுது, விடை, வினா, மரபு ஆகிய எழுவகை (127) வழுக்கள் குறிக்கப் பெறுகின்றன. வழுக்களைதல் பற்றிச் சுட்டுகின்றார் (128—129).

2-40. இடைச்சொற்கு இலக்கணங்கள் கூறி (130) அவை எட்டுவகைப்படுமென விளக்குகின்றார்.

2-41. ஏ (131) ஓ (132) என (133) உம் (134—135) இவ் விடைச்சொற்கள் பயன்படும் இடங்களைக் கூறி, எண்ணிடைச் சொற்கள் (136) இவை எனப் பேசுகின்றார்.

2-42. பொது அசைச் சொற்கள் முப்பதினையும் முன்னிலை அசைச் சொற்கள் பத்தினையும் (137) தருகின்றார்.

2-43. உரிச்சொல்லிற்கு இலக்கணம் கூறுகின்றார் (138).

2-44. உயிர்க்குரிய குணங்களாக முப்பத்திரண்டினைக் (139) கூறித் தொல்காப்பிய நூற்பாவை உரையில் தருகின்றார்.

2-45. உயிரல்லாதவைக்குரிய குணங்களாக எட்டினைக் (140) குறிக்கின்றார்.

2-46. உயிருள்ள பொருட்கும் உயிரில் பொருட்டும் பொதுத் தொழிற் குணங்களாக ஒன்பதினைக் (141) கூறுகின்றார்.

2-47. சொல்லதிகாரத்துள் கூறப்பட்டுள்ள செய்திகள் அனைத்தையும் தொகுத்துக் கூறுகின்றார் (142).

2-48. நன்னூல் எழுத்திகாரத்தில் கூறியுள்ள பல செய்திகளைத் தொன்னூல் விளக்கம் சொல்லதிகாரத்தில் கூறியுள்ளது.

2-49. நன்னூலிலிருந்து 36 நூற்பாக்கள் அவ்வாறே தொன்னூல் விளக்கத்தில் எடுத்தாளப் பட்டுள்ளன.

| நன். எழுத்து | தொ.வி. சொல். | நன். சொல் | தொ.வி. சொல் |
|---|---|---|---|
| 129,130 | 48 | 296 | 57 |
| 245,246 | 66 | 297 | 58 |
| 248 | 67 | 298 | 59 |
| 247 | 68 | 299 | 60 |
| 136 | 92 | 301 | 62 |
| 197 | 95 | 318 | 64 |
| 199 | 97 | 303 | 69 |
| 186 | 99 | 306 | 71 |
| 67 | 102 | 307 | 72 |
| 168 | 116 | 308 | 73 |
| நன். சொல் | | | |
| 309 | 74 | 403 | 93 |
| 310 | 75 | 332 | 106 |
| 311 | 76 | 407 | 115 |
| 312 | 77 | 452,453 | 139 |
| 313 | 78 | 454 | 140 |
| 380 | 81 | 455 | 141 |
| 388 | 82 | | |

## பொருள்

3-0. பொருளதிகாரத்தைப் பார்க்கின்ற நோக்கமே புதிதாக அமைந்துள்ளது.

3-1. அறம், பொருள், இன்பம், வீடு என்ற நூலிற்குரிய பயன்களைப் பொருளதிகாரம் கூறவேண்டுமென்று நினைக்கிறார். "அறம், பொருள், இன்பம், வீடு எனநான்கு, இவற்றுட் பொரு ணூற்றந்த செந்தமிழுணர்ந்தோர் மற்றை யாவுமொழிய அகப் பொருளெனச் சிற்றின்பமொன்றையும் புறப்பொருளெனப் படைச்சேவகமொன்றையும் விரித்துரைத்தார். அங்ஙனம் பொதுப்படாதுரைத்த நூல் சிறுபான்மையாகையான் இங்ஙனம் அறமுதனான்கிற் கேற்பப் பொது நூலாக விவ்வதிகார முடியுமெனவே கொள்க" என்பது அவர் உரை (144).

3-2. பொருள் அடிப்படையில் வழக்கு, தேற்றம், தோற்றம், அதாவது ஒழுக்கம்,வழக்கு, தண்டம் என மூவகை என்கிறார் (145).

3-3. இம்மூன்று பொருள் நிலையும்—நீதி வழங்கலும், நிலை பெறத் துணிதலும் தீது நன்றெனத் தெளிதலும் ஆகிய மூன் றிற்கும் துணைபுரியும் என்கிறார் (146).

3-4. பதிகம், காரணம், பா, தொகை, துணிவு என ஐந்து பொருட்கு ஆகும் பொதுவழி எனப் பேசுகின்றார் (147). இது பொருள் நூல்களின் நிலையைக் கூறுவதாக அமைந்துள்ளது.

3-5. அகத்திணை, புறத்திணை என்பன காரண வகையான் இரண்டு எனப் பேசுகின்றார் (150).

3-6. இவ்வகத்திணை என்பதை மனத்தின் ஒழுக்கம் என்ற நிலையில் தான் விளக்குகின்றார். "மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்து அறன்"—என்ற குறட்பாவைத் தெளிவாக விளக்கி—அகத்திணை—அகவொழுக்கம் - மனத்துக்கண் மாசிலன் ஆகுதல் என்று பேசி (149—உரை), அவ்வகத்திணை 12 வகைப்படும் எனப் பேசுகின்றார் (151). 1. இயல்பு 2. வகை 3. பொது 4. சிறப்பு 5. உவமை 6. புறநிலை 7. எதிர்நிலை 8. கருவி 9. காரியம் 10. காரகம் 11. முன்னவை 12. பின்னவை என்பன.

3-7. 'இயல்பினைக் கொண்டு பொருளைக்காட்டல் இயல்பகத் திணை' என விளக்குகின்றார் (152). நல்லறிவுடையோர் மக்கள்—அறிவில்லார் விலங்கு என்ற நிலையில் விளக்கி, மாதரது இயல் பினைச் சிந்தாமணியின் 'பெண்ணெனப்படுவகேண்மோ'—1597 என்ற பாடலைச் சான்றாகத் தருகின்றார். பொருளின் இயல்பைக் கூறுவது இயல்பகத்திணை எனலாம்.

3-8. இராமன் காட்டிற்குச் சென்றபோது மக்களின் துன்பம் ஏனைய உயிர்களின் துன்பம் இவ்வுயிர் வகைகளின் அகவுணர்

வைக் கம்பன் கூறுகின்றான். இப்பாடல்களைச் சான்று காட்டி இவை வகை அகத்திணை எனப் பேசுகின்றார் (153).

3-9. பொதுப்பட அறத்தின் மாட்சியைக் காட்டிப் புகழ்வது பொது அகத்திணை (154). கல்வி புகழ்ந்துழி திருவள்ளுவர் முதலிய கற்றோர் மாட்சியைப் புகழ்வது சிறப்பு அகத்திணையாம் (154). பொது அறத்தினை விளக்கல் பொது அகத்திணை எனவும் ஒரு தனி யறத்தின் சிறப்பினை உணர்த்துவது சிறப்பு அகத்திணை எனவும் கொள்ளலாம். மன உணர்வு வளர்ச்சியே இவைகள் அனைத் திற்கும் அடிப்படை எனக் கொள்ளலாம்.

3-10. அறத்தின் கூறுகளைப் பொருத்தமான பொருளோடு ஒப்புமை காட்டி விளக்குவது உவமை அகத்திணை (155) எனப்பேசு கின்றார். 'சலத்தாற் பொருள் செய்தே மாத்தல் பசுமட்கலத்துணீர் பெய்திரீ இயற்று' போன்ற குறட்பாக்களையும் சிந்தாமணிப் பாடல்களையும் காட்டி விளக்குகின்றார்.

3-11. தான் குறித்தவற்றின் புறத்து மற்றொரு பொருளை எடுத்துக்காட்டிக் குறித்த தன் பொருளை விளக்குதல் புறநிலை அகத்திணை எனப் பேசுகின்றார் (156). "பிறர் கடுஞ்சொலின்னான் இந்நாள் பொறுத்தது கண்டு நீயும் பொறாயோ" என்ற தொடரைச் சான்றாக்குகின்றார்.

3-12. 'ஒன்றனது விளக்க வதனை மறுத்தெதிரே நிற்கும் பொருளைக் காட்டல் எதிர்நிலை அகத்திணை' என்கிறார் (157). நல்லோரது மேன்மை தோன்றத் தீயோரது ஈனத்தைக் காட்ட லும், கல்லாமையால் வரும் இகழ்ச்சி தோன்ற கல்விப் பயக்கும் புகழ்ச்சியைக் காட்டல் போன்றன.

3-13. ஒன்றற்குள்ள காரணத்தைக் கொண்டாயினும் அதனா லாகும் காரியத்தைக் கொண்டாயினும் அதனை விளக்கிக் கூறல் கருவியகத்திணையும் காரியவகத்திணையுமென விளக்குகின்றார் (158). "நோயெல்லா நோய் செய்தார் மேலவா நோய் செய்யார் நோயின்மை வேண்டு பவர்" என்ற குறள் சிறந்த சான்றாக அமைந் துள்ளது.

3-14. 'ஒன்றனைச் செய்தலிற் கூடிய பலவும் பொதுப் பெயராகக் காரக'மெனப்படும். அவையே செய்பவனும் செய் தொழிலும் அதற்குதவும் இருவகைக் கருவிகளும் அதனாற் கருதிய பயனும் அதனை முடித்த இடமும் காலமும் படியுமெனக் காரகம் எழுவகைப்படும்.

தண்டவத் தனைய பைம்பூத் தருத்திரணிழற்றிக் கவ்வு, மண்ட பத் தொருநாள்வைகி மதுநலம் பொழிவாய்க் கஞ்சம்

விண்டவத் தொழியு மாந்தர் வீடுறச் செப்பங் காட்டி
யொண்டவத் திறைவன் சூசை யுரைவிரி தமிழிற் சொன்னான்—
தேம்பாவணி.

ஒண்தவத்திறைவன் சூசை—கருத்தா; செப்பங் காட்டிச் சொன்னான்—கருமம்; மதுநலம் பொழிவாய்க் கஞ்சம் விண்டென்பது கருவி; மாந்தர் வீடுற என்பது கருத்து; மண்டபத்து என்பதிடம்; ஒரு நாள்-காலம்; உரை விரி தமிழில் என்பது திறன்.

3-15. எடுத்த பொருள் தோன்றுவதற்கு முன்னையதும் பின்னுவதும் விரித்துக் காட்டல் முன்னவை, பின்னவை அகத்திணை எனப் பேசுகின்றார் (160).

பகை பாவ மச்சம் பழியென நான்கும், இகவாவாம் இல்லிறப்பான் கண்—என்ற குறளைச் சான்று காட்டி, இல்லிறந்து செல்வானுக்கு பகை, பாவம், அச்சம், பழி என்ற நான்கு வரும் எனப் பின்னவை அகத்திணை எனப் பேசுகின்றார். ஒழுக்கத்தின் அடிப்படையில், மனத்தைத் திருத்துவதன் நோக்கத்தில் தான் இவ்வகத்திணைகள் பன்னிரண்டும் அமைந்துள்ளன.

3-16. மேற்கூறிய பன்னிரண்டு அகத்திணைகளையும் கடைப்பிடிக்கப் புறநிலையில் இலக்கியச் சான்றுகளை எடுத்துக்காட்டி நிறுவுதல் புறத்திணையாம். புறத்திணைமூன்று வகைப்படும். ஒழுக்கம்-நூல்—புறக்கரி என (161) அவ்வந்நாட்டு இறைவழுவின்றி ஒழுகு முறையே ஒழுக்கம். அதாவது அந்நாட்டு அரசியல் அமைப்பின் படி நடத்தல் ஒழுக்கம் எனலாம். வேத நூல், நீதிநூல், மனுநூல் முதலியவற்றுள் விதித்தன கொண்டு, விலக்கின நீக்கல் நூல் புறத்திணை. அறிவுடையோர் உரைத்தனவும் எழுதினவும் தன் செயலுக்குச் சான்றாக எடுத்துக்காட்டுதல் புறக்கரியாகிய புறத்திணை எனப் பேசுகின்றார்.

3-17. மேற்கூறிய அகத்திணை புறத்திணை இவைகளை விரித்துக் கூறுகின்றார். அணிகளின் வாயிலாக விரித்துக் கூறுவது விரி என்கின்றார் (162). "ஆசையிற் பதிகத் துதாரணமாகவெடுத்தகுறளுண் முதற்பயனாகிய மனத்தின் தூய்மையால் அறமெலாம் பெறும் பெருமையுமுடையன என்பது பல அகத்திணையால் விரித்து விளக்கியவாறு...எப்பொருளினும் அதன் உண்மையுணர்தலே ஞானம். உணர்ந்த பொருளின் இவையே நல்லவை எனவும் இவையே அல்லவை எனவும் தெளிதலே காட்சி. தெளிந்த வழியே அல்லவை ஒருவி நல்லவை மருவி ஒழுகலே ஒழுக்கம். இந்நல்லொழுக்கமே அனைத்து அறன் ஆகையில் இவை எலாம் மனம் முயற்சியால் ஆக வேண்டுழி, மனம் ஒவ்வா அறனெல்லாம் பொய்யென இகழப் படுவது முறையே என்பது. இவையும் இத் தொடக்கத்தன பல

வும் இயல்பு அகத்திணையாம்.'' இவ்வாறு விரிவாக ஒவ்வொன்றிற்கும் எழுதிச் செல்கின்றார் (162).

3-18. முன்பு விரித்துக் கூறிய அனைத்தையும் தொகுத்துக் கூறல் தொகை (163).

3-19. ஒரு கருத்தை விரித்தும் தொகுத்தும் கூறிய பின்பு அக்கருத்தைக் கேட்போர் மனம் துணிந்து செயல்படும் வகையில் கூறுவது துணிவெனப் பேசுகின்றார் (164).

3-20. ஒவ்வொரு பொருளையும் அதற்குரிய முறையில் உரைப்பது உரிமை எனவும் அது காலம், இடம், பண்பு, ஒழுக்கு, இறை என ஐந்து வகைப்படுமெனப் பேசுகின்றார் (165).

3-21. கால உரிமை என்பது பருவம், பொழுது என இரு வகைப்படுமெனவும் கார், கூதிர், முன்பனி, வசந்தம், முதிர்வேனில் என ஆறு பருவங்கள் பற்றியும் குறிப்பிடுகின்றார் (166).

3-22. கார்காலத்தில் பயிலும் செயல்களைக் கார்காலத்துரிமை எனப் பேசுகின்றார். வாடைக்காற்று வீசுதல், இந்திர கோபம், மயில்,கேகயப்புள், இவை தோன்றி மகிழல்; வெண் காந்தள், செங்காந்தள், கொன்றை, கூதாளம், வேங்கை மரம், காக்கணஞ்செடி, முல்லை, கடம்பு, காயா, குருந்து இவை மலர்தல், கிளி, குயில் நீங்கல், தாமரை முதல் நீர்மலரே ஒளித்தல்— போன்றன நிகழும் அவையே கார்காலத்திற்கு உரியன (167) எனப் பேசுகின்றார்.

3-23. இதுபோன்று கூதிர்க் குரியனவும் (168) முன்பனிக் குரியனவும் (169) பின்பனிக் குரியனவும் (170) வசந்தத்திற்குரியனவும் (171) வேனிற் குரியனவும் (172) எவை எவை என விரித்துத் தருகின்றார்.

3-24. அறுவகைப் பொழுதாக மாலை, யாமம், வைகறை, விடியல், நண்பகல், எற்பாடு என்பனவற்றைத் தந்து, அதற்குரிய செயல்களையும் விவரிக்கின்றார் (173). ''மாலைக் காலத்திற்குரியன வாகக் குவளை மலர்தலும், புள்ளினம் சோலைகள் தொறும் அடைந்து கலகலெனப் பெரிதொலித்தலும், பசு முதற் கறவைகள் கன்றையுள்ளிக் கரைந்து வருதலும், தாமரை கூம்பலும் கன்னடம் காம்போதி என்ற ராகங்களைப் பாடுதல்'' எனப் பகர்கின்றார்(173). இங்கு ஒவ்வொரு பொழுதிலும் பாடப்படுகின்ற இராகங்கள் எவை எவை எனக் கூறுவது புதியது. தான் வாழும் காலத்திற்குத் தக இலக்கணம் உரைக்க வேண்டுமென்ற உணர்வு அவருக்கிருப்பதை அது காட்டுகிறது. இது போன்ற ஆறு சிறு பொழுதுகளுக்கும் தெளிவாக அப்பொழுதில் நடைபெறும் நிகழ்ச்சிகள் அனைத்தையும் கூறுகின்றார் (173).

3-25. இட உரிமை என்ற உட்பிரிவில் குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் என்ற ஐந்திடங்களையும் கூறி அவற்றினை விளக்குகின்றார் (174).

3-26. கருப்பொருள்களைப் பற்றிக் கூறும்போது இலக்கண விளக்கத்தைப் பின்பற்றுகின்றார். பதினான்கு கருப்பொருள் கூறப்படுகிறது (175).

3-27. பின்பு குறிஞ்சி (176) பாலை (177) முல்லை (178) மருதம் (179) நெய்தல் (180) இவற்றிற்குரிய கருப்பொருள்களை அந்தந்த நூற்பாக்களில் தெளிவாக விளக்குகின்றார்.

3-28. இவைபோகப் பொதுநிலையில் மலை, நாடு, யாறு இவை இடன் எனப்படும் (181) எனத் தருகின்றார்.

3-29. பண்புரிமை என்று ஒன்றை அமைத்து "அவனவன் பிறந்த சாதியும், நெஞ்சிற் பற்றிய பற்றுதலும், நால்வகை அளவும், ஐவகை வண்ணமும், அறுவகைச் சுவையும், எழுவகை இசையும் எண் வகை யூறும்" முதலியன அமையும் பண்பு எனப் பேசுகின்றார் (182).

3-30. சாதித்தொழில் உரிமை என ஒன்றை அமைத்து அந்தணர், அரசர், வணிகர், சூத்திரர் என்ற நால்வகைப் பகுப்பாருக்குமுரிய தொழில்களைக் கூறுகின்றார் (183). "இந்நாட்டு வழக்கம் பற்றி யவ்வச் சாதிக்குரிய தொழிலை விளக்குதும்" என்று கூறி- வேதத்தை ஓதி யுணர்தல் முதல் மூவர்க்கும் உரியது — ஏனைக் கல்வி நால்வர்க்கும் உரித்து என்ற கொள்கை பொருந்தாது என்பதை இவ்வாறு கேட்கின்றார். "வாயால் உணப்படும் உடற்குணா யார்க்கும் பொதுமைய வாகையிற் காதாலுணப்படும் உயிர்க் குணவாகிய மெய்ம்மறை ஓதல் சிலர்க்கு விலகல் கொடுமை யன்றோ. மீளவும் மறையே பரகதி வழியைக் காட்டுவதாகையால் அனைவரும் பொதுப்பட அக்கதிக்குரியவராகப் பிறந்த பின்னர் அவ்வழி யுணர்தல் பொதுமைத் தன்றென விதிப்பது நிறையோ"— என்று தம் எண்ணத்தைத் தெளிவாகவும் பொருந்துமாறும் உரைக்கின்றார். பின்னர், படைக்கலம் பயிறல் (184), அறப்புறங்காவல் (185), தூது (186, 187) போன்ற தொழிற்குரியாரையும் இலக்கண விளக்கத்தைப் பின்பற்றி விளக்கியுள்ளார்.

3-31. பற்றுதல் உரிமையென மனிதனைப் பற்றுகின்ற குணங்களாகிய வெறுப்பு, உவப்பு, இரக்கம், வெகுளி, நாணம், துணிவு, அச்சம் போன்றவைகள் இவன் பற்றின் காரணமாகத் தோன்றுகின்றன — பற்றில்லார்க்கு மேற்கூறிய பண்புகள் தோன்றுவதில்லை — கற்றோர் இதுபோன்ற பண்புகள் பற்றிய வழியும் வழுவாது காப்பது கடன் எனப் பேசுகின்றார் (188).

3-32. ஒரு பொருளின் வடிவம், தன்மை இவைகள் பற்றிச் சிறப்பித்துக்காட்டல் தேவை எனக் கூறுகின்றார் (189). இது தன்மையலங்காரம் எனப்படுமாதலால் அணியதிகாரத்துள்ளுங் காண்க என்கிறார்.

3-33. ஒழுக்க உரிமை என்பது உலக முறைமை என விரிக்கின்றார் (190).

3-34. சொல்லுரிமை எனச் சொற்களின் வகைகள் பேசுவதற்குரியோர் யார் யார் என்பதை விளக்குகின்றார். சனுக்கிரகம், சங்கதம், அவப்பிரஞ்சனம், பாகதம் எனச் சொல்வகை நான்கெனவும், முதலிரண்டும் தேவர்மொழி எனவும், அவப்பிரஞ்சனம் இழிசினர்மொழி எனவும், பாகதம் எல்லா நாட்டிலும் எல்லார் தம்மாலும் வழங்கு மொழி எனவும் குறிக்கின்றார். பாகதம் தற்பவம், தற்சமம், தேசிகம் எனமூவகைத்தாகும் எனவும் குறித்து விளக்கந் தருகின்றார் (191).

3-35. பதினெண் நாடுகளில் வழங்கும் மொழிகளையும் கூறி, செந்தமிழ், கொடுந்தமிழ் வழங்கு நிலப்பகுதிகளையும் கூறுகிறார் (193).

3-36. செந்தமிழ் வழக்கு என இலக்கணமுடையது, இலக்கணப்போலி, மரூஉ என்ற மூன்று இயல்பு வழக்கையும் இடக்கரடக்கல், மங்கலம், குழூஉக்குறி என்ற தகுதி வழக்கையும் இங்கே (194) பேசுகின்றார். இது ஏனைய இலக்கண ஆசிரியர்களால் சொல்லதிகாரத்தில் பேசப்படும் செய்தியாக அமைந்துள்ளது. (இ-தொ-சொ.பக். 37; தொ. சொ 17; நன். 267).

3-37. சொற்கள் குறிப்பாகவும் வெளிப்படையாகவும் பொருளை உணர்த்தும். குறிப்பாக உணர்த்துவன ஒன்பது வகையாகவும், ஏனைய வெளிப்படை எனவும் குறிக்கின்றார் (195). இது சொல்லிலக்கணத்தில் கூறப்படும் செய்தி (இ. தொ - சொ. பக். 164; நன். 269, இ. வி 17ப).

3-38. பல வினைக்குரிய பல பொருட்சொல் — பொதுவினையோடு அமைதல் வேண்டும் (196). இதுவும் சொல்லதிகாரத்தில் இருக்க வேண்டிய நூற்பா.

3-39. சிறப்புப்பெயரும், இயற்பெயரும் வரும்போது சிறப்புப்பெயர் முன்பும், இயற்பெயர் பின்பும் வருதல் வேண்டும் (197). இதுவும் சொல்லில் கூறப்பட்டுள்ள நூற்பா (இ. தொ- சொ. பக். 53; தொ. சொ. 41? நன். 317). திணை, நிலம், சாதி, குடி, உடைமை...இவற்றால் வரும் சிறப்புப்பெயராக அமைவதால் தொன்னூல் விளக்க ஆசிரியர் இங்கே பொருளதிகாரத்தில் இந்நூற்பாவை வைத்தார் எனலாம்.

3-40. அடுக்குச் சொல்லைப்பற்றி இங்கே பேசுகின்றார் (198)- நன். 395.

3-41. மரபின் வழியும் தொன்னூல் விளக்க ஆசிரியர் செல்கிறார் என்பதைக் காட்டுவதற்காகவே பொருளதிகார இறுதியில் (199) அகப்பொருள், கைக்கிளை, ஐந்திணை, பெருந்திணை என ஏழு எனவும், புறத்திணையும் ஏழு எனவும் கூறி, நம்பியகப்பொருள், புறப்பொருள் வெண்பாமாலை இவற்றின் நூற்பாக்களை மேற்கோள்களாகக் காட்டி விளக்குகின்றார்.

3-42. எல்லா அதிகார இறுதியிலும் அவ்வதிகாரத்துட் கூறப்பட்டவைகளைத் தொகுத்துத் தருவது வீரமாமுனிவர் வழக்கம். அதன்படி வழக்கு, தேற்றம், தோற்றம் என்ற முப்பொருளும், பதிகம்,காரணம்,விரிவு,தொகை, துணிவு என்ற ஐந்து வழியும்,இயல்பு, வகை, பொது, சிறப்பு, உவமை, புறநிலை, எதிர்நிலை, கருவி, காரியம், காரகம், முன்னவை, பின்னவை என்ற பன்னிரு அகத்திணைகளும், ஒழுக்கம், நூல், கரி என்ற மூன்று புறத்திணைகளும், காலம் இடம், பண்பு, ஒழுக்கம், சொல் என்னும் ஐவகை உரிமையும் என்ற இவைகளே பொருளதிகாரம் எனப்பேசுகின்றார்.

## யாப்பு

4-0. பெரும்பாலும் பண்டை இலக்கணங்களை ஒட்டியும் இலக்கிய மரபுகளை உணர்ந்தும் யாப்பு விதிகளை வகுக்கின்றார் வீரமாமுனிவர். அவருக்கு உரிய தனிப்பாணிக்கு ஏற்ப இவ் அதிகாரத்தையும் இறைவாழ்த்துடன் தொடங்கிக் கூறுகிறார்.

4-1. செய்யுள் என்பது யாது என்ற கேள்விக்குப் பொதுவாக நேரடியான விடை எவ்வியாப்பு நூலும் தருவதில்லை. யாப்பருங்கல விருத்தியிலிருந்து தொகுத்து ஆக்கப்பட்ட அமுதசாகரம் என்ற நூலே முதலில் இதனைப் பற்றித் தனித்த விளக்கம் தந்தது. தொன்னூல் விளக்கம், உடலையும் செய்யுளையும் இயைபுறுத்தி அமைக்கும் விளக்கம், நன்னூல் கூறும்.

'பல்வகைத் தாதுவின் உயிர்க்கு உடல்போல்பல
சொல்லால் பொருட்கு இடனாக உணர்வினில்
வல்லோர் அணிபெறச் செய்வன செய்யுள்'

என்ற கருத்தையே அடியொற்றி வந்தது எனலாம் (202).

4-2. செய்யுட்கு உறுப்பாக, எழுத்து, அசை, சீர், தளை, அடி தொடை ஆகிய ஆறைத் தருகின்றது இந்நூல்(203). தொல்காப்பியம் முப்பத்து நான்கு உறுப்பு எனக் கூறும் பழமரபு மாறுபட்டுக்

காக்கை பாடினியம், இலக்கண விளக்கம் ஆகியன ஆறு உறுப்பு எனக் கூறுவதனை ஒத்து இதுவும் அமைந்தது. இவ்ஆறுடன் ஓசையும் இணைய ஏழு எனவும் யாப்பும் இணைய எட்டு எனவும் முறையே யாப்பருங்கலம், யாப்பருங்கலக் காரிகை கொண்ட எண்ணம் இங்கு விடப்பட்டுள்ளது. ஆறு உறுப்புக்களில் எழுத்தையும் தளையையும் விட்டு நான்கு என வீரசோழியம் குறிப்பிட்டதும் இந்நூலாசிரியர்க்கு உடன்பாடன்றெனத் தெரிகின்றது.

4 - 3. எழுத்துப் பற்றிய செய்திகள் ஏற்கெனவே முன் அதிகாரங்களில் கூறப்பட்டு விட்டதால் போலும் தொன்னூல் விளக்கம் இவ்வுறுப்பினை விளக்காமல் விட்டது. காக்கைபாடினியம், யாப்பருங்கலம், யாப்பருங்கலக் காரிகை போன்ற நூற்கள் விளக்கமாக எழுத்துவகை, எண்ணிக்கை பற்றி நினைத்தன (பார்க்க-இலக்கணத்தொகை-யாப்பு-பாட்டியல், பக்கம் 15-18).

4 - 4. தொல்காப்பியம், இலக்கண விளக்கம் ஆகியன மேற்கிளந்தனவே எனக் கூறியமைந்தது போன்று தொன்னூல் விளக்கமும் கூறின் முழுத்தெளிவு விளைந்திருக்கும். எழுத்துப்பற்றி இரு வேறுவகைப்பட்ட எண்ணம் இருந்தமையை இங்குப் பார்க்கின்றோம். எழுத்ததிகாரத்து எழுத்துக்கும் செய்யுட்குரிய எழுத்துக்கும் வேறுபாடு இல்லை என்பது ஒன்று; இரண்டும் பயிற்சி பயன்பாட்டு நிலைகளில் வேறுபட்டன, யாப்புக்கு எனத் தனிப் பகுப்பும் பார்க்கும் கோணமும் உண்டு என்பது மற்றொன்று.

4 - 5. ஐந்திலக்கண நூலானமையால் தொன்னூல் விளக்கம் போன்ற முன்னியல் கருத்துக்களைக் கொண்டன எனவும், தனி யாப்பிலக்கண நூலானமையால் யாப்பருங்கலம், யாப்பருங்கலக் காரிகை என்பன எழுத்தை விரிக்கும் தேவைக்கு உள்ளாயின எனவும் கூறலாம்.

4 - 6. அசை நேர், நிரை என இரண்டு என்ற பொதுக்கருத்தினைத் தொன்னூல் விளக்கமும் தருகின்றது(204). நேர்பு, நிரைபு என்பனவற்றை இணைத்து நான்கெனக் கொள்ளும் தொல்காப்பியக் கொள்கை விழுந்து விடுகின்றது. நேர் நிரையசை வகைகளை விளக்கும்போது தொன்னூல் விளக்க நூற்பாவில் ஒரு குறை தென்படுகின்றது. 'நெடில் தனிக்குறில் மெய்நிகழ் குறில் நேராய், என்பதால் நெடிலெழுத்து, தனிக்குறில் எழுத்து, மெய்தொடர்ந்த குறில் ஆகிய மூன்றே 'நேர்' என்பது ஆகின்றது. நெடில் ஒற்றுடன் வ ல் நினைக்கப்பட்டதாகத் தெளிய முடியவில்லை. ஆயின் உரை அதனையும் தருகின்றது. அவ்வாறே நிரையசைக்கு, 'இணைக் குறில் குறினெடி' லென்பதே கூறப்படுகின்றது. இவை முறையே ஒற்றடுத்து வரல் சுட்டப்பட்டிலது. நூற்பாவில் 'மெய்' என்பு

தனை மத்திம தீபமாகக் கொண்டு அனைத்துடனும் இணைக்கலாம் எனின் அமைதி பெறலாம்.

4 - 7. தொன்னூல் விளக்கம், அசைச்சீர், இயற்சீர், உரிச்சீர் பொதுச்சீர் எனச் சீர்வகைகளைப் பிரித்து உரிச்சீரில், நேரிறுவனவற்றை வெண்சீர் எனவும் நிரையிறுவனவற்றை வஞ்சிச் சீர் எனவும் கொண்டு மரபு காக்கின்றது. பொதுச்சீரான நாலசைச் சீரும், அசைச்சீரும் தளைபெறுமாற்றைக் கூறுகிறார்(206).

4 - 8. யாப்பருங்கலக் காரிகையைப் பின்பற்றித் தருகின்றது. பொதுச்சீர் வரும் பாவிடங்களைக் கூறும்போது தொன்னூல் விளக்கம் புதுச்செய்தி கூறுகின்றது. 'பொதுச்சீர் வெண்பாவில் வராது ; ஆசிரியத்துள்ளும் கலியுள்ளும் குற்றுகரம் வந்துழியன்றி வாரா ; வஞ்சியுள் குற்றுகரம் வாராதேயும் எல்லாம் வரப்பெறுமாயினும் பெரும்பான்மையால் ஓரடியுள் ஒன்றன்றி வாரா; இரண்டு வரினும் தொடர்ந்து நில்லா'. பொதுச்சீரின் பயிற்சி பற்றி இத் துணை விளக்கம் பிற நூல்களில் இல்லாத ஒன்று.

4 - 9. தளை ஏழு என்ற பொதுக் கொள்கையிலிருந்து வழுவாமல் இலக்கணம் வகுக்கின்றது தொன்னூல் விளக்கம்.

4 - 10. அடி பற்றிய கொள்கையிலும் இந்நிலையே பின்பற்றப் படுகின்றது. கழிநெடிலடி எட்டுச்சீர்வரை வரலாம் எனவும் மிக்கது சிறப்பன்று எனவும் காக்கை பாடினியத்தைப் பின்பற்றித் தருகின்றது தொன்னூல் விளக்கம். இம் மேலெல்லையை யாப் பருங்கலம் பத்துச்சீர் எனவும் இலக்கண விளக்கம் ஏழுசீர் எனவும் கொண்டன.

4 - 11. பொதுவாக எவ்வுறுப்பையும் விளக்கி விட்டுப் பின் அதன் வகைகளை விளக்கிச் செல்வது, தொன்னூல் விளக்கத்தின் இயல்பு. தளைபற்றிப் பேசும்போது, 'தளையாம் சீர் தம்முள் தலைப்படும் சுட்டே' (207) எனவும், அடிபற்றிப் பார்க்கும்போது 'அடி என்ப தளைத்த அம்சீராம் நடை' (211) எனக் கூறியது போன்றே, தொடை பற்றித் தொடங்கும் இடத்தும் 'தொடை என்பது ஈரடி தொடுப்பதாம்' (212) என நுதலிப் புகுகின்றார்.

4 - 12. மோனைக்குரிய இனஎழுத்துக்களை, அமுதசாகரம், வீரசோழியம் என்பன கூறுவது போன்று இவரும் தருகின்றார் (213). யாப்பருங்கலம், யாப்பருங்கலக் காரிகை இவற்றின் உரைகள் ஆகியனவற்றை அடியொற்றித் தொன்னூல் விளக்கம் எதுகைக்கு ஆறுவகை அமைக்கின்றது (214). தலையாகு-இடையாகு கடையாகு எதுகைகள் இந்நூலுக்கே உரியன (215). சீரின் முதலெழுத்தொழியப் பிற ஒன்றல், இடையெழுத்துக்கள் ஒன்றல்,

ஈற்றெழுத்துக்கள் ஒன்றல் என்பது விளக்கம். தொடை, தொடை விகற்பங்கள், செந்தொடை முதலிய மூன்று ஆகிய அனைத்தையும் மரபுப்படி கூறிவிட்டுப் பிற உறுப்புக்கள் போலாது தொடைக்கு ஒரு தொகைச் சூத்திரமும் கூறுகின்றார் (218). இது மிகையே எனினும், தொடை நாற்பத்து மூன்று என்ற கருத்தினை எடுத்து மொழிந்தார் எனலாம்.

4 - 13. பா நான்கு என்ற பொதுக் கருத்திருக்கத் தொன்னூல் விளக்கம் புகும்போதே பா ஐந்து என மருட்பாவையும் இணைத்துத் தந்தது (219). பொதுவாக, பிற இலக்கணங்களே பாவினத்திற்குப் பாவோடு ஒத்த மதிப்பு அளிக்காதிருக்க, தொன்னூல் விளக்கம் இந்நூற்பாவிலேயே மூவினத்தையும் நினைக்கின்றது. யாப்பிலக் கணங்களில், 'தூக்கு' என்ற சொல்லைப் பா என்ற பொருளில் தெளிவாகப் பயன்படுத்துகின்றது தொன்னூல் விளக்கம் (மட்டுமே).

4 - 14. ஒவ்வொரு பாவுக்கும் உரிய ஓசையின் மூவகைகள் பற்றிய கருத்து யாப்பருங்கலம்,யாப்பருங்கலக் காரிகை உரையாசிரியரிடம் காணப்பட்டாலும், முதலில் நூற்பாவின்கண் கருதியமைக்கப்பட்டது தொன்னூல் விளக்கத்தில் தான். அதன்படி இவர் வெண்பாவின் செப்பலோசைக்கு ஏந்திசை, தூங்கிசை, ஒழுகிசை வகைகளைக் கூறிச் சீர்ப்பயிற்சியையும் விளக்குகின்றார்(221).

4 - 15. வெண்பாவுக்குத் தொன்னூல் விளக்கம் ஆறுவகைகள் காண்பது சிறப்பு.(நூற்பா இருமுறை 'ஆறு' என்பதைக் கூறுவது அழுத்தம் தரவோ என்பது ஐயம்!). குறள், சிந்து, இன்னிசை, நேரிசை, பஃறொடை என்று ஏற்கெனவே யாப்பருங் கலத்தின்கண் வழங்கிய ஐவகைகளுடன், வீரசோழியம் சவலை எனக் குறித்த பாவிகற்ப வகையை இணைத்து ஆறு என ஆக்கியது தொன்னூல் விளக்கம் (222). இத்தொன்னூல் விளக்கம், சிந்தியல் வெண்பாவில் நேரிசை, இன்னிசை ஆகிய இருவகைகளை யாப்பருங்கலக் காரிகை போலக் கொண்டாலும், அவற்றைத் தனித்தனி வகையாகக் கருதாது 'சிந்தியல்' என ஒரே வகையில் அடக்குவது நினைத்தற்குரியது.

4 - 16. பொதுவாக யாப்பிலக்கணங்கள் ஒவ்வொரு பாவையும் விளக்கி வகைகளை விரித்தபின் அவ்வப்பாவின் மூவினங்களையும் நினைப்பது இயல்பு. பாவும் இனங்களும் தம்முள் பெயர் நிலையில் தொடர்புடன் அமைந்தாலும் அவற்றிடையே குறிப்பிடத்தக்க ஒப்புமைக் கூறுகள் காணப்படாமையின், அவ்வாறு இணைத்து நினைக்காது பாக்களைச் சேர்த்தும், பாவினங்களைச் சேர்த்து ஒரு தனி வகையாகவும் தொன்னூல் விளக்கம் தருகின்றதோ என எண்ணலாம்.

4-17. எனவே, தொன்னூல் விளக்கம் வெண்பாவுக்குப்பின் நேரடியாக ஆசிரியப்பாவுக்குச் சென்று விடுகின்றது. ஆசிரியத்தின் நால்வகைகளைக் கூறும்போது, பிற ஆசிரியர்கள் 'நிலைமண்டிலம்' எனக் கூறுவதை இவர் 'நிலமண்டிலம்' என்கிறார்.

4-18. தொல்காப்பியம் கலிக்கு நால் வகைகளைக் கூறுகின்றது. அவற்றுள் இறுதி வகையான உறழ்கலியை ஒழித்து, யாப்பருங்கலம் கலிவகை மூன்று என்றது. தொன்னூல் விளக்கம், கலிவெண்பா, வெண்கலிப்பா என இருவகைகள் கொண்டு கட்டளைக் கலிப்பாவையும் இணைப்பதால் வகைகளின் பெருக்கம் அமைகின்றது. கலிப்பாவின் வகைகள் பத்து எனக் கூறி (227) பின் கட்டளைக் கலிப்பாவைத் தனியாக விளக்குகின்றது (236).

4-19. தொன்னூல் விளக்கம் தவிரப் பிற நூல்கள் கட்டளைக் கலிப்பாவுக்கு இலக்கணம் கூறவில்லை. ஒரு மாவும் மூன்று கூவிளமும் இணைந்து அரை அடியாய், முதலசை நேராயின் அரையடிக்குப் பதினொன்றும், நிரையாயின் பன்னிரண்டு எழுத்துப் பெற்று நான்கடி அளவொத்து வருவது இது. ஆசிரியர் உரையில் இலக்கணமாகவும் சான்றாகவும் ஒரு பாடலைத் தருவது குறிப்பிடத்தக்கது.

4-20. கலிப்பாவுக்குரிய தரவு, தாழிசை, தனிச்சொல், சுரிதகம், அராகம், அம்போதரங்கம் ஆகிய ஆறு உறுப்புக்களைக் கலிப்பாவின் பொது இலக்கணம் கூறும்போது சுட்டிச் செல்வதுடன் அமைந்து விடுகின்றன, பெரும்பான்மை யாப்பிலக்கணங்கள். இவ்வுறுப்புக்களுக்குத் தனியாகத் தெளிந்த விளக்கம் தரும் நோக்குடன் சில நூற்பாக்கள் அமைக்கின்றது காக்கை பாடினியம். இதனைப் பின்பற்றிப் போலும் இத்தகு நுண் கருத்துக்களைத் தொன்னூல் விளக்கமும் இயம்புகின்றது. இவ் உறுப்புக்களில் தரவு, தாழிசைகளை முதல் உறுப்பு எனவும் பிறவற்றைத் துணையுறுப்பு எனவும் கூறல் (228), இந்நூலுக்கே உரிய புதுமை.

4-21. யாப்பருங்கலம் கலிவெண்பா எனவும், யாப்பருங்கலக் காரிகை வெண்கலி எனவும் ஒரே வகையை விளக்க, தொன்னூல் விளக்கம் அவற்றை வேறுபடுத்தி இரண்டாகக் கொள்ளுகின்றது (335). வெண்கலியில், அளவடி பல தளையும் பல தொடையும் பெற்று ஈற்றடி வெண்பாப்போல் அமைய, கலிவெண்பா வெண்டளையே பெற்று மேற்படி பாப்போன்று அமையும் என்பது விளக்கம்.

4-22. வஞ்சிப்பா, தனிச்சொல்லோடு அகவல் சுரிதகம் பெற்று முடியலாம் என்ற யாப்பருங்கலக் கருத்து, தொன்னூல் விளக்கத்திலும் அமைகின்றது (237).

4-23. மருட்பாப் பற்றிய குறிப்பு அமைந்தாலும் தொல்காப்பியம் அதனைத் தனிப்பாவாகக் கருதவில்லை. யாப்பருங்கலம் முழுமையாகவே இப் பாவகையை விட்டுவிட்டது. யாப்பருங் கலக் காரிகையோ இதனை ஒழிபியலில் சுட்டியது. தொன்னூல் விளக்கம் மருட்பாவை, 'வெண்பா வந்து ஈற்றில் ஆசிரியம் மருளும் இயல்புடையது' என மட்டும் காட்டி அமைகின்றது(238).

4-24. தாழிசை, துறை, விருத்தம் என்ற பாவினங்களைத் துறை, தாழிசை, விருத்தம் என முறைமாற்றித் தருகின்றது தொன்னூல் விளக்கம் (239). நாம் முன் சுட்டியதுபோல், பிற யாப்பு நூற்கள் அவ்வப் பாவையும் அதனதன் இனங்களையும் இணைத்து நினைக்கத் தொன்னூல் விளக்கம் பாக்களைத் தனியாகவும் இனங்களைத் தனியாகவும் இருதொகுதியாகத் தருகின்றது. இனங்களைத் தரும்போதும் ஒரு பாவுக்குரிய இனங்களை இணைத்துத் தராது, துறைகளைச் சேர்த்தும் தாழிசைகளைச் சேர்த்தும் விருத்தங் களைச் சேர்த்தும் தருகின்றது.

4-25. ஆசிரியத் துறை பற்றிய கருத்துக்கள், யாப்பருங்கலம் முதல் பிற்கால இலக்கணங்கள் வரை மாறுபடாது ஒன்றாகவே அமைந்துள்ளன எனலாம். ஆயின் வகைகளின் எண்ணிக்கையில் நால்வகை என்னும் வரையறை பிற்காலத்து ஏற்பட்டமையைத் தொன்னூல் விளக்கம் காட்டுகின்றது (240).

4-26. சம்பந்தர் தேவாரத்தில் தோன்றிய புதிய கட்டளைக் கலித்துறை வடிவம் பற்றிய இலக்கணம் வீரசோழியத்தின்கண் கட்டளை என்ற பெயர்த் தொடர்பின்றியே முதலில் அமை கின்றது. தொன்னூல் விளக்கம் கட்டளைக் கலித்துறைக்கு உரிய எழுத்தெண்ணிக்கை கூறாது சீர்நிலை வகுத்து விளக்கம் தருகின்றது (241). காப்பியக் கலித்துறை எனவும் விருத்தக் கலித்துறை எனவும் உரையில் கலித்துறையைக் குறிப்பிட்டுக் கட்டளைக் கலித்துறை வேறுபட்டது என்று காட்டுகிறார்.

4-27. வஞ்சித்துறையைப் பொதுவாக 'விருத்தம்' என்று கூறு வதுண்டு என்ற கருத்தையும் உரையில் தருகின்றார்.

4-28. தாழிசைகள் தனித்து வருவதுடன் ஒரு பொருள்மேல் மூன்றடுக்கியும் வரும் என்ற கருத்து யாப்பருங்கலம்-யாப்பருங் கலக் காரிகை உரையாசிரியரால் கூறப்படினும், தொன்னூல் விளக்கமே முதலில் வெளிப்படையாக நூற்பாவில் அமைக் கின்றது.

4-29. ஆசிரியத் தாழிசைக்குச் சான்று தரும்போது 'கன்று குணிலாக' என்ற சிலம்புப் பகுதியைத் தருகின்றார். ஆனால் சிலப்

பதிகாரம் என்று நூற்பெயர் குறிப்பிடப்படவில்லை. எனவே உரையில் பெயரின்றியும் பல மேற்கோள்கள் ஆளப்படுகின்றமை தெளிவு.

4-30. ஈற்றடிகள் தவிரப் பிற அடிகள் அளவொத்து வர வேண்டும் எனக் கலித்தாழிசைக்கு முந்தைய இலக்கணங்கள் தரும் விளக்கம் தொன்னூல் விளக்கத்தின்கண் நெகிழ்த்தப்படுகின்றன: ஈற்றடி யொழியப் பிற அடிகள் அளவொத்தும் ஒவ்வாதும் வரலாம் என்பது இங்கு அமைகின்றது (245).

4-31. தோடி ராகத்துக்கு ஏற்ற அடியான் வரும் ஆசிரிய விருத்தம் எல்லாம் இன்று தாழிசை எனப்படும் என ஆசிரிய உரையில் குறிப்பிடுவது ஒரு புதுப்புறநடைக் கருத்தாக உள்ளது (246).

4-32. விருத்தம் என்பதற்குப் பொது இலக்கணம் தனித்து வகுப்பது தொன்னூல் விளக்கமே. எல்லாச் சீரும் விரவிய அடிகள் நான்கு அளவொத்தும் சீரமைப்பொத்தும் வரல் இதன் பொதுப்பண்பு (247). வட்டவடிவால் இச்செய்யுள் வருவதால் விருத்தம் என்றனர் எனவும் விருத்தமெனினும் வட்டம் எனினும் ஒக்கும் எனவும் உரையில் கூறுகின்றார்.

4-33. சந்த விருத்தம் பற்றி, வடமொழிப் போக்கில் வீரசோழியம் கூறியதைத் தொடர்ந்து தொன்னூல் விளக்கமும் மொழிகின்றது எழுத்தும், அசையும் அளவொத்து ஒலி பற்றி வருவன சந்த விருத்தம் (249). இவையே வண்ண விருத்தம் எனப்படும் எனவும் எழுத்துச் சந்த விருத்தம் அசைச் சந்த விருத்தம் என்னும் இருவகையின எனவும் உரையில் விளக்குகின்றார்: விருத்தம் பற்றிய கொள்கையில் ஒரு கால வளர்ச்சியை இங்குக் காண்கிறோம். அடியளவு ஒத்துவரல் எனும் பொதுமை மாறி, எழுத்து எண்ணிக்கை, அசை நிலைகள் அடிதோறும் ஒத்துவரும் சிறப்புப்பண்பு அமைந்து விடுகின்றது.

4-34. வீரசோழியம் அசலைப் பத்தியம் என்றும் அதன் போலியைக் கத்தியம் என்றும் வகைப்படுத்தியுள்ளது. வடமொழிச் சார்பு காரணமாக ஏற்பட்ட இதனைத் தொன்னூல் விளக்கத்திலும் காணலாம். அது பா, பாவினங்களைக் கத்தியம் என்றும் அவ்வரையறைகளிலிருந்து விலகி விரிந்து வருவனவற்றைக் கத்தியம் எனவும் வேறுபடுத்துகின்றது (250). உரைப்பாட்டுமடை, கருப்பம், உரைபெறு கட்டுரை போன்றவற்றைக் கத்தியம் எனலாம்.

4-35. தொல்காப்பியம் செய்யுள் உறுப்பாகக் கொண்ட வண்ணத்தைத் தொன்னூல் விளக்கம் செய்யுளுறுப்பு எனும் பகுதியில் கூறாது பா பாவினங்களைப் பற்றிப் பேசியபின் கூறுவது

எத்துணைப் பொருத்தம் என எண்ண வேண்டியுள்ளது. வண்ணம் இருபது என்ற கருத்தே இங்குப் பின்பற்றப் படுகின்றது (250).

4-36. அகப்பாட்டுப் புறப்பாட்டு வண்ணங்களை உரையில் விளக்கும்போது 'முகிந்தது போல முகியா தியல்வன புறப்பாட்டு வண்ணமும் முகியாதது போல முகிந்து வருவன அகப்பாட்டு வண்ணமும்' எனக் கூறுவதில், முகிந்தது—முடிந்தது எனவும் முகியாது—முடியாது எனவும் பொருள் படுவனவாம். இத்தகு சொல்லமைப்பின் தனித்தன்மை குறிப்பிடத் தக்கது.

4-37. தண்டியலங்காரம் செய்யுளைப் பிரிப்பதற்கேற்ப முத்தகம், குளகம், தொகைநிலை என வகுத்து விளக்குகின்றது தொன்னூல் விளக்கம் (251-256). அணி இலக்கணம் கூறும் கருத்தை இவ்வாறு யாப்பிலக்கணத்தில் உட்படுத்தல் தொன்னூல் விளக்கத்தின் பின் சுவாமிநாதத்திலும் அமைகின்றது. தொகைநிலை-தொடர்நிலை பற்றிய எண்ணங்கள் பாட்டியல் நூல்களில் காணப்படுவதால், தொன்னூல் விளக்கம் அவற்றை முன்னோடியாகக் கொண்டதோ என ஐயுறலாம்.

4-38. பொருட்டொடர்நிலை வகையாகக் காப்பியத்தைக் கூறிப் பின் அதன் வேறுபாடாகப் புராணத்தைத் தொன்னூல் விளக்கம் அமைப்பது குறிப்பிடத்தக்கது (255). பல கதைகள் புனைவது புராணம் என்ற கருத்து இவருக்குத் திருவிளையாடற் புராணம், பெரிய புராணம் போன்ற நூற்களைப் பார்க்க ஏற்பட்டிருக்க வேண்டும். தொன்னூல் விளக்கத்தின் முன், வெண்பாப் பாட்டியலே முதன்முதலில் புராணத்திற்கு இலக்கணம் வகுக்கமுற்பட்டது. 'குலவரவு காரிகை யாப்பிற் புராணமேயாம்' (42). அந்நூல் தரும் விளக்கம்.

4-39. பெருங்காப்பிய இலக்கணம், முழுமையும் தண்டியலங்காரத்தையே பின்பற்றித் தரப்படுகின்றது (256).

4-40. 257-ஆம் நூற்பா முதல் 283-ஆம் நூற்பா வரை சுமார் முப்பது பிரபந்த வகைகளை விளக்குகின்றது தொன்னூல் விளக்கம். இறுதி நூற்பா புறநடையாகி, உரையில் இன்னும் பல வகைகளை உள்ளடக்குகின்றது.

4-41. கலம்பகத்திற்குரிய பதினெட்டுறுப்புக்களைத் தொகுக்கும்போது தொன்னூல் விளக்கத்தில் சில மாறுபாடுகள் அமைகின்றன. 'களி' என்ற உறுப்பு விடப்பட்டுள்ளது. பிற நூல்கள் ஒன்றும் கூறாத 'காற்று' என்ற உறுப்பு இணைகின்றது (பார்க்க இலக்கணத் தொகை - யாப்பு - பாட்டியல் - பக்கம் 395).

4-42. பரணிக்கு யாப்புக் கூறும்போது, பொதுவாக ஈரடிக் கொச்சகம் - அளவொத்து நாற்சீரடிக்கு மேல் பல சீர் பெற்றுத்

தாழிசையாக வரும் என்பது அமையும். தொன்னூல் விளக்கம், பல தாழிசைகளால் வருவதால் 'பஃறாழிசை' என விதந்தோதுகின்றது (259).

4-43. உலாவுக்குத் தலைவனின் தசாங்கங்களைக் கூறுவதனை ஒருகூறாகத் தொன்னூல் விளக்கம் மட்டுமே கொள்ளுகின்றது. உலா வரும் தலைவனை ஏழ்பருவத்து மகளிர் கண்டு காதலித்தல் எனப் பன்னிரு பாட்டியலும், செய்கை மறந்து அயர்தல் என வெண்பாப் பாட்டியலும், ஏத்துதல் என நவநீதப் பாட்டியலும் கூற, தொன்னூல் விளக்கம் 'வியந்து தொழுதல்' என உயர்நிலை தருகின்றது (260).

4-44. உலாப் போன்றே மடலும் கலிவெண்பா யாப்பில் அமையும் நிலையில் ஒப்புமை பெறுவதையே தொன்னூல் விளக்கம் 'மடல் என்பது உலாப் போல் வழங்கினும்' என்பதால் சுட்டியது எனலாம் (261).

4-45. தொன்னூல் விளக்கம் அங்கமாலை என்பதிலே கேசாதிபாதம் பாதாதிகேசம் ஆகிய வேறிரு இலக்கிய வகைகளையும் அடக்குகின்றது. வெண்பா விருத்தத்தால் இது வரும் என நவநீதப் பாட்டியல் கூற, கலிவெண்பாவாலும் வரலாம் எனத் தொன்னூல் விளக்கம் இணைக்கின்றது (262).

4-46. ஆற்றுப்படைக்குச் சிறிதே வேறுபட்ட விளக்கம் இங்கு அமைகின்றது. வழியில் எதிர்ப்பட்டவரிடம் தலைவனைப் புகழ்ந்து பாடுவது என்ற கருத்தோடு அமைந்துவிடுகின்றது; ஆற்றுப்படுத்தல் பற்றிய எண்ணம் இல்லை எனலாம் (266).

4-47. மாலை எனப் பெயர்பெற்று அகவலால் வரும் இலக்கியங்கள் பல உள்ளன போலும் (628). தூசிப்படையைப் புகழ்வது தானைமாலை என இலக்கண விளக்கம் கூற, அவ்வாறன்றிப் பொதுவாகச் சேனையைப் புகழ்தல் எனத் தொன்னூல் விளக்கம் இயம்பும். போரைப் புகழ்வது வஞ்சிமாலை எனத் தெளிவாக இந்நூலே முதலில் மொழிந்தது. புறப்பொருளில் போர்த் தொடர்பான வெட்சி முதலிய பல மாலைகள் இருக்க இந்நூல் மூன்றனையே தேர்ந்து கொண்டுள்ளது கவனித்தற்குரியது.

புகழ்ச்சி நாமமாலைகள் பிற அடி மயங்கிய வஞ்சிப்பாவில் வரும் என்ற மரபிலக்கணம் இருக்க இந்நூல் அடிமயக்கினை நினையாது, 'வஞ்சி பாடல்' என்கின்றது.

4-48. செருக்கள வஞ்சியைப் பத்துவகை விருத்தத்தால் பாடவேண்டும் எனப் பன்னிரு பாட்டியல் கூற, வஞ்சிப் பாவால் பாடல் என வெண்பாப்பாட்டியலைப் பின்பற்றித் தொன்னூல் விளக்கம் கூறுகின்றது (270).

4-49. வரலாற்று வஞ்சிக்குப் புதுப் பொருண்மை வகுக்கின்றது இந்நூல் (271). அறம் முதல் நான்கும் வருமாறு உணர்த்துவது அது.

4-50. நால்வகைச் செய்யுளின் கோவையாக நான்மணி மாலையைக் காட்டுதல் வழக்கம். தொன்னூல் விளக்கம் இதனை ஆசிரிய விருத்தத்தால் வருவது என்கின்றது (272).

4-51. ஊசல் எனும் பிரபந்தம், முதற்கண் வண்ணகம் பெற்றும் வரும் என்ற புதுக்கருத்தைத் தருகின்றது இந்நூல் (276).

4-52. மணிமாலை என்ற இலக்கியவகை தொன்னூல் விளக்கத்திலேயே தொடங்கப்பட்டது(279). இருபது வெண்பாவும் நாற்பது கலித்துறையும் பெற்று வரும் இவ்வகையை முத்துவீரியம், பிரபந்த தீபிகை ஆகிய பின்நூல்களும் கூறின (பார்க்க இலக்கணத்தொகை - யாப்பு - பாட்டியல், பக்கம் 482-483).

4-53. கலம்பக உறுப்புச் சில நீங்கிய பன்மணிமாலைக்குத் தொன்னூல் விளக்கம், அகவல், வெள்ளை, கலித்துறை என்பன செறிந்து நூறுபாடல் அந்தாதியாய் வரும் என யாப்பு விதந்தோதுகின்றது(280).

4-54. வெண்பாவும் கலித்துறையும் இணைந்து வரும் இணை மணி மாலையினைப் பொதுவாகப் பாட்டிலக்கணங்கள் கூற வெண்பா-கலித்துறை-அகவல்-மனவிருத்தம் தொடர்ந்து நூறு பாடலால் வருவது இவ்வகை எனக் கூறித் தொன்னூல் விளக்கம் மாறுபடுகின்றது(282).

4-55. ஐந்து பாடலால் அலங்கார பஞ்சகம் வருவதனைச் சில இலக்கணங்கள் கூற, வெண்பா-கலித்துறை-அகவல்-அகவல் விருத்தம் ஆகியன ஒவ்வொன்றும் அவ்வைந்து பாடலாய் இருபது பாடலால் வருவது இவ் இலக்கியம் எனத் தொன்னூல் விளக்கம் கூறுகின்றது(282).

4-56. மங்கலச் சொற்களின் பட்டியல் நூலுக்கு நூல் மாறுபட்டு எண்ணிக்கை மிக்கும் குறைந்தும் அமைவதுண்டு. கரி, அலர், தினகரன், வயல் என்பன தொன்னூல் விளக்கத்தில் புதியதாகப் புகுந்தன இவற்றின் பரியாயச்சொல் முன்பே உண்டு. எனலாம்(285).

4-57. பன்னிரு பாட்டியல், வெண்பாப் பாட்டியல் போன்றன குறிலெழுத்து ஆண்பால் எனவும் நெடிலெழுத்து பெண்பால் எனவும் கூற, தொன்னூல் விளக்கம் பிறன்மதம் கூற

லாக இக்கருத்துடன், உயிர் ஆண் உயிர்மெய் பெண் என்பதையும் இணைக்கின்றது(289).

4 - 58. எழுத்து வருணம் வகுக்கும்போது, தொன்னூல் விளக்கம் அந்தணர்க்குக் கைசிகர் என்ற பெயரைப் பயன்படுத்து கின்றது. பன்னிரு பாட்டியல் 'பிறப்பு' என்ற தனிப்பகுதியிலும் பிறநூற்கள் வருணப் பொருத்தத்தின் கீழும் இன்னின்ன இறைவன் இன்னின்ன எழுத்துப் படைத்தான் எனக் கூறத் தொன்னூல் விளக்கம் அதனை யாண்டும் கூறுமைக்கு அவை பொருத்தமின்று என்பதும், ஆசிரியரின் மதச்சார்பும் காரணமாக லாம்(291).

4 - 59. நாட்பொருத்தம் நவிலும்போது, பன்னிருபாட்டியல் முதலிய பழைய நூற்கள் ஞகர வரிசையில் ஞ, ஞா, ஞொ என்பனவற்றை 'அவிட்டம்' எனத்தரத் தொன்னூல் விளக்கம் 'ஞே' என்பதையும் இணைக்கின்றது. அவ்வாறே யகர வரிசையில் யா மட்டும் பிற தர, இந்நூல் யகர யாகாரங்களை உத்திரட்டாதி ஆக்கிற்று(292).

4 - 60. கதியின்கண், நரகர் கதிக்கு ஐ ஔ ஃ வ ள ன ஆகியன வற்றைப் பன்னிரு பாட்டியல் தர, ஆய்தம் ஒழித்துப் பிறவற்றைக் குறிக்கின்றது தொன்னூல் விளக்கம்(293).

4 - 61. பாவுக்குச் சாதி நிலம் நிறம் இராசி முதலியன விரிக்கும்போது, அவை தேவையில்லை என உணர்ந்தும் மரபு பற்றித் தருகின்றார் நூலாசிரியர். 'முதற்பாவாகிய நான்கிற்குஞ் சில விலக்கணங்களை யுரைத்தார் முன்னோர். அவை யொருபயனு மொருகாரணமு மின்றி முன்னர் நிறுத்திய மதத்தி லூன்றின வாயினும் பிறன் மதங் கூறவே தந்திரயுத்தி யாகையி லவற்றைக் காட்டுதும்' என உரையில் கூறுவது இதற்குச் சான்று(295).

4 - 62. மரபுபற்றி நாற்கவிகளை விளக்குகின்றது இந்நூல் (299). சித்திரக்கவியை விளக்கும்போது, உரையில், 'அன்றியும் கோமூத்திரி முதலினி யணியதிகாரத்துட் காட்டும் படியே வழங்கு மிருபது மிறைக்கவியைச் சித்திரக்கவி யென்மரு முளராயினு மவை சிறுபான்மை யென்று மதியார் புலமை மிக்கோர்' என்கிறார்.

4 - 63. பிறஅதிகாரங்களில் கூறியதன் வண்ணம் யாப்பதி காரத்தின் இறுதியிலும் தொகைச் சூத்திரம் அமைக்கின்றார்(300).

## அணி

5-0. அணியதிகாரமும், கலைச்செல்வனாகிய இறைவனை வணங்கித் தொடங்குகின்றது.

5-1. அணியின் இருவகைகளான சொல்லணியும் பொருளணியும் வேறுபடுத்தி விளக்கப்படுவது இந்நூலுக்கே உரியது எனலாம். சொல்மாற அணி கெடுவது சொல்லணி எனவும் அவ்வாறு மாறினும் நிலைக்கும் அணி பொருளணி எனவும் தெளிவாக்கப்படுகிறது குறிப்பிடற் குரியதாகும் (302).

5-2. எக்கருத்தையும் இலக்கியக் கூற்றையும் விளக்கிப் பின் வகைகளை விரிக்கும் இத்தனிப்பாணி இந்நூலின் பிற பகுதியிலும் அமைந்தது நினைத்தற்குரியது. இவ்விளக்கத்தை நோக்க, இவர் சிந்தனைப்புதுமை தென்படுவதோடு, பிறநூல்கள் தரும் பகுப்பிலிருந்து இவர் பெயரால் மாறுபடா விடினும் கருத்தால் வேறுபடுவதும் தெரிகின்றது. தண்டி, முதலில் பொருளணி கூறிப் பின் சொல்லணி கூறுகின்றது. இந்நூல், சொல்லணியை முதலில் தருகின்றது.

5-3. சொல்லணியை அடிப்படையில் மறிநிலை, மிகல், எஞ்சல், ஒப்பு என நான்காகப் பகுத்துக் கொள்ளுகின்றார் (303). இவற்றின் முதல் வகையான சொல் மறிநிலை அணி, ஒன்றன் இயல்பு-குணம் ஆகியவற்றை மற்றொன்றிற்கு ஆக்கிக் கூறுவதாகும். இவ்வாறு மாறிவரும் நிலையால் மறிநிலை என்ற பெயர்ப் பொருத்தம் அமைகின்றது.

5-4. குணம், முதல், காரணம், குறிப்பு, ஒழுக்கு ஆகிய நிலைகள் மாறலால் இதன்கண் ஐவகை அமைகின்றது (304). முல்லை சிரித்தது எனவும் கோடுகோ டேறுமென் நெஞ்சு எனவும் நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம் எனவும் இலக்கியம் தருவனவற்றைப் புலவரின் கற்பனை ஆற்றல் என நாம் கொள்ளுவதைத் தொன்னூல் விளக்கம் அணியாக்கியது.

5-5. பொருள்கோள், 'மொழிபுணர் இயல்பு' என்ற பெயர்நிலையுடன் தொல்காப்பியச் சொல்லதிகாரத்தில் வந்தது ; அதன் செய்யுளியல், 'நிரல் நிறுத் தமைத்தல்' எனத் தொகை-வகை தருகின்றது; அதே செய்யுளியல் 'மாட்டு' எனும் உறுப்பைத் தருவது பொருள்கோள் நிலையினதே;தொல்காப்பியம் இவை தவிர உவம வியலினும் 'நிரல் நிறுத் தமைத்தல் நிரல் நிறை சுண்ணம், எனச் சில வகைகளைச் சுட்டியது. இவற்றை நோக்கப் பொருள்கோள் சொல்லிலக்கணமாகவும் யாப்பிலக்கணமாகவும் உவமை (அணி) யிலக்கணமாகவும் அமைவது தெரிகின்றது. தொன்னூல்

விளக்கம் இப்பொருள்கோளினை மறிநிலை அணியின் வகையாக அடக்குகின்றது (305-313). தண்டியலங்காரம் நிரனிறை யணியைப் பொருளணியின் கீழ்த் தருவது முரண் நிலையில் இங்கு நினைக்கத்தக்கது. சொல்-தொடர் நிலையே இப்பொருள்கோளுக்கு அடிப்படையானமையால், இதைச் 'சொல்'அணி எனல் ஏற்புடைத்தே. 'பொருள்கோளும் மறிநிலை போல்வன வாம்' என்பது இதன் கருத்து(306). பொருள்கோள் எட்டு எனவும் ஒன்பது எனவும் இரு கருத்து இருக்க இவர் எட்டு என்பதனையே தருகின்றார்(பார்க்க: இலக்கணத்தொகை-சொல்-பக்கம் 367).

5 - 6. உரையில் அளைமறிபாப்பினைத் தீவக அணியோடு தொடர்புபடுத்துகின்றார். அவ்வாறே அடிமறி மாற்றுப்பொருளை யும், அடிமறிமண்டில ஆசிரியப்பாவினுடன் இயைபுடையதாகக் கருதுகின்றார். மொழிமாற்றும், கொண்டுகூட்டும் ஓரடியிலும், பல அடியிலும் வருவதாலேயே இருபொருள்கோள் ஆயின என முரண்படுத்தியும் தருகின்றார். அடிமறிமாற்றை விளக்கும் 313-ஆம் நூற்பா முடியாததுபோல் நிற்கின்றது.

5 - 7. சொல்லணியில் 'மறிநிலை' இவ்வாறாக, அடுத்தவகை யான 'சொன்மிக்கணி'யில், மடக்கு, இசையந்தாதி,அடுக்கு ஆகிய மூவகைகளை அடக்குகின்றது தொன்னூல் விளக்கம் (314). சொல் லணியின் கீழ் தண்டியலங்காரம், மடக்கணி, சித்திரகவி (92-98) ஆகியனவற்றை மட்டுமே கூறுவது இங்கு நினைத்தற்குரியது.

5 - 8. மறிநிலையை, 'உரிமை மாறுஅணி' என விளக்கியது போல, சொன்மிக்கணியை, 'சொன்மறிதரல்' என விளக்கு கின்றது(314). மீண்டும் வரல் என்ற பொருண்மையில் மறிதரல் என்பது பயன்படுகின்றது. தொன்னூல் விளக்கம் அணியைப் பார்க்கும் கோணம் வேறுபடுவது இங்குத் தெளிகின்றது.

5 - 9. தண்டியலங்காரம் மடக்கணியை மிக விரிவாகக் கையாளுகின்றது. இடவகையாலும் பயிற்சி நிலையாலும் இடையிட் டும் இடையிடாதும் வருவதாலும் பல்வகைகளாகப் பெருகிய மடக்கணி நிலையைத் தண்டியலங்காரம் தந்ததுபோல இந்நூற்பா உரையும் தருகின்றது. அடிப்படை நால்வகைகள், பெருக்க நிலையில் 315 ஆக அமைந்தன(315 உரை).

5 - 10. செய்யுளில் வரும் அந்தாதி போன்று, உரைநடையில் ஒரு தொடர்ப்பகுதியின் ஈற்றுச்சொல் அடுத்த பகுதியின் முத லாக அமைந்து சொற்றொடராகி வருவது இசையந்தாதி என்னும் சொன்மிக்கணி வகை (316). இங்கும் வந்தசொல்லே மீண்டு வரல் அமைகின்றது. இப்பகுதிகளில் ஆசிரியரின் எண்ணப்புதுமை வெளிப்படுகின்றது.

5 - 11. சொல்லதிகாரம் கூறும் அடுக்குத்தொடர் இலக்கணத்தை ஒத்து, பாடலில் வரும் சொல்லடுக்கை, சொன்மிக்கணியின் மூன்றும் வகையாக்கி அடுக்கணி எனப் பெயர் சூட்டுகின்றார் (317). 'அடுக்கணி' 'அடுக்கணி' என நூற்பாவில் இருமுறை வருவது குறை என்பதா அன்றி, அழுத்தம் உணர்த்த வந்ததால் நிறை என்பதா என ஐயம் ஏற்படுகின்றது.

5 - 12. சொல்லணியின் மூன்றும் வகையான சொல்லெஞ்சணி என்பது, எச்சம் பத்து எனச் சொல்லதிகாரம் விளக்குவதை அடிப்படையாகக் கொண்டுள்ளது (318, 319). இது தொடரியல் அமைப்பில் வரும் நிலை (இலக்கணத் தொகை -சொல்- பக்கம் 400). முன்பு, தொடரியலுக்குரிய பொருள்கோளை'மறிநிலை' என அணியாக்கியதுபோல், இங்கும் எச்சத்தை அணியாக்கினர் எனலாம். செய்யுளில் அமையும் சொற்றொடர் நிலையை 'அணி' எனும் கோணத்தில் அணுகும் புதுமையை இங்குக் காண்கின்றோம். சொற்பகுதியை ஏன் அணியில் நினைத்து மரபிலிருந்து மாறுபட்டார் என்பதற்கு நூலாசிரியர், ஒரு காரணமும் எந்த நியாயீகரணமும் தரவில்லை.

5 - 13. ஒப்பணி எனப்படும் சொல்லணியின் நான்காவது வகை, நான்கு பகுப்புக்களை யுடையது (320). இவையும் பிற அணி இலக்கணங்களால் நினைக்கப்பட்டதாகத் தெரியவில்லை ஒரேசொல் பல உருபு பெற்றும், பலசொற்கள் ஒரே உருபு பெறலும், இவற்றுள் முதல்வகையான 'திரிபியைபு' ஆகும் ஆசிரியர் உரையில் தரும் சான்றிலிருந்து, இவ் அணி உரைநடையிலும் வரும் என்பது தெரிகின்றது(321).

5 - 14. தொடர்ந்துவரும் இவ்வணி வகையான ஒழுகிசை ஒப்பணியை விளக்கும்போது, நூற்பாவிலேயே 'இயற்றமிழ்' வருதலும் ஆகும் என உரைநடையை இணைத்தார். உரைநடையை இயற்றமிழ் என்பது இவருக்கே உரித்து போலும். செய்யுளில் ஒத்த சீரொடு வரும் ஒழுகிசை போன்று, பெயர்-எச்சம் - இடை- உரி போன்றன ஒப்பவரும். இதனையும் ஆசிரியர் புதிதாகப் புனைகின்றார் (322).

5 - 15. செய்யுள் இலக்கணத்து இயைபுத் தொடைபோல், உரைநடையில் வருவதை இதே அணியின் பிறிதொரு வகையான இயைபிசை என்கின்றார் (323). இவ்வணியின் நான்காம் வகையான சமம், ஒரு எழுத்தோ மாத்திரையோ மட்டும் வேறுபட்டு அல்லாத நிலையில் ஒத்த சொற்கள் வரும் அணி நிலையினது. மாத்திரைச் சுருக்கம், திரிபதாதி ஆகிய, இந்நிலையை மறைத்து வரும் செய்யுட்களாம். தண்டியலங்காரம் இவற்றைச் சான்றுடன்

உரையில் விரிக்கின்றது (பக்கம் 248, 251, கழகப்பதிப்பு 1973 ஏப்ரல்). தொன்னூல் விளக்கம் இந்நூற்பா வுரையில் பிற சித்திரக் கவிகளையும் சுட்டுகின்றது.

5 - 16. தொகைச் சூத்திரம் (325) சுட்டப்பட்ட சொல்லணி கள் 30 எனக் கூறுகின்றது. மறிநிலை, மிகல், எஞ்சல், ஒப்பு ஆகிய சொல்லணி நான்கும், முறையே ஐந்தும், மூன்றும் பத்தும் நான்கும் வகை பெற்றதுடன், மறிநிலையில் பொருள்கோள் எட்டும் அடங்கியதால் இவ்வாறு முப்பது வகையாக விரிந்தன.

5 17. தண்டி, சொல்லணிக்குமுன் பொருளணியியலை அமைக்கத் தொன்னூல் விளக்கம் பொருளணியியலை இறுதியில் கூறுகின்றது (326-368). சொல்லணி முப்பது என்பதுபோலப் பொருளணியும் முப்பதெனக் கூறியது. தண்டி முப்பத்தைந்து கூறுவது இங்கு நினைத்தற்குரியது.

5 18. நூற்களுக்கும் பொதுவாக அமைவன இருபத்திரண்டு அணிகள். அவை தன்மை (1), * உவமை (2), உருவகம் (3), பின்வருநிலை (12), முன்ன விலக்கு (13), வேற்றுப்பொருள் வைப்பு (4), வேற்றுமை (5), விபாவனை (20), ஒட்டு (6), தற்குறிப்பேற்றம் (8–ஊகாஞ்சிதம்), நுட்பம் (9), இலேசம் (15), சுவை (16), தன் மேம்பாட்டுரை (11), உதாத்தம் (17), அவநுதி (7), சிலேடை (29), விசேடம் (21), ஒப்புமைக் கூட்டம் (18), விரோதம் (22), புகழாப் புகழ்ச்சி (10 - புகழ்மாற்றம்), சங்கீரணம் (30) ஆகியன.

5 - 19. தீவகம், அதிசயம், ஏது, நிரனிறை, ஆர்வமொழி, பரியாயம், சமாயிதம், மாறுபடு புகழ்நிலை, நிதரிசனம், புணர்நிலை, பரிவருத்தனை, வாழ்த்து, பாவிகம் ஆகிய பதின்மூன்றணிகளும் தண்டியில் கூறப்பட்டுத் தொன்னூல் விளக்கத்தில் கூறப்படாதன.

5 - 20. சொல்லணி பற்றிய பகுதியில், அளைமறிபாப்பு தீவகத்தோடு ஒத்தது என்பதாலும், நிரனிறையை மறிநிலை யணியில் அடக்கியதாலும் அவை யிரண்டும் உட்படுத்தப்பட்டு பதினொன்றே விடப்பட்டன எனலாம்.

5 - 21. இவை யொழிய, சொல்விலக்கு, ஒப்புமை, ஏற்றம், பிறிதுரை, விடையில் வினு, வினவில் விடை, சித்திரம், ஒழிபு, அமைவு என்னும் எட்டுப் புதுஅணி வகைகளைத் தொன்னூல் விளக்கம் இணைக்கின்றது. ஆசிரியரின் புதுமை விழைவையும் சிந்தனை ஆற்றலையும் இவை காட்டுகின்றன எனலாம்.

---

* அணியின் பெயர்கள் தண்டிதரும் முறைப்படி தொகுக்கப் பட்டுள்ளன. அவை தொன்னூல் விளக்கத்தில் வரும் முறை எண் பிறைக்குறியுள் அமைகின்றது. பெயர் மாறுபாடும் சுட்டப் படுகின்றது.

5 - 22. உவமை வகையாகத் தண்டியலங்காரம் விரி,தொகை முதலிய இருபத்து நான்கு வகை கூற, இந்நூல் பதிஞெரு வகை கூறி விளக்குகின்றது (329-339). தண்டி கூறுவது போன்றே உவமை வழுக்களைந்தினை இதுவும் உணர்த்துகின்றது (340).

5 - 23. பின்வருநிலையணியை விளக்கும்போது (350) மடக்கணியிலிருந்து வேறுபடுத்திக் காட்டுவது குறிப்பிடற்குரியது.

5-24. சொல்விலக்கு, புகழினும் இகழினும் தானே உரைத்த சொல் ஆராயாது உரைத்தல் மறுத்து, மற்று அதின்மிக்க பிறிதொன்று உரைப்பதாம். தானை வேந்தன் தானமாக ஒன்றும் ஈயான் என்று கூறி, பின் அவ் இயல்பு மிகுத்தற் பொருட்டு குடியலைத்தலால் மக்கட்குத் தீமையும் நோயும் ஈவான் என்பது இது (352).

5-25. தொல்காப்பியத்தின் பொருட்பாகுபாட்டில், தனியியலாக இருந்த மெய்ப்பாடு, பின்பு அகப்பொருள் இலக்கணத்தில் அகப்பாட்டுறுப்புள் ஒன்ருக ஒடுங்கியது (பார்க்க - இலக்கியக் கொள்கை - 3, பொருளிலக்கணம் உணர்த்தும் இலக்கியக் கொள்கை, பக்கம் 14). அதுவே சுவையணியாகி அணிநூலில் இடம் பெற்றமையைத் தண்டியலங்காரம் போன்றே தொன்னூல் விளக்கத்திலும் பார்க்கின்ருேம் (354). வடமொழியார் சாந்தம் கூட்டி நவரசபாவம் என்பர் என உரையில் உணர்த்தினும், தொன்மை மரபுப்படி எட்டு மெய்ப்பாடுகளையே நூற்பாவில் தருகின்ருர்.

5-26. ஒப்புமை ஏற்றம், நற்குணம் அல்லது தீக்குணம் பலவற்றைத் தொகுத்துக் கூறும்போது, ஒன்றனைவிட மற்ருென்று மிக்கது எனல். 'பொய்மைதீது; கொலை அதனினும் தீது' போன்ற நிலை (357).

5-27. விரோத அலங்காரத்தை விளக்குமிடத்து, முரண்டொடையுடன் இதுகொண்ட இணைவைச் சுட்டுவது குறிப்பிடத்தக்கது (360).

5-28. பலநிலையில் யாப்பிலக்கணமும் அணியிலக்கணமும் ஒன்றையொன்று அவாவி,தழுவி நிற்குமாற்றை இங்குக் காண்கின்ருேம். யாப்பிற்கும் அணிக்கும் இடையே தெளிவான பிரிவுக் கோடோ எல்லை வரையறையோ இன்றிச் சில விடங்களில் இரண்டும் மயங்கி, விரவி யமைந்தமை (over lapping) பிற பகுதிகளிலும் உள்ளமை இங்கு நினைத்தற்பாலது.

5-29. பிறிதுரை யலங்காரம் இந்நூல் புதியதாகப் புகுத்தியவற்றுள் ஒன்று. கேட்குந போலவும் கிளக்குந போலவும் அமைவனவற்றைத் தொல்காப்பியம் காட்டுவதனேடு ஒத்தது இது.

முன்னிலையோரிடம் பேசாது, துயர் முதலியன காரணமாக விலங்கு பறவை கண் போன்றவற்றுடன் பேசுவது இது. 'இன் கள்வாய் நெய்தால் நீ எய்தும் கனவினுள் வன்கணூர் கானல் வரக் கண் டறிதியோ' — போன்றன (361).

5-30. விடையில் வினவும் இதனோடு ஒத்ததே. உணர்வு வெளியீட்டு நிலையாக வரும் கேள்வி, விடை வேண்டாதே அமைவது இது (362). வினவில் விடை, வினு இன்றியே ஒன்றனைக் கூறுவது. ஒன்றனை உரைக்கும்போது, பிறரெதிர் பிறிதொன்றை உணர்ந்து வினவினதாகச் சொல்லி , தன் பொருள் விளங்க மறு மொழி உரைத்தல் (363). இவையும் புதியன புகுதலாம்.

5-31. சித்திர கவிகளைத் தண்டியலங்காரம் சொல்லணியில் தர, இவர் அதிலிருந்து வேறுபடுத்திச் சித்திர அணியைப் பொருளணியில் தருகின்றூர் (364). ஓவியம் வரைதல்போன்று இலக்கியத்தில் வருணிப்பது இவ்வணி என்பது நயமும் புதுமையும் பொருந்தியது.

5-32. ஒழிபணியும் (365) அமைவணியும் (366) இப்புது நிலை யினவே. ஒழிபணி பலவற்றை ஒழித்து உரைக்க, அமைவணி, அல்லனவும் ஆம் என்றதுபோன்று உரைக்கின்றது.

5-33. சிலேடைக்கு மிகத் தெளிவாக விளக்கம் தருகின்றது தொன்னூல் விளக்கம். திரிசொல் பல இணைந்து ஒரு தொடராகி இருபயன் தருவது இவ் அணி (367).

5-34. அணியதிகாரத்துக்குத் தொகைச் சூத்திரமும் (369), முழுநூலுக்கும் உரிய முடிபுச் சூத்திரமும் (370) நூலிறுதியில் அமைகின்றன.

5-35. பழையன கழிதலும் புதியன புகுதலும் நூலின்கண் காணப்படலும், இந்நூல் முந்து நூல்களுக்கு விளக்கமாதலும் இந் நூற்பாவில் சுட்டப்படுகின்றது.

# உரையாசிரியர்

I

நூலாசிரியரே உரையும் எழுதிய சிறப்புடைத்து இத் தொன்னூல் விளக்கம் இதனை ஆசிரியர் கூறுவிடினும் அவரது உரையினின்றும் நாம் ஐயமற உய்த்துணர முடிகிறது.

சிறப்புப் பாயிரத்தின் உரையில் தான் நூலை எழுதியதற்கான காரணத்தையும், நூல் எப்படி அமைந்துள்ளது என்பதனையும் விளக்கமாகக் கூறியுள்ளார்.

உரையில் காணப்படும், இம்முதற் சூத்திரத்துள் இனிச் சொல் குறித்த வகையெல்லாம் காட்டித் தந்தனம் (4), சொல்லில் வேற்றுமை யிலக்கணம் விரித்துக் கூறுதும் (22), இவற்றை இனித் தனித்தனியே விளக்குதும் (147, 182, 320). நான் தெரிந்துரைப்பத் துணிந்தேன்; நான் விரித்துரைப்பத் துணிந்தேன் (148), ஈண்டினி யணியதிகாரத்து வமையு முவமை விகற்பங்களும் விரித்துரைப் பாம் (155),இப்புறத்திணையை 199-ஆம்சூத்திரத்தில்மேற்கோளாக விரித்துக்கூறுதும் (161), இவற்றிற்கெல்லாம் தனித்தனிச் சூத்திரம் வாராமுன்னர் அவற்றிற்கு வேண்டிய உறுப்பிவை யெனக் காட்டுதும் (227) என்பன போன்ற சொற்றொடர்கள் இவரே உரையாசிரியர் என்பதனை உறுதிப் படுத்துகின்றன.

தன்னை வெளிப்படுத்து மிடங்களிலெல்லாம் மேற்கண்டவாறு தன்மையில் கூறினும் ஓரிடத்தில் மட்டும் படர்க்கையினைப் பயன் படுத்துகின்றார். 'சூத்திரத்தில் அனையவும் என்ற மிகையால் இவ் வாசிரியர் சொல்லாதவற்றை இந்நூற்கண்ணே சொல்ல வேண்டிய இடத்திற் பன்னூலினுஞ் சிற்சில எடுத்துக் கூறுதும்' (326) என்று கூறியுள்ளார். ஆயினும் இந்நூற்பாவிலேயே, 'இதனுள் செந் தமிழ் நன்குணர்ந்தோர் முன்தந்தவற்றுள் வேண்டாதன சில வொழித்து வேண்டிய சிற்சில கூட்டித் தன்மை முதற் கொண் டுரைத்த அணிகள் ஆறைந்தையும் தனித்தனி விளக்குதும்' என்று கூறித் தானே உரையாசிரியர் என்பதனை நிரூபிக்கின்றார்.

பல நூற்பாக்களின் உரையில் நூற்பாவில் கூருதவற்றையும் விரிவாக விளக்கமாகத் தருகின்ருர் (40, 55, 199, 249, 283).

தன் கருத்துக்கு ஒவ்வாவிடினும் மரபு வழியைப் பின்பற்றி அதனை அமைத்ததாக உரையில் விளக்கம் தருகின்ருர். 'நிறுத்த முறையானே சாதியுரிமையாமாறு உணர்த்துதும். ஆகையால் அந்தணர், அரசர், வணிகர் சூத்திரரென இந்நாட்டில் வழங்கும் உயர்சாதியிற் பிறந்த நால்வராகி மற்றவர் இழிந்தோரெனப் படுவர் என்றுணர்க. இந்நாட்டு வழக்கம் பற்றி அவ்வச் சாதிக் குரிய தொழிலை விளக்குதும்' (182).

இவற்ருல் நூலாசிரியரே உரையாசிரியர் என்பது மறுப்புக் கிடமின்றித் தெளிவாகும்.

## II

இவரின் புலமைக்கு ஓர் உரைகல்லாக இவ்வுரை அமைகின்றது. உரையை அமைக்கும் விதத்தில் ஓர் வரன்முறையைக் கையாளுகிருர்.

முதலில் பொதுநிலையில் நூற்பா என்ன கூறுகிறது என்று கூறிப் பின் அதில் உள்ளவற்றைத் தருகிருர். அதற்குச் சான்று அதனைத் தொடர்கிறது. அடுத்த நிலையில் மேற்கோள் சூத்திரங்கள் அல்லது நூற்பாவின் உரையினை விரிவுபடுத்தத் தேவைப்படும் சூத்திரங்களை அமைக்கிருர். விரிவுபடுத்துகையில் அதற்கும் சான்று தருகிருர்.

நூற்பாவினுள் ஒருசில கருத்துகளை இணைத்துக்கூறின், அவற்றை ஒவ்வொன்ருக விளக்கி அவற்றிற்குரிய சான்றுகளையும், மேற்கோள் நூற்பாக்களையும் சுட்டுகிருர் (18).

பல இடங்களில் முன் அல்லது பின் உள்ள நூற்பாக்களோடு தொடர்புபடுத்திக் காட்டுகிருர். ஆதியிற் காட்டிய நால்வகை விகாரங்களுள் திரட்டெனும் விகாரமா மாறுணர்த்தும் (38), நன்னூலிற் காண்க என்ற பிறப்பு வருமாறு; 3-ஆம் சூத்திரத்திற் கூறிய பிறப்பு இவையே காண்க (40). இதுவுமது (68). ஆகையிலிது நடக்குந் தன்மையை 234-ஆம் சூத்திரத்துட் காண்க (258) என முன் நூற்பாக்களுடன் தொடர்புபடுத்தி இவை அமைந்துள்ளன.

இவ்வதிகாரப் பொருளும் பிரிவின் முறையும் இனிவரும் சூத்திரத்தால் விளங்கும் (41), அன்றியு மிதற்குப் பொருளதிகாரத்திற் சொல்லுரிமை விளக்கிய வழியைக் காண்க (82), இவற்றின் வகையும் விகற்பமும் 21-ஆம் சூத்திரத்திற் விளக்குதும் (212)

என்பன பின்வரும் நூற்பாக்களோடு இணைந்துள்ளமையைக் காட்டும்.

தான் நூற்பாவில் கூறுது விலக்கியவற்றை உரையில் கூறி விளக்க நினைக்குங்கால், சூத்திரத்துள் பிறவென்ற மிகையான் மற்றைப் பிரபந்தங்கள் வருமாறு (283), நால்வகை யென்றது நால்வகையே யென்ற மிகையால் மற்ற மடக்குகள் வருமாறு (315), அன்றியும் சூத்திரத்துட் பிறவென்ற மிகையான் இறைகவி யென்றும் சித்திரக்கவி யென்றும் ஒருவகைச் சமம் பற்றிய இருபது வகைக் கவி தண்டியலங்காரத்துட் காணப்படும் (234), சூத்திரத் துள்ளென இவையென்ற மிகையால் சமுச்சயம் ....முதலிய உவமை யலங்காரங்களும் வரும் (329), அவ்விலேசத்தின் பாற்படும் சில அலங்காரங்கள் வருமாறு (353), அச்சிலேடை அலங்கார விரிவு வருமாறு (367) எனப் பலவாருகக் கூறித் தனக்கு வழியமைத்துக் கொள்கிருர்.

இதன் விரிவை யுணர வேண்டில் தொல்காப்பியத்திற் காண்க. அதனினும் விரிவு பேரகத்தியம், நன்னூல், என்று விளக்கம் தராமல் விரிவினைச் சுட்டிச் செல்வதுமுண்டு.

தேவையற்ற விடங்களில் இவ்விரிவினை ஒழித்தும் உள்ளார். அன்றியும் சூத்திரத்துள் பிறவென்ற மிகையால், மிறைகவி யென்றும் சித்திரக்கவி யென்று மொருவகைச் சமம் பற்றிய இருபது வகைக்கவி தண்டியலங்காரத்துட் காணப்படும். அவையா வன . என்றிவை இருபதும் மிறைகவி யென்பராயினும் இவை சிறுபான்மையாகையால் இங்கண் விரிவுக்கஞ்சி யொழித்தனம்(324)

நூற்பாவில் கூறியுள்ள விதிமுறைகளினின்றும் சிறுபான்மை யாக ஓரோரிடங்களில் நிகழும் மாற்றங்களையும் உரையில் சுட்ட ஆசிரியர் தவறவில்லை. இம்முதல் வேற்றுமைக்கு ஐம் முதலிய உருபு களின்ருயினும் சிறுபான்மை ஆனவன், ஆகின்றவன், ஆவான் முதலாக ஐம்பாலிலும் வருகிற சொல்லுருபுகளுண்டு (56). சிறு பான்மை இவ்வைந்தனுருபு மூன்றனுருபோடும் நான்கனுருபோடும் வரும் சிறுபான்மை இல், இன், இவ்வுருபுகளோடும் சேர்ந்து வரும் (60). இச்சம்பந்தப் பொருள் இம்மூவுருபுகளோடன்றி ஐந்த னுருபோடும் ஏழனுருபோடும் வரும். சிறுபான்மை உடைய வென்னும் சொல்லுருபாயினும் குவ்வுருபாயினும் வரும் (61). என்பனவற்றை இதற்குச் சான்ருக்கலாம். இவற்றிற்கும் முனிவர் சான்று கொடுத்தே விளக்கியுள்ளார்.

உவமைகளைப் பயன்படுத்தித் தன் கருத்துகளை விளக்கும் போக்கும் காணப்படுகிறது. சில இடங்களில் அடுத்தடுத்து இரண் டல்லது மூன்று உவமைகளைக் கூறித் தன் எண்ணத்தினைவலியுறுத்து கிருர். இறகு முளைத்து முற்ரு முன்னே தாயிரை கொண்டு வருவ

தன்றியே பறக்கும் பருவம் வந்தபின் தாமே மேய்வன பறவை யலவோ. அவ்வாறிங்ஙனம் நானும் மூத்தோர் சொன்னதை அவர வர் தாமே கண்டுபிடிக்க வேண்டுவதை மாத்திரம் விதிவிரைத் துரைப்பேன் (1). போர் முகத்தணிகளைப் பலவகை யூகமாக வகுத்ததுபோலக் குறித்த பயனை அடைவதற்கேற்ற ஒழுங்குந் தெளிவுறுமாம்படித் தெரிந்த நியாயங்களைப் பகுத்த பின்னரேற் றிய சுவர்மேற் சித்திர மெழுதுவார் போலவும், எழுதிச் சுருட்டின படத்தை விரிப்பார் போலவும், உறையில் கிடந்த நெடும் வாளு ருவி வீசுவார் போலவும் தானும் அவற்றைத் தனித்தனி விரித்துக் காட்டுதல் வேண்டும். இதற்கைந்தாம் அதிகாரத்திற் சொல்லப் படும் அலங்காரங்களே வழியாம் (152). பிறவிடங்கள் 163, 201, 231, 320.... தேவையான இடங்களில் சிறுசிறு விளக்கங்களும் அமைக்கிறார். ஆயினும் இந்நால்வகைச் சொற்களை ஒவ்வோரோத் தாக விளக்கா முன்னர் இச்சூத்திரத்தில் இயற்சொல் முதலாகச் சாரியை ஈறுகக் காட்டிய பன்னிரு தகுதிச்சொற் பொதுமைய ஆகையில் பொதுவியலென ஓரோத்தாதிபிற் கூட்டி இவ்வதிகாரம் ஐந்தோத்தாகப் பிரிக்கப்படுமெனக் கொள்க (42). அன்றியும் இதற்கும் (சித்திரவணி) இதன் மேற்கூறிய சுவையலங்காரத் துக்கும் வேற்றுமை யாதெனில் அது மனத்தின் நிகழ்ந்த பற்றினை மாத்திரம் புறத்துத் தோன்றுங் குறிகளால் விரித்துக் காட்டல் இயல்பாம். அச்சித்திரமோ எனில் எவ்வகைப் பொருளும் கண்முன் வைத்தாற்போல நுட்பமாகக் காட்டும் இயல்புடைத்தாகும் என்றுணர்க (364). இவை போல்வன உரையின் பயனை மிகுவிக் கின்றன.

உரையில் வரும் அருஞ்சொற்களுக்குப் பொருளுரைத்தலும் ஆங்காங்கே காணப்படுகிறது. ஒலி வடிவு - செவிப்புலனறிதல், வரி வடிவு-கட்புலனறிதல் (8), வருக்கை-பலா (57).

நூலாசிரியர், உரையாசிரியர் என்ற நிலையினின்றும் விலகிப் பொதுநிலையில் நின்று தன் கருத்துக்களை நவிலலும் குறிப்பிடத் தக்கது. ஆயினும் வாயாலுணப்படும் உடற்குணு யார்க்கும் பொது மைய ஆகையில் காதாலுணப்படும் உயிர்க்குணவாகிய மெய்ம்மறை யோதல், சிலருக்கு விலகல் கொடுமையன்றோ. மீளவும் மறையே பரகதிக்கு வழியைக் காட்டுவதாகையில் அனைவரும் பொதுப்பட அக்கதிக்கு உரியராகப் பிறந்த பின்னர் அவ்வழி உணர்தல் பொது மைத்தன்றென விதிப்பது நிறையோ (183). இவற்றுளோரிடம் எல்லையுள் அடங்காது எவ்விடத்தும் எக்காலத்தும் அனைத்துலகும் அனைத்துயிரு தானுள வாக்கவும் நிலையின் நிறுத்தவும் முழுதற வொழிப்பவும் வல்லவொரு மெய்க்கடவுளன்றி குறுங்கோற் றேவராகப் பலரில ரென்று மெய்ம்மறை நூலாலறிவோம் (175).

தன்னையோர் உரையாசிரியராக நினைவில் கொண்டும் பல இடங்களில் விதிகளைப் பற்றிய தன் உணர்வுகளை வெளிப்படுத்து கிறார். பல்பொருட் டொடர்ந்து தருங்கால் இவ்வணக்கம் ஆதியில் வேண்டுவதன்றி ஒவ்வொருவகைப் பொருள் முகத்தும் வேண்டாதெனக் கண்டுணர்க.

ஆகையில் இவ்வகை வழுவாராமற் காத்தலறிவோர் கடனெனக் கொள்க (172). ஆயினுமோரோ விடத்துச் சிறப்பித்துரைத்த பொருட் கலங்காரமாக இவ்வாறுரைப்பினுஞ் சிறப்பெனக் கொள்க (173). எல்லா அலங்காரத்துள்ளும் உவமை அலங்காரம் சிறப்புடைத் தென்பார். என்னை பலநிற மதுமலர் சேர்த்திய படலைமாலை போலவும் நால்வகைச் சாந்துங் கூட்டி நனிகமழ் கலவை போலவும் இவ்வலங்காரந் தானும் பலவகைப் பொருளையொருபடத்தோற்றித் தருதலாற் கேட்போர்க்கு இதுவே சிறந்த இன்பம் பயக்கு மென்றுணர்க (329). இன்னதற் கின்னது உரிய தெனவும் இன்னதற்குரிய இடம் இன்னதெனவும் உணர்ந்து கூறுதல் சான்றோர் கடன் (379). ஆயினுமிவை யெலாம் சிறு பான்மையெனக் கொள்க (164). ஆயினு மொன்றனைப் புகழு மிடத்திவ் வுரிமை மாறி யில்லனவும் உளவெனப் புனைந்துரை யாகச் சொல்லினும் வழுவென்றிகழாது அலங்காரமென்று கொள் பவர் முற்றறிவுடையோரெனக் கண்டுணர்க (181). இவ்வுருபுகள் சிலவற்றிற்குப் பொருந்தாமை யாயினுங் கொள்க (70) எனப்பல சான்றுகளை இதற்குக் காட்டலாம்.

முன்பே விளக்கியிருப்பின், மீண்டும் அப்பொருள்வரின் அதனை இடம் சுட்டிவிட்டு மேற்செல்வர். பிறவாகுபெயர் 49-ஆம் சூத் திரத்திற் காண்க (54).

## III

கூடுமானவரை அனைத்திற்கும் சான்றுகள் வழங்கியுள்ளார். சான்றுகள் தருமுறையிலும் சிலநிலைகளைக் காணலாம். ஓரோரி டத்து இவ்வொன்பது விகாரங்களுள் சில சிறுபான்மை யாகையில் தானே விளங்காதவற்றை இலக்கியங்களுட் காண்புழி அறிந்து கொள்க (37) என்பது போன்று சொல்லி விடுகிறார் (250, 275). பாடல்களைத் தராமல் இலக்கியத்தில் இடம் பெற்றுள்ள வகையை மட்டும் சுட்டிச் செல்வதுண்டு. இசைத்தமிழ்ப் பதிகத்துதாரணமா கக் கம்பருரைத்த முப்பாப் பாயிரத்தைக் காண்க. அவற்றுள் முதற்பாத்தெய்வ வணக்கமும், பின்னிரு பாவும் செய்பொருளு ரைத்தலும் பின்னூற் பாவினோடு அவையடக்கமும் மற்றவை தன் கதை மாட்சியும் அருமையும் பயனும் வந்ததறிக (149).

பாடல்களைச் சான்ருகத் தரும்பொழுது அவை எந்த இலக்கியத்துள் எவ்விடத்தில் வருகிறது என்று இடஞ்சுட்டியபின் தருவதும் பலவிடங்களில் காணப்படுகிறது. அங்ஙனந் தேம்பாவணியிற் காமம் விளைவிக்குந் தீயவினைக் காட்டியதனை விடற்கு. வாமனுக்கு உறுதி பலவற்றையும் பலதிணை வகையால் விரிவாய்க் கூறிய பின்னர்த் தொகையுந் துணிவுமாகச் சொன்னவாறு—'ஐம்பொறிப் பகை கண்டஞ்சி யடக்கலினுமை போல்வாய், வெம்பொறிப் புதவை யோர்ந்து வினைபகை சிறிதென்றெண்ணல், பைம்பொறிப் பாந்தடங் கூர்ப்பல்பட மதநீர்க் குன்றிற் செம்பொறிப் புகைக் கண் யானைச் சிதைந்துயிர் மாளுமன்றே'...(164).

வெகுசில இடங்களில் சான்றுப் பாடல்கள் இலக்கியத்தில் வரும் இடத்தினை மிகத்துல்லியமாகப் படலம், எண் முதலியவற்ருேடு பேசுகிருர். அன்றியும் சிந்தாமணியுட் சாரணர் சீவகற் குறுதி சொல்லித் துறவிற்கு அவன் துணியும் பொருட்டுத் தேற்றப் பொருளாய்த் துறவில் 138-ஆம் செய்யுள் தொடங்கி யுரைத்த பலவற்றைக் காண்க. அவற்றுள் 'பாற்கடற் பனிமதிப் பாவைத் தீங் கதிர், மேற்பட மிகநனி சொரிய தொப்பவே, நூற்கடன் மாதவனுனித்த நல்லறங்கோற்கடன் மன்னனுக் குரைக்கு மென்பவவே' என எடுத்த பொருட்டொகை யுரைத்தவாறு (162)....

இக்கருத்துக்கு இது சான்று என்ற நிலையே மிகுதியாகக் காணப்படினும் சான்றினைக் காட்டிவிட்டு அதற்குரிய இயல்பினை விளக்குதலும் அருகிக் காணப்படுகிறது......இதனுள் ஒட்டெனு மலங்கார வகையாற் சூசைமாமுனி யெகீத்தி நாட்டி னீங்கலின் வந்தகேடு தோன்ற அன்னுன் அங்கிருந்து உணர்த்தியதனுல் வந்த நன்மை காண்க (157).

பாடலைச் சுட்டிவிட்டு அச்சான்று எப்படிப் பொருந்துகிறது என்பதனை விளக்காமல் செல்வதுமுண்டு. இதற்குதாரணமாக 216-ஆம் சூத்திரத்தில் காட்டிய இரண்டகவல் காண்க (224).

ஒரு பாட்லை முன்பே உதாரணங் காட்டியிருப்பின் அடுத்து அப் பாடலையே பயன்படுத்தவரின் பாடலைக்கூருது அதனை எந்த இடத்தில் ஆண்டுள்ளார் என்பதனைச் சுட்டி இங்கு அதனுல் என்ன விளக்கம் தேவைப்படுகிறது என்பதனை மட்டும் கூறுகிருர். அன்றியும் 'பனிமதுப் பதுமம் ஊழியுமரிதே' யென்று 216-ஆம் சூத்திரத்தில் வந்த அகவலில் ஒட்டலங்காரமாகத் திருக்காவலூர் நாயகி வெளிப்படா தொழித்து, அவட்கேற்ற உவமைப் பொருளைக் கூறியவாறு காண்க(344).

ஒரே கருத்துக்கு ஒன்றுக்கு மேற்பட்ட சான்றுகளைத் தரும் வழக்கமும் காணப்படுகிறது (344);(154). அங்ஙனங் கம்பர் 'உலகம்

யாவையுந் தாமுள வாக்கலு' மென்ருர்.திருவள்ளுவர் 'அகரமுதல வெழுத்தெல்லா, மென்ருர்! பிறவு மன்ன (285).

தான் சொல்லவந்த கருத்திற்கு ஒருபகுதிக்கு மட்டும் சான்று காட்டிவிட்டு மீதிப்பகுதிக்குக் கூருமல் விடுவதுமுண்டு. 'கயலேருண் கண் கலுழநாளுஞ்......' இஃது வல்லினமோனே. இவ்வாறே மெல்லின மோனேயும் இடையின மோனேயும் வருவதறிக (213).

சில சான்றுப்பாடல்கள் ஆசிரியரே எழுதியிருப்பாரோ என ஐயுறத்தக்க வகையில் அமைந்துள்ளன. 'என்னுயிர் காத்துப் புரந்தாண்ட வென்னிறைவன், றன்னுயிர் பட்டிறந்து சாய்ந் தொழிந்தான்—பின்னுயிராய், மீண்டென்னேக் காத்தோம்ப மேவிப்புரந் தளிப்ப, யாண்டையும் யார்யாரெனக்கு'(317).கலிப்பா விற்குச் சான்று காட்டியுள்ள பாடலும் (233) இயேசுவைக் குறித்து ஆசிரியரே பாடியிருப்பாரோ என எண்ணத் தோன்றுகிறது. இங் ஙனம் பலபாடல்கள் உள.

பல இடங்களில் சான்றுப் பாடல்கள் எந்த இலக்கி யத்திலிருந்து எடுத்தாளப்பட்டுள்ளது என்பதனேச் சுட்டாமலே செல்கின்ருர். அவர் இலக்கியம் சுட்டிச் செல்லும் பாடல்களேக் காட்டிலும் சுட்டாமல் செல்வனவே மிகுதியாக உள்ளன. 400-க்கு மேற்பட்ட பாடல்கள் இவ்வாறு உள்ளன.

ஒரு சில பாடல்களே எந்த இலக்கியம் என்பதனே நாம் உயத் துணர வழி செய்கின்றன. 'கொன்றன்ன வின்னு செய்யினு மவர் செய்த வொன்று நன்றுள்ளக் கெடும், என்று (319) யுள்ளபோது இது குறள் என எளிதில் ஊகிக்கலாம். இதுபோன்றே214-ஆம் சூத் திரத்தில் வரும் 'காய்ம்மாண்ட தெங்கின் பழம் வீழ... ' எனும் சிந்தாமணிப் பாடலேயும் அதன் பெருமை காரணமாக அறிய முடி கிறது.

மிகப் பெரும்பான்மையான பாடல்கள் இவ்வூகத்திற்கு இட மளிக்காமல் எந்த இலக்கியத்தினின்று வந்தது என்பதனே நாம் உணர முடியாமல் தடுமாறச் செய்கின்றன. 'பேரொளி வேண்டிற் பொருள் பொழிக பின்றெனக்கே, சேர்பொருள் வேண்டிற் றீதொழிக-பாருலகி னின்றுவப்ப வேண்டி னெறிநிற்பதுயரின்மை, வேண்டின் வெகுளி விடல்' (222) போன்ற சிறந்த கருத்துகளேக் கொண்ட பாடல்கள் இடம்பெறும் இலக்கியங்களேச் சுட்டியிருப் பின் இவ்வுரை மேலும் சிறப்படைந்திருக்கும்.

அவை எந்த இலக்கியங்களிலிருந்து என்பதனேக் குறிப்பிடா விட்டாலும் பலபாடல்களுக்கு அவை வெண்பா, விருத்தம் எனப் பா வேறுபாடு காட்டியுள்ளார். வெண்பா (172, 173, 183, 190, 192)...... விருத்தம் (315, 337, 352...).

ஆசிரியர் எடுத்துக் காட்டியுள்ள இலக்கியங்கள் : குறள், மூதுரை(222), திரிகடுகம்(356), நாலடியார்(204), சிலம்பு(113), சிந்தாமணி, கம்பராமாயணம், நைடதம், பாரதம்(269), ஔவைக் குறள்(213), உபதேசகாண்டம்(213), காசிக்காண்டம்(356), சீட்டுக் கவி(248), தேம்பாவணி, திருக்காவலூர்க் கலம்பகம்(216, 225, 237, 238, 242, 324, 368), மொழிமாலை(356), இருமொழிமாலை(157) ஆகியன. களவழி நாற்பது, கார் நாற்பது, கலித்தொகை, குறுந்தொகை (253) முதலிய நூல்களைச் சுட்டியுள்ளார். சைவ, வைணவ இலக்கியங்களினின்றும் சான்று காட்டியுள்ளார் (245, 341).

இலக்கியச் சான்றுகளுள் அதிகமாகத் திருக்குறளையும், பின் சிந்தாமணி, கம்பன், நைடதம், தேம்பாவணி முதலியவற்றைப் பயன்படுத்தியுள்ளார். அவை வந்துள்ள இடங்களும் இலக்கியத்தில் அமைந்துள்ள இடங்களும் கீழே காட்டப்பட்டுள்ளன.

குறள் : 18 - 653, 1115, 15, 1263 ; 19 - 66 ; 60 - 94 ; 102 - 127, 57, 763 ; 114 - 439 : 119 - 319, 660 ; 123 - 1 ; 124 - 450, 502 ; 149 - 34 ; 155 - 660, 726; 158 - 320 ; 160 - 146 ; 161 - 426; 162 - 272; 195 - 496; 205 - 3; 208-254; 213 - 350; 214 - 167,792; 292, 114; 215 - 174, 1; 220 - 1073, 207 426; 221-36; 285 - 1;304-1038; 319 - 109, 452; 341 - 872, 408; 348 - 1080.

சிந்தாமணி : 61 - 1517 ; 91 - 1608 ; 100 - 2762 ; 107 -2876; 152 - 1597 ; 155 - 210 1537 ; 154 - 2811 ; 162 - 2745, 2748, 2750, 2761, 2762 ; 164 - 2876, 2877, 2873 ; 214 - 31 ; 241 - 4 ; 249 - 1467 (113, 162).

கம்பன் : 113 - நகர்நீங்கு ; 199-; 162 - இராவணன்

மந்தர : 49, 51, 68, 69, 70, 71, 75, 77, 91 : 241 -மிதிலைக் காட்சி : 23, 285 - பாயிரம் : 1 (113).

நைடதம் : 172 - 897, 913; 285 - 3 ; 299 - 128 ; 364 - 193 (93).

தேம்பாவணி : 119 - 1 : 12 : 38 ; 129 - 1 : 12: 13; 157-3; 6 : 15 ; 159 - 3 : 4 : 1; 160 - 3 : 4 : 140 ; 164 - 3 : 4 : 150, 151, 154, 156 ; 241 - 3 : 6 : 9 ; 249 - 2 : 3 : 110; 1 ; 12 : 80; 3 : 4 ; 56 ; 321 - 1 : 10 : 13 ; 338-1 : 12 : 22 ; 358-3 ; 1 : 28 ; 361- 3 :2: 43, 3 : 7 : 40; 363 - 3 : 4 : 41, 42, 44 ; 364 - 1 : 10: 30, 31 (249, 351).

திருவள்ளுவரிடத்து ஆசிரியர் அதிகமான ஈடுபாடு கொண்டமை உரையில் தெளிவாக உள்ளது. இருளே மொய்த்த நாட்டின் கண்ணும் கடவுளேற்றிய ஞானத்திரு விளக்கெறிப்பத் தெளிந்

துணர்ந்து எங்குமொரு விளக்கென நின்றுயர்ந்த திருவள்ளுவரு ரைத்த பலவற்றொன்றை நான் தெரிந்துரைப்பத் துணிந்தேன்: அந்நாயனுர் தந்த பயனெனும் பெருங்கடல் ஆழத்தின் மூழ்கி ஆங்குடை அருமணி ஒருங்கெடுத்து ஒருசிறு செப்பினடைத்தாற் போலத் திருவள்ளுவரின் பயனெல்லாம் விரித்துப் பகரும்படி நான் வல்லேனல்லேன் ஆகையின் அக்கடற்றுறை சேர்ந்ததொரு மணி யெடுத்துக் காட்டல் உணர்ந்தேன்(149) திருவள்ளுவர் முதலிய கற்ருேர்(154).

'மனத்துக்கண் மாசிலன்' எனும் பாடலுக்கு அளித்துள்ள விளக்கமானது முனிவரை ஓர் சிறந்த குறளுரையாசிரியராகக் காட்டுகிறது(162).

திருக்காவலூர் மீது ஆசிரியர் கொண்ட ஈடுபாட்டினையும் சான்றுகள் காட்டுகின்றன. திருக்காவலூர்க்கு வழியெது (127), திருக்காவலூரின் மேற்கு (60); 'கந்தாரம் பாடிக் களித்தாடும் வண்டினங் காமுறுபூஞ் சந்தார நாறு நிழற் சோலைக் காவலூர்த் தங்கியவா, னிந்தாரம் பூண்ட திருவடிக்கண் டேத்த வெவ்வுயிரும் வந்தாரக் காண்பேனே வானலங் கொண்டார் வையகமே'(299). ஆசிரியர் திருக்காவலூரில் அடைக்கல மாதாவிற்குக் கோயில் எடுத்துள்ளமை ஈண்டு நினைவுகூரத் தக்கது. இயன்ற இடங்களி லெல்லாம் மாதாவின் புகழ்பாடும் பாடல்களைச் சுட்ட ஆசிரியர் தவறவில்லை (360).

## IV

பொதுநிலையில் மரபிலக்கணங்கள் பலவற்றின் சூத்திரங்களைத் தம் உரையில் மேற்கோள் நூற்பாக்களாக எடுத்துக் காட்டுகிருர். தொல்காப்பியம் (12,211); நன்னூல் (18); நம்பியகப்பொருள் (174); யாப்பருங்கலம் (204); யாப்பருங்கலக்காரிகை (205); காக் கைப்பாடினியம் (20?); பல்காயனுர் (214); கையனுர் (214); நற் றத்தனுர் (216); அவிநயனுர் (250); பொருத்தவியல் (284); பாட் டியல் (285); விருத்தப்பாட்டியல் (292); வெண்பாப்பாட்டியல் (293); அமுதசாகரம் (299); வீரசோழியம் (299); தண்டியலங்காரம் (326). இவ்வாறு பல.

நிகண்டுகளையும் மேற்கோளாகத் தருகின்ருர். இலக்கணத் திரட்டு (222) என்ற ஒன்றைக் குறிப்பிடுகிருர். அந்நூல் இப்போது கிடைப்பதாகத் தெரியவில்லை.

ஒவ்வொரு அதிகாரத்தின் இறுதியிலும் தான் எடுத்தாண் டுள்ள மேற்கோள் சூத்திரங்கள் எத்தனை என்பதனை எடுத்துக் காட்டியுள்ளார். எழுத்து (80), சொல் (118), பொருள் (40),

யாப்பு (164), அணி (56). மூல நூலில் உள்ள நூற்பாக்களின் எண்ணிக்கையைவிட இவை அதிகமாக இருத்தல் குறிப்பிடத் தக்கது.

பொதுநிலையில் நோக்குங்கால் இவை இருநிலைகளில் பயன் படுத்தியுள்ளமை தெரியவருகிறது. தான் கூறியிருப்பதன்படியே பிறர் கூறியிருப்பதனையும் எடுத்துக்காட்டுகிறார். பிறர் நூற்பாக் களைக் கொடுத்துத் தன் உரையினை விரிவுபடுத்த வகைசெய்து கொள்கிறார். தன் கூற்றினை வலியுறுத்தத் தன்னுடன் ஒப்புடைய சூத்திரங்களைப் பெருமளவில் கூறிச் செல்கிறார். ஆறனுருபு மேற்கு மவ்வுருபே (63), எண்ணினிறுதி யன்னோடு சிவணும் (65).

மேற்கோளாகக் காட்டும் நூற்பாவிற்கு விளக்கமுரைத்தலும் உண்டு. 'வல்லெழுத்தாறே டெழுவகையிடத்து முகரமரையாம் யகரமோடியையி, னிகரங் குறுகும் என்மனார் புலவர்' எ-து. குற் றியலுகரந் திரிந்த இகரமாறும், மியாவென்னும் அசைச் சொல்லி னிகரமொன்றும், ஆகக் குற்றியலிகரம் ஏழேயாயினும் இடமும் பற்றுக் கோடுஞ்சார்ந்து முப்பத்தேழாயின. இகரந் தன்மாத் திரையிற் குறுகி ஒலித்தலின் காரணத்தால் முதலெழுத்தின் ஒலி வடிவின் வேறாய்க் குற்றிய லிகரமெனப் பெயராய்ச் சார்பெழுத் தின் ஒன்றாயின (14).

சிலவிடங்களில் மேற்கோள் சூத்திரம் எந் நூலிலிருந்து எடுக்கப்பட்டது என்பதனைச் சுட்டாமல் விட்டுவிடுகிறார் (12).

மரபுவழியில் செல்லும்போது, தான் ஏற்பனவற்றை மறுபடி யும் நூற்பாவாக அமைக்காமல் உரையில் அவற்றைச் சுட்டி விளக்கிவிடுகிறார். ஈண்டுப் பெயரிய லுரைத்தலின் ஒரு பொருளைக் குறித்த பல சொல்லாக வரும் சில திரிசொல்லுரிமையை விளக்கிக் காட்டலே நன்றென முன்னோர் வழியைப் பற்றிச் சில திரிசொற் பெயரியல்பினை விளக்குதும் (82), 199-ஆம் நூற்பாவிலும் இந்நிலை யினை காணலாம்.

பல இடங்களில் தான் கூறவிரும்பும் கருத்தினை நூற்பாவில் குறிப்பாக வைத்துவிட்டு உரையில் அதனை மேற்கோள் சூத்திரங் களின் உதவியால் தெளிவாக விளக்கிவிடுகிறார். சான்றாக 45-ஆம் நூற்பாவில் தொகைநிலைத் தொடர்மொழிகள், தொகாநிலைத் தொடர்மொழிகள் என்ற இரண்டினைச் சுட்டிவிட்டு, உரையில் நன்நூற் சூத்திரத்தினை மேற்கோள் காட்டி, அவற்றின் வகை களையும் உதாரணங்களுடன் விளக்கிவிடுகிறார்.

இவற்றை நோக்குங்கால் உரையினையும் தானே செய்தல் வேண்டும் என்ற எண்ணத்துடனேயே வீரமாமுனிவர் இந்நூலை இயற்றியிருக்கவேண்டும் என்ற எண்ணம் வலுப்பெறுகிறது.

முழுமையும் வேறுபாடின்றி ஒத்திருக்கும் நூற்பாக்களைத் தேவை கருதிப் படைத்திருக்குமிடத்திலும் அம் மேற்கோள் சூத்திரங்களைக் காட்டுகிறார். 'இடமெனப்படுவது மலைநாடியாறே'— தண்டி (181).

ஒன்றுக்கு மேற்பட்ட நூல்களினின்றும் மேற்கோள் சூத்திரங்களை ஒரே நூற்பாவிற்குத் தருகிறார். தொல்காப்பியமும் நன்னூலும் 105-ஆம் நூற்பாவில் மேற்கோள்களாகத் தரப்பட்டுள்ளன. 204-ஆம் நூற்பாவிற்குத் தொல்காப்பியம், காரிகை, யாப்பருங்கலம் ஆகியவற்றினின்றும் மேற்கோள் தருகிறார்.

ஒன்றுக்கு மேற்பட்ட நூல்களினின்றும், அவைகள் தங்களுக்குள் வேறுபடினும் தனக்குத் தேவையான மேற்கோள்களை மட்டும் எடுத்து அவற்றின் மூலம் தன்னுடைய கருத்தினை விளக்குகிறார். சான்றாக 138-ஆம் நூற்பாவில் உரிச்சொல் பற்றிப் பேசும்பொழுது குறிப்புச் சொற்களுக்குத் தொல்காப்பியம், நன்னூல் இவற்றையும் பண்புரிச் சொற்களுக்குத் தொல்காப்பியத்தினையும், இடையுரிச் சொற்களுக்கு நன்னூல், நிகண்டு முதலியவற்றையும் மேற்கோளாகக் கொள்கின்றார்.

முன்னோர் சுருங்கக் கூறியதைத் தான் விரித்துக் கூறுகிறார். 102-ஆம் நூற்பாவில், தொல்காப்பியர் 'ஆ ஏ ஓ அம் மூன்றும் வினா' என்று வினா எழுத்துக்கள் மட்டும் கூற இவர் வினாவெழுத்தும் வினாப்பெயரும் கூறுகிறார்.

பிறர் பல நூற்பாக்களில் கூறுவதை இவர் ஒரே நூற்பாவாக அமைத்து விடுகிறார்.

இஃது நன்னூலில் கீழின் முன் வன்மை விகற்பமாகும் என்னும் சூத்திர விதி (99) என்று தான் பின்பற்றி யுள்ளமையைக் குறிப்பிட்டும் செல்கிறார்.

தான் மரபுவழியினின்றும் தேவையான மாற்றங்களைச் செய்து மறுக்குமிடங்களையும் மேற்கோள்களால் காட்டுகிறார். நன்னூல் 'நெடிலோ டாய்த முயிர்வலி மெலியிடை தொடர் மொழியிறுதி வன்மை யூருகர மஃகும் பிற மேற்றொடரவும் பெறுமே' என்பது மேற்கோள் (வபு—உடல்). அன்றியுங் குற்றியலுகரத்தின் கீழ் உயிர் வரினுகரங் கெட்டு நின்ற வொற்றின்மேல் வருமுயிரேறவும் யவ்வரினிய்யாகி அவ்வாறாகவும் இங்ஙனம் ஒரோவிடத்து முற்றியலுகரமும் இவ்விரு வழியாற் கெடவுமாமெனக் கொள்க (15). மேற்கூறியவற்றை நோக்கும்பொழுது, குறிப்பிட்ட இடங்களில் எந்தெந்த இலக்கண நூல்களுடன் எவ்வெவற்றிற்கு உடன்படுகிறார் அல்லது மறுக்கிறார் என்பதனை அறிந்து கொள்ள முடிகிறது. மேற்கோள் நூற்பாக்களின் மூலம் இவர் செய்துள்ள சிறு மாற்றங்களையும்

காட்டுகிறார் (97). காலங்களுக்கிடையே மொழியிடையே ஏற்பட்டுள்ள மாற்றங்களை எளிதாக உணர இவை பெரிதும் உதவுகின்றன. இவருடைய கருத்துக்களுக்கு அடிப்படையான நூல்கள் எவை என்பதும் தெரிய வருகிறது.

நன்னூலிற் குறை செய்தான் (49) என்று குறிப்பிட்டிருப்பதன் மூலம் மூலநூல்கள் மட்டுமன்றி உரையிலும் கவனம் செலுத்தினார் என்பதை உணரலாம்.

## V

பிறந்த நாட்டினின்றும் எப்பணிக்காகத் தம்மை அர்ப்பணித்து முனிவர் இந்நாட்டிற்கு வந்தாரோ அதனை இவ்விலக்கண நூலிலும் புலப்படுத்தியுள்ளார். வேதநூலைத் தந்த முதல்வனாகவும், வேத நூலாலடையப்படு முதற்பொருளே ஆகவும் நிற்குமப் பொருளாகிய மெய்யாங் கடவுளை மனவணியாக யேத்திப் பொருளிலக்கணத்தைக் கூறுதும் (143). மனவிருளிரிய மணிவிளக்காகத் தனியருளிறைவன் தந்த மறை நூலாய்ந்துழி ஈண்டி யானறைந்த யாவும் வாய்ந்த மெய்யென வழங்கித் தோன்றுமே .... (162). மொழியானும் பொருளானும் வழுவின்றி யுரைப்பவும் மற்றையவர் மனவெறுப்பின்றிக் கொள்ளவும் எவர்க்கும் வழுவாப் பயனுண்டாகவுங் கடவுளுதவியே வேண்டினமையால் தெய்வ வணக்கம் வேண்டுவதென்பதாயிற்று (148) என்பதுபோன்று தன் இறை உணர்வினைப் பல இடங்களில் வெளிப்படுத்துகிறார். சான்றுகளிலும் முள் + முடி—முள்முடி (26), வானத்தான், விசும்பான், தூதன் (54) என்று சமயத் தொடர்புடையனவற்றைக் காட்டுகிறார்.

## VI

மரபுவழி இலக்கணத்தைப் படைப்பினும் ஆசிரியர் தன் கால நிலையினையும் நினைவில் கொள்ளத் தவறவில்லை. என முறையே மூவகை யின்னிசை வெண்பா வந்தவாறு காண்க. ஆயினும் இன்றிவை வழங்கா; ஆயினு மிவையும் இந்நாளில் வழங்கா (222), இற்றைப் புலவர் (236), இவை இன்று கலித்துறை எனப்படும் (241), இன்று தாழிசை எனப்படும் (246) அன்றியும் அளவடியான் வரும் கலிவிருத்தம் அட்டை விருத்தம் என்பார் இன்றைப் புலவருட் சிலர் (28) என்பன போன்றவை சிறந்த சான்றுகளாக அமைகின்றன.

## VII

இவர் உரையினின்றும் சில சிறப்புகளை இங்குச் சுட்டலாம். தனக்கு வடமொழிப் பயிற்சி உண்டென்பதனைப் பல இடங்களில்

காட்டுகின்றார். தமிழ் இலக்கணச் சொற்களுக்கு இணையான வடமொழி இலக்கணச் சொற்களை உரையில் பல இடங்களில் சுட்டிச் செல்கின்றார்.

| நூற்பா எண் | தமிழ்ச்சொல் | வடசொல் |
|---|---|---|
| 8 | உயிர் | சுரம் |
| ,, | மெய் | வியஞ்சனம் |
| ,, | குறில் | இரச்சுவம் |
| ,, | நெடில் | தீர்க்கம் |
| 9 | வலி | சய்-பரிசம் |
| ,, | மெலி | அநுநாசிகா-பரிசம் |
| ,, | இடை | அந்தத்தக்கரம்-யண் |
| 21 | மிகுதல் | ஆகமம் |
| ,, | கலத்தல் | சங்கிரணம் |
| ,, | திரிதல் | ஆதேசம் |
| ,, | கெடுதல் | உலோபம் |
| 44 | இயற்சொல் | ரூடியார்த்தம் |
| ,, | திரிசொல் | யோகார்த்தம் |
| 45 | தொகைநிலை | சமாசம் |
| 46 | பகாப்பதம் | ரூடம் |
| 47 | பகுபதம் | யௌகிகம் |
| 50 | ஐம்பால் | பிரகிருதி |
| 51 | தன்மை | உத்தமன் |
| ,, | முன்னிலை | மத்தியமன் |
| ,, | படர்க்கை | பிரதமன் |
| 54 | இடுகுறி | ரூடி |
| ,, | காரணக்குறி | யோகம் |
| 54 | காரண இடுகுறி | யோகரூடம் |
| 55 | வேற்றுமை | பிரத்தியம் |
| 56 | செய்பவன் | கருத்தா |
| 58 | எழுவாய்க் கருத்தன் | அபியித கருத்தன் |
| ,, | மூன்றனுருபின்கருத்தன் | அநபியித கருத்தன் |
| ,, | ஏவுதற் கருத்தன் | எதுகருத்தன் |
| ,, | இயற்றுதற் கருத்தன் | பிரயோச்சிய கருத்தன் |
| ,, | கருவி | கரணம் |
| 59 | நான்காம் வேற்றுமை | சம்பிரதானம் |
| 60 | ஐந்தாம் வேற்றுமை நீக்கப்பொருள் | அபாதானம் |
| ,, | எல்லைப் பொருள் | அவதி |
| 61 | சம்பந்தப் பொருள் | சேஷார்த்தம் |

| | | |
|---|---|---|
| 62 | — | அதிகரணம் |
| 69 | விளி | சம்போதனம் |
| 83 | பகுதி | தாது |
| 84 | விகுதி | பிரத்தியம் |
| 87 | பகுபதம் | தத்திதம் |
| 93 | அடைமொழி | அவ்வியயம் |
| 103 | வினை | கிரியாபதம் |
| 117 | பெயரெச்சம் | சந்திராந்தம் |
| ,, | வினையெச்சம் | துவாந்தம் |
| 131 | ஏகாரம்—தேற்றம் | அயோக விவச்சேதம் |
| ,, | ஏகாரம் பிரிநிலை | இதரயோக விவச்சேதம் |
| 143 | நூல் | தந்திரம் |
| 145 | ஒழுக்கம் | ஆசாரம் |
| ,, | வழக்கு | விவகாரம் |
| ,, | தண்டம் | பிராய்ச்சித்தம் |
| 250 | பதினேழுவகைச் செய்யுள் பொதுப்பெயர் | பத்தியம் |
| ,, | இலக்கணஞ் சிதையினும் இலக்கணப் பாவோடொப்ப வருவன | கத்தியம் |
| 256 | சுவை | பாவம் |
| 294 | சீர் | கணம் |
| ,, | முதற்சீர் தேமாங்காயாயின் | இந்திரகணம் |
| ,, | ,, கருவிளங்கனியாயின் | இலக்கணம் |
| ,, | ,, புளிமாங்காயாயின் | சந்திரகணம் |
| ,, | ,, கூவிளங்கனியாயின் | நீர்க்கணம் |
| 294 | ,, கருவிளங்காயாயின் | அந்தரகணம் |
| ,, | ,, கூவிளங்காயாயின் | சூரியகணம் |
| ,, | ,, தேமாங்கனியாயின் | வாயுகணம் |
| ,, | ,, புளிமாங்கனியாயின் | தீக்கணம் |

வடமொழி, தமிழ்மொழியினிடையே எழுத்துக்கள் பற்றிய வேறுபாட்டினையும் காட்டியுள்ளார் (6). வடமொழி, தமிழ் மொழியில் இடம்பெறுமாற்றை விரிவாகத் தருகிறார் (85). சொல் வகைகளை விளக்கும்போது வடமொழி நிலையினின்றும் விளக்குகின்றார் (191). இது வடமொழிக்கண் மிக வழங்கு மென்றுணர்க (38) என்று குறிக்கவும் செய்கிறார்.

இந்துமதப் புராணங்கள் பலவற்றை அறிந்துள்ளமையையும் உரையால் உணரலாம். கிருத்திகையின் புத்திரன் - கார்த்தி

கேயன் (38), கிரியிற் பிறந்தவள் கௌரி,சகரன் மக்கள் தோண்டின கடல் — சாகரம் (86).

தாய்தந்தைக்குத் திவசம் கொடுத்தான் (56) ஆசாரவின்மை-அனுசாரம் (67) பலநதியாடினும் பலதலஞ் சேரினும்.........மனை நகர் நாடு மகார் மனை சுற்றமுந் துறந்து அரும் வனத்திடை துணையற வுறையினும் (162) என்று இந்து சமயப் பழக்க வழக்கங்களையும் ஆங்காங்கே நினைவு கூறுகிறார்.

இலக்கணம் பற்றிய ஆசிரியர் கருத்தினையும் அறிய முடிகிறது. வேற்றுமை வகையினும், பெயர்க்கும் வேற்றுமைக்கும் இடைநிலையென வருஞ்சாரியை வகையினு மற்றைத் தமிழ்மொழி நடையினும் இலக்கிய வழியே வழங்கும் விகற்பங்கள் யாவையும் ஒவ்வொன்றாய்ச் சிறப்பித்துரைப்பது இலக்கண நூல்களிலடங்குந் தன்மையன்றே (82) இலக்கிய வகையான் மூத்தோர் புதைத்த வரும் பயனுகிய பொருளைக் கண்டறிந் தெடுப்பதற்கு இலக்கண நூலே விளக்காம். விளக்குதலால் விளக்கெனப்பட்டது (1). நூல் பற்றிய தன் எண்ணத்தையும் ஆங்காங்கே தருகிறார் (143, 144, 201).

முன்னோர்களுக்குச் சிறப்பளித்துப் பல விடங்களில் பேசுகின்றார். ஆகையின் முன்னோர் காட்டின மாத்திரை யாய்ந் துணர்ந்தொப்ப நடப்பதறி வோரியல் பெனக் கொள்க(82).

தமிழினிடத்து ஆசிரியர் கொண்ட ஈடுபாட்டினை செந்தமிழ்ப் பெருங்கடல், இளந்தமிழ் (1), விரிதமிழிற் சொன்னன் (159) என்பனவற்றால் அறியலாம். தமிழினைக் குறிப்பிடும் பொழுதெல்லாம் செந்தமிழ் என்றே கூறுகிறார்.

இந்நூலின் உரை முழுமையும் உடன்படுமெய் அமையுமாறு அமைந்து ஓரளவு கடினமாக உள்ளது.

இதனுரையாவது, 'பொழிப்பெனப் படுவது பொருந்திய பொருளைப் பிண்டமாகக் கொண்டுரைப்பதுவே' என்றாராகலின் வருமாறு (143) என்று ஆசிரியரே பொழிப்புரையெனக் கூறியுள்ளார்.

162-ஆம் நூற்பாவிற்கு இவர் கூறியுள்ள உரையாவது இவரின் மன உணர்வுகளை வெளிப்படுத்துவதுடன் உரைநடைக்கும் தக்க சான்றாக அமைகின்றது. இவ்வுரையுள் ஒரு பகுதி வருமாறு: அன்றியும் பிறர் நோய்கண் டகத்திரங்கா வையோவென வாய் பொய்த்த விரக்கங் காட்டல் தயையோ நெஞ்சங் கடுத்த சுடும் பகை கொண்டான் முகநக நட்பது நட்போ. ஒன்றீந்தொரு பத்தடித்துக் கொள்ளத் துணிந்தான் பிறர்க்கீந்துதவுதல்

கொடையோ. மனைநகர் நாடுமகல நீக்கியுட் பொருளின்ப மனுகு மாசை நீங்கான் மறுதுணையில்லா வனம்புக்குறைதல் துறவோ. பிணியுறப் பசிமிகப் பகைப்பட மொய்த்ததுன்பமின்ப மென வுணர்ந் தகங்கலங்காதான் புறத்தும் புலம்பாதிருப்பது பொறையே. பிறரழகாசை மனம்புகாத் தன்னிறை காத்த மகளீர் புறத்துக்காட்டு மொடுக்கமுங் கற்பே. தன் மனக் கோட்டங்கண்டு நாணுதல் நாணமே. மனத்திலிறைஞ்சிப் பிறரைப் பணிவான் புறத்துப் பொய்யாச் சொல்லின் வணக்கமும் பணிவே; உளத்திற் கலங்கா தெதிர் வெம்போர் முகத்தஞ்சான் றுணிவாய சேவகந்தானும் வீரமே. இவ்வாறனைத் தறன் மனத்துக்கண் மாசிலனுதலாகுமன்றோ என்பதிவையு மித் தொடக்கத்தன பலவும் வகையகத்திணையாம்.

# தொன்னூல் விளக்கம்

மூலமும் விளக்கமும்

## பொதுப்பாயிரம்

*நீர்மலி கடல் தவழ் நிலன் முதல் மற்று அரும்
சீர்மலி உலகு எலாம் செய்து அளித்து அழிப்ப
வல்லவன் ஆய் முதல் மட்டு ஈறு ஒப்பு எதிர்
இல்லவன் ஆய் உயர் இறையோன் ஒருவனைப்
பன்மை ஒழியப் பணிந்தே இரா இருள்
தன்மை ஒழியத் தரணியில் தோன்றிய
ஆதவன் நிகர் இருள் அகத்து அற அன்னான்
ஓதிய மறைநூல ஓதினன் ஆகி
அம் மெய்ப்பொருள் ஒன்று அனைவரும் உணரச்
செம் மெய்ப்பொருள் அத் திருமறை வழங்க
அமைத்து உளத்து எழுந்த ஆசை உள் தூண்டிச்
சமைத்துள யாவரும் தாங்கத் தருக என
ஏவிய தாக இப் பணி ஏற்றி நூல்
மேவிய ஐம்பொருள் விளக்கல் உணர்ந்து
விரிவிலாத் தொன்னூல் விளக்கம் எனும் பெயர்த்து
அரிய ஆசிரியர் அருந்தமிழ்ச் சொல்லிற்
பிறநூல் முடிந்தது பெயர்த்து உடன் படுத்தியும்
புறநூல் முடிந்தது பொருத்தியும் தான் ஒரு
வழிநூல் முடித்தனன் வாய்ப்ப அரும் மெய்ம்மறை.*

மொழி நூலத்தர் ஆய் முதிர் சிறப்பு இணை இல்
இரோமை நாட்டில் நின்று எய்திய முனிவருள்
விரோதம் ஒழி தயை மேவு அக
நேர மாதவத்தின் வீரமா முனியே.

நன்னூல் பொதுப்பாயிரத்திலக்கணம் கூறுவதற்கேற்பத் தொன்னூல் விளக்கத்தின் இப்பகுதி, நூலாசிரியரின் மாணக்கர் ஒருவரால் எழுதப்பட்டுள்ளது.

### சிறப்புப்பாயிரம்

1 சொல்நூல் உடையாத் தொகைக் குணத்து ஒன்று
முன்நூல் தந்த முதல்வனைப் போற்றி
நல்நூல் ஆய்ந்தோர் நவின்ற ஐம்பொருள்
தொன்னூல் விளக்கம் முன் சொற்றுதும் எழுத்தே.

செந்தமிழ்த் தன்மை விளக்கும் பழைய நூல்களுக்கு எல்லாம் விளக்கமாக அமைவதால் தொன்னூல் விளக்கம் என்ற பெயர் பொருந்துகின்றது. 'மூத்தோர் புதைத்த அரும் பயனுகிய பொருளைக் கண்டு அறிந்து எடுப்பதற்கு இலக்கண நூலே விளக்காம். விளக்குதலால் விளக்கெனப்பட்டது' என்று உரையில் ஆசிரியர் விளக்குகிருர்.

## எழுத்ததிகாரம்

### எழுத்தியல்

2 தோற்றமும் வகுப்பும் தோன்றும் விகாரமும்
சாற்றுளித் தோன்றும் தான் எழுத்து இயல்பே.

எழுத்தின் தோற்றமும், வகைகளும், ஏற்படும் விகாரங்களும் ஆகியன எழுத்தியல்பாகக் கூறப்படுகின்றன.

3 உயிர் இடையினம் மிடறு உரம் வலி உச்சி மெலி இவை
முதல் இடமாய் இதழ் மூக்கு அணம் பல் நா
ஐந்துணை இடத்தாம் அக்கரப் பிறப்பே.

எழுத்துக்கள் பிறப்பதற்குரிய நிலைகளை முதலிடம் துணையிடம் எனப் பகுத்து, உயிர் இடையினங்கள் மிடற்றிலும், வல்லினம் உரத்திலும், மெல்லினம் உச்சியிலும் தோன்றும் எனக்கூறி, இதழ் மூக்கு அண்ணம் பல் நா ஆகிய ஐந்தைத் துணையிடமான கருவி எனக் கூறுகிருர்.

எழுத்தின் வகுப்பு

4 முதல் சார்பு உயிரே மூவினம் மெய்யே
முதற்கண் எழுத்தே மொழி ஈற்று எழுத்தே
உயிர் மெய் குறில் நெடிலோடும் ஆய்தம்
ஆறு குறுக்கம் அளபெடை இரண்டு
மாத்திரைப் புணர்பு என வகைப்படும் எழுத்தே.

எழுத்துக்களைப் பலவகையாகப் பகுத்துக் கூறுகின்றார். தொடர்ந்து வரும் நூற்பாக்களில் விரிக்கப்படும் கருத்து இங்குத் தொகுத்து மொழியப்படுகின்றது.

5 முதல் எழுத்து உயிர் ஈராறுடன் மூவாறே
சார்பு எழுத்து உயிர்மெய் தனி ஆய்தத்தோடு
அஃகிய இ உ ஐ ஔ மவ் ஆய்தம்
உயிரளபு ஒற்றளபு ஒருபஃது என்ப.

முதல் எழுத்து எனவும் சார்பு எழுத்து எனவும் எழுத்துப் பகுக்கப் படுகின்றது. உயிர் பன்னிரண்டும் மெய் பதினெட்டும் முதல் எழுத்து; உயிர்மெய் முதலிய பத்தும் சார்பு.

6 எஒவ்வும் றன ழவ்வும் என்று ஐம் முதலும்
உயிர்மெய் உயிரளபு ஒழி எண் சார்பும்
அம் தமிழ்க்கு உரிய ஆரியமும் பிறவே.

தமிழுக்கே உரிய சிறப்பெழுத்துக்களாகிய எ ஒ ற ன ழ என்னும் ஐந்தும் 'முதல்' எனவும் தமிழுக்கும் ஆரியத்துக்கும் பொதுவான எண் வகை எழுத்துக்களும் சார்பு எனவும் கூறப்படுகின்றன.

7 இடுகுறி காரணம் இவை பொதுச் சிறப்பு என
ஈரிரண்டு ஆகும் எழுத்தின் பெயரே.

தமிழ் மொழியிலுள்ள அனைத்து எழுத்துக்களும் வகை வகையாகப் பகுக்கப் பெறுமுன் பெற்ற பெயர்நிலை இங்குச் சுட்டப்படுவதாக உரையில் சுட்டுகின்றார் ஆசிரியர். இடுகுறிப்பொதுப்பெயர் இடு குறிச் சிறப்புப்பெயர், காரணப் பொதுப்பெயர், காரணச் சிறப்புப்பெயர் ஆகிய நான்குமாம்.

8 அம் முதல் ஈராறு உயிர் கம்முதல் மூவாறு உடல்
குறில் அ இ உ எ ஒவ் ஐந்தே நெடில்
ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ ஏழே.

உயிர், மெய், குறில், நெடில் ஆகியன இவையிவை என இந்நூற்பா குறிக்கின்றது. இந்நால்வகை எழுத்துக்களையும் பிற மொழியினர் குறிக்கும் பெயர்களையும் உரையில் தருகின்றார்.

9 வலி கசட தபற மெலி ஙஞண நமன
இடை யரல வழள என மூ இனமே.

மெய்யெழுத்தின் மூவகை எழுத்தினங்களை இந்நூற்பா சுட்டுகிறது.

10 உயிர் கசதப ஞநமவய முதற்கே
எ ஒ ஔவும் மெல்லின ஙவ்வும்
நீத்து உயிர் ணமன இடையினம் ஈறே.

மொழிமுதல் எழுத்துக்களாக உயிரும் ஒன்பது மெய்யும் தரப்படுகின்றன. எ ஒ ஔ ஒழிந்த உயிரும், ணனம எனும் மெல்லினமும் இடையினங்களும் ஈறும். மெல்லினத்தில் ஙகரம் நீக்கப்படுவது விதந்தோதினமையால், ஞ,ந என்பன அருகியேனும் ஈறுகலாம் என்பது குறிப்பு.

11 உயிரே மெய் அணைந்து உயிர்மெய் ஆகும்
அவை இருநூற்று ஒருபத்து ஆறு என்ப.

உயிர்மெய்யின் ஆக்கமும், மொத்த எண்ணிக்கையும் தரப்படுகின்றது.

12 நீட்டல் சுழித்தல்
குறில் மெய்க்கு இரு புள்ளி

எழுத்தின் வரிவடிவம் பற்றி இந்நூற்பா மொழிகின்றது.

எ̄, ஒ̄; க், ங், ச், ஞ்

13 ஆய்தம் குறில் வலிக்கு ஆகும் நடுவே
அஃது ஈற்று லள த் இருந்துளி அஃகும்.

ஆய்த எழுத்து, குற்றெழுத்திற்கும் வல்லெழுத்திற்கும் இடையே வரும். மொழியீற்று லகர ளகரங்கள், வருமொழியில் தகரம் வரும்போது ஆய்தமாகத் திரிந்து குறுகும்.

14 யம்முதல் இய்ஆம் இருகுறள் உக் கெடில்
அஃதும் அற்றுஆம் அசைச்சொல் மியாவே.

யகரத்தின் முன் குறள் உ வரும்போது இகரமாகத் திரிந்து குறுகும்; மியா என்னும் அசைச்சொல்லின் இகரமும் குறுகி ஒலிக்கும்.

15 தனிக் குறில் அல்லவற்று இறுதி வன்மை
ஊர்ந்துளிக் குறுகும் உகரம் என்ப
தொடர் உயிர் உக்குறள் துடைத்து உணும் யவ்வரின்
உ இ யாம் சில முற்றுகரமும் அற்றே.

தனிக்குறில் அல்லாதவற்றின் இறுதியில் வரும் வல்லினத்தை ஊர்ந்த உகரம் குறுகும். இவையொழிய உகரம் இகரமாகக் குறுகும் வாய்ப்புடைய சில முற்றுகரமும் குறுகும். குற்றியலுகரம் நிற்க வருமொழியில் உயிர் வந்தால், உகரம் வீழ்ந்து, ஒற்றின்மேல் உயிர் ஏறும்.

16 ஐத் தனித்து அளபெடுத்து அன்றி மூ இடத்தும்
ஔவும் முதலிடத்து அஃகும் என்ப.

ஐகாரம் தனித்தோ அளபெடுத்தோ வராதபோது, சொல்லின் முதல் இடை கடை ஆகிய மூன்று இடங்களிலும் குறுகும்; ஔகாரம் மொழிமுதலில் மட்டும் குறுகும்.

17 மகரம் லளக் கீழ்
வம் மேல் குறுகும்.

மகரம் குறுகும் மூன்று இடங்கள் இங்கு மொழியப் படுகின்றன. லகர ளகரங்களின் பின்னும் வகரத்தின் முன்னும் வரும் மகரம் குறுகும்.

18 உயிர் நெடில் இனக் குறில் உற்று அளபெடுக்கும்
ஒற்றளபு எழும் வேறு உற்று குறில் கீழ்
இயைந்து ரழ ஒழி இடை மெலி ஆய்தம்.

நெடில் உயிர்கள் அளபெடுக்கும். தம் 'இனக்குறிலை அடையாள மாகப்பெறும். குறிலைத் தொடர்ந்துவரும், ரகர ழகரங்கள் ஒழிந்த இடையும், மெல்லினமும் ஆய்தமும் அளபெடுக்கும் ஒற்றுக்கள்.

19 கண்ணிமை கைந்நொடி காட்டும் மாத்திரையில்
அஃகிய மவ்வும் ஆய்தமும் காலே
உ இக்குறள் ஒற்று ஆய்தம் அரையே
குறிலே ஐ ஔக் குறள் ஒற்றளபு ஒன்றே
நெடில் இரண்டு உயிரளபு ஒருமூன்று என்ப.

மாத்திரையின் விளக்கமும் எழுத்துக்களுக்கு உரிய மாத்திரை நிலையும் இங்குக் கூறப்படுகின்றது.

20 முதல் ஈற்று உயிரும் மொழியே சேர்புளி
இஈ எஐ ஈறு இயையும் யவ்வே
மற்றை உயிர்க்கீழ் வகரம் புணரும்.

புணர்பு எழுத்து என இவர் யகர வகர உடம்படுமெய்களைக் கூறுகின்றார். இஈஎஐ வரும்போது யகரமும் பிற உயிருக்கு வகரமும் உடம்படுமெய் ஆம் என்பது இவர் கருத்து.

### எழுத்தின் விகாரம்

21 திரிபு அழிவு ஆக்கம்
திரட்டு நால் விகாரம்.

எழுத்தின் விகாரங்களாகத் திரிபு-அழிவு-ஆக்கம்-திரட்டு என நால் வகை கூறப்படுகின்றது.

22 அல்வழி வேற்றுமையாம் இரண்டு அவற்றுள்
விரியினும் உருபுஎடா வினைசார் பெயரே
அல்வழிப் பொருட்பெயர் ஆகும் என்ப
வேற்றுருபு இல்லது விரிக்கும் காலை
வேற்றுமைக் கொளின் அது வேற்றுமைப் பொருளே.

அல்வழி, வேற்றுமை என்று புணர்ச்சி இருவகைப்படும். உருபு பெறுதது அல்வழி; உருபு மறைந்தோ வெளிப்பட்டோ வருவது வேற்றுமை.

23 வலிவரின் மஃகான் வருக்கம் ஆகும்
நவ் வரின் தனிக்குறில் மவ்வும் நவ்வாம்
அவ்வழியன்றி மகரம் கெடுமே.

மகர ஈற்றுப் புணர்ச்சி இங்கு விளக்கப்படுகின்றது. வல்லெழுத்தின் முன் மகரம் அதன் இன மெல்லினம் ஆகும்; நகரத்தின் முன் மகரமும் நகரம் ஆகும். பிறவிடங்களில் மகரம் கெடும்.

24 ணன முன் தகரம் டறஆம் முறையே
ணன அல்வழிக்கு என்றும் இயல்பாம்
வேற்றுமைப் பொருட்கு அவை வலிவரின் டற ஆம்
ணன முன் குறில்வழி நகரம் ணன ஆம்
மற்றது ணன முன் மாய்ந்து கெடுமே.

ணகர னகர ஈற்றுப் புணர்ச்சி விரிக்கப்படுகின்றது. ணகர னகரங்களின் முன் தகரம் வந்தால் அவை முறையே டகர றகரமாக மாறும். அல்வழிப் புணர்ச்சிக்கு ணகர னகரம் இயல்பாகும். வேற்

றுமைப் புணர்ச்சியில், வல்லெழுத்து வரின் டகர றகரமாகும். தனிக்குறிலைத் தொடர்ந்த ணகர னகரத்தின் முன் நகரம் வரின், அந்நகரம் ணகர னகரமாகத் திரியும்; அல்லாதவழி நகரம் கெடும்.

25 தேன் எனும் மொழி மெய் சேர் இருவழியும்
தான் இயல்பாம் மெலிவரின் தன் ஈற்று அழிவும்
வலி வரின் ஈறுபோய் வலி மெலி மிகலுமாம்
மின் பின் உவ் உறில் வன்மையும் மிகுமே
என் தன் வலிவரின் இயல்பும் திரிபுமாம்
நின் என்றும் இயல்பாய் நிற்கும் என்ப
ஊன் குயின் இயல்பாம் உற்ற வேற்றுமைக்கு
எகின் மரம் அல்லதே இருவழி இயல்பும்
அவ் உறி வலிவரின் வலிமெலி மிகலுமாம்.

னகர ஈற்று மொழிகளின் புணர்ச்சி விதிகளும் வேறுபாடுகளும் இங்குத் தொகுக்கப்படுகின்றன. தேன், மின், பின், என், தன், நின், ஊன், குயின், எகின் ஆகிய னகர ஈற்றுச் சொற்களுக்கு இங்குத் தனி விதி விதந்தோதப் படுகின்றது.

26 லள வேற்றுமையில் றடவும் அல்வழி
அவற்றோடு உறழ்வும் வலிவரின் தவ்வரின்
இயல்பும் திரிந்தபின் கெடுதலும் ஆகும்
லள தனிக் குறில்கீழ் அல்வழித் தவ்வரின்
திரிந்து ஒழிந்து ஆய்தம் சேரும் என்ப
லளமுன் மெலி வரின் இருவழி னண ஆம்
அவற்றுள் ணத் திரிந்து அழிவாம் தனிக்குறில்
நண்ணிய லள முன் நவ்வும் னண ஆம்.

இந்நூற்பாவில் லகர ளகரங்களின் புணர்ச்சி விதி கூறுகின்றார். வேற்றுமையில் ல-ற ஆகவும் ள-ட ஆகவும், அல்வழியில் இயல்பும் திரிபும் ஆகவும் வரும். விரல் + புறம் = விரற்புறம். முள் + புறம் = முட்புறம் கல் + பெரிது = கல்பெரிது, கற்பெரிது. வாள் + பெரிது = வாள்பெரிது, வாட்பெரிது. வல்லெழுத்துக்களில் தகரம் வந்தால் வழக்கில் இயல்பாகவும், ஏனைய இடங்களில் திரிந்தபின் கெடுதலும் ஆகும். பொறுத்தல் + தலை = பொறுத்தல் தலை, பொறுத்தறலை. அவள் + தான் = அவள்தான், அவடான். அல்வழிப் புணர்ச்சியில் தனிக்குறில் கீழ் வரும் லகர ளகரங்கள் தகரம் வரின் றகர டகரமாகவும் ஆய்தமாகவும் புணரும். கல் + தீது = கற்றீது, கஃறீது. முள் + தீது = முட்டீது, முஃடீது. அல்வழி வேற்றுமை

யாகிய ஈரிடத்தும் லகர ளகரங்களின் முன் மெல்லெழுத்து வந்தால் அவை முறையே னகர ணகரம் ஆகும். கல் + மலை = கன்மலை முள் + முடி = முண்முடி. கல் + முளைத்தது = கன் முளைத்தது. முள் + முரிந்தது = முண்முரிந்தது. தனிக்குறில் அல்லாத லகர ளகரத்தின் முன் நகரம் வந்தால், லகர ளகரம் திரிந்து நகரம் கெட்டு, னகர ணகரமாகும். விரல் + நீளம் விரனீளம். இருள் + நீண்டது = இருணீண்டது. தனிக்குறிலைத் தொடர்ந்த லகர ளகரத்தின் முன் நகரம் வரின், அது முறையே னகர ணகரமாகத் திரியும். கல் + நெஞ்சு = கன்னெஞ்சு. முள் + நிலம் = முண்ணிலம்.

27 சஞய வரின் ஐ அச் சமம் எனத் திரியும்.

அகர ஐகாரங்களின் போலி அமைப்பினை இந்நூற்பா கூறுகின்றது. மொழிக்கு முதலிலும் இடையிலும் சஞய என்னும் எழுத்துக்களின் முன் அகர ஐகாரம் சமமாக நிலையும். பசல்-பைசல்; மஞ்சு-மைஞ்சு; அய்யர்-ஐயர்; அரசு-அரைசு; முரஞ்சு-முரைஞ்சு; அரயர்-அரையர்.

28 அடைமொழி உக்குறள ஐ ஆதலுமாம்.

குற்றியலுகரம் ஐகாரமாகத் திரிவது பற்றி இந்நூற்பா பேசுகின்றது. ஆண்டு-ஆண்டை; மற்று-மற்றை; இன்று-இன்றை.

29 தெவ் என்பது இருவழி உவ் எய்திச் சேரும்
உலிமிகும் மவ்வரின் வவ்வும் மவ்வாம் என்ப.

தெவ் என்னும் சொற்குப் புணர்ச்சி விதி கூறுகின்றார். அச்சொல் அல்வழியிலும் வேற்றுமையிலும் உகரம் பெற்று வல்லினம் மிக்கு வரும். தெவ் + கடிது = தெவ்வுக்கடிது; தெவ் + கடுமை = தெவ்வுக் கடுமை. மகரம் வரின் வகரமும் மகரமாம். தெவ் + மன்னர் = தெம் மன்னர்; தெவ் + முனை = தெம்முனை.

30 யரழ முன் வலிவரின் அல்வழிக்கு இயல்பும்
அடைமொழிக்கு ஆக்கமும் அவை வேற்றுமைக்கண்
மிகலும் தன் இன மெலி எய்தலும் ஆம்.

ய,ர,ழ ஈற்றுப் புணர்ச்சியை இந்நூற்பாவில் கூறுகின்றார். இப்புள்ளி ஈறுகளுக்கு முன் வல்லினம் வரின், அல்வழிக்கண் இயல்பாம் நாய் + சிறிது = நாய் சிறிது; தேர் + சிறிது = தேர்சிறிது: வீழ் + சிறிது = வீழ் சிறிது. தொகையாக வரும் சொற்களில் வல்லினம் மிகும் என்க. பொய் + செல்வம் = பொய்ச் செல்வம் கார் + பருவம் = கார்ப் பருவம் பாழ் + கொல்லை = பாழ்க்கொல்லை. வேற்றுமைக்கண் வல்லொற்றும் சில நிலைகளில் தன் இன மெல்லொற்றும் மிகும் என்க. வேய் + குறை = வேய்க்குறை, வேய்ங்குறை; வேர் + குறை = வேர்க் குறை, வேர்ங்குறை; வீழ் + குறை = வீழ்க்குறை, வீழ்ங்குறை.

31 சில பல தம்மொடு சேர்புளி இயல்பும்
முதல் மெய்க் கடைமெய் மிகலும் ஈறுபோய்
ல றவ் ஆதலும் லா ஆதலுமாம்
பிறவரின் அகரம் நிற்றலும் கெடலுமாம்.

இந்நூற்பாவில் சில, பல எனும் சொற்களின் புணர்ச்சி கூறுகின்றார். அவை தம்முள் இயல்பாகவும் ஒற்று மிகுந்தும் சேரும்; சில + சில = சிலசில, சிலச்சில; பல + பல = பலபல, பலப்பல. சில வேளைகளில் லகரம் றகரமாகும்; சிற்சில, பற்பல; சில வேளைகளில் மிக அரிதாக லகரம் நெடிலாதலும் உண்டு: சிலாம், பலாம்.ஏனைய வரும்போது லகரம் அகரம் நீங்கி றகரமாதலும் னகரமாதலும் உண்டு. சில + கலை = சில்கலை, சிற்கலை, சிலகலை. சில + நாள் = சின்னுள், பல + கலை = பல்கலை, பற்கலை, பலகலை. பல + நாள் = பன்னுள்.

32 ஆ மா அல்வழி ஆஈறு முற்றும்
மியா இவை முன் வலி மிகாது இயல்பு ஆகும்.

ஆ, மா என்ற பெயரும் ஆகார ஈற்று முற்றுவினையும் மியா என்னும் அசைச்சொல்லும், நிலைமொழியாக நின்று, வருமொழியில் வல்லொற்று வந்தால் அவை மிகாது, இயல்பாகப் புணரும் என்க; ஆ + கரந்தன = ஆகரந்தன. மா + பயந்தன = மாபயந்தன. தின்னு + குதிரை = தின்னுகுதிரை. கேண்மியா + கோதாய் = கேண்மியா கோதாய்.

33 தனிக்குறில் ஈற்று ஆத் தரும் பெயர் செய்யுட்கே
ஆ அவ் ஆதலும் அதனோடு உவ் அணையலும் ஆம்.

செய்யுளிடத்து தனிக்குறிலை அடுத்து வரும் ஆகாரம், அகரமாகவும், அவ் அகரத்தோடு உகரம் இணைந்தும் வரும் என இந்நூற்பா குறிக்கின்றது. சுறு-சுற-சுறவு;

34 தமிழ் வேற்றுமைக்கு அச் சாரவும் பெறுமே;

தமிழ் என்ற சொல், வேற்றுமைப்பொருளில் வரும்போது சில இடங்களில் அகரச் சாரியை பெற்றும் வரும். சாரவும் என்ற உம்மையால், அகரச் சாரியை பெறாதும் வரலாம்; தமிழவளவன், தமிழ்ச்சொல்.

35 தனி வழி ஐயும் தனிக்குறில் யவ்வும்
துவ்வும் நொவ்வும் தொடர்மெலி மிகுமே.

ஐகார ஈற்று ஓரெழுத்தொரு மொழியும், தனிக்குறில் அடுத்த யகர ஈற்றுச் சொற்களும், தனிமொழியாகிய து, நொ என்பனவும் நிலைமொழியாக நின்று, வருமொழி மெல்லெழுத்தாக அமையும்

போது மெல்லெழுத்து மிகும் என்க. கை + மாற்று = கைம்மாற்று. மெய் + மாண்டது = மெய்ம்மாண்டது. து + நாடா = துந்நாடா. நொ + நாகா = நொந்நாகா.

36 தனிக்குறில் மெய் உயிர் சார்புளி மிகும் ரழத்
தனிக்குறில் சாரா தாமும் மிகா என்ப.

தனிக்குறிலைத் தொடர்ந்த மெய்யின் முன் உயிர் வரின், மெய் மிகும். ரகர ழகரங்கள் தனிக்குறிலைத் தொடர்ந்து வாரா. அவ் இரு எழுத்தும் எங்கும் இரட்டித்து வருவதும் இல்லை. கண் + அழகு = கண்ணழகு.

37 மெலிவுறின் பாவிடை மென்மை வன்மை
குறுமை நீட்சி குறுந்தொகை விரிவே
மற்று ஒருமொழி மூவழி குறைதலும் என
வேண்டுளித் தனிமொழி விகாரம் ஒன்பதே.

பாவின்கண், தேவைப்படும்போது ஒன்பது வகையான விகாரங்கள் நிகழலாம் என்று பேசுகின்றார். அவை மெலித்தல், வலித்தல், குறுக்கல், நீட்டல், தொகுத்தல், விரித்தல் எனவும் ஒருமொழியில் முதல்-இடை-கடை குறைதலும் எனவும் ஆக ஒன்பதாகும்; தட்டை > தண்டை–மெலித்தல்; வாய்ந்தது > வாய்த்தது-வலித்தல்; பாதம் > பதம்-குறுக்கல்; நிழல் > நீழல்-நீட்டல்; வேண்டாதார் > வேண்டார்-தொகுத்தல்: சொரியுமே > சொரியும்மே-விரித்தல்; தாமரை > மரை-முதற்குறை; யாவர் > யார் - இடைக்குறை; நீலம் > நீல்-கடைக்குறை.

38 இருமொழி ஒருமொழி எனச் சங்கீர்தம் ஆய்
நிலைமொழி ஈற்று உயிர் நீங்கலும் அதனோடு
அணைமொழி முதற்கண் அஆ ஆதலும்
இஈஏ ஆதலும் உஓ ஆதலுமாம்.

சங்கீர்தம் என்ற சொல் இங்குத் திரட்டு என்ற பொருளில் வருகின்றது. இருசொற்கள் ஒரு மொழியாகப் புணருமிடத்து நிலைமொழியின் ஈறும் வருமொழி முதலும் திரண்டு விகற்பம் ஆகும். நிலைமொழி ஈற்றுயிர் நீங்கி, வருமொழியின் அகரமும் ஆகாரமும் ஆகாரமாகும். வேத + அங்கம் = வேதாங்கம்; வேத + ஆகமம் = வேதாகமம். இகரமும் ஈகாரமும் ஈகாரமாகும்; சுசி + இந்திரம் = சுசீந்திரம்; கிரி + ஈசன் = கிரீசன். நிலைமொழி அகர ஆகாரமாகி வருமொழி இகர ஈகாரமாயின் எகரமாக மாறும். சுர + இந்திரன் = சுரேந்திரன். உகரம் ஓகரமாகும். தாம் + உதரன் = தாமோதரன்.

39 ஈறுபோய் இடைஆ ஏற்று இரட்டிய
சொல்லே மிகுதி தோற்றும் என்ப
இலக்கணம் இன்றி இயைந்துள பிறவே.

இந்நூற்பாவில் இறுதி கெட்டு அடுத்துவரும் உயிர் நெடிலாகும் நிலையும் இலக்கணப்போலி, மரூஉ போன்றவற்றிற்கு இலக்கணமும் குறிக்கப் பெறுகின்றது. கோணம்+கோணம் = கோணாகோணம்; இலக்கணப்போலி-கோவில்-கோயில்; பின்-பின்றை. மரூஉ: யாடு>ஆடு; தஞ்சாவூர்>தஞ்சை.

40 உயிரே குறில் நெடில் ஒற்று மூவினம்
உயிர்மெய் ஆய்தம் ஓர்அறு குறுக்கம்
அளபெடை மாத்திரைப் புணர்பு என வகுத்து
ணந மன லள தவும் நண்ணும் திரிபு அலது
ஏனை திரியாது இயல்பாம் என்ன
இவண் விளக்கிய எழுத்தின் இயல்பே.

இந்நூற்பாவின்கண் எழுத்திலக்கணச் செய்திகள் அனைத்தையும் தொகுத்துக் கூறுகின்றார்.

## சொல்லதிகாரம்

### சொற்பொதுவியல்

41 முச் சயத் தொழில் கொடு முச்சகம் தனித்து ஆள்
அச்சயன் அடி பணிந்து அறைகு சொல் விளக்கே.

இந்நூற்பாவில் தெய்வ வணக்கம் கூறுகின்றார். படைத்தல் அளித்தல் அழித்தல் என்னும் முத் தொழில்களையும் இயற்றி மூன்று உலகங்களையும் தனியாக நின்று பாதுகாக்கும் இறைவன் அடிகளைப் பணிந்து சொல்லுக்கு விளக்கம் கூறுவேன் என்று கூறுகின்றார்.

42 எச் சொல்லும் பெயர் வினை இடை உரிஎன நான்கு
இவற்றுள் பொதுஎன இயற்சொல் திரிசொல்
ஒருமொழி தொடர்மொழி ஒருவிலாப் பொதுமொழி
பகாப்பதம் என்றா பகுபதம் என்றா
ஆகுபெயர் இருதிணை ஐம்பால் மூவிடம்
சாரியை எனப் பொது தகுதி ஈராறே.

சொற்கள், பெயர் வினை இடை உரி என நான்கு வகைப்படும். இச் சொற் பொதுவியலில் 1. இயற்சொல் 2. திரிசொல் 3. ஒரு மொழி 4. தொடர்மொழி 5. ஒருவிலாப் பொதுமொழி 6. பகாப் பதம் 7. பகுபதம் 8. ஆகுபெயர் 9. இரு திணை 10. ஐம்பால் 11. மூவிடம் 12. சாரியை எனச் சொல்லின் பொதுத் தகுதி பன்னிரண்டெனக் கூறுகின்றார்.

43 இயற்சொல் என்பது இயல்பில் திரிபு இலா
தான் எளிது எவர்க்கும் தன் பொருள் விளக்கலே.

சொல்லாலும் பொருளாலும் மயக்கத்தைத் தராது எளிமையாக அச்சொல்லே எவர்க்கும் பொருளை விளக்கி நிற்பது இயற்சொல் எனப் பேசுகின்றார் விளக்கம் தரும்போது பொருள்-இடம்-காலம்-சினை-குணம்-தொழில் என்ற அறுவகை நிலையில் அமையும் இயற் சொற்களையும் பெயர்-வினை-இடை-உரி என்ற நால்வகை நிலையில் அமையும் இயற்சொற்களையும் தருகின்றார். சான்றாக பொன், நிலம், இன்று, தலை, வெண்மை, ஆடல், மண், உண், ஆல், அன்பு என்ற சொற்களைத் தருகின்றார்.

44 திரிசொல் ஒருபொருள்தெரி பல சொல்லும்
பல பொருட்கு ஒரு சொல்லும் பயன்படற்கு உரியன.

ஒரு பொருளுக்குப் பல சொல்லும், பல பொருளுக்கு ஒரு சொல் லும் ஆக அமையும் சொற்கள் திரிசொற்கள் எனப் பேசுகின்றார். வெற்பு, விலங்கல், விண்டு, அடுக்கல், பொறை, வரை, குன்று என்ற பல சொற்கள் மலை என்னும் ஒரு பொருளை உணர்த்தின. வாரணம் என்ற ஒரு சொல் யானை, கோழி, சங்கு முதலிய பல பொருளைக் குறித்தது. பெயர்-வினை-இடை-உரி நான்கிற்கும் திரி சொல் கூறுகின்றார்.

45 ஒருமொழி ஒன்றையும் பலவையும் தொடர்மொழி
பொது அவ்விரண்டையும் புகலும் தன்மைய
தொகை தொகா என இரு தொடர்மொழி என்ப.

ஒருமொழி, தொடர்மொழி, பொதுமொழி என மொழி மூவகைப் படும். ஒரு சொல்லாக நீர், வந்தான் போன்று அமைவன ஒரு மொழி எனவும், ஒன்றிற்கு மேற் வந்தான் சாத்தன், இராப்பகல் போன்று அமைவன தொடர்மொழி எனவும், ஒருமொழியாய் நின்று ஒருபொருளை உணர்த்தியும் அதுவே தொடர்மொழியாய் நின்று பல பொருளை உணர்த்தியும் இரண்டற்கும் பொதுவாய் நிற்பன பொதுமொழி எனவும் விளக்கம் தருகின்றார். தாமரை-பூவைக்குறிக்கும்போது ஒருமொழியாகவும் தாவுகின்ற மரையைக் குறிக்கும்போது தொடர்மொழியாகவும் அமைந்து பொதுமொழி

யாயிற்று. தொடர்மொழி, தொகைநிலைத் தொடர்மொழி எனவும் தொகாநிலைத் தொடர்மொழி எனவும் இருவகைப்படும்.

46 பகாப்பதம் என்ப பயனால் குறியால்
பகாது ஒன்றாகிப் பகுப்பின் பயனிலா
நிகழ்ந்து இயல்கின்ற நால்வகைச் சொல்லே.

பெயர் வினை இடை உரி என்ற நால்வகைச் சொற்களும் தாம் விளக்கும் பொருட் பயனாலும், சொல்பவன் குறித்த பயனாலும், ஒன்றாக அமைந்து பகுத்தால் பயன் இல்லாது நிகழ்கின்ற சொற்கள் பகாப்பதம் எனப்படும். தீ, வா, மன், நனி.

47 பகுபதம் ஒன்றாய்ப் பல ஒருங்கு உணர்த்தி
பொழுது கொள் வினையும் பொருள் இடம் காலம்
சினை குணம் தொழில் ஆறும் சேர்ந்த பெயருமாம்.

ஒருமொழியாக நின்று ஒருப்படப் பலபொருளை உணர்த்துவன பகுபதங்கள் எனப்படும். அவை தெரிநிலையாகவும் குறிப்பாகவும் காலத்தைக் கொண்டு வரும் வினைப்பகுபதமும் பொருளிடங்காலம் சினைகுணந்தொழில் என அறுவகைக் காரணங்களை அடுத்து வரும் பெயர்ப்பகுபதமும் என இருவகைப்படும். ஓதினான், வில்லினன், பொன்னன், ஊரன், வேனிலான், தோளன், செய்யன், தச்சன்.

48 உயிர் மவில் ஆறும் தபநவில் ஐந்தும்
கவசவில் நாலும் யவ்வில் ஒன்றும்
ஆகும் நெடில் நொது ஆம் குறில் இரண்டோடு
ஓர் எழுத்து இயல் பதம் ஆறேழ் சிறப்பின
பகாப்பதம் ஏழும் பகுபதம் ஒன்பதும்
எழுத்து ஈறாகத் தொடரும் என்ப.

இந்நூற்பாவில் ஓரெழுத்தொருமொழியாக அமையும் சொற்கள் நாற்பத்திரண்டு எனவும், பகாப்பதம் ஏழு எழுத்துக்களை மிகுதியாகக் கொண்டு அமையும் எனவும் பகுபதம் ஒன்பது எழுத்துக்களை மிகுதியாகக் கொண்டு அமையலாம் எனவும் கூறியுள்ளார்.

ஆ-பசு, ஈ-வண்டு, ஊ-ஊன், ஏ-அம்பு, ஐ-அரசன், ஓ-மடையடைக்குங்கதவு, மா-அழகு, மீ-மேல், மூ-மூப்பு, மே-ஏவல், மை-கறுப்பு, மோ-உயர்ச்சி, தா-பகை, தீ-நெருப்பு, தூ-சுத்தம், தே-கடவுள், தை-மாதம், பா-செய்யுள், பூ-பூமி, பே-நுரை, பை-நிறம், போ-ஏவல், நா-நாக்கு, நீ-முன்னிலை, நே-அன்பு, நை-நைதல், நோ-நோய், கா-சோலை, கூ-பூமி, கை-சிறுமை, கோ-அரசன், சா-சாதல், சீ-இலக்குமி, சே-எருது, சோ-மதில், வா-விளித்தல், வீ-

சாவு, வே-வேதல், வை-வைக்கோல், யா-மரம், நொ-மென்மை, து-உண்; உத்திரட்டாதி, உத்திரட்டாதியான்.

49 ஆகுபெயர் என்பது அவ்அவ முதல் சினை
கருவி காரியம் பண்பு இவற்று ஒன்றன் பெயர்
பிறிது ஒன்றற்கு உரைக்கும் பெற்றி தானே.

இந்நூற்பாவில் ஆகுபெயரின் இலக்கணம் உணர்த்துகின்றார். முதற்குச் சினையும், சினைக்கு முதலும், காரணத்திற்குக் காரியமும், காரியத்திற்குக் காரணமும், ஒன்றன் பண்பு மற்றொன்றிற்கு ஏற்றியும் உரைப்பது ஆகுபெயர் எனவும், அது முதல், சினை, கருவி, காரியம், பண்பு என ஐவகைப்படும் எனவும் கூறுகின்றார். முதலாகு பெயர்-தாமரைமுகம். சினையாகு பெயர்-வெற்றிலை நட்டான். கருவியாகு பெயர்-இவ் ஆடை பருத்தி. காரியவாகு பெயர்-அலங்காரம் படித்தான். பண்பாகு பெயர்-நீல மோதிரம்.

50 திணை இரண்டு என மக்கள் தேவர் நரகர்
ஆவர் உயர்திணை அஃறிணை பிறவே
பால் ஐந்து ஆண் பெண் பலர் உயர் திணையே
அன்றியும் ஒன்று பல அஃறிணை என்ப.

இந்நூற்பாவில் திணை, பால் இவற்றின் விளக்கம் தரப்படுகின்றது. மக்கள், தேவர், நரகர் உயர்திணை எனவும் ஏனைய அஃறிணை எனவும் கூறுகின்றார். ஐந்துபாலுள் ஆண், பெண், பலர் உயர்திணையைச் சாரும் பால் எனவும் ஒன்று, பல அஃறிணையைச் சாரும் பால் பகுப்பு எனவும் தெரிகின்றன.

51 மூ இடம் தன்மை முன்னிலை படர்க்கை
தன்மை ஆகும் நான் யான் நாம் யாம்
முன்னிலை நீ நீயிர் நீவிர் நீர் எல்லீர்
ஏனைய படர்க்கை எல்லாம் பொதுவே
யான் நான் நீ தான் ஒருமை யாம் நாம் நீர் நீவிர்
எல்லீர் நீயிர் தாம் எல்லாம் பன்மை.

இந்நூற்பாவில் தன்மை முன்னிலை படர்க்கை என்ற மூ இடங்களையும் அவற்றிற்குரிய ஒருமை பன்மைச் சொற்களையும் தருகின்றார்.

52 சாரியை என்ப சார் பதம் எழுத்து எனப்
பதத்தொடு விகுதியும் பதமும் உருபும்
புணர்புளி இடையில் புணர்வன அவற்றுள்
அ எ உ ஐ கு ன் அன் ஆன் இன் அல்

அற்று இற்று அத்து அம் தம் நம் நும் எனப்
பதினேழு அன்றிப் பிறவும் ஆம் பொதுச்
சாரியை அவற்று ஓர்வழி அன்று ஆகும் விகற்பமே.

சாரியை என்பன பதத்தொடு பதமும், விகுதியும், உருபும் புணரும் போது இடையில் தோன்றும் பதமும் எழுத்தும் ஆகும். அவை பதினேழு என மேற்கண்ட நூற்பாவில் தொகுக்கின்றார்.

### பெயர் - வேற்றுமையியல்

53 பெயரே வேற்றுமை பெற்று இடம் பால் திணை
காட்டித் தொழில் அல காலம் காட்டா
மரபு காரணம் ஆக்கம் குறி என்று
அவை நால் தகுதி ஆகும் என்ப.

இந்நூற்பாவில் பெயருக்கு இலக்கணம் கூறுகின்றார். வேற்றுமை பெற்று, இடம் பால் திணை காட்டுவதும் தொழில் காலம் காட்டாதனவும் பெயர்ச் சொற்கள் எனக் கூறி அவை மரபு காரணம் ஆக்கம் இடுகுறி என்ற நால்வகைப்படும் எனவும் பேசுகின்றார்.

54 காரணம் இல்லன மரபு பெயரே
காரணம் காட்டிக் காரணப் பயன் கொளல்
காரணப் பெயரே காரணம் காட்டாது
அதன் பயன் கொள்வது ஆகுபெயரே
காரணம் காட்டினும் காரணப் பயன் கொளா
இடுகுறிப் பெயராம் என்ப கற்றோரே.

முன்நூற்பாவில் கூறிய மரபு காரணம் ஆக்கம் இடுகுறி என்ற நால்வகைப் பெயர்களுக்கும் இந்நூற்பாவில் விளக்கம் தந்துள்ளார். மரபு-வான், காய்; காரணம்-ஊரன், அறிஞன்; ஆகு பெயர்-புழுக்கல், கார்; இடுகுறி-மரம், நிலம்.

55 வேற்றுமைப் படுத்தலின் வேற்றுமையாம் இவை
பெயர் ஐ ஆல் கு இன் அது கண் விளி எட்டே.

இந்நூற்பாவில் வேற்றுமை எட்டுவகைப்படும் எனவும் பொருளை வேறுபடுத்துவதால் வேற்றுமை எனவும் கூறுகின்றார்.

56 எழுவாய் உருபாம் இயல்பின் பெயரே
மீண்டு அதன் பொருளாம் வினை பெயர் வினாவே;

எழுவாய்க்குத் தனி உருபு இல்லை. பெயர் தானே திரிபு இன்றி வினை, பெயர், வினவைக் கொள்ளுதல் இதன் பொருள்.

57 இரண்டாவதன் உருபு ஐயே அதன் பொருள்
ஆக்கல் அழித்தல் அடைதல் நீத்தல்
ஒத்தல் உடைமை ஆதி ஆகும்.

இரண்டாம் வேற்றுமை உருபு ஐ எனவும் அதற்குப்பொருள் ஆக்கல் அழித்தல் அடைதல் நீத்தல் ஒத்தல் உடைமை முதலியன எனவும் பேசுகின்றார். ஆக்கல்-நூலைக் கற்றான்; அழித்தல்-வினையை வென்றான்; அடைதல்-வீட்டை மேவினான்; நீத்தல்-ஆசையைத் துறந்தான்; ஒத்தல்-புலியைப் போன்றான்; உடைமை-பொறையையுடையான் முதலியன.

58 மூன்றாவதன் உருபு ஆல் ஆன் ஓடு ஒடு
கருவி கருத்தா உடனிகழ்வு அதன் பொருள்.

மூன்றும் வேற்றுமைக்கு உருபு ஆல் ஆன் ஓடு ஒடு என்னும் நான்குமாம். இதற்குப்பொருள் கருவிப் பொருளும் கருத்தாப் பொருளும் உடனிகழ்ச்சிப் பொருளுமாம். கருவி-கண்ணால் கண்டான், நாழியால் அளந்தான்; கருத்தா-அரசனால் கோயில் கட்டுவிக்கப்பட்டது, தச்சனால் ஆகிய கோயில்; உடனிகழ்வு-உலகத்தோடு ஒப்ப ஒழுகல், நூலொடு புகழ்.

59 நான்காவதற்கு உருபு ஆகும் குவ்வே
கொடை பகை நேர்ச்சி தகவு அதுவாதல்
பொருட்டு முறை ஆதியின் இதற்கு இது எனல்
பொருளே.

நான்காம் வேற்றுமைக்கு உருபு கு ஒன்றே யாகும். இதற்குப் பொருள் கொடை, பகை, நேர்ச்சி, தகவு, அதுவாதல், பொருட்டு, முறை முதலியனவாம். கொடை-புலவர்க்குப் பொன்னைக் கொடுத்தான்; பகை-மக்கட்குப் பகை வெகுளி; நேர்ச்சி-விளக்கிற்கு நெய்; தகவு-புலவர்க்கு உரித்தே புகழ்; அதுவாதல்-ஆடைக்கு நூல்; பொருட்டு-கூலிக்கு உழைத்தான்; முறை-எனக்குத்தாய்.

60 ஐந்தாவதன் உருபு இல்லும் இன்னும்
நீங்கல் ஒப்பு எல்லை ஏதுப் பொருளே.

ஐந்தாம் வேற்றுமைக்கு உருபு இல், இன் எனும் இரண்டாம். இது நீங்கல் ஒப்பு எல்லை ஏதுப்பொருள்களில் வரும். நீங்கல்-நிலையின் இழிந்த கடை; ஒப்பு-சூதின் வறுமை தருவதொன்றில்; எல்லை-மதுரையின் வடக்கு சிதம்பரம்; ஏது-அறிவிற் பெரியன்;

61 ஆறன் ஒருமைக்கு அதுவும் ஆதுவும்
பன்மைக்கு அவ்வும் உருபுஆம் பண்பு உறுப்பு
ஒன்றன் கூட்டம் பலவின் ஈட்டம்
திரிபின் ஆக்கம் சேர்ந்த தற்கிழமையும்
பிறிதின் கிழமையும் பேணுதல் பொருளே.

ஆறும் வேற்றுமைக்கு உருபு அது, ஆது, அ எனும் மூன்றுமாகும்; ஒருமைப் பெயர்க்கு அது, ஆது உருபாம்; பன்மைப் பெயர்க்குப் அ உருபாம். இதற்குப் பொருள், குணம், உறுப்பு, ஒருபொருள் திரட்சி, பலபொருள் திரட்சி, ஒன்று திரிந்து ஒன்றுதல் ஆகிய தற்கிழமை ஐந்தும், பிறதின் கிழமை மூன்றும் ஆகியனவாம். பண்பு — காக்கையது கருமை; உறுப்பு — யானையது கோடு; ஒன்றன் கூட்டம் — நெல்லது குப்பை; பலவின் ஈட்டம் — பறவைகளது கூட்டம்; திரிபின் ஆக்கம் — நெல்லினது பொரி; பிறிதின் கிழமை - சாத்தனது ஆடை, சாத்தனது வீடு, மன்மதனது வேனில்.

62 ஏழன் உருபு கண் ஆதி ஆகும்
பொருள் முதல் ஆறும் ஓர்இரு கிழமையின்
இடன்ஆய் நிற்றலின் இதன் பொருள் என்ப.

ஏழாம் வேற்றுமைக்கு உருபு கண் முதலிய பல. பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் இவை தற்கிழமை பிறிதின் கிழமைப் பொருளில் வரும். மணியின்கண் ஒளி, நல்லாரிடைப் புக்கு, கடல்வாய் அமுது, கைவலத்துள்ளது கொடுக்கும், எயிற்புடை நின்றான், காதலியின் சென்றதம்ம, கல்லலைச் சுனைநீர், அவனுழை வந்தான், உயிர்ப்புறத் திறுத்த மருண்மாலை, சொற்பல்லாரகத்து — இவை போன்று பல உருபுகள் தற்கிழமையிலும் பிறிதின் கிழமையிலும் வரும் என்க.

63 அதனோடு ஐம் மூதல் ஆறும் ஏற்கும்.

அது என்பது ஆறும் வேற்றுமைக்கு உருபு எனினும், அதுவே முதற்பெயரோடு கூடி (அன் சாரியை பெற்று) ஐ முதல் கண் வரையுள்ள ஆறு உருபும் பெற்றும் வரும். சாத்தனதனை, சாத்தனதனால் முதலியன.

64 ஐ ஆன் குச் செய்யுட்கு அவ்வும் ஆகும்
ஆகா அஃறிணைக்கு ஆன் அல்லாதன.

செய்யுளிடத்துச் சில வேற்றுமை உருபு திரிவதைப் பற்றி இந்நூற்பாவில் கூறுகின்றார். ஐ ஆன் கு எனும் உருபுகள் செய்யுளில் அகரமாகத் திரியும் என்க. அஃறிணைக்கண் ஆன் அல்லாதன

திரியா. காவலோனைக் களிறஞ்சும் > காவலோனக் களிறஞ்சும்; புலவரா னுரைத்த நூல் > புலவரான வுரைத்தநூல்; ஆசிரி யற்கு > ஆசிரியற்க.

65 உவ் ஈறு வினாச் சுட்டு எண் இவை வேற்றுமை
வழி அன் சாரியை மருவவும் பெறுமே
அற்று உறும் பன்மையாம் வினாச் சுட்டு என்ப
அவ் இறும் அஃறிணைப் பன்மைக்கு அற்றே.

உகர ஈற்று வினா, சுட்டு, எண் இவை வேற்றுமை ஏற்கும்போது அன் சாரியை பெறும். பன்மைக்கு அற்றுச்சாரியை வினா, சுட்டு என்பனவற்றில் வரும். அஃறிணைப் பன்மைக்கு அற்றுச் சாரியை யாகும். யாதனை — யாவற்றை; அதனை — அவற்றை; ஒன்றனை; சிலவற்றை.

66 எல்லாம் என்பது இழிதிணை ஆயின்
அற்றோடு உருபின் மேல் உம் உறுமே
அன்றேல் நம் இடை அடைந்து அற்று ஆகும்
எல்லாரும் எல்லீரும் என்பவற்று உம்மை
தள்ளி நிரலே தம் நும் சாரப்
புல்லும் உருபின் பின்னர் உம்மே.

அஃறிணையில் எல்லாம் எனும் சொல் அற்றுச் சாரியையும் உருபின் மேல் உம்மையும் பெறும். உயர்திணையில் வரின் இடையே நம் சாரியையும் உருபின் மேல் உம்மும் பெறும். எல்லாரும் எல்லீரும் என்ற சொற்களின் உம்மை, இடையில் தம் நும் சார உருபின் பின் உம் பெறும். எல்லாவற்றையும்; எல்லாநம்மையும்; எல்லார் தம்மையும் ; எல்லீர் நும்மையும்.

67 ஆ மா கோ னவ் அணையவும் பெறுமே.

ஆ, மா, கோ என்ற மூன்று சொற்களும் வேற்றுமை உருபு ஏற்கு முன்பு னகரச் சாரியை பெறும். அணையவும் என்ற உம்மையால் பெறுதும் வரும். ஆ + ஐ > ஆனை, ஆவை; மா + ஐ > மானை, மாவை; கோ + ஐ > கோனை, கோவை.

68 தான் தாம் நாம் முதல் குறுகும் யான் யாம்
நீ நீர் என் எம் நின் நும் ஆம் பிற
குவ்வின் அவ் வரும் நான்கு ஆறு இரட்டா.

தான், தாம், நாம் ஆகியன வேற்றுமை ஏற்கும்போது முதல் குறுகி தன் தம் நம் ஆகும். யான், யாம், நீ, நீர் என்பன அவ்வாறே என், எம், நின், நும் என மாறும். கு எனும் நான்காம் வேற்றுமை

வரும்போது அகரச் சாரியை பெற்றுக் ககரம் இரட்டும் — தனக்கு, எனக்கு. நான்கு, ஆறு வேற்றுமை தவிரப் பிறவிடத்து மேற் சொற்களின் ஈற்று மெய் இரட்டும் — தம்மை, நின்னால்.

69 எட்டன் உருபே எய்து பெயர் ஈற்றின்
திரிபு குன்றல் மிகுதல் இயல்பு அயல்
திரிபும் ஆம் பொருள் படர்க்கையோரைத்
தன் முகமாகத் தான் அழைப்பதுவே.

எட்டாம் வேற்றுமைக்கு உருபு, விளி ஏற்கும் பெயரின் ஈறு திரிதல், குன்றல், மிகுதல், இயல்பாதல் என்பனவும் ஈற்றயல் திரிபுமாம். இவ் வேற்றுமையின் பொருள், படர்க்கையோரைத் தன்முகமாக அழைப்பது. திரிதல் - நம்பி > நம்பீ; குன்றல் - ஐயன் > ஐய; மிகுதல் — மன்னன் > மன்னனே; இயல்பு - நம்பி வாராய்; அயல் திரிபு — ஊரர் > ஊரீர், கண்ணன் > கண்ணா முதலியன.

70 எப் பெயர்க் கண்ணும் இயல்பும் ஏயும்
இகர நீட்சியும் உருபு ஆம் மன்னே.

உயர்திணை, அஃறிணை, பொது ஆகிய எல்லாப் பெயர்க்கும் விளியுருபு இயல்பும், ஏகாரம் பெறலும், இகரம் நீளலும் ஆகி வரும். உயர்திணை: நம்பி, சேய் > சேயே, தோழி > தோழீ; அஃறிணை: கிளி, கிளியே, கிளீ; பொதுப் பெயர் : தாய், தாயே, சாத்தி > சாத்தீ.

71 ஐ இறு பொதுப்பெயர்க்கு ஆயும் ஆவும்
உருபு ஆம் அல்லவற்று ஆயும் ஆகும்.

ஐகார ஈற்றுப் பெயரில், பொதுப்பெயர்க்கு ஆய், ஆ என்பன விளி உருபுகள். பிற உயர்திணை அஃறிணைக்கு ஆய்வரும். அன்னை > அன்னாய், அன்னா; நங்கை > நங்காய்.

72 ஒருசார் னவ் ஈற்று உயர்திணைப் பெயர்க்கண்
அளபு ஈறுஅழிவு அயல்நீட்சி அதனோடு
ஈறு போதல் அவற்றோடு ஓ உறல்
ஈறு அழிந்து ஓவரல் இறுதி யவ் ஆதல்
அதனோடு அயல் திரிந்து ஏ உறல் ஈறு அழிந்து
அயல் ஏ ஆதலும் விளி உருபு ஆகும்.

னகர ஈற்று உயர்திணைப் பெயர் பெறும் விளி உருபுகள் இங்குத் தொகுக்கப்படுகின்றன. அளபு : பெருமான் > பெருமாஅன்; ஈறழிவு : இறைவன் > இறைவ; அயல் நீட்சி: ஐயன் > ஐயான்; அயல் நீண்டு ஈறு கெடல் : மன்னன் > மன்னா; ஈறுகெட்டு அயல்

நீண்டு ஓகாரம் மிகல்: நண்பன் > நண்பாவோ; ஈறு கெட்டு ஓகாரம் மிகல்:பெருமான்>பெருமாவோ; ஈறுயக ரமாதல்; மலையான் > மலையாய்; ஈறு யகரமாய் ஈற்றயல் திரிந்து ஏகாரம் உறல்: லான் > வாயிலோயே; ஈறு அழிந்து ஈற்றயல் ஏ ஆதல்: முருகன் வாயி > முருகே.

73 ளஃகான் உயர் பெயர்க்கு அளபு ஈறுஅழிவு அயல்
நீட்சி இறுதி யவ் ஒற்று ஆதல்
அயலில அகரம் ஏ ஆதலும் விளித்து அனு

ளகர ஈற்று உயர்திணைப் பெயர் பெறும் விளியுருபுகள் இந்நூற்பாவில் கூறப்படுகின்றன. அளபு — வேள் > வேஎள்; ஈறு அழிவு — கண்ணுள் > கண்ணு; ஈற்றயல் நீளல் — மக்கள் > மக்காள்; ஈற்றொற்று 'ய்' ஆதல் — குழலாள் > குழலாய்; ஈற்றயல் அகரம் ஏ ஆதல் — அடிகள் > அடிகேள்.

74 ரவ் ஈற்று உயர் பெயர்க்கு அளபு எழல் ஈற்று அயல்
அகரம் இ ஈ ஆதல் ஆண்டை
ஆ ஈ ஆதல் அதனோடு ஏ உறல்
ஈற்று ஏ மிக்கு அயல் யாக்கெட்டு அதன் அயல்
நீடல் ஈர் உறல் இவையும் ஈண்டு உருபே.

ரகர ஈற்று உயர்திணைப் பெயர் விளி ஏற்கும் உருபுகள் கூறப்படுகின்றன. அளபு எழல் — ஊரார் > ஊஉரார்; ஈற்றயல் அகரம் இகர ஈகாரமாதல் — வேந்தர் > வேந்திர், வேந்தீர்; ஈற்றயல் ஆகாரம் ஈகாரமாதல் — பார்ப்பார் > பார்ப்பீர்; ஈற்றயல் ஆகாரம் ஈகாரமாய் ஏகாரம் ஆதல் — முனியார் > முனியீரே; ஈற்றயல் யா கெட்டு அதனயல் நீடல் — தோழியார் > தோழீரே; ஈர் உறல் — தமர் > தமரீர்.

75 லகார ஈற்று உயர் பெயர்க்கு அளபு அயல்நீட்சியும்
யகார ஈற்றிற்கு அளபும் ஆம் உருபே.

லகர யகர ஈற்றுச் சொற்கள் விளியேற்கும்போது பெறும் உருபுகள் இங்குத் தரப்படுகின்றன. லகரஈறு: அளபு — மால் > மாஅல்; அயல் நீட்சி — மடவரல் > மடவரால்: யகர ஈறு; அளபு — பூணாய் > பூணாஅய்.

76 னவ் ஈற்று உயர்திணை அல் இரு பெயர்க்கண்
இறுதி அழிவு அதனோடு அயல் நீட்சி.

னகர ஈற்றுப் பொது, அஃறிணைப் பெயர்கள், ஈறழிதல், அதனோடு ஈற்றயல் நீட்சியாகிய இருநிலையில் விளி ஏற்கும். சாத்தன் > சாத்த, சாத்தா; கலுழன் > கலுழ, கலுழா.

77 லள ஈற்று அஃறிணைப் பெயர்ப் பொதுப் பெயர்க் கண்
ஈற்று அயல் நீட்சியும் உருபு ஆகும்மே.

லகர ளகர ஈற்றுப் பொதுப்பெயர், அஃறிணைப் பெயர்க்கு உருபு உணர்த்துகின்றார். ஈற்றயல் நீட்சி — மக்கள் > மக்காள், முயல் > முயால்.

78 அண்மையின் இயல்பும் ஈறு அழிவும் சேய்மையின்
அளபும் புலம்பின் ஓவும் ஆகும்.

அண்மை விளிக்குப் பொதுவாக ஈறழிவும் வரும் சேய்மை விளிக்கு அளபெடை வரும். புலம்பி அழைக்குமிடத்து ஓகாரம் வரும். ஐயன், ஐய, ஐயாஅ, ஐயாவோ.

79 பலர்பால் ரவ்வும் கள்ளும் ஈறுமே.

உயர்திணைப் பன்மையாகிய பலர்பாலுக்கு ர், கள் என்பன ஈறும். பார்ப்பார், முனிகள்.

80 ஒன்று துவ் உறின் அ ன ஐயும்
பலவின் பால் ஈறும் கள் ஈறும் மற்று அவை
அன்றியும் இருமைக்கு அஃறிணைப் பொதுவே.

அஃறிணைப் பன்மையாகிய பலவின்பாலுக்கு ஈறு உணர்த்துகின்றார். ஒருமையில் து ஈறு பெற்றவை, பன்மைக்கண் அ, ன, ஐ எனும் ஈறு பெறும். எல்லா அஃறிணைப் பன்மையும் கள் ஈறு பெறும். ஒருமைக்கும் பன்மைக்கும் அஃறிணையில் பொதுவான சொற்களும் உள. அரியது > அரிய, அரியன, அரியவை. நிலம் > நிலங்கள். மரம் வளர்ந்தது > மரம் வளர்ந்தன.

81 ஒருமையில் பன்மையும் பன்மையின் ஒருமையும்
ஓர்இடம் பிறஇடம் தழுவலும் உளவே.

பால்வழுவமைதியும் இடவழுவமைதியும் கூறப்படுகின்றன. ஒருமைப்பாலில் பன்மைப்பால் வரல் - தீ எரிந்தன ; பன்மையில் ஒருமை வரல் - நாடெல்லாம் வாழ்ந்தது ; ஓரிடத்திற்குரிய பிற விடத்து வரல் - நீயோ அவனோ யாரிது செய்தார் ?

82 எப்பொருள் எச்சொலின் எவ்வாறு உணர்ந்தோர்
செப்பினர் அப்படி செப்புதல் மரபே.

முன்னோர் மரபைப் பின்பற்றிச் சொல்லும் பொருளும் வழங்கல் வேண்டும் .

பெயர் - பகுபதப் பெயரியல்

83 பகுபதம் ஒன்றாய்ப் பல ஒருங்கு உணர்த்தின்
பகாப்பதம் அவற்றுள் பகுதி என்ப.

ஒருமொழியாக நின்றே ஒருப்படப் பொருளை உணர்த்தும் பகுபதங்கட்குப் பகுதி விகுதி இடைநிலை சாரியை சந்தி விகாரம் இவ் ஆறு உறுப்பு உளவாம். பகுக்கப்பட்டுப் பகாப்பதமாய் முதல் நிற்பது பகுதி. இடை நிற்பது இடைநிலை. கடை நிற்பது விகுதியாம். நடந்தனன் > நட+த்+த்+அன்+அன் என அவ் ஐந்தும் பெற்றுச் சந்தியால் வந்த தகர வல்லொற்று மெல் லொற்று ஆதல் ஆகிய விகாரமும் பெற்று முடிந்தது.

84 அன் ஆன் அள் ஆள் அர் ஆர் து ஐ
அ பிறவும் ஐம்பால் பெயர்ப் பகுபத விகுதியே.

ஆண்பால் பெண்பால் பலர்பால் ஒன்றன்பால் ஆகிய ஐம்பால் பெயர்ப் பகுபதங்கட்கும் விகுதி உணர்த்துகின்றார்.

மலையன், மலையான், மலையள், மலையாள், மலையர், மலையார், மலையது, மலையவை, மலைய.

85 ந ஞ இடைப் பகுபதம் நண்ணலும் நெறியே.

ந, ஞ என்ற காலங்காட்டா, இடைநிலைகளோடு சொற்கள் நிலை பெறும் எனப் பேசுகின்றார். கிளைநர், அறிநர் ;கிளைஞர், அறிஞர்.

86 வடநடைப் பகுபதம் வர மொழி முதற்கண்
இஏ என ஐ ஔவும், ஊ ஓ என ஔவும்
அவ் என ஆவும் ஆம் ஐ இறின் ஈறுபோய்
ஏயன் ஈட்டு ஈன்ற எச்சமாம் உள பிற.

சில வடசொற்களைப் பிரிக்குங் காலத்து அவைகள் எவ்வாறு பகு பதங்கள் ஆகும் என்று உணர்த்துகின்றார். இகரம் ஐகாரமாகவும் ஔகாரமாகவும் திரியும். மிதிலையுள் பிறந்தாள் >மைதிலி ; கிரியில் பிறந்தாள் > கௌரி ; ஏகாரம் ஐயாகும் - வேதவழி நின்று ஒழுகுவார் > வைதிகர். ஊகார ஓகாரங்கள் ஔ ஆகும் - சூரன் என்னும் சூரியன் மகனும் சனி > சௌரி ; கோசலையில் பிறந்தாள் > கௌசலை. ஔகாரம் அவு எனவும் ஐகாரம் அயி எனலும் ஆகும். - கவுரி, சயிலம். மகன் எனும் பொருள்நிலை வரும்போது ஐ ஈறு போய் ஏயன் ஆகும். கார்த்திகையின் மகன் கார்த்திகேயன்.

87 எதிர்மறைப் பகுபதத்து இயைந்த மொழி முதல்
ஒற்றுஎனில் அவ்உம் உயிர்எனில் அன்உம்
இருமைக்கு ஆம் நிரு என வடநடையே.

எதிர்மறைப் பகுபதங்களில் எதிர்மறை முன் ஒட்டுக்களாக வரு மொழி ஒற்றாக இருந்தால் அகரமும் உயிராக இருப்பின் அன்னும் உயிருக்கும் மெய்க்கும் நிரு எனவும் அமையும். நீதி > அநீதி ; அங்கன் > அனங்கன் ; மலம் > நிருமலம்; ஆயுதம் > நிராயுதம்.

பெயர் - தொகைநிலைத் தொடர்மொழிப் பெயரியல்

88 தொகைநிலை என்ப தொடரும் பெயரொடு
வினை பெயர் புணர்புளி வேற்றுமை முதல் ஒழித்து
ஒருமொழிபோல் பல ஒன்றிய நெறியே.

பெயருடனே பெயரும், பெயருடனே வினையும் புணருமிடத்து வேற்றுமை முதலிய உருபுகள் தோன்றாது நிற்ப. இரண்டு சொல் பலசொல் தொடர்ந்த தன்மையால் ஒரு பெயர்ச்சொல் போலவும் ஒரு வினைச்சொல் போலவும் வழங்குவன தொகைநிலைத் தொடர் மொழிகள். பூண்மார்பன், மலையருவி, மாரிநாட்பயிர், கைம்மா, கருங்குவளை, கொடைக்கோமான்

89 தொகைநிலை வகைப்படின் தொகும் வேற்றுமை வினை
உவமை பண்பு உம்மையோடு அன்மொழி ஆறே.

தொகைநிலைத் தொடர்மொழி ஆறுவகைப்படும். வேற்றுமைத் தொகை - பொற்குடம் ; வினைத்தொகை - வாழ்குடி ; உவமைத் தொகை - மலர்க்கை ; பண்புத்தொகை - நறுமலர் ; உம்மைத் தொகை - இவனவன்; அன்மொழித்தொகை-பூங்குழல்.

90 தொகைநிலை விரித்துச் சொல்லுங்கால் எழு
வகைநிலை அளவும் வகுக்கப் படுமே.

தொகைநிலைத் தொடரை விரித்துச் சொல்லும் போது ஏழ்வகை நிலையளவும் விரித்துச் சொல்ல இயலும் எனப் பேசுகின்றார். இரண்டு முதல் ஏழுவரை உதாரணம் தருகின்றார்.'சொற்பொருள், என்பதில் சொல்லால் அறியப் படுகிற பொருள். சொல்லினது பொருள், சொல்லுக்குப் பொருள், சொல்லின்கட் பொருள், சொல்லும் பொருளும், சொல்லாகிய பொருள், சொல்லானது பொருள் என ஏழு பொருள் விரிந்தன.

91 தொகுபெயர் வேற்றுமைத் தொடர் பெயர் அன்ன
இயல் திரிபு அழிவு ஆக்கம் இயைந்தாம் தொகையே.

வேற்றுமைத் தொகைகளுள் இயல்பு, திரிபு, அழிவு, ஆக்கம் இவை இயைந்து வரும். இயல்பு - மணி கொடுத்தான் ; திரிபு - கற் கடாவினன்; அழிவு - திண்கொண்ட தோள் ; ஆக்கம் - பலாக் குறைத்தான்.

92 ஐ இறும் குணப்பெயர் ஆஃகி ஈறு ஒழிதல்
ஈறுபோய் உகரம் இடையில் இ ஆதல்
ஆதி நீடல் அடி அகரம் ஐ ஆதல்
தன் ஒற்று இரட்டல் முன்நின்ற மெய் திரிதல்
இனம மிகல் இனையவும் பண்பிற்கு இயல்பே.

குணப்பெயர்த் தொகைக்குச் சிறப்பு விதி கூறுகின்றார். பண்புச் சொற்களின் திரிபுகளை இங்கு பேசுகின்றார். ஈறுஒழிதல் - நன்மை > நல்லன் ; ஈறு போய் இடை உகரம் இ ஆதல் - கருமை > கரியன் ; ஈறு கெட்டு ஆதி நீடல் - பசுமை > பாசிலை ; அடி அகரம் ஐ ஆதல் பசுமை > பைங்கிளி; ஒற்றிரட்டல் - வெறுமை > வெற்றிலை; முன்நின்ற மெய்திரிதல்-செம்மை > சேதாம்பல்; இன மிகல்- பசுமை > பச்சை.

93 அடை சினை முதல்முறை அடைதலும் ஈர்அடை
முதலோடு ஆதலும் வழக்கு இயல் ஈர் அடை
சினையொடு செறிதலும் மயங்கலும் செய்யுட்கே.

செய்யுளில் அடைச்சொற்கள் வரும்போது மயங்கி அமையும். வழக்கிடத்தில் ஒன்றும் இரண்டும் அடை முதற் பொருளோடு வந்து அடுக்கவும், ஒன்றே சினைப் பொருளோடு வந்து அடுக்கவும் பெறும். சிறுபைந்தூவி - செய்யுள்; சிறு கருங்காக்கை, நெட்டிலைத் தெங்கு - வழக்கு.

94 ஓர்ஒரு ஈர்இரு மும்மூ நால் ஐ ஐம்
ஆறு அறு ஏழு எழு எண் என உயிர் உடல்
இயை முறைக்கு ஆகும் எண்ணின் தொகையே.

எண்ணுப் பெயர்கள் தொகையாக வரும்போது, வருமொழி உயிர் எழுத்து வரின் ஒரு அமைப்பையும் மெய்வரின் பிறிதொரு அமைப்பையும் பெறும் ஓராயிரம், ஒருபொருள் ; ஈராயிரம், இரு பொருள் ; முத்தமிழ். மூவொன்று ; நாலாயிரம் ; ஐயாயிரம், ஐம் மூன்று; ஆறாயிரம், அறுகழஞ்சு; ஏழாயிரம், எழுகடல்; எண்ணு யிரம், எண்கலம்.

95 ஒன்றுமுதல் ஈரைந்து ஆயிரம் கோடி
எண் நிறை அளவும் பிறவரின் பத்தின்
ஈற்று உயிர்மெய் கெடுத்து இன்னும் இற்றும்
ஏற்பது ஏற்கும் ஒன்பது இனைத்தே.

பத்து என்னும் எண்ணின் முன் ஏனைய எண்களும், நிறை, அளவு; ஏனைய பிற பெயர்களும் வரின், பத்தின் ஈற்று உயிர் மெய் கெட்டு இன் அல்லது இற்றுச் சாரியை ஏற்றுப் புணரும் ஒன்பதும் இவ்

வாறு புணரும் என்க. பத்து + ஒன்று > பதிஞென்று, பதிற் றென்று; பத்து + துலாம் > பதின்துலாம்; பத்து + கலம் > பதின்கலம்; ஒன்பது + ஆயிரம் > ஒன்பதிஞயிரம்.

96 ஒன்று முதல் எட்டு அளவு ஊர்ந்த பத்து ஒற்று
ஒழிதலும் ஆய்தம் உறழ்தலுமாம் பல
ஒன்றுடன் ஆன் ஆம் ஒன்பதும் இற்றே:

பத்து எனும் எண்ணினைத் தொடர்ந்து ஒன்று முதல் எட்டு வரை எண்கள் வரும்போது, பத்து என்பதன் ஒற்று அழிந்து பது என ஆதலும் ஆய்தம் அவ்விடத்து வந்து பஃது என ஆதலும் ஆம். இருபது; இருபஃது. பகரம் ஒன்றே நின்று ஆன் சாரியை யும் பெறும் - இருபான். ஒன்பதும் இவ்வாறு ஆன் பெறும் — ஒன்பான்.

97 ஒன்பது ஒழித்த எண் ஒன்பதும் இரட்டின்
முன்னது குறுகி மற்று ஓட உயிர் வரின்
வவ்வும் மெய்வரின் வந்தது மிகல் நெறி.

ஒன்பது தவிரப் பிற ஒன்பது எண்களும் தம்மொடு தாம் புணரும் போது, நிலைமொழியின் முதல் குறுகி, மற்றவை கெட்டு, உயிர் வரின் வகரம் இரட்டியும், மெய்வரின் வரும்மெய் இரட்டியும் வரும். ஒவ்வொன்று, பப்பத்து.

98 அளவின் தொகையாய் அளவொடு தொக்கு இயை
கலம் கலன் ஆகி ஏயும் மிகுமே
உரிவரின் நாழியின் ஈற்று உயிர்மெய் கெட
மருவும் டகரம் உரியின் வழியே
யகர உயிர்மெய்யாம் ஏற்பன வரினே.

அளவுப் பெயர்களின் புணர்ச்சிகள் சில கூறித் தொகையாமாறு உணர்த்துகின்ஞர். கலம் எனும் அளவு மற்ஞேர் அளவுப் பெயருடன் இணையும்போது கலன் என ஆகி ஏகாரம் மிகும் கலம் + குறுணி > கலனே குறுணி. நாழியினுடன் உரி வரும் போது, 'ழி' கெட்டு 'ட' ஆகி உரியுடன் இணையும். நாழி + உரி > நாடுரி. உரியின் முன் அளக்கப்படும் பொருள்வரின் யகர உயிர்மெய் வரும். உரி + வரகு > உரிய வரகு.

99 திசையொடு திசையும் பிறவும் சேரின்
நிலை ஈற்று உயிர்மெய் கவ்வொடு நீங்கலும்
றஃகான் ன ல ஆய்த் திரிதலும் ஆம் பிற.

திசைத் தொகையைக் கூறுகின்ஞர். திசையொடு திசை சேரின் ஈற்று உயிர் மெய்யும் ககர ஒற்றும் நீங்கும்; றகரம் னகர லகர

மாகத் திரியவும் பெறும். வடக்கு + கிழக்கு > வடகிழக்கு; தெற்கு + மேற்கு > தென்மேற்கு; மேற்கு + வடக்கு > மேல் வடக்கு.

### பெயர்-சுட்டு வினா

100 அ இ உம் முதல ஐம்பால் சுட்டே
ஒன்றன்பால் அவை ஆய்தம் இடை எனவும்
பலவின்பால் அவை அவ் ஈற்றனவும் ஆம்
இவைகீழ் மூஇனம் இயைபுளி முறையே
ஆய்தம் மெலி இயல்பு ஆகும் என்ப.

சுட்டுப் பெயர்கள் உணர்த்துகின்றார். அ,இ,உ என்பன ஐம்பாலிடத்தும் மொழிமுதல் வந்து சுட்டாகும். ஒன்றன்பாலில் சுட்டோடு இடையில் ஆய்தமும் வரும். பலவின்பால் சுட்டு வகர ஒற்றொடு வரும். வகர ஈற்றுச் சுட்டின் முன் வல்லினம் மெல்லினம் இடையினம் வரும்போது முறையே ஆய்தமாகவும் மெல்லினமாகவும் இயல்பாகவும் நிற்கும். அவன், இவர், உவை; அஃது; இவ். அவ்+சிறிய>அஃசிறிய; அவ்+நீடிய>அந்நீடிய; அவ்+வலிய >அவ்வலிய.

101 தொடர் அ இ உச் சுட்டெழுத்து என்ப
அவை வந்து அணைய அனைத்து மெய் இரட்டும்
உயிர்வரின் இரு வவ் இடை வரல் உரித்தாம்
எகர வினாவும் இந்நடை உடைத்தே.

சுட்டெழுத்துப் புணர்ச்சி உணர்த்துகின்றார். தொடர் மொழியில் புணரும்போது, வருமொழி ஒற்றாயின் இரட்டும்; வருமொழி உயிராயின் இரு வகரம் உறும். வினா எழுத்தாகிய எகரமும் இவ்வாறே புணரும். அ+நிலம்>அந்நிலம்; இ+அணி>இவ்வணி; எந்நிலம், எவ்வணி.

102 எ யா முதலும் ஆ ஓ ஈற்றும்
ஏ இரு வழியும் வினா ஆகும்மே
எவன் என் வினா வினைக் குறிப்பு இழி இருபால்.

வினா எழுத்தும் வினாப் பெயரும் உணர்த்துகின்றார். எ யா என்பன மொழி முதலிலும் ஆ ஓ என்பன ஈற்றிலும் ஏ இவ் இரு இடத்தும் வந்து வினாவாம். எவன், எக்கொற்றன், யார்; நீயா, நீயோ; ஏன், அவனே; எவன் என்னும் வினா வினைக்குறிப்பு அஃறிணையில் ஒருமை பன்மைக்கு வரும், அஃது எவன், அவை எவன்.

### வினைச் சொல்லியல்

103 வினைமுற்று ஒருமூன்று எச்சம் இரண்டு
வினைக்குறிப்பு என இவை வினையின் வகுப்பே.

இந் நூற்பாவுள் வினையின் வகைகளைக் கூறுகின்றார். இறப்பு எதிர்வு நிகழ்வு என முக்கால முற்று வினையும், ஏவல் முற்று வினையும், வியங்கோள் முற்று வினையும் என வினைமுற்று மூன்றும் பெயரெச்சம் வினையெச்சம் என எச்சங்கள் இரண்டும் வினைச் சொல் அல்லவாயினும் வினையைப்போல நடந்து குறிப்பினால் வினையியல் தொழிலைக் காட்டும் வினைக்குறிப்பு ஒன்றும் ஆகத் தெரிநிலைவினை குறிப்புவினை எனப் பொதுவகையால் இருவகைப்பட்டும், சிறப்பு வகையால் அறுவகைப்பட்டும் வினையின் பகுப்பு அமைந்துள்ளது. வந்தான், வருகின்றான், வருவான்; வா, வருக; வந்த, வந்து; நல்லன், நன்று, நல்ல.

104 பெயரே ஏற்றி மற்று ஒன்றனை வேண்டாது
ஏற்பது வினை வினைக்குறிப்பு முற்றே.

தெரிநிலை வினைமுற்றும், குறிப்பு வினைமுற்றும், பொருளிடம் காலம் சினை குணம் தொழில் என்னும் அறுவகைப் பெயரையும் பயனிலையாகக் கொண்டு முடியும் என்க. செய்தான் அவன்-தெரிநிலை; நல்லன் அவன்-குறிப்பு.

### வினைச்சொல்லியல்-முக்கால முற்றுவினை

105 பொழுதுகொள் வினை வினைப் பகுபதமே
பகுதி ஏவல் எனும் பகாப்பதம் ஆகும்
என் ஏன் எம் ஏம் ஓம் அம் ஆம் தன்மை
ஐ ஆய் இ இர் ஈர் முன்னிலை அன் ஆன்
அள் ஆள் அர் ஆர் உ அ படர்க்கை
வினையின் விகுதி மீண்டு உள பிறவும்
கள் எனப் பல ஒழி பன்மையின் மிகலுமாம்.

முக்கால முற்று வினைச் சொல்லெல்லாம் பகுபதமாம். அவற்றுள் முதலில் நிற்கும் நட, வா போன்ற ஏவல் வினைப் பகாப்பதங்களே பகுதிகளாம். ஏழு தன்மை விகுதிகளும் ஐந்து முன்னிலை விகுதிகளும் எட்டுப் படர்க்கை விகுதிகளையும் கூறி, கள் எனும் விகுதி பலர்பால் பன்மைக்கு வரும் எனத் தருகின்றது நூற்பா. வந்தனென், வந்தேன், வந்தனெம், வந்தேம், வந்தோம், வந்தனம், வந்தாம்; வந்தனை, வந்தாய், வந்தி, வந்தனிர், வந்தீர்; வந்தனன், வந்தான், வந்தனள், வந்தாள், வந்தனர், வந்தார், வந்தது, வந்தன; வந்தார்கள்.

106 அம் ஆம் என்பன முன்னிலையா ரையும்
எம் ஏம் ஓம் இவை படர்க்கையா ரையும்
உம் ஊர் க ட த ற இரு பாலாரையும்
தன்னோடு படுக்கும் தன்மைப் பன்மை.

சில விகுதிகள் மயங்கிவருமாறு உணர்த்துகின்றார். அம் ஆம் என்பன தன்மையுடன் முன்னிலையும் காட்டும். எம் ஏம் ஓம் என்பன தன்மையுடன் படர்க்கையும் காட்டுகின்றன. கும், டும், தும், றும் விகுதிகள் மூவிடமும் காட்டுகின்றன. யானும் நீயும் நடந்தனம், நடப்பாம், நடந்தோம்நடப்பாம்; யானும் அவனும் நடந்தனெம், நடந்தேம், நடந்தோம்; யானும் நீயும் அவனும் உண்கும், உண்டும், வருதும், சேரும்.

107 செய்யும் என் முற்றே சேரும் பலர் ஒழி
மற்றைப் படர்க்கையும் மற்று அதன் ஈற்றயல்
உயிரும் உயிர்மெய்யும் ஒழிந்தே அஃகலும்
பலவின்பால் கள் எனப் பற்றி மிகலுமாம்.

செய்யும் என்னும் முற்று பலர் ஒழிந்த ஏனைய நான்கு படர்க்கைக் கண்ணும் வரும். ஈற்றயல் உயிரும், சில விடங்களில் உயிர் மெய்யும் குறைந்து வருதலும், பலவின் பன்மைக்குக் கள் விகுதி ஏற்றலும் அமைகின்றன. அவன், அவள், அது, அவை—செய்யும், போலும் >போன்ம்; ஆகும்>ஆம்.

108 இறந்த காலத்து இடைநிலை தடற ஒற்று
இன்னே மூவிடத்து ஐம்பாற்கு ஏற்பன.

த, ட, ற ஒற்றும் இன் என்பதும் மூவிடத்திலும் ஐம்பாலுக்கு வரும் இறந்தகால இடைநிலைகளாம். நடந்தான், உண்டான், சென்றான், உறங்கினான்.

109 நிகழ் பொழுது ஆநின்று கின்று கிறு என
ஐம்பால் மூவிடத்து ஆம் இடைநிலையே.

ஆநின்று, கின்று, கிறு என்பன மூவிடத்திலும் ஐம்பாலுக்கு வரும் நிகழ்கால இடைநிலைகளாம். வாராநின்றான், வருகின்றான், வருகிறான்.

110 எதிர்வரும் காலத்து இடைநிலைப் பவ் வ
ஐம்பால் மூவிடத்து ஆம் இவை சில இல.

பகர வகரங்கள் ஐம்பால் மூவிடத்திற்கு எதிர்கால இடைநிலையாகவரும். வருவான், நடப்பான். இடைநிலைகள் இன்றியும் வரும்.

111 எதிர்கால விகுதியுள் ஒருமைத் தன்மை
குடு துறு என்னும் குற்றியலுகர மோடு
அல் அன் என் ஏன் ஆம் எண் ஈறே
பலர்பாற்கு ஆகும் ப மார் மரும் மனர்.

முக்கால வினைக்குப் பொதுவிதி உணர்த்துகின்றார். மேற்கூறிய எட்டு விகுதிகளும் எதிர்கால ஒருமைத் தன்மையாம். ப, மார், மரும், மனர் என்பன பன்மைப் படர்க்கையாம். யான்—உண்கு, கொடு, வருது, சேறு, நடப்பல், நடப்பன், நடப்பென், நடப்பேன்; சொல்லுப, நடமார், என்மரும், என்மனர்.

112 எதிர்மறைக்கு இடைநிலை இன்றி ஏன் ஏம் ஓம்
ஆய் ஈர் ஆன் ஆள் ஆர் ஆ ஆது அ
ஐம்பால் மூவிடத்து ஆகும் என்ப.

எதிர்மறை விகுதிகள் உணர்த்துகின்றார். எதிர்மறைக்கு இடைநிலை இல்லை. மேற்கூறிய பதினொரு விகுதிகள் ஏவல் பகுதியுடன் இணையும்போது எதிர்நிலைப் பொருள் தோன்றும். நடவேன், நடவேம், நடவோம்; நடவாய், நடவீர், நடவான், நடவாள், நடவார், நடவா, நடவாது.

### வினைச்சொல்லியல்-ஏவல் வியங்கோள்

113 ஏவல் ஒருமைக்கு இயலும் ஆய் தி மோ
ஏவல் பன்மைக்கு ஈர் தீர் மின் மினீர்
இருமைக்கு ஓரோ இடத்து ஆகும் குவ்வே.

ஏவல் விகுதிகள் உணர்த்துகின்றார். ஒருமைக்கு ஆய், தி, மோ என்பன வரும். உரையாய், உரைதி, உரைமோ. பன்மைக்கு ஈர், தீர், மின், மினீர் வரும்—உரையீர், அருள்தீர், உரைமின், கேண்மினீர். குகரம் ஒவ்வொரிடத்து ஒருமைக்கும் பன்மைக்கும் ஏவல் விகுதியாம்.

114 எதிர்மறை ஏவற்கு ஏலே அல்லே
அன்மோ அற்க ஆகும் ஒருமை
ஆமின் அன்மின் அற்பீர் பன்மை.

எதிர்மறை ஏவல் விகுதிகள் தருகின்றார். ஏல், அல், அன்மோ, அற்க ஆகியன ஒருமையில் வரும் - செய்யேல், செய்யல், செய்யன்மோ, செய்யற்க. பன்மைக்கு ஆமின், அன்மின், அற்பீர் என்பன வரும்—செய்யாமின், செய்யன்மின், செய்யற்பீர்.

115 ஈ தா கொடு எனும் மூன்றும் முறையே
இழிந்தோன் ஒப்போன் மிக்கோன் இரப்பு உரை.

ஏவல் மொழியில் ஒரு விகற்பம் உணர்த்துகின்றூர். ஈ என்பது இழிந்தோனும், தா என்பது ஒப்போனும், கொடு என்பது உயர்ந்தோனும் பயன்படுத்துவன-தந்தாய் ஈ, அன்பா தா, மைந்தா கொடு.

116 வியங்கோள் இயலும் விகுதிக் கவ்விய
யவ்வொடு ரவ் ஒற்றும் இவை எங்கும் ஏற்பன
வாழிய என்பதன் ஈற்றின் உயிர்மெய்
ஏகலும் உரித்து அஃது ஏகினும் இயல்பே.

வியங்கோள் விகுதிகள் தருகின்றூர். க,ய,ர் என்பன ஐம்பால் மூவிடத்திற்கும் பொது—வாழ்க, வாழிய, வாழியர். வாழிய என்பதன் ஈற்று யகரம் கெட்டு வாழி எனவும் வரும். அவ்வாறு வருமிடத்து வருமொழியில் வல்லினம் வரினும் இயல்பாம்—வாழி கொற்ரு.

வினைச்சொல்லியல்—ஈரெச்சம்

117 எச்சமே தொழில் பொழுது என்று இவை தோன்றி
இடம் பால் தோன்ருது எஞ்சிய வினை என
இவற்றுள் பெயர் சேர்ந்து இயலும் பெயரெச்சம்
வினையொடு புணர்வது வினையெச்சம்மே.

ஈரெச்சங்களை உணர்த்துகின்றது இந்நூற்பா. தொழிலும் காலமும் காட்டி, இடமும் பாலும் காட்டாது வருவன எச்சமாம். இவ் எச்சத்துள் பெயரைச் சேர்ந்து இயல்வன பெயரெச்சம்; வினை சேர்ந்து இயல்வன வினையெச்சம். உண்ட சாத்தன்; உண்டு போனுன்.

118 உம் ஈற்ற எச்சத்து ஈறும் ஈற்றயல்
உயிரும் உயிர்மெய்யும் ஒழிதலாம் செய்யுட்கு
உம் உந்து ஆதலும் ஒக்கும் என்ப.

பெயரெச்சத்திற்குச் சிறப்புவிதி உணர்த்துகின்றூர். உம் ஈற்றுப் பெயரெச்சத்தின் ஈற்று மகரமும் ஈற்றயல் உகரமும் யுகரமும் ஒவ்வோரிடத்துக் கெடுதல் உண்டு. செய்யும் தொழில், செய்யு தொழில், செய்தொழில். செய்யுளில் உம் ஈறு உந்து எனத் திரிதல் உண்டு. செய்யும்>செய்யுந்து.

119 வினையெச்சம் கொள் விகுதி இ உ
உவ்வோடு எனவும் ஊ பு ஆ இறப்பே
அ இரு கருத்தா அணையின் நிகழ்வே

ஒரு கருத்தாவும் ஓரிடத்து இரண்டும்
இயை அ அன்றி இல் இன் இய இயர்
வான் பான் பாக்கு வரும் பொழுது ஆம் பிற.

முக்கால வினையெச்சங்கள் உணர்த்துகின்றார். இறப்புக்கு இ, உ, என, ஊ, பு, ஆ என்பன வினையெச்ச விகுதியாம். ஆறி, செய்து, உண்டென, செய்யூ. செய்பு. காணா. நிகழ்வுக்கு அகரம் வரும். அங்கு இரு கருத்தா வரும் என்பது சிறப்பு விதி-மோப்பக் குழையும் அனிச்சம்; ஒரு கருத்தா வரும்போது அகரம் எதிர்கால வினையெச்ச விகுதியாம் - மோப்ப எடுத்தேன். அகரம் நிகழ்கால எதிர் காலங்கட்குப் பொதுவுமாம் - பொன்சுடரச் சுடும் தீ - எதிர்வு; தீச்சுடச் சுடரும் பொன் - நிகழ்வு. இது தவிர, எதிர்காலத்தில் வரும் ஏழு வினையெச்ச விகுதிகள் தருகின்றார்- செய்யில், செய்யின், செய்யிய, செய்யியர், உறங்குவான், உரைப்பான், வேபாக்கு.

120 என ஒழித்து ஒழிந்த இறப்பு எச்சத்தும்
வான் பான் பாக்கு என வரும் மூன்றற்கும்
ஏற்கும் ஒரு கருத்தா இரண்டும் பிறவே.

வினையெச்ச விகற்பம் உணர்த்துகின்றார். இ, உ, ஊ, பு, ஆ எனும் இறந்தகால வினையெச்சங்களும், வான், பான், பாக்கு எனும் எதிர் கால வினையெச்சங்களும், இன்னொரு வினையைக் கொண்டு முடியும் போது ஒரே கருத்தாவைப் பெறும். பிற விகுதிகள் இரு கருத்தா பெறும். ஆடிப் பாடினான்-ஒரு கருத்தா (இ). மோப்பக் குழையும் அனிச்சம்- இரு கருத்தா (அ).

121 எதிர்மறை எச்சத்து இயலும் விகுதி
ஆமல் ஆது ஆமை ஆ என நான்கே.

எதிர்மறை வினையெச்ச விகுதிகளாக நான்கு தரப்படுகின்றன. செய்யாமல், செய்யாது, செய்யாமை, செய்யா.

122 வரல் தரல் மூவிடம் மருவுதற்கு உரிய
செலல் கொடை சேரும் படர்க்கை ஒன்றே.

இடம் வழுவாமல் காத்தற்கு இந்நூற்பா தருகின்றார். வரல் தரல் என்பன மூவிடத்திற்கும் வர, செலல் கொடை என்பன படர்க்கைக்கு மட்டுமே வரும். எனக்கு, நினக்கு, அவனுக்கு - வந்தது; தந்தான். அவனிடத்துச் சென்றான்; அவனுக்குக் கொடுத் தான்.

### வினைச்சொல்லியல் - வினைக்குறிப்பு

123 வினைக்குறிப்பு என்ப வினைபோல் விகுதி
பெற்று இடம் பாற்கும் பெயர்ப் பகுபதமே.

வினைக் குறிப்பு விளக்கப்படுகின்றது. வினைக்குறிப்பு வினை போன்று விகுதி பெற்று இடம் பால் உணர்த்தும். அதன் பகுபதப் பகுதி பெயராக அமையும். பூணினேன், பூணினேம், பூணினை, பூணினீர், பூணினான், பூணினாள், பூணினார், பூணிற்று, பூணின.

124 வினைக்குறிப்பு ஒன்றன்பால் விகுதி துவ் இஃதே
வலி மிகத் து று டு ஆம் ஐ ர யவ்வும் அல்
இன்னும் ளவும் முறை ஈற்ற பெயர்க்கே
அவ் இறும் எல்லாம் பலவின் பாற்கே.

வினைக்குறிப்புக்குச் சிறப்பு விதி உணர்த்துகின்றார். ஒன்றன் பாலுக்குத் துகரமும் பலவின் பாற்கு அகரமும் விகுதியாம் - பெரிது; பெரிய. ஒன்றன்பால் விகுதியான து, வலிமிக்கு று, டு ஆதல் உண்டு - தீமைத்து, கடற்று, நாட்டு. ஐ, ய், ர் ஈற்ற பெயர்கள் வினைக்குறிப்பு ஆகும்போது, துகரத்தின் முன் மெய் இரட்டும் - உடை>உடைத்து ;மெய்>மெய்த்து ; பெயர்>பெயர்த்து. ல, ன, ள என்பனவற்றின் கீழ் துகரம் வரும்போதும் லன றகரமாகவும் ள டகரமாகவும் திரிதல் உண்டு;கடல்>கடற்று, வில்லினன்>வில்லிற்று, நாள்>நாட்டு.

125 வினைக்குறிப்பு எஞ்சி ஈற்று அகரம் பொதுவே.

வினைக்குறிப்பெச்சம் உணர்த்துகின்றார். இதற்கு அகரம் விகுதியாம். நின்குணம் அரிய ; இம்மலர் சுனைய.

126 அன்மை வினைக்குறிப்பு அணையும் தெரி பொருள்
அன்று மேல் அது வரின் ஆன்று ஆம் தூக்கின்
இன்றி அன்றி என்று எஞ்சும் இ யாப்பின்
உவ்வும் ஆம் ஆயின் உறுவலி இயல்பே.

சில வினைக்குறிப்புக்கு விகற்பம் உணர்த்துகின்றார். அன்மைப் பொருள் வரும்போது, தெரிபொருளின் பாலும் இடமும் சார்ந்து வரும். மான் அல்லன் மகன். அன்றின் மேல் அது வரின் செய்யுளிடத்து ஆன்று ஆகும் - அது+அன்று > அதான்று. இன்றி, அன்றி என்பனவற்றின் இகரம் செய்யுளிடத்து உகரமாகவும் திரியும். அவண் வல்லினம் வரினும், புணர்ச்சி இயல்பாகவே அமையும் : நாளன்று போகி, உப்பின்று புற்கை.

127 வழுவாம் உரிமை மயங்கிக் கெடின் அவை
இடம் பால் திணை பொழுது இறை வினா மரபு ஏழே.

எழுவகை வழுக் கூறுகின்றார். உரிய இயல்பு கெடும்படி மயங்கி வருவது வழு. இடவழு - நீ வந்தான் ; பால் - அவன் வந்தாள் ; திணை - அது வந்தான் ;பொழுது - நாளை வந்தான் ; இறை - திருக் காவலூர்க்கு வழி எது என்பார்க்கு மருக்கா அலர்ந்தது காண் என்பது; வினா-கறக்கின்ற எருமை பாலோ சினையோ ? மரபு-யானை மேய்ப்பானை இடையன் எனல்.

128 ஐயம் திணை பால் அணையும் பொதுவே.

திணை, பால் ஆகியவற்றில் ஐயம் ஏற்படின், அவை பொது மொழியால் முடியும். குற்றியோ மகனோ அவ்வுரு-திணை; ஆண் மகனோ பெண்மகளோ அங்ஙனம் தோன்றுகின்றவர் - பால்.

129 சிறப்பு அணி நடையால் திணை சினை முதல்கள்
பிறழ்தலும் பிறவும் பேணுதல் நெறியே.

அணியின்கண், திணையும், சினை முதல்களும் மயங்கிவரினும் ஏற்றுக் கொள்வர் - அரசனுக்குத் தம்பியர் இருவரும் இரண்டு தோள்கள்; கயல் போலுங் கண்.

இடைச்சொல்லியல்

130 இடைச்சொல் தனிநிலை இன்றி முன்பின்
வினை பெயர் சேர்ந்து வேற்றுமை சாரியை
வினை ஒப்பு உருபுகளும் விளங்கு தம் பொருளவும்
இசை நிறைப்பனவும் அசை நிறைப்பனவும்
குறிப்பும் என எண் கூற்றவை என்ப.

இடைச்சொல்லின் இயல்பும் வகைகளும் விளக்குகின்றார். தனியே நிற்றல் இன்றி, முன்னும் பின்னும் வினையோ பெயரோ சேர்ந்து வருவது இடைச்சொல்.இது எண்வகைப்படும். வேற்றுமை உருபு, சாரியை, வினைவிகுதிகள், உவமை உருபு, தம் பொருள் விளக்கும் ஏ, ஓ முதலிய சொற்கள் மியா போன்று அசை நிறைப் பனவும், ஏ, ஓ போன்று இசை நிறைப்பனவும், ஒல்லென போன்ற குறிப்பும் ஆக அவை எட்டாம்.

131 ஏ என் இடைச்சொல் ஈற்று அசை தேற்றம் எண்
வினாப் பிரிநிலை இசைநிறை என ஆறே.

ஏகார இடைச்சொல்லுக்கு ஆறு பொருளாம் ஈற்றசை-ஒளித்ததே; தேற்றம் - பொழிவார் மேற்றே புகழ் ; எண் - நிலனே நீரே ;

வினு - நீயே தந்தாய் ? ; பிரிநிலை - அவனே தந்தான் ; இசை நிறை - ஏயே இவளொருத்தி பேடி.

132 ஓ பிரிப்பு அசைநிலை ஒழிவு எதிர்மறை வினுத்
தெளிவு கழிவு சிறப்பு என எட்டே.

ஓகார இடைச்சொல்லுக்குப் பொருள் எட்டு. பிரிநிலை - அவனே செய்தான் ; அசைநிலை - பழியோ வருந்துதும் யாமே ; ஒழியிசை - கொளலோ கொண்டான் ; எதிர்மறை - யானே சொன்னேன் ; வினு - அவனே அல்லனே ; தெளிவு - நன்றே வன்று ; கழிவு - நல்லறம் செய்கின்றிலோ உயிர் உய்யும் ; சிறப்பு - ஓஓ பெரியன்.

133 என என்பது உவமை எண் குணம் வினை பெயர்
இசைக் குறிப்பு இயலும் என்றும் இனைத்தே.

என, என்று எனும் இடைச்சொற்கள் ஏழிடத்து வரப் பெறும். உவமை - புலி எனப் பாய்ந்தான், கார் என்று பொழிந்தான். எண் - கடலெனக் காலென, கல்லென்று முள்ளென்று. குணம் - வெள்ளென வெளிர்த்தது, வெள்ளென்று வெளிர்த்தது. வினை - கொள்ளெனக் கொண்டான், கொள்ளென்று கொண்டான்; பெயர் - ஊரெனப்படுவது, ஊரென்று சொல்லப்படுவது உறையூர்; இசை - ஒல்லென, ஒல்லென்று ஒலித்தது. குறிப்பு - விண்ணென, விண்ணென்று இசைத்தது.

134 உம்மையே எதிர்மறை எச்சம் முற்று அளவை
சிறப்பு ஐயம் ஆக்கம் தெளிவு என எட்டே.

உம் எனும் அடைச்சொற்கு எட்டுப்பொருள் உரியன. எதிர் மறை - வருதலும் தீது ; எச்சம் - சாத்தனும் வந்தான் ; முற்று- மூவேந்தரும் வந்தார் ; அளவு (எண்)-ஒன்று மிரண்டும் சிறப்பு - குறவரும் மருளும் குன்றம் ; ஐயம் - பத்தும் எட்டும்; ஆக்கம் - புலியினுங் கொடியன் ; தெளிவு - ஆணுமன்று பெண்ணுமன்று.

135 வரைப்படும் எண்ணும் வையகத்து இலவும்
வினைப்படின் உம்மை வேண்டும செவ்வெண்
ஈற்றின் வேண்டும் எச்ச உம்மையே.

உம்மையாகிய இடைச் சொல்லுக்குச் சிறப்புவிதி உணர்த்துகின்றார். இத்தனை என வரையறுத்து மொழியப்பட்ட எண்ணும், உலகத்து இல்லாப் பொருளும் வினையொடு கூடிச் சொல்லப்படும் போது உம்மை பெறும் - கண் இரண்டும் சிவந்தன, அங்கைக்கும் மயிர் இல்லை. வினைப்படாத விடத்து உம்மை பெற்றும் பெறுதும் வரும் - இவை இரண்டும் பசு, அறம் இரண்டு. எண்காட்டும் உருபின்றிச் செவ்வெண்ணுகைப் பலவற்றைத் தரும்போது ஈற்றில்

உம்மை வரல் வேண்டும் - அடகு புலால் பாகு பாளிதமும் உண்ணுன்.

136 எண்வகை எட்டனுள் ஏ செவ்வெண் என்ரு
எனு நான்கும் தொகை பெறும் என்று என ஓடு
உம்மை
நான்கும் தொகாமை நடக்கவும் பெறுமே
என்று என ஒடு மூன்றும் எஞ்சு இடத்தனவும் ஆம்.

எண்ணிற்குரிய இடைச்சொல் உணர்த்துகிருர். உருபின்றி வரும் செவ்வெண், ஏ, என்ரு. எனு என்னும் நான்கும் ஈற்றில் எண்ணின் தொகை பெற்றுவரும் — சாத்தன் கொற்றன் இருவரும் வந்தார். என்று, என, ஒடு, உம் என்னும் நான்கும் ஈற்றில் எண் தொகை பெற்றும் பெருதும் வரும் — நிலனும் நீரும் இரண்டும் வேண்டும்; நிலனும் நீரும் தீயும் நல்ல. என்று, என, ஒடு எனும் இடைகள், எண்ணும்போது ஓரிடத்தில் நின்ருலும், பிற இடங்களிலும் சென்று விளக்கும் - வினை பகை என்று இரண்டின் எச்சம் — வினையென்று, பகையென்று.

137 அத்து அந்தில் அன்று அம்ம ஆங்கு அரோ ஆம் ஆல்
இட்டு இகும் குரை கா இருந்து இன்று ஒரும்
சின் தம தான் நின்று தில் பிற பிறக்கு
மன் மா மன்னே மாது யா மாதோ
போலும் போம் எனப் பொது அசை முப்பதே
இத்தை அத்தை யாழ் இக மதி மான் ஆர்
மோ மியா வாழிய முன்னிலை அசை பத்தே.

ஐம்பால் மூவிடத்திற்குரிய பொது அசை முப்பதும், முன்னிலை அசை பத்தும் தருகின்ருர். நிலத்து இயல்பு, சேழிழை அந்தில் கொழுநற் காணிய, அகடுகின்ஞெழுகிய தன்றே, அம்மவாழி தோழி, ஆங்கத் திறனல்ல, குயில் ஆலுமரோ, பணியுமா மென்றும் பெருமை, ஆரமொத்துளதால், பிளந்திட்டான், காண்டிகும், பலகுரைத் துன்பம், இவட்காண்டிகா, எழுந்திருந்தேன், சேர்து மின்றே, அஞ்சுவ தோருமறனே, என்றிசின், அவர்தம்பால், நீதான், துணையாய் நின்ருன், அறிகதில் அம்ம இவ் ஊரே, ஆயனையல்ல பிற, நசை பிறக்கொழிய, கூறியதோர் வாண மன், உண்கமா, புகலுமன்னே, ஆடுமாதோ, யா பன்னிருவர் மாணுக்கர் அகத்தியற்கு, வருந்தினை போலும்,வாழாதென்போம்; நீயொன்று பாடித்தை, குறுமகளுள்ளிச் செல்வத்தை; செலவுயர்தியாழ்,

தண்டுறையூர் காணிக, சென்மதிபெரும, மொழிமான் புலவ, அகத்தியனுர், கண்டது மொழிமோ, சென்மியா, வாழிவாழிய.

உரிச்சொல்லியல்

138 உரிச்சொல் என்ப உரிய பற் குண சொல்
ஆகிப் பெயர் வினை அணைந்து வருமே.

உரிச்சொல் இயல்பு விளக்கப்படுகின்றது. பல குணங்கட்கு உரிய சொல் உரிச்சொல். இவை பெயரையும் வினையையும் சார்ந்து வரும்.

139 அறிவு அருள் ஆசை அச்சம் மானம்
நிறை பொறை ஓர்ப்புக் கடைப்பிடி மையல்
நினைவு வெறுப்பு உவப்பு இரக்கம நாண் வெகுளி
துணிவு அழுக்காறு அன்பு எளிமை எய்த்தல்
துன்பம் இன்பம் இளமை மூப்பு இகல்
வென்றி பொச்சாப்பு ஊக்கம் மறம் மதம்
மறவி இனைய உடல் கொள் உயிர்க் குணம்
துய்த்தல் துஞ்சல் தொழுதல் அணிதல் உய்த்தல் ஆதி
உடல் உயிர்த் தொழில் குணம்

உடலைக் கொண்டுள்ள உயிரின் குணமாக முப்பத்திரண்டும் தொழிலாக ஐந்தும் பிறவும் அமையும் எனப் பட்டியல் தரப்படுகின்றது.

140 பல்வகை வடிவு இரு நாற்றம் ஐ வண்ணம்
அறுசுவை ஊறு எட்டு உயிர்அல் பொருள் குணம்.

உயிரில்லாத பொருட்களின் குணம் இங்கு உணர்த்தப்படுகின்றது. சதுரம் வட்டம் போன்ற வடிவு; மணம் நாற்றம்; வெண்மை, செம்மை, பொன்மை கருமை, பசுமை, எனும் வண்ணம்; கைப்பு, புளிப்பு, துவர்ப்பு, உவர்ப்பு தித்திப்பு, கார்ப்பு என அறு சுவை; வெம்மை, தண்மை. மென்மை, வன்மை, நொய்மை, சீர்மை, இழுமெனல், சருச்சரை எனும் எட்டு ஊறுகளும் உயிரில் பொருட் பண்பாம்.

141 தோன்றல் மறைதல் வளர்தல் சுருங்கல்
நீங்கல் அடைதல் நடுங்கல் இசைத்தல்
ஈதல் இன்னன இருபொருள் தொழிற்குணம்.

உயிருள்ளவற்றிற்கும் உயிரில் பொருட்கும் பொதுவான தொழிற் குணம் உணர்த்துகின்றுர். தோன்றல் முதலிய ஒன்பது குணங்

களும் இப்பாற்பட்டன — மனிதன் தோன்றினன், கதிர் தோன்றியது; அவன் பொருள் ஈந்தான், மரம் கனி யீந்தது போன்றன.

142 இருதிணை மூஇடம் நான்மொழி ஐம்பால்
அறு தொகை எழுவழு உருபுகள் எட்டே
தொகாநிலை ஒன்பதும் தொகைநிலை ஆறும்
முப்பொழுது இருசொல் ஆகு பெயரே
பகுபதம் சுட்டு வினவே வினையின்
மூவகை முற்றும் இருவகை எச்சமும்
வினைக்குறிப்பு இடை உரி விதித்து இவை முத்தமிழ்
மொழி எனத் தெளிந்த முன்னோர்
வழி இவண் விளக்கிய வண் சொல் தொகையே.

சொல்லதிகாரத்து இது வரை கூறப்பட்ட பொருண்மைகள் இங்குத் தொகுத்துச் சொல்லப்படுகின்றன. அதிகாரம் தோறும் இவ்வாறு கூறல் ஆசிரியர் மரபாகத் தெரிகின்றது.

## பொருளதிகாரம்

143 மெய்ப்பொருள் பகாப்பொருள் வேதமுதற்பொருள்
அப்பொருள் அகத்து அணிந்து அறைகுவல்
பொருளே.

கடவுள் வாழ்த்துத் தருகின்றார். இப் பூவுலக மாயையுட்படாது எக்காலத்தும் தவிரா மெய்ப் பொருளாகவும் கலப்புமின்றி பிரிப்புமின்றி நலமெலாம் ஒன்றெனை இயல்பாகக் கொண்டு பகாப் பொருளாகவும் வேதநூலைத் தந்த முதல்வனாகவும், வேதநூலால் அடையப்படும் முதற்பொருளேயாகவும் நிற்கும். அப்பொருளாகிய மெய்யாம் கடவுளை மன அணியாக ஏத்திப் பொருளது இலக்கணத்தைக் கூறுதும் — இது பொழிப்பு.

144 பொருள் நூல் என்பது புகல் பொருள் நுதலிய
உரிப்பயன் படுத்துமாறு உணர்த்தும் நூலே.

பொருள்நூல் என்பது என்ன என விளக்கப்படுகின்றது. பொருள்நூல் என்பது, தான் விரித்து உரைப்பதற்கு எடுத்த பொருளைப் பயன்படக் கூறும்படியைக் காட்டும் நூலாம்.

145 வழக்கு தேற்றம் தோற்றம் என இம்
மூவகைப் படுமாம் மொழியும் பொருளே.

பொருட் கூறுபாடு உணர்த்துகின்றார். வழக்கு, தேற்றம், தோற்றம் எனக் கூறப்படும் பொருள் மூவகைப்படும்.

146 நீதி வழங்கலும் நிலைபெறத் துணிதலும்
தீதுஎன நன்று எனத் தெளிதலும் இவை வழக்கு
ஆதி முப்பொருட்கு ஆகும் பயனே.

மேற்கூறிய முப்பொருளும் கூறுவதால் ஏற்படும் பயன்களை உணர்த்துகின்றார். நீதி தன் முறை வழங்கல் வழக்கின் கருத்தும், ஐயம் தீர்ந்து ஒன்றில் துணிதல் தேற்றக் கருத்தும், தீயவும் நல்லவும் விளக்கல். தோற்றக் கருத்தும் ஆம்.

பதிகம்

147 பதிகம் காரணம் பாவும் தொகை துணிவு
ஐந்தும் எல்லாப் பொருட்கு ஆம் பொதுவழியே.

சொற்பொருள் பயன்படற்குரிய பொதுவழிகள் ஐந்து என உணர்த்துகின்றார். பதிகம், காரணம், பா, தொகை, துணிவு என்பன அவை.

148 தெய்வ வணக்கமும் செய்பொருள் தொகையும்
செப்புவது ஆகும் சிறப்புப் பாயிரம்.

சிறப்புப் பாயிரமாமாறு உணர்த்துகின்றார். தெய்வ வணக்கமும் நூல்நுவலும் பொருளைத் தொகுத்து உரைத்தலும் இதன்கண் அமையும்.

149 பாயிரத்துப் பொருள் பகரில் கேட்பார்க்கு
இணக்கம் ஆசை இயையவும் பொருள் தெளிவு
உரிமை தோன்றவும் உரைப்பது நெறியே.

பதிகத்தில் பொருளைத் தொகுத்து உரைக்கும் முறை கூறுகின்றார். கேட்போர்க்கு இணக்கமும் ஆசையும் தோற்றும்படி, கூறுவோனின் பொருள்தெளிவு புலப்படும் படியும், பதிகம் அமைய வேண்டிய முறை வழுவாது உரைப்பது முறையாம். இவற்றுள், கேட்போரிடத்தில் இணக்கம் ஆவதற்கு அவையடக்கமும், ஆசை யாவதற்கு எடுத்த பொருளின் மாட்சியும் அருமையும் பயனும் காட்டுவதாகும். தெளிவு, நுவலும் பொருளைச் சுருங்கச் சொல்லல். நூலுக்கேற்ற அளவினதாகப் பாயிரம் அமைதல் உரிமையாம்.

காரணம்

150 காரணவழி எனக் காட்டு உரைப் பொருட்கு உரி
அகத்திணை புறத்திணை ஆம் இருவகையே.

பொதுவழியில், காரணம் என்பதனை விளக்குகின்றார். கூறுவதற்கு எடுத்த பொருளை காட்டும் வழி அகத்திணை புறத்திணை என இரண்டாம்.

151 அகத்திணை இயல்பே அறைபடும் வகையே
பொதுச் சிறப்பு உவமை புறநிலை எதிர்நிலை
கருவி காரியம் காரகம் முன்னவை
பின்னவை எனவாம் பிரிவு ஈராறே.

அகத்திணை மேற்கண்ட பன்னிரு பிரிவுடையது.

152 அவற்றுள்
இயல்பு உரைத்து ஒப்ப இயம்புதல் இயல்பே.

இயல்பு எனும் அகத்திணையை விளக்குகின்றார். ஒரு பொருளை அதன் இயல்பு கூறி விளக்குவது இது.

153 தொகை விரித்து உரைத்தல் சொற்பொருள் வகையே.

அறைபடும் வகை எனக் கூறிய பகுதி இங்கு விளக்கப்படுகின்றது. முதலில் தொகையாகக் கூறியதனைப் பின்பு வகையாக உரைத்தல் இந்நிலை.

154 பொது எனப் பலவை அடக்கும் ஒன்றே
சிறப்பு என ஒன்றின் அடங்கும் பலவே.

பொது அகத்திணை சிறப்பகத்திணை என்பனவற்றை உணாதது கின்றார். தனக்கு உறுப்பு எனப் பலவற்றை அடக்குவது பொது; பலவற்றுள் தனித்தனி ஒவ்வொன்று சிறப்பாம்.

155 உவமை எனப் பிறிது ஒப்ப உரைத்தலே.

உவமை யகத்திணை உணர்த்துகின்றார். தானே உரைப்பதற்கு எடுத்த பொருளை விளக்கவும் மற்றவர் அவற்றை ஒப்பித்துக் கொள்ளவும் பிறிதொன்றினை எடுத்து இரண்டிற்கு ஒப்புமை காட்டித் தன் பொருள்தோன்ற விளக்கி உரைப்பது உவமை அகத்திணையாம்.

156 புறநிலை ஒப்பு இழிவு ஆக்கம் என மூன்றே.

தான் குறித்தவற்றின் புறத்து மற்றொரு பொருளை எடுத்துக் காட்டிக் குறித்த தன் பொருளை விளக்குதல் புறநிலை அகத்திணை எனப்படும். இது ஒப்பு இழிவு ஆக்கம் என மூன்றும். புறத் தெடுத்த பொருட்குத் தன் பொருள் ஒப்பாதல், இழிவாதல், மிக்கதாதல் என்பன இவை.

157 குறித்தவை காட்ட மறுத்தவை காட்டி
எதிரில் விளக்கல் எதிர்நிலை என்ப.

ஒன்றனை விளக்க அதனை மறுத்து எதிரே நிற்கும் பொருளைக் காட்டல் எதிர்நிலை அகத்திணை எனப்படும்.

158 காரணம் நான்கும் காரியம் நான்கும்
விரித்துத் தன்பொருள் விளக்கல் உரித்தே.

காரண அகத்திணையும் காரிய அகத்திணையும் உணர்த்துகின்றார். ஒன்றற்குள்ள காரணத்தைக் கொண்டாயினும் அதனால் ஆகும் காரியத்தைக் கொண்டாயினும் அதனை விளக்கிக் கூறல் முறையே காரண அகத்திணையும் காரிய அகத்திணையுமாம். கருத்தா, முதல், துணை, குறிப்புக்காரணம் எனவும் காரியம் எனவும் வரும். கடவுள் உரைத்த நூலாகையில் பொய்யும் பிழையும் இல்லதே — காரணம் நோயெல்லாம் நோய் செய்தார் மேலவாம் நோய் செய் யார் நோயின்மை வேண்டுபவர் — காரியம்.

159 காரகம் என்ப கருத்தா கருமம்
கருவி கருத்து இடம் காலம் திறன் ஏழே.

காரக அகத்திணை எழுவகைப்படும். ஒன்றனை விளக்க இவற்றை விரித்துக் காட்டினால் அது காரகம். செய்பவன், செய்தொழில், இருவகைக் கருவி, அதனால் கருதிய பயன், இடம், காலம், செய்யும் தன்மை என்பன இவை.

160 முன்னவை பின்னவை முன்பின் நடந்தன
பன்னித் தன்பொருள் பயன்படப் பகர்தலே.

கூறும் பொருள் தோன்ற, அதற்கு முன்னும் பின்னும் நிகழ்ந்தன வற்றை எடுத்துக் கூறல் முறையே முன்னவை பின்னவை அகத் திணையாம். 'பகை பாவம் அச்சம் பழியென நான்கும் இகவாவாம் இல்லிறப்பான் கண்' எனும் குறளில் பிறர்மனை விரும்பலாகா தென்று காட்ட விரும்பின பின்னர், வரும் பகை முதலியன வற்றைக் காட்டுவதால் பின்னவை அகத்திணை.

161 புறத்திணை ஒழுக்கம் நூல் புறக்கரி மூன்றே.

புறத்திணை, ஒழுக்கம், நூல், புறக்கரி என மூன்றும். ஒவ்வொரு நாட்டின் இறைவன் ஒழுகும் முறையே ஒழுக்கம் எனப்படும். அதனோடு தன் பொருள் ஒத்ததாகக் காட்டல் ஒழுக்கப் புறத்திணை. வேதநூல் நீதிநூல் முதலியன விதித்தனவும் விலகினவும் எடுத்துக் காட்டித் தன் பொருள் தோன்ற விரித்தல், நூல் புறத்திணை. எடுத்துக் காட்டுத் தரல் கரிப் புறத்திணை.

## விரிவு

162 விரிவு என அணிவழி விரித்த தன்பொருள்
தெரி அவைக்கண் செலச் செப்புதல் என்ப.

தான் எடுத்துக் கொண்ட பொருட்கு ஏற்பவற்றைத் தெரிந்து அவற்றை அணிகள் வழி விரித்துக் கூறல் இங்குச் சுட்டப் படுகின்றது.

தொகையும் துணிவும்

163 ஒருங்கு முன் விரித்து உரைத்தவை மீண்டு
சுருங்கக் காட்டல் தொகை என்று ஆகும்.

தன் பொருள் தோன்றப் பல காரணவகையால் விரித்தவற்றை ஈற்றின்கண் ஒருங்குடன் தொகுத்துக் காட்டல் தொகையாம்.

164 பன்மனம் துணிய உட்படுத்த துணிவாம்
துன்னிய அணித்தொகைத் துணிவிற்கு உரித்தே.

பதிகம் முதலிய வழியால் தேடிய பயனைத் தருவது துணிவு. ஆகையில் அததற்கு ஏற்ப மடக்கு விஞ விபாவனை முதலிய அலங்காரங்கள் ஒன்றன்மேல் ஒன்றை அடுக்கி நடக்கும் துணிவு எனக் கொள்க.

உரிமை

165 எப்பொருள் எவ்வழி இயம்பினும் அதற்கதற்கு
உரிய உரைப்பது உரிமையாம் காலம்
இடம் பண்பு ஒழுக்கு இறை என ஐங் கூற்றே.

உரிமை - கால உரிமை

166 காலமே பருவம் பொழுது என இரண்டு ஆய்ப்
பருவம் கார் கூதிர் பனிமுன் பின் வசந்தம்
எரிமுதிர்வேனில் என்று இரு மூன்றே.

பருவம், பொழுது எனக் காலம் இருவகைத்து. அவற்றுள் பருவம் கார்முதல் முதிர்வேனில் வரை ஆறு பகுப்புடையது.

167 கார்க்காலத்து உரிமை கார்க் கால் உருட்டிய
வாடையே கோபம் மயிலே கேகயம்
கோடல் செங்காந்தள் கொன்றை கூதாளம்
தூண் திமில் உயவை தளவு கடம்பு அஞ்சனி
வெண் குருந்து அலர்தலே வியங்கம் கிளி குயில்
நீங்கலே நீர்மலர் ஏங்கல் என்ப.

கார்ப்பருவத்திற்கு உரிய இயற்கைக் கூறுகள் இங்கு விளக்கப்படுகின்றன. வாடைக்காற்றும், கோபம் மயில் கேகயம் மகிழலும், கோடல் முதலியன மலரலும், நீர்மலர் அழிதலும், கிளி குயில் முதலியன நீங்கலும் இப்பருவ நிலைகளாம்.

168 கூதிர்க்கு உரிமை கூதிரே குருகே
ஓதிமம் குரண்டம் ஒண்மதிச் சகோரம்
முதுவளை ஞண்டு ஊரும் நத்து உவத்தல்
நீரே தெளிதல் நீர்மீன் சனித்தல்
காரே சூல்கொளல் பாரிசாதம் சந்து
ஆரம் பித்திகை மந்தாரம நாணல்
முற்றலர்ந்து உவத்தலே மற்று உயிர் நைதலே.

கூதிர்க்கு உரியனவற்றை இங்குத் தொகுக்கின்றார். கூதிர்க்காற்று வீசலும், குருகு முதலிய பறவையும் நண்டு முதலிய உயிரினமும் உவத்தலும், நீர் தெளிதலும், மீன் பிறத்தலும், கார் சூல் கொள்ளலும், பாரிசாதம் முதலிய மலர் மலர்தலும் இக் காலத்திற்கு உரியனவாம்.

169 முன்பனிக்கு உரிமை துன்பனிக் கடல் தரும்
கொண்டல் வீசலும் கூண்டுஅசை சிதகன்
மண்டு இருட் கூகை கூன் மனம் மகிழ்ந்து ஒலித்தலும்
மாந்தருச் சாமந்தம் மலர்தலும் இலந்தை
தீங்கனி உதிர்தலும் தீ எனக் குன்றி
காய்த்தலும் நெல்லொடு கருப்பு முற்றலும் ஆம்.

முன்பனிப் பருவத்திற்கு உரியன கூறுகின்றார். கொண்டற்காற்று வீசுதலும், தூக்கணங் குருவி முதலாயின மகிழ்தலும், மா, சாமந்தம் போன்றன மலரலும், நெல் கரும்பு ஆகியன முற்றலுமாம்.

170 பின்பனிக்கு உரிமை பேசுங்காலை
உலவை வீசலே உளபல புறவு இனம்
வலிது கூய்க் காண வாரணம் களித்தலே
கோங்கு இலவு அலர்தலே குரவம் நெடும்பனை
தீங்கனி உதவலே சிதப்பரி வெடித்தலே.

பின்பனிப் பருவத்திற்கு உரியன பேசுகின்றார். உலவைக் காற்று வீசுதலும், புறவு முதலிய பறவை மகிழ்தலும், கோங்கும் இலவும் பூத்தலும், பருத்தி வெடித்தலும் போன்றன பின்பனிக்கு உரியனவாம்.

171 வசந்தத்து உரிமை வசந்தன் தேர் எனும்
தென்றலே வண்டினம் சிறுகிளி பூவை
அன்றிலே குயில்இவை அகம் மகிழ்ந்து ஆர்த்தலே

மாங்கனி உதிர்தலே தேம்கய மலரொடு
வகுளம் தாழை வழை செண்பகம் பிற
முகிழ் இனிது அவிழ்த்தலே முன் காரிடைக் களி
மிகு வன்மயில் முதல் மெலிதலே என்ப.

வசந்தம் ஆகிய இளவேனில் பருவத்திற்கு உரியன கூறுகின்றார்; தென்றல் வீசல், வண்டு முதலியன மகிழ்ந்து ஆர்த்தல், மாங்கனி உதிர்தல், கயமலர் தாழை போன்றன அவிழல், கார் காலத்து மகிழ்ந்த மயில் முதலியன மெலிதல் ஆகியன.

172 வேனிற்கு உரிமை கானில் தூசு எழக்
கோடையே வீசக் குறுகப் பேய்த்தேர்
காடையே வலியான் கம்புள் காகம்
சிரவம் ஒலித்தல் புருண்டி சிந்துரம்
பாடலம் பூத்தல் பாலைக் கனியொடு
கோடரம் நாவல் குலிகம் காய்த்தல்
நீர்அல்கல் மற்றுஉயிர் சீர்அலகிச் சோரலே.

முதிர்வேனிற் பருவத்து உரிமை உணர்த்துகிறார். கோடைக் காற்று வீசலும், பேய்த்தேர் தோன்றலும், காடை முதலியன மகிழலும், பாடலம் பூத்தலும், பாலைக் கனி முதலியன காய்த்தலும், நீர் குறைதலும், பிற உயிர்கள் சோர்தலுமாம்.

173 பொழுதுஎன மாலைக் கெழுயாமம் வைகறை
எல்தோற்றம் நண்பகல் எற்பாடு என ஆறே
மாலைக்கு உரிமை மலர்தல் உற்பலம் புள்
சோலை சேர்ந்து ஒலித்தல் சுரபி கரைதல்
துன்அடைத் தாமரை சுளித்து எனக் கூம்பல்
கன்னடம் காம்போதி கனியப் பாடலே;
யாமத்து உரிமை ஆகரி பாடலே
ஊமன் சகோரம் உவரி உவத்தலே
காமர் அநினதம் கரவு என்று இவையே;
வைகறைக்கு உரிமை வாரணம் கூவல்
மெய் எனக் கலை உறல் மீன்ஒளி குன்றல்
வாமமீன் உதித்தல் மாதவர் வாழ்த்தல்
இராமகலியுடன் இந்தோளம் பாடலே;
விடியற்கு உரிமை விலங்கொடு மற்றுஉயிர்
கடி மகிழ்ந்து எழுச்சி காரொடு கமலம்

விரிபூ மலர்தல் வெண்பனி துளித்தல்
தெரி பூபாளம் தேசாட்சி பாடலே;
நண்பகற்கு உரிமை நயத்தல் கோகம்
வெண்தேர் ஓடல் மேதி நீராடல்
பண்டுஇசை சாரங்கம் பாடல் என்பவே;
எற்பாட்டு உரிமை வெற்பான் நிழல் நீளல்
வானம் சிவத்தல் மறியினம் குதித்தல்
கானமாய்க் காபி கலியாணி பாடலே.

சிறுபொழுதுரிமை உணர்த்துகின்றார். மாலை, யாமம், வைகறை, எல் தோற்றம், நண்பகல், எற்பாடு என்பன ஆறு சிறுபொழுது.

மாலைக்காலத்திற்கு, உற்பலம் மலர்தல், தாமரை கூம்பல், புள் சோலையைச் சேர்தல், பசு கரைதல், கன்னடம் காம்போதி ராகங்கள் பாடல் என்பன உரியன; யாமத்திற்கு ஆகரி ராகம் பாடல், ஊமன், சகோரப் புள் ஒலித்தல், கடல் ஒலித்தல், காமம் களவு நடத்தல் ஆகியன உரியன, கோழி கூவல், கனவு வரல், மீன் ஒளி குன்றல், வாமமீன் உதித்தல், மாதவர் வாழ்த்தல், கலி இந்தோள இராகங்கள் பாடல் என்பன வைகறைக்கு உரியன வாம்; விலங்கு முதலியன மகிழ்தல், கமலம் முதலியன விரிதல், பனி துளித்தல், பூபாளம் தேசாட்சி இராகங்கள் பாடல் என்பன விடியற்கு உரியனவாம். வெண்தேர் ஓடல், எருமை நீராடல், சாரங்க இசை பாடல் ஆகியன நண்பகற்கு உரியன. மலை நிழல் நீளல், வானம் சிவத்தல், மறியினம் மகிழல், காபி, கலியாணி இராகம் பாடல் என்பன மாலைக் குரியனவாம்.

இடவுரிமை

174 குறிஞ்சி பாலை முல்லை மருதம்
நெயதல் ஐந்திணைக்கு எய்திய பெயர் என
வரையே சுரமே புறவே பழனம்
திரையே அவை அவை சேர் இடம் தானும்
நிரையே ஐந்திணை நிலம் எனப்படுமே.

இடவுரிமை உணர்த்துகின்றார். குறிஞ்சி பாலை முல்லை மருதம் நெய்தல் எனும் ஐந்திணைக்கு உரிய நிலம் முறையே வரை, சுரம், புறவு, பழனம், திரை என்பனவும் அவற்றைச் சேர்ந்த இடமும் ஆம்.

175 தெய்வம் செல்வர் சேர்குடி புள் விலங்கு
ஊர் நீர் பூ மரம் உணாப் பறை யாழ் பண்
தொழில் எனக் கரு ஈரேழு வகைத்து ஆகும்.

கருப்பொருள் பதினான்கும் உணர்த்துகின்றார். தெய்வம் செல்வ ராகிய தலைமக்கள், குடியாகிய மக்கள், பறவை, விலங்கு, குடியி ருக்கும் ஊர், பயன்படுத்தும் நீர், பூ,மரம், உணவு, முழக்கும் பறை, மீட்டும் யாழ், இசைக்கும் பண், செய்யும் தொழில் என்பன அவை.

176 குறிஞ்சிக் கருப்பொருள் குமரன் தெய்வமே
வெறி அணிப் பொருப்பன் வெற்பன் சிலம்பன்
குறத்தி கொடிச்சி குறவர் கானவர்
குறத்தியர் கிளி மயில் மறப்புலி குடாவடி
கறைபடி சீயம் சிறுகுடி அருவி
நறுஞ்சுனை வேங்கை குறிஞ்சி காந்தள்
ஆரம் தேக்கு அகில் அசோகம் நாகம்
வேரல் ஐவனம் தோரை ஏனல்
கறங்கு இசைத் தொண்டகம் குறிஞ்சியாழ் குறிஞ்சி
வெறிகொள் ஐவனம் வித்தல் செறிகுரல்
பைந்தினை காத்தல செந்தேன் அழித்தல்
செழும் கிழங்கு அகழ்தல் கொழும் சுனை ஆடலே.

குறிஞ்சி நிலத்திற்குரிய கருப்பொருள் உணர்த்துகின்றார். தெய்வம் —குமரன். தலைமக்கள் —பொருப்பன், வெற்பன், சிலம் பன், குறத்தி, கொடிச்சி. குடிமக்கள் — குறவர், கானவர், குறத் தியர். புள் — கிளி, மயில் விலங்கு — புலி, சீயம் முதலியன. ஊர் — சிறுகுடி. நீர் — அருவி, சுனை. மலர் — வேங்கை, குறிஞ்சி, காந்தள். மரம் — தேக்கு, அகில் போன்றன. உணவு—ஐவனம், தோரை முதலியன. பறை — தொண்டகம். யாழ் — குறிஞ்சி யாழ். பண் — குறிஞ்சி. தொழில் — ஐவனம் வித்தல் தினை காத்தல் போன்ற பல.

177 பாலைக் கருப்பொருள் பகவதி தெய்வமே
காளை விடலை மீளி எயிற்றி
எயினர் எயிற்றியர் மறவர் மறத்தியர்
புறாப் பருந்து எருவை செந்நாய் குறும்பு
குழி வறுங் கூவல் குராஅம் மராஅ
உழிஞை பாலை ஓமை இருப்பை
வழங்கு கதி கொண்டன செழும்பதி கவர்ந்தன
பகைத்துடி பாலையாழ் பஞ்சுரம் வெஞ்சமம்
பகலில் சூறை பரிவெழுந்து ஆடலே.

பாலைக்குரிய கருப்பொருள் உணர்த்துகின்றார். தெய்வம் — பகவதி. தலை மக்கள் — காளை, விடலை, மீளி, எயிற்றி. குடிமக்கள் — எயினர், எயிற்றியர், மறவர், மறத்தியர். புள் — புறா, பருந்து, எருவை. விலங்கு — செந்நாய். ஊர் — குறும்பு, நீர் — வறுங் கூவல்; மலர் — குராஅ, மராஅ; மரம் — உழிஞை, பாலை முதலியன. உணவு - வழிப்பறித்துக் கொண்டன, பதியில் கவர்ந்தன; பறை — துடி. யாழ் — பாலை. பண் — பஞ்சுரம், வெஞ்சமம். தொழில்—சூறையாடல்.

178 முல்லைக் கருப்பொருள் முராரி தெய்வமே
தொல்லைக் குறும்பொறை நாடன் தோன்றல்
மடியாக் கற்பின் மனைவி கிழத்தி
இடையர் இடைச்சியர் ஆயர் ஆய்ச்சியர்
கான வாரணம் மான் முயல் பாடி
குறுஞ்சுனை கான் யாறு குல்லை முல்லை
நிறம்கிளர் தோன்றி பிறங்கு அலர்ப்பிடவம்
கொன்றை காயா மன்றலங் குருந்தம்
தாற்றுக் கதிர் வரகு சாமை முதிரை
ஏற்றுப் பறை முல்லையாழ் சாதாரி
சாமை வரகு தரமுடன் வித்தல்
அவைகளைக் கட்டல் அரிதல் கடாவிடல்
செவிகவர் கொன்றைத் தீங்குழல் ஊதல்
மூவினம் மேய்த்தல் சேஇனம் தழுவல்
குரவை ஆடல் குளித்தல் கான் யாறே.

முல்லைக் கருப்பொருள் உணர்த்துகின்றார். தெய்வம்—முராரி. தலைமக்கள்—குறும்பொறை நாடன், தோன்றல், மனைவி, கிழத்தி. மக்கள் — இடையர் இடைச்சியர், ஆயர் ஆய்ச்சியர். புள்-கான வாரணம். விலங்கு — மான், முயல். ஊர் — பாடி. நீர் — குறுஞ்சுனை, கான்யாறு; மலர் — குல்லை, முல்லை முதலியன; மரம் — கொன்றை, குருந்து போன்றன. உணவு — வரகு, சாமை ஆகிய பல. பறை — ஏற்றுப்பறை. யாழ் — முல்லையாழ். பண் — சாதாரி. தொழில் — சாமை வரகு வித்தல், கடாவிடல், குழல் ஊதல் முதலிய பல தொழில்கள்.

179 மருதக் கருப்பொருள் வாசவன் தெய்வமே
விருது அமை ஊரன் வெண்தார் கிழவன்
கெழுதகு கற்பின் கிழத்தி மனைவி

உழவர் உழத்தியர் கடையர் கடைச்சியர்
மழலை வண்டானம் மகன்றில் நாரை
அன்னம் போதா நல்நிறக் கம்புள்
குருகு தாரா எருமை நீர்நாய்
பெருகிய சிறப்பின் பேரூர் மூதூர்
யாறு மனைக்கிணறு இலஞ்சி தாமரை
நாறு இதழ்க் கழுநீர் நளிமலர்க் குவளை
காஞ்சி வஞ்சி பூஞ்சினை மருதம்
செந்நெல் வெண்ணெல் அந்நெல் அரிகிணை
மன்றல் முழவ மருதயாழ் மருத
மன்று அணி விழாக் கொளல் வயல் களை கட்டல்
தோய்தல் கடாவிடல் பொய்கை யாறு ஆடலே.

மருதக் கருப்பொருள் உணர்த்துகின்றார். தெய்வம்-வாசவன். தலைவன். ஊரன், கிழவன். தலைவி—கிழத்தி, மனைவி. மக்கள்—உழவர், உழத்தியர், கடையர், கடைச்சியர். புள்-மகன்றில், நாரை முதலியன. விலங்கு-எருமை, நீர்நாய். ஊர்-பேரூர், மூதூர். நீர்-ஆறு, மனைக்கிணறு, இலஞ்சி. மலர்—தாமரை, கழுநீர். மரம்-காஞ்சி, வஞ்சி முதலியன. உணவு-செந்நெல், வெண்ணெல். பறை-அரிகிணை, மண முழவு. யாழ்-மருத யாழ். தொழில்-விழாக் கொளல், களைகட்டல், கடாவிடல் முதலியன.

180 நெய்தல் கருப்பொருள் நீர்ஆள் வருணனே
மொய்திரை சேர்ப்பன் முன்னீர் புலம்பன்
பரத்தி நுளைச்சி பரதர் பரத்தியர்
நுளையர் நுளைச்சியர் அளவர் அளத்தியர்
காக்கை சுறவம் பாக்கம் பட்டினம்
உவர்நீர்க் கேணி கவர்நீர் நெய்தல்
கண்டகக் கைதை முண்டகம் அடம்பு
கண்டல் புன்னை வண்டுஇமிர் ஞாழல்
புலவுமீன் உப்பு விலைகளில் பெற்றன
நளிமீன் கோட்பறை நாவாய்ப் பம்பை
விளரியாழ் செவ்வழி மீன்உப்பு படுத்தல்
உணக்கல் விற்றல் குணக்கடல் ஆடலே.

நெய்தல் கருப்பொருள் உணர்த்துகின்றார். கடவுள்—வருணன். தலைவன்-சேர்ப்பன், புலம்பன். தலைவி–பரத்தி, நுளைச்சி. மக்கள்-பரதர், பரத்தியர், நுளையர், நுளைச்சியர். புள்-காக்கை, விலங்கு-

சுறவம். ஊர்-பாக்கம், பட்டினம். நீர்-உவர்நீர்க் கேணி. மலர்-நெய்தல், கைதை முதலியன. மரம்-புன்னை. ஞாழல், உணவு-மீன், உப்பு விற்றுப் பெற்ற பொருள். பறை - மீட்கோட்பறை,பம்பை யாழ் - விளரி. பண் - செவ்வழி. தொழில்-மீன் உணக்கல்,விற்றல், உப்புப் படுத்தல், கடல் ஆடல் ஆகியன.

181 இடன் எனப்படுவது மலை நாடு யாறே.

பிறிதொருவகை இடஉரிமை உணர்த்துகின்றார். மேற்கூறிய ஐந்திணை பகுப்பு அன்றி மலை,ஆறு, நாடு என மற்றொருவகை இடஉரிமை உண்டு.

பண்புரிமை

182 பண்பு எனச் சாதியும் பற்றலும் அளவையும்
வண்ணமும் பலவும் வகுத்தனர் புலவர்.

பண்புரிமை உணர்த்துகின்றார். ஈண்டுப் பண்பென்னும் சொல் லால் அவனவன் பிறந்த சாதி முதலியன கருதப்படு கின்றன.

சாதித் தொழிலுரிமை

183 வன்னியர் மன்னர் வணிகர் சூத்திரர்
என் இவர் நால்வர்க்கு இயல்வன உரைக்கில்
ஓதல் தொழில் உரித்து உயர்ந்தோர் மூவர்க்கும்
அல்லாத கல்வி எல்லார்க்கும் உரித்தே.

சாதி உரிமை உணர்த்துகின்றார். வன்னியர், மன்னர், வணிகர், சூத்திரர் எனும் நாற்சாதியினரில் (வேதம்) ஓதல் முதன் மூவர்க் கும் பிற கல்வி அனைவர்க்கும் உரியது.

184 படைக்கலம் பயிறலும் பகடு ஆதி ஊர்தலும்
உடைத்தொழில் பின் மூவர்க்கு உரைத்திசினோரே.

படைக்கலப் பயிற்சி, யானை முதலியவற்றைச் செலுத்தும் பயிற்சி ஆகியன அந்தணர் ஒழியப் பிற மூவர்க்கும் உரித்து.

185 அறப்புறம் காவல் அனைவர்க்கும் உரித்தாய்
மற்றைக் காவல் கொற்றவர்க்கு உரித்தே.

அறப்புறக் காவல் நால்வர்க்கும் உரியது. நாட்டுக் காவல் அரச னுக்கு மட்டுமே உரியது.

186 வேத மாந்தர் வேந்தர் என்று இருவர்க்கும்
தூது போதல் தொழில் உரித்து ஆகும்.

வேற்றரசர்க்கண் தூது போகும் தொழில் அந்தணர் அரசர் ஆகிய இருவருக்குமே உரியதாம்,

187 சிறப்புப் பெயர் பெறின செப்பிய இரண்டு
முதற்கு உரிய மரபின ஒழிந்தோர் இருவர்க்கும்.

அரசனல் சிறப்புப் பெயர் பெற்ற வணிகர், சூத்திரர் ஆகியோருக்கு மேற்கூறிய நாடுகாவல் தூதுபோதல் உரியனவாம். அவ்வவர்க்கு உரிய தொழிலை அவரவர்க்குக் கூறி முறைகாப்பது சாதி உரிமை யாம்.

### பற்றுதல் உரிமை

188 வெறுப்பு உவப்பு இரக்கம் வெகுளி நாணம்
திறத்துணிவு அச்சம் தேருமயல் அவாப்
பலவும் மக்கள் பல பற்று என்ப
பற்று உறும் வழியும் பற்று உற்றூர்க்கு
மற்று உறும் இயற்கையும் பற்று இரு வகைத்தே.

வெறுப்பு முதலாகச் சொல்லப்பட்டனவும் பிறவும் மக்களிடத்துத் தோன்றும் பற்றுதலாம். கேட்போரிடத்துத் தான் அப்பற்றினை உருவாக்கும் தன்மையும், பற்றுதல் உடையார்க்கு இயலும் தன்மையும் அறிந்து, அம்முறையே பிறழாது உரைப்பது இவ் உரிமை யாம்.

### வடிவு முதலிய உரிமை

189 வடிவு அளவு ஊறு மற்று அவை பொதுமை
கடியச் சிறப்பில காட்டல உரிமை.

வடிவு முதலிய குண உரிமை உணர்த்துகின்றூர். சதுரம் முதல் பல வடிவும் எண் முதல் அளவும் வெம்மை முதல் எண் ஊறும் முதலிய குணங்களுள் ஒன்றற்குரியன மற்றொன்றற்கு உரியவாகத் தோன்ற உரைத்தல் குணவழு. பற்பல பொருட்குப் பொதுப்பட நிற்கும் குணங்களைச் சொல்லினும் வழு அன்றுயினும் பொதுப்படா ததற்கு உரியவை சொல்லுதல் சிறப்பாகி குண உரிமையாம். பைந்தினை என்பது பைங்கூழ்க்கெல்லாம் பொதுக் குணமாம். செறி குரற்றினை எனவும் தாற்றுக் கதிர் வரகு எனவும் வருவன சிறப்புடைக் குண உரிமையாம்.

### ஒழுக்க உரிமை

190 ஒழுக்கம் என்பது ஈண்டு உலக முறையே.

ஒழுக்க உரிமை என்பது உலக முறைமையைப் பின்பற்றல் ஆகும். ஒவ்வா முறைகளைத் தோற்றுது ஏற்ற முறை கொண்டு உலக இயற்கை பிழையாது உரைத்தல் வேண்டும். ஒரு நிலவேந்தனை

ஏழு கடலைத் தூர்த்தான் எனவும் ஆகாயத்தில் யானை ஓட்டினான் எனவும் கூறுவது வழு.

சொல் உரிமை

191 சொல் எனப் படுவதன் தொகுதி நான்கு அவற்றுள்
சனுக்கிரகம் சங்கதம் தேவர் மொழியே
அவப்பிரஞ்சன மொழியாம் இழிசனர்க்கே
ஒவ்வொரு நாட்டிடை உரைப்பது பாகதம்
இது மூ வகைத்து ஆய் வடமொழி திரிவன
தற்பவம் பிறவும் பொதுமைய தற்சமம்
சிறந்து ஒன்றற்கு உரியன தேசிகம் என்ப.

சொல்லுரிமை உணர்த்துகின்றார்: சனுக்கிரகம், சங்கதம் என்பன தேவர்மொழி; அவப்பிரஞ்சனம் இழிசனர் மொழி; பாகதம், நாட்டுமொழி எனச் சொல் தொகுதி நான்கு. பாகதத்தில் வடமொழி திரிவன தற்பவம்-நியமம்; தமிழுக்கும் வடமொழிக்கும் பொதுவாயின தற்சமம-கமலம்; ஒன்றற்கே சிறப்பாக உரியன தேசிகம்-நிலம், நீர் முதலியன.

192 உறுப்புச் செய்யுள் என்று உரைப்ப தற்பவச்
சிறப்பு உரை விரவிச் செப்பிய செய்யுளே.

தற்பவ மொழிக்குச் சிறப்புவிதி உணர்த்துகின்றார். உறுப்புச் செய்யுள் என்பது, தேசிகச் சொல்லொடு தற்பவ மொழிகள் விரவிக் கூறிய செய்யுளாம்.

193 கொங்கணம் மகதம் கோசலம் துளுவம்
சிங்களம் சீனம் சிந்து திராவடம்
வங்கம் சாவகம் மராடம் கலிங்கம்
அங்கம் சோனகம் அருணம் கவுசலம்
பப்பரம் காம்போசம் பாடை மூவாறனுள்
மருவூரின் மேற்கும் கருவூரின் கிழக்கும்
மருதை ஆற்றின் தெற்கும் வைகை
ஆற்றின் வடக்கும் செந்தமிழ் நிலனே
பாண்டி குட்டம் பன்றி கற்கா
வெண்குடம் பூழி மலாடு சீதம்
புனல் நாடு அருவா அருவா வடதலை
எனச் செந்தமிழ் சூழ் பன்னிரு நாடே.

மேற்கூறிய சொல் நிலைகள் வழங்கும் நாடு இவை என உணர்த்துகின்றார் பாடை வேற்றுமை பற்றி வேறு வேறாக வழங்கும் நாடுகள் கொங்கணம் முதலான பதினெட்டுமாம்.செந்தமிழ் நிலம், நூற்பாவிற் கண்ட நாலெல்லையுட் படுவதாம். கொடுந்தமிழ் வழங்கும் பன்னிரு நிலமாவன பாண்டி முதல் அருவா வடதலை ஈறாகச் சொல்லப்பட்டனவாம்.

194 செந்தமிழ் வழக்கு உரை செப்பும் காலை
இலக்கணம் உடையது இலக்கணப் போலி
மரூஉ என்று ஒரு மூவகைத்தாம் இயல்பும்
இடக்கரக்கல் மங்கலம் குழூஉக்குறி
எனும் முத் தகுதியோடு இரு மூன்று ஆகும்.

செந்தமிழ்க்கு உரிய சொல்வழக்கு உணர்த்துகின்றார்: இயல்பு வழக்கு, இலக்கணம் உடையது. இலக்கணப்போலி, மரூஉ என மூன்று. இடக்கரடக்கல் மங்கலம்,குழூ உக்குறி எனத் தகுதி வழக்கு மூன்று. இலக்கணமுடையது - பால். இலக்கணப்போலி - கோவில் -கோயில். மரூஉ-சோழநாடு, சோணாடு. இடக்கரடக்கல்-வாய்பூசி வருதும். மங்கலம்-செத்தாரைத் துஞ்சினார் எனல். குழூஉக்குறி-பொற்கொல்லர் பொன்னைப் 'பறி' எனல்.

195 குறிப்பு மொழி வகைக் கூறின் பொதுச்சொல்
விகாரம் தகுதி வினைக்குறிப்பு ஆகுபெயர்
அன்மொழி முதலதொகை பொருள்தொகைக்
குறிப்பு என
ஒன்பதும் பிறவும் இவ் ஒழிந்தன வெளிப்படை.

குறிப்பு மொழிவகை உணர்த்துகின்றார்: ஒன்றினைக் குறியாப் பொதுமொழியும், விகாரமொழி ஒன்பதும், தகுதி வழக்கு மூன்றும், வினைக்குறிப்பும், ஆகுபெயரும் அன்மொழித் தொகையும், முதல்தொகையும், பொருள்தொகையும், கூறுவோன் குறிப்பும் எனக் குறிப்புமொழி ஒன்பது. இவை ஒழிந்தன வெளிப் படை மொழி.

இவற்றுள் முதல் தொகை என்பது காரிகையின்கண் வரும் உதாரண முதனினைப்புக் காரிகை போன்றன. பொருள் தொகை 'புறநிலை ஆறொழித்து ஐந்தடக்கி முன்னம் மூன்று ஆண்டளிக்கும்' என வருவதில் வெளிப்படையாக அன்றி, ஆறு என்பது காம குரோதம் முதலியன எனவும் ஐந்து ஐம்பொறிகள் எனவும், மூன் றென்பது மூவுலகுகள் எனவும் குறிப்பில் கொள்ளும்படி அமைந்தது.

196 பலவினைக்கு உரிய பலபொருட்சொல் ஒரு
நிலைவரின் உரிமை நீத்தசொல் உரித்தே.

இனப்பொருள் வினைச்சொல் உரிமை உணர்த்துகின்றார். பல வினைக்கு உரிய பல சொற்கள் கூடி வருங்கால் அவ்வவ் இனத்திற் குரிய பொது வினை பெற்று முடியும். முடி கவித்தான், மேகலை கட்டினான், குழை இட்டான் முதலியன இணைந்து அணிகலன் அணிந்தான் எனல்.

197 திணை நிலம் சாதி குடியே உடைமை
குணம் தொழில் கல்வி சிறப்பாம் பெயரோடு
இயற்பெயர் ஏற்றிடில் பின்வரல் உரித்தே.

சொல்லடுக்கு உரிமைஉணர்த்துகின்றார். திணைமுதலாயினவற்றைப் பற்றி ஒரு பொருள்மேல் பல பகுபதப் பெயரை அடுக்கி உரைப்புழி அப்பொருட்கு உரிய இயற்பெயர் கடையில் வந்து முடிய வேண்டும். 'கார்வளர் வெற்பினன், குறவற்காவலன், போர்வளர் வில்லினன், பொறிசொல் வெஞ்சினன், வார் வளர் முரசதிர், வகுல னென்பவன், பார்வளர் நலங்கெடப் படைகொண் டெய்தினான்'.

198 அசைநிலை பொருள்நிலை இசைநிறைக்கு ஓர் சொல்
இரண்டு மூன்று நான்கு எல்லை முறை அடுக்கும்.

அசையாகவும் பொருளோடும் இசை நிறைப்பதற்காகவும் ஒரு சொல் இரண்டு, மூன்று அல்லது நான்குமுறை அடுக்கும் அசைநிலை-மற்றோமற்றோ. பொருள்-தீதீதீ. இசைநிறை-நாமகள் பாடுகோ பாடுகோ பாடுகோ.

199 அகப்பொருள் புறப்பொருளாம் இரண்டு அவற்றுள்
பெருகிய கைக்கிளை பெருந்திணைக் குறிஞ்சி
ஆதி ஐந்திணை என அகத்திணை ஏழு
கைகோள் இரண்டாம் களவு கற்பே
வதுவை வாழ்க்கை வரைவு அகப்பொருளே
வெட்சி கரந்தை வஞ்சி காஞ்சி
நொச்சி உழிஞை தும்பை ஏழ் புறத்திணை
பகைநிரை ஓட்டல் தன் நிரை மீட்டல்
பகைமேல் செல்லல் பகைக்கு எதிரூன்றல்
தன் எயில் காத்தல் பகை எயில் கொள்ளல்
போர் வெல்லல் என முறை புறப்பொருள் திணையே.

அகப்பொருள் புறப்பொருள் செய்திகளை இவண் தொகுக்கின்றார்.

கைக்கிளை, பெருந்திணையுடன் ஐந்திணை ஐந்தும்இணைய அகத்திணை, களவு, கற்பு எனக் கைகோள் இரண்டு. பல்வகை வதுவை முறையும், வாழ்வும், வரைவின்கண் பிரிவு நிகழும்போது புலம்பலும் அகப்பொருளில் அடங்கும். புறப்பொருள் வெட்சி முதலியன. நிரை கவர்தல் முதலியன இதன் பகுப்புகள்.

200 முப்பொருள் ஐவழி முந்நான்கு அகத்திணை
முப் புறத்திணை தவா முறை ஐயைந்து
உரிமை என இவை பொருள் நூல் தொகையே.

பொருளதிகாரத்தின்கண் கூறப்பட்ட பொருண்மைகளைத் தொகுத்துத் தருகின்றார்.

## யாப்பதிகாரம்

201 யாப்புஉற நலம்எலாம் இணைந்த ஓர் சட்குணன்
காப்புஉற அடிதொழி இக் காட்டுதும் யாப்பே.

கடவுள் வாழ்த்துக் கூறுகின்றார். தேவ நன்னிலை யனைத்தையும் கொண்டுளனாகி யொன்றும் நின்று அறுகுணன் எனும் பெயருடைக் கடவுளே ஈண்டுச் சொல்ல முப்பொருள் வழு விலகிக் காப்பது வேண்டி அவன் திருப்பாத மலர் தொழுதேத்தி யாப்பினது இலக்கண நூலை விளக்குவேன் என்கிறார்.

### செய்யுளுறுப்பு

202 சிரை முதல் யாப்பு உறச் சேர் உயிர்க்கு உடல்போல்
உரைமுதல் யாப்பு உற உணர்பொருட்கு உடலாச்
சிறப்பில் செய்வன செய்யுளாம் அவை
உறுப்பு இயல் மரபு மூன்று உரைப்ப விளங்கும்.

நரம்பின் பிணிப்போடு ஒழுங்குபட நிரைத்து இணைத்திய பல எலும்புகளைப் பின்னித் தசையை நிரப்பிக் குருதியைத் தோய்த்துத் தோலை மூடி மயிர்மேல் பரப்பி அழகு பெற உயிர்க்கு இடனாகச் செய்யப்பட்ட உடலைப்போலப் பலவகை மொழிகள் ஒருப்பட எடுத்து அசை சீர் தளை அடி தொடை என்று இவற்றானும் யாப்புற வீக்கி உணர்ந்த பொருட்கு இடனாகப் பல அலங்கார வகையால் சிறப்புறச் செய்யப்படுவன செய்யுள் எனப்படும். செய்யுளுறுப்பு, செய்யுளியல், செய்யுள் மரபு என மூன்று ஓத்தாக இவ் அதிகாரம் இயலும்.

203 எழுத்து அசை சீர் தளை அடி தொடை ஆறும்
வழுத்திய செய்யுள் மருவு உறுப்பு எனவே.

செய்யுட்கு உறுப்பு உணர்த்துகின்றார். எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை என்பன ஆறுமாம்.

204 அசையே நேர் நிரையாம் இருவகைய
நெடில் தனிக்குறில் மெய் நிசழ் குறில் நேராய்
இணைக்குறில் குறில்நெடில் இவை நிரையசையே.

அசை யிலக்கணம் உணர்த்துகின்றார். அசை, நேர் நிரை என இரண்டு. நெடிலும் தனிக்குறிலும் மெய்தொடர்ந்த குறிலும் நேராம். இருகுறில் இணையும் குறில்நெடில் இணையும் நிரையாம்.

205 நேரே நிரையே அசைச்சீர் இரண்டு என
நேர் நேர் நிரைநேர் நிரைநிரை நேர்நிரை
ஈரசை இயற்சீர் ஈரிரண்டு அவற்றோடு
ஈற்று உறு நேர் நிரை இருநான்கு உரிச்சீர்
நேர் இறும் வெண்சீர் நிரை இறும் வஞ்சிச்சீர்
நாலசைப் பொதுச்சீர் நாலுன்கு என்ப.

சீராமாறு உணர்த்துகின்றார். அசைச்சீர் நேர், நிரை என இரண்டு. இயற்சீர் எனும் ஈரசைச்சீர் நேர்நேர், நிரைநேர், நிரை நிரை, நேர்நிரை ஆகிய நான்கு. இந்நான்கின்பின் முறையே நேரும் நிரையும் வரின் எட்டு உரிச்சீர் வரும். அவற்றில் நேர் என முடிந்தன வெண்சீர்; நிரை என இற்றன வஞ்சிச்சீர். பொதுச் சீர் எனப்படும் நாலசைச்சீர் பதினாறும்.

206 பொதுச்சீர் இறுதியும் உரிச்சீர் இறுதியும்
தளைக்கு ஒக்கும் அசைச்சீர் இயற்சீர் அனைத்தே
பொதுச்சீர் வெள்ளையுள் புணரா உக்குறள்
அல்லன கலியும் அகவலும் சேரா
வஞ்சியுள் அனைத்தும் வரினும் ஓரடி
எல்லையுள் ஒன்றுமேல் இணையில் தொடரா.

சீருக்குச் சிறப்பிலக்கணம் உணர்த்துகின்றார். தளை கொள்ளும் போது, பொதுச்சீர்கள், உரிச்சீர் போலச் செயற்படும். அவ்வாறே ஓரசைச்சீர், இயற்சீர் போல நிற்கும். பொதுச்சீர்கள் வெண்பா வில் வரா. ஆசிரியத்திலும் கலியிலும் குற்றியலுகரம் வந்தால் தான் வரும். வஞ்சிப்பாவில் எல்லாப் பொதுச்சீரும் வரினும், ஒரு அடியில் இணையாக இரண்டு வரா.

207 தளையாம் சீர் தம்முள் தலைப்படும் கட்டே
அவை ஏழ் வகைய ஆகும் அவற்றுள்
ஆசிரியத் தளையாம் இயற்சீர் ஒன்றல்.

தளை இலக்கணம் உணர்த்துகின்றார். சீர்கள் தம்முள் பிணிக்கப் படல் தளை. அவை ஏழ் வகையவாம். அவற்றுள் இயற்சீர் ஒன்றி வருவது ஆசிரியத்தளை. திருமழை தலைஇய-நிரை ஒன்றியது; விசும்பின் விண்ணதிர்-நேர் ஒன்றியது.

208 வெண்டளை என்பது வெண்சீர் ஒன்றலும்
இயரசீர் விகற்பமும் என இரு வகைத்தே.

இருவகை வெண்டளை உணர்த்துகின்றார். வெண்சீர் ஒன்றல்—பொருள்பொழிவார் மேற்றே; இயற்சீர் விகற்பம்-மேற்றே புகழ்.

209 கலித்தளை வெண்சீர் கலந்த விகற்பமே.

வெண்சீர் வந்து, வரும் சீர் முதலசையுடன் ஒன்றாது நிற்பது கலித் தளையாம்-செல்வப்போர்க் கதக்கண்ணன்.

210 வஞ்சித் தளையாம் வஞ்சிக்கு உரிச்சீர்
ஒன்றலும் ஒன்றாது ஒழுகலும் என்ப.

வஞ்சித்தளை, வஞ்சிச்சீர் நின்று வருஞ்சீருடன் ஒன்றினும் ஒன்றா விடினும் இயலும். விரைவாய்மலர் நக்குவப்பன—ஒன்றா வஞ்சி; கரைவாயெழு முகைத்தாழைகள்-ஒன்றிய வஞ்சி.

211 அடி என்ப தளைத்த அம் சீரா நடை அவை
குறளடி இருசீர் சிந்தடி முச்சீர்
அளவடி நாற்சீர் ஐஞ்சீர் நெடிலடி
கழிநெடிலடி ஐந்தே கடந்த சீர் இவற்றுள்
எண்சீர் மிக்க அடி எனில் சிறப்பு அன்றே.

அடியிலக்கணம் உணர்த்துகின்றார். தளையால் பிணிக்கப்பட்ட சீரொடு வருவன அடி. குறளடி முதல் கழிநெடிலடிவரை ஐந்து வகைப்படும். ஓரடியின்கண் இரண்டு சீர்முதல் எட்டுச் சீர்வரை வரலாம். எட்டின் மிக்கன சிறப்பின்று மாது மாண்பெழ-குறள்; குயின் மருட்டிய கோண்மொழி சிந்து; மருவிலார் மனமென மஞ்ஞை ஆடுமால்-அளவு; இன்றேயுள்ளார் நாளை யிறப்பார் இது வல்லால்-நெடில்; நூல்வழிப் புகழே போன்று நொடிப்பினிற் பரந்த மேகம்-கழிநெடில்.

212 தொடை என்பது ஈரடி தொடுப்பதாம் அவை
அடைமுதல் மோனை அந்தம் இயைபே
இடையே எதுகை எதிர்மொழி முரண் அளை
பெடையே அளபாம் என ஐ வகையே.

தொடையும் தொடை விகற்பமும் உணர்த்துகின்றார். மேற் கூறிய பலவகை அடிகள் தம்முள் இரண்டாய் இணைந்து தொடுப்

பது தொடை எனப்படும். முதல் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது மோனைத்தொடை. இறுதி இயைதல் இயைபு. இரண்டாம் எழுத்து ஒன்றல் எதுகை. மொழியானும் பொருளானும் மறுதலைப் படத் தொடுப்பது முரண். உயிரளபும் ஒற்றளபும் ஒன்றிவரத் தொடுப்பது அளபெடைத்தொடை எனத் தொடை ஐவகை யாம்.

213 மோனைக்கு இனமே அஆஐஔவும்
இஈ எஏவும் உஊ ஒஓவும்
சதவும் ஞநவும் மவவும் எனவே.

மோனைத் தொடைக்குச் சிறப்புவிதி உணர்த்துகின்றார். ஓரெழுத்துக்கு அவ்வெழுத்தே மோனையாவதன்றி இனவெழுத்தும் மோனையாகும். ஒன்றற்கொன்று மோனையாகும் எழுத்துக்களை இணைத்துத் தருகின்றது நூற்பா. உகர ஊகாரம் மோனையாவதற்குச் சான்று—'ஊறும் அமுதத்தை உண்டாங் குறப்பார்க்கின், மாறும் பிறப்பறுக்க லாம்'.

214 எதுகை என்ப இயைபன மொழி கண்
முதல் எழுத்து அளவு ஒத்து முதல் ஒழித்து
ஒன்றுதல்
மூன்றும் எழுத்து ஒன்றல் ஆசு இனம் தலையாகு
இடை கடை ஆறும் எதுகை வகையே.

எதுகைத் தொடைக்கு சிறப்பிலக்கணம் உணர்த்துகின்றார். முதல்எழுத்து அளவொத்து இரண்டாம் எழுத்து மொழிகளில் ஒன்றி வருதல் எதுகை. இவை யொழிய, மூன்றும் எழுத்து ஒன்றல், ஆசெதுகை, இன எதுகை, தலையாகு, இடையாகு, கடையாகு எதுகை என ஆறு பிற வகைகளும் உள.

பொய்மையும் வாய்மை இடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின் — மூன்றுமெழுத்து ஒன்றிய எதுகை.
காய் மாண்ட தெங்கின் பழம் வீழக் கமுகின் எற்றிப்
பூமாண்ட தீந்தேன் தொடைகீறி — ஆசுஎதுகை.
தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தாற் காணப் படும் — வல்லின எதுகை முதலியன.

215 தலையாகு எதுகை தலைச்சீர் முழுது உறல்
இடை கடை அவ் அவ் எழுத்து ஒன்றுவதே.

முதற்சீர் முழுதும் ஒன்றல் தலையாகு எதுகை; இரண்டாம் எழுத்து மட்டும் ஒன்றல் இடையாகு எதுகை; இனவெதுகை போன்றன.

கடை. தலையாகு : சிற்றின்பம் வெஃகி யறனல்ல செய்யாரே
மற்றின்பம் வேண்டு பவர்.

இடையாகு : அகர முதல வெழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு.

216 மோனை முதல் அடிமுதல் வரின் அடியே
இணைவது இணையே இடைவிடல் பொழிப்பே
இறுவது ஒரூஉ ஈறு ஒன்று ஒழிவது
கூழை முதல் அயல் குன்றல் மேற்கதுவாய்
ஈற்றயல் ஒன்று ஒன்றுது எனின் கீழ்க்கதுவாய்
எல்லாம் ஒன்றுவது எனின் என்ப.

தொடை விகற்பம் உணர்த்துகின்றார். மேற்கூறிய மோனை முதலிய தொடைகள் ஒவ்வொன்றும் அடிமுதல் முற்று ஈருக எண் விகற்பம் பெறும். அடிதோறும் முதற்கண் மோனை ஒன்றின் அடிமோனை. ஒரு அடியின் கண் முதல் இருசீர்க்கண் மோனை முதலாயின வரல் இணை. இடைவிட்டு ஒன்றும் மூன்றும் சீரில் வருவது பொழிப்பு. ஒன்றிலும் நான்கிலும் பொருந்துவது ஒரூஉ. ஈற்றுச்சீரொழியப் பிறமூன்றில் பயிறல் மேற்கதுவாய். மூன்றும் சீர் ஒழியப் பிற மூன்றில் வரல் கீழ்க்கதுவாய். அனைத்திலும் வரல் முற்றும்.

பொன்னி னன்ன பொறிசுணங் கேந்தி
பன்னருங் கோங்கி னன்னலங் கவற்றி
மின்னவி ரொளிவடந் தாங்கி மன்னிய
நன்னிற மென்முலை மின்னிடை வருத்தி
என்னையு மிடுக்கண் டுன்னிவித் தின்னடை
யன்னமென் பெடைபோலப் பன்மலர்க் கன்னியம்...

— பல எதுகை விகற்பங்கள் வந்தன.

217 அந்தாதி அடிக்கடை ஆதி ஆதல்
இரட்டை முழுது ஓர்இறை அடிக்கிய அடி
செந்தொடை தொடை ஒன்றும் சேரா அடியே.

அந்தாதி, இரட்டை, செந்தொடைகளை உணர்த்துகின்றார்: அடிதோறும் இறுதிக்கண் நின்ற எழுத்தானும் அசையானும் சீரானும் அடுத்த அடியைத் தொடங்குவது அந்தாதி.

உலகுடன் விளக்கு மொளிகிளர் ரவிர்மதி
மதிநல னழிக்கும் வளங்கெழு முக்குடை....

அளவடிக்கண், ஓரடி முழுதும் ஒருசொல்லே வரத் தொடுப்பது இரட்டை.

ஒக்குமே ஒக்குமே ஒக்குமே ஒக்கும்
விளக்கினுட் சீறெறி ஒக்குமே ஒக்கும்
குளக்கொட்டிப் பூவி னிறம்.

செந்தொடை, மேற்கூறிய தொடைகள் பெருத நிலை.

'பூத்த சல்லகி வியன்சினைக் காவின்
மிகுதிருக் காவலூ ரகத்தின் பெழுந்தாளும்
வான்மதி யாளே.'

218 அடி இணைப் பொழிப்பு ஒரூஉக் கூழை மேல்கீழ்க்
கதுவாய் முற்று என எட்டொடு மோனை
இயைபே எதுகை முரணே அளபே
என ஐந்து உறழ எண் ஐந்து ஆகி
அடியந்தாதி இரட்டைச் செந்தொடை
என இம் மூன்றும் இயையத் தொடையும்
விகற்பமும் எண் ஐந்து ஒருமூன்று என்ப.

தொடையும் தொடை விகற்பமும் நாற்பத்து மூன்று எனத் தொகையாக உணர்த்துகின்றுர்.

## செய்யுளியல்

219 வெண்பா அகவல் விரி கலி வஞ்சி
மருட்பா என ஐ வகைப்பா அன்றியும்
துறை தாழிசை விருத்தம் தூக்கினம் மூன்றே:

பாவும் பாவினமும் ஆமாறு உணர்த்துகின்றுர். பா ஐந்து; இனம் மூவகை.

220 வெள்ளைக்கு இயற்சீர் வெண்சீர் விரவி
ஏற்கும் அளவடி ஈற்றடி சிந்தடி
ஈற்றுச் சீர் அசைச்சீர் உக்குறள் மிகலுமாம்.

வெண்பாவின் இயல்பு உணர்த்துகின்றுர். இயற்சீரும் வெண் சீரும் விரவி, அளவடிவாய், ஈற்றடி சிந்தடியாய், ஈற்றுச் சீர் அசைச்சீர் ஆய் வரும். அசைச்சீர் உக்குறள் மிக்கும் வரும்.

சொல்லப் பயன்படுவர் சான்ருேர் கரும்புபோல்
கொல்லப் பயன்படும் கீழ்.

221 வெள்ளையுள் பிறதளை விரவா வெண்டளை
ஒன்றுய்ச் செப்பல் ஓசையாம் அலைதே

ஏந்திசை வெண்சீர் இயற்சீர் தூங்கிசை
ஒழுகிசை இரண்டும் உள எனில் ஆகும்.

வெண்பா ஓசையின் விகற்பம் உணர்த்துகின்றார். பிறதளை விரவாது வெண்தளையே வந்ததால் விளையும் செப்பலோசை இதற்குரியது. வெண்சீர் மட்டும் வருவது ஏந்திசையும், இயற்சீரே பெறுவது தூங்கிசையும் இரண்டும் கலப்பது ஒழுகிசைச் செப்பலும் ஆம்.

222 குறள் சிந்து இன்னிசை நேரிசை சவலை
பஃறொடை என வெண்பா ஆறு அவற்றுள்
ஈரடி குறளே இருகுறள் சவலை
இருகுறள் இடைக் கூன் இயை நேரிசையே
நாலடி விகற்ப நடை இன்னிசையே
நேரிசை இன்னிசை நேர் மூவடி சிந்தே
நாலடி மிக்க அடி நண்ணில் பஃறொடை
என அறு வெண்பா ஏற்கும் நடையே.

அறுவகை வெண்பாவும் அவற்றிலக்கணமும் உணர்த்துகின்றார். இருகுறள் இணைந்து இடையே தனிச்சொல்லின்றி வருவது சவலை.

அட்டாலும் பால்சுவையிற் குன்றா தளவளாய்
நட்டாலு நண்பல்லார் நண்பல்லர்
கெட்டாலு மேன்மக்கண் மேன்மக்களேசங்கு
சுட்டாலும் வெண்மை தரும்.

223 ஆசிரியத்து ஒலி அகவலாய் இயற்சீர்
தன் தளை பிறவும் தழுவிய அளவடி
நடையால் நடந்து நால் வகைத்தாம் அவை
நேரிசை இணைக்குறள் நிலமண்டிலமே
அடிமறி மண்டிலம் ஆகும் என்ப.

ஆசிரியப்பாவின் இலக்கணம் உணர்த்துகின்றார். ஆசிரிய ஓசை அகவல். இயற்சீரும், ஆசிரியத்தளையும் பிறவும் வந்த அளவடியால் நடக்கும். ஆசிரியப்பா நால்வகைத்து.

224 நேரிசைச் சிறுமை நேரும் மூஅடியே
வரையா பெருமையே மற்றடி அளவடி
ஈற்றயல் சிந்தடி இயைந்து வருமே.

நேரிசை ஆசிரியப்பா மூவடி சிறுமையாகப் பலவடியால் வரும். பிற அடிகள் அளவடியாக, ஈற்றயல் சிந்தடியாகி வருமியல்பிற்று.

225 இணைக்குறள் முதல் ஈற்று ஈரடி அளவடி
இடைக் குறள் சிந்து அடி இணையப் பெறுமே.

இணைக்குறள் ஆசிரியப்பா, முதலடியும் ஈற்றடியும் அளவடியாய், இடையடிகள் குறளும் சிந்தும் விரவி வரும்.

226 நில மண்டிலத்து எங்கும் நீங்கா அளவடி
அடி மறி மண்டிலம் அங்நடைத்து ஆகி
அடி மாறினும் தான் அழியா நிலைத்தே.

நிலமண்டில ஆசிரியம் முழுமையும் அளவடியால் வரும். அடிமறி மண்டிலமும் அவ்வாறே ஆகி, அடிகள் தம்முள் முறைமாறி உச்சரிப்பினும் ஓசையும் பொருளும் வழுவாது வரும். அடிமறி மண்டிலம்:

நீரிடை நுரையினேர் கெடுமிளை மையே
சாரிடை மின்னற் கடிதிரும் புகழே
தேரிடை யுருளிற் செல்வ மாறுமே
தாரிடை மதுவினிற் றவிர்ந்தொழி யின்பமே.

227 கலி ஓசி துள்ளல் கலித்தளை பிறவும்
வெணசீர் பிறவும் விரவிய அளவடி
தன்ஞல் நடக்கும் தன்மைத்து ஆகி
ஒத்தாழிசை மூன்றும் ஓர்ஐங் கொச்சகம்
வெண்கலி கலிவெண்பா விகற்பம் ஈரைந்தே.

கலிப்பா இயல்பும் வகைகளும் உணர்த்துகின்ருர். துள்ளல் ஓசை கலிக்கு உரியது. கலித்தளையும் பிற தளைகளும் வெண்சீரும் பிற சீர்களும் விரவிய அளவடிகள் இதன்கண் வரும். ஒத்தாழிசை முதலிய பத்துவகைகள் கலிப்பாவில் உள.

228 கலி முதல் உறுப்பாம் தரவு தாழிசையே
துணை உறுப்பு எனக் கூன் சுரிதகம் வண்ணகம்
அம்போதரங்கம் ஆம் இவை நான்கே.

கலிப்பா உறுப்புக்களை முதல் உறுப்பு எனவும் துணையுறுப்பு எனவும் பிரித்து உணர்த்துகின்ருர். தரவு, தாழிசை என்பன முதலுறுப்பு; கூன், சுரிதகம், வண்ணகம், அம்போதரங்கம் என்பன துணையுறுப்பாம்.

229 தரவு தாழிசை தன்தளை வெண்தளை
இரண்டு உறழ்ந்து அளவடி இரண்டும் பலவுமாம்.

தரவும் தாழிசையும், கலித்தளையும் வெண்தளையும் விரவி, இரண்டடியாலும் பலவடிவாலும் வரும்.

230 வண்ணகம் அளவடி வரை முதல் பல அடி
நான்கு ஆதி எட்டு ஈறுய் நடை முடுகு அராகம் ஆம்.

வண்ணகம், முடுகு, அராகம் என்பன ஒரு பொருட் சொற்கள். அளவடி முதல் பலஅடியால் வந்து, நான்கு முதல் எட்டு அடிவரை வண்ணகம் நடக்கும்.

231 அம்போதரங்கம் அம்பளாம் திரைபோல்
அளவடி ஈரடி இரண்டும் பேரெண்
அளவடி ஓரடி நான்கும் அளவெண்
சிந்தடி ஓரடி எட்டும் இடையெண்
குறளடி ஓரடி நானான்கும் சிற்றெண்
எட்டும் நானான்கும் நான்கும் எட்டும் ஆய்ச்
சுருங்கவும் அந்நால் துணை உறுப்பு உடைத்தே.

அம்போதரங்கமும் அதன் உறுப்புக்களும் உணர்த்தப்படுகின்றன. கரைசாரக் கரைசார ஒருகாலைக் கொருகால் சுருங்கி வரும் நீர்த் தரங்கம்போல், அம்போதரங்கம் நாற்சீரடியும், முச்சீரடியும், இருசீரடியுமாகப் பேரெண் அளவெண் இடையெண் சிற்றெண் என நாலு உறுப்போடு வரும் என்று உணர்க. சிந்தடி எட்டால் வரும் இடையெண்ணும் குறளடி பதினாறால் வரும் சிற்றெண்ணும் முறையே நான்கும் எட்டும் அடியாய்ச் சுருங்கி வரவும் பெறும்.

232 சுரிதகம் என்ப சுரிந்து எனக் கூனின்
பின் அகவல் வெள்ளையாக முடிவதே.

சுரிதகம் ஆமாறு உணர்த்துகின்றார். கூன் எனும் உறுப்பைத் தொடர்ந்து, பொருள் குவிந்து முடியும் உறுப்பு சுரிதகம். இது அகவலாகவோ வெண்பாவாகவோ இருக்கும்.

233 நேரிசை அம்போதரங்கம் வண்ணகம்
என்று ஒத்தாழிசை இவை மூன்று இவற்றுள்
தரவு ஒன்று ஒருமுத் தாழிசை தனிநிலை
சுரிதகம் என நால் துணை வரும் நேரிசை
தாழிசைக் கீழ் அம்போதரங்கம் சாரவும்
அம்போதரங்கம் மேல் அராகம் அணையவும்
அம்போதரங்கமே யாம் வண்ணகமாம்.

ஒத்தாழிசைக் கலிப்பாவின் மூவகைகள் உணர்த்துகின்ருர். நேரிசை ஒத்தாழிசைக் கலி - ஒரு தரவும் மூன்றுதாழிசையும் தனிச்சொல்லும் சுரிதகமும் என நான்கு உறுப்பால் முடியும். மேற்கூறிய உறுப்பில், தாழிசைக்குப் பின் அம்போதரங்கம் வரல் அம்போதரங்க ஒத்தாழிசை. இவ் ஐந்து உறுப்புடன், அம்போதரங்கத்தின் முன் அராகம் சாரல் வண்ணக ஒத்தாழிசை. அனைத்துறுப்பும் உள்ள பாடல் :

வானிடியோர் முரசார்ப்ப வண்ணமுகில் வாகனத்தின்
மீனெடிதோர் கொடியேந்தி வினையெதிரொப் பொன்றிலனு
யொருதானு மாய்ப்படைத்த உலகனைத்தும் புரந்தாளுஞ்
சொருதானு நன்ருடா தொழும்பன்சொல் அருளிக்கேள்.
(இது தரவு)

தேடரிய பொருணேர்ந்தோர் சீரடிமைக் கொண்டன்பின்
வாடரிய துயர்க்குளைய மறப்பவரோ மாண்புளரே;
புலற்கரிய விழுஞ்செல்வம் பொழிந்தடிமை கொண்டன்பிற்
சொலற்கரிய துயர்க்குளையத் தூத்துவரோ தொடர்புளரே;
மிடிகாணு வாழ்ந்துவப்ப விழைந்தடிமை கொண்டன்பின்
அடிகாணுத் துயர்க்குளைய வகற்றுவரோ வன்புளரே.
(இவை மூன்றும் தாழிசை)

சினவழி யுளியுளி சிதைவுற முனிவினை
மனவழி யருடிருள் வழி நனி தயையினை
மருடரு மறுவற மனமுறை யொளியினை
யிருடரு வெளிற்ற மிருமறை யருளினை. (இது அராகம்)

இலங்கொளி வடிவினே யிணையி னின்றயை
யலங்கொளி மணிகொழித் தமிழ்த வேலையே
சீரளித் தனைத்தையுந் திளைக்கு நின்கொடை
பாரளித் தீறில பனித்த மாரியே. (பேரெண்)

மூவுல கனைத்தையு மொழிகொண் டரக்கினை
பூவுலக் குறைத்துளி பொழிந் தழித்தனை
யைந்நகர் கடுஞ்சினத் தழல தூறினை
முந்நக ரருட்கொடு முகிள நோக்கினை. (அளவெண்)

வான்ருேய் நயம் பயந்தோய் நீ
மண்டோய் துய ரொழித்தோய்நீ
தேன்ருே யருட் கடலோய் நீ
செல்தோய் மழைத் தயையோய் நீ. (இடையெண்)

அருவ மைந்தனே
யுருவ மைந்தனே
வான்று றந்தனே
வான்றி றந்தனே

பழிவி லக்கினை
வழிது லக்கினை
யறத்தி ஞழியை
திறத்தி ஞழியே (சிற்றெண். இவை அம்போதரங்கம்)
எனவாங்கு (இது தனிச்சொல்)
கோடிய வென்குறை கொண்டெனை யொருவர
வாடிய வென்னுயிர் வாழ்ந்
தோடிய நின்னடி சேர வருள்தியே. (இது சுரிதகம்)

234 கொச்சகக்கலி ஐங் கூறுபாடு எனத்
தரவே தரவிணை தாழிசை சில பல
சில பிறழ்ந்து உறழ்ந்தும் சில மயங்கியும் ஆம்.

கொச்சகக் கலிப்பா வகைகள் ஐந்தையும் உணர்த்துகின்றார். தரவு, தரவிணை, சிஃறாழிசை, பஃறாழிசை, மயங்கிசை என்பன அவை.

235 வெண்கலிக்கு அளவடி பலதளை பலதொடை
மண்டி ஈற்று அசைச்சீர் வந்து சிந்தடியாம்
கலிவெண்பா வெண்கலி என நடப்பினும்
வலி வெண்தளை தவா வரவும் பலதொடை
நேரிசை வெண்பா நேரவும் பெறுமே.

வெண்கலிப்பாவும் கலிவெண்பாவும் உணர்த்துகின்றார். வெண் கலிப்பா அளவடியாய், ஈற்றடி அசையாலிறும் முச்சீரடியாய், பல தளையும் தொடையும் விரவிவரும். கலிவெண்பா, வெண்டளையே பெற்றுவந்து வேறுபடும்.

236 கட்டளைக் கலிப்பாக் காட்டும் காலை
ஒரு மாக் கூவிளம் ஒருமூன்று இயைய
நேர் பதினொன்று நிரை பன்னீர் எழுத்து ஆய்
நடந்து அடி பாதி ஆய் நான்கு அடி ஒத்தவாய்
வருவது இன்று வழங்கு நெறியே.

கட்டளைக் கலிப்பா ஆமாறு உணர்த்துகின்றார். இரட்டை அடியாய் ஒவ்வொரு பாதி, சீர்வகையால் தேமா வாயினும் புளிமா வாயினும் வந்து, மூன்று கூவிளம் கூட்டி நாற்சீராகவும், எழுத்து வகையான் ஒவ்வொரு பாதி, நேரசை முதலாயின் பதினொன்று எழுத்தும், நிரையசை முதலாயின் பன்னீரெழுத்தும் வரப் பெறும்.

237 வஞ்சிக்கு ஓசை வழங்கும் தூங்கலே
தன்சீர் தன்தளை தவிர்ந்து பிறபெறும்

குறள் அடி சிந்தடி கொண்டு மூவடி
குறையா மூன்றன் மேல் கூறில் பெருகத்
தனிச் சொல்லும் அகவலும் தழுவலோடு இறுமே.

வஞ்சிப்பாவின் இலக்கணம் உணர்த்துகின்றார். தூங்கல் ஓசை வஞ்சிக் குரியது. வஞ்சிச்சீரும், வஞ்சித்தளையும் அவற்றொடு பிற சீர், தளைகளும் பெற்று, குறளடி சிந்தடிகளால் ஆகிவரும் வஞ்சிப்பா. மூன்று அடி குறைவாகப் பல அடியால் வரும் இப்பா தனிச்சொல்லும் அகவல் சுரிதகமும் பெற்று முடியும்.

சீர் விளக்கிய செல்வியாப்
பார் விளக்கிய பாவையே
தென்காவிரி திரண்டொலிப்ப
மன்காவிரி மலர்கமழப்
பூந்தாதகி புடைநிழற்ற
தீந்தாதகிற் றினைக்குளிர்ப்ப
வருட்காவலூர்ந் தமைந்தளிப்பத்
திருக்காவலூர் சேர்ந்தனளே
சேர்ந்தபின்
ஞானேபூண் பழிநைய வெண்மதி
தானேபூண் பதந்தான் தாராளோ
திருவடி யொளியுளந் தெளிவுறக் கண்டாற்
கருவடி யிருளறக் கண்டு
மருவடி மலரடி வான்கதி யந்தமே.

238 மருட்பா வெள்ளை வந்த பின் அகவல்
ஈற்றின் மருளும் இயல்பு உடைத்து என்ப.

மருட்பா இலக்கணம் உணர்த்துகின்றார்: வெண்பாவில் தொடங்கி, அகவலில் முடியும் வண்ணம் இருபாவும் மருளும் இயல்புடையது மருட்பா.

வைக லெனவந்து மன்னுயிரார் கங்குலறும்
வைகலைச்செய் தேயொளியேன் வாய்த்துயிர்த்தே -
வைகினள்
காவலூருறை காதலார் துறை
யோவலீர்கிளி யோதியா ரொளி
தெளித்த நூலி திறத்த சீலி
களித்த மாலை கயத்த வேலை
மந்திர மறைமொழி மண்டல குறையொழி
சந்திர வடியினர் சந்துடு முடியினள்
காத ஞயகி கதிதரும்
வேத நாயகி மெல்லடி பணிவமே.

239 துறை தாழிசை விருத்தம் தூக்கினம் மூன்றனுள்
வெண் செந்துறை குறள் வெண்பா இனமாய்ச்
சீர் தளை அடி எலாம் சேர்ந்து விரவினும்
ஒத்து அடி இரண்டாய் ஒழுகும் மற்ற
வெண்துறை அன்னவை விரவினும் மூன்று அடி
ஆதி ஏழு அடி அந்தம் ஆய் ஈற்றில்
சில அடி தம் சீர் சில குறைந்து இறுமே.

பாவினம் மூன்றுள், சில வெண்பா இனம் உணர்த்துகின்றார்; குறள் வெண்பாவின் இனம் வெண்செந்துறை. எச் சீரானும், எத்தளையாயினும் எவ் அடியானும் வந்து, இரு அடி தம்முள் அளவொத்து வரும்.

மீனே வேய்ந்த செல்வி மெல்லடி
நாளே ஏத்தி நாளும் சூடுவேன்.

வெண்துறை, சீர் தளை அடி விரவி, மூன்றடி முதல் ஏழடி வரை வந்து, ஈற்றடி சில அளவு குறைந்து வரும்.

240 ஆசிரியத்துறை அளவி சீர் வரும்
அடி நான்கு ஈற்று அயல் ஆதி குறைநவும்
இருவழி இடைமடக்கினவும் நால் வகைய.

ஆசிரியத்துறை சீர் வரையறை இல்லாது நான்கு அடியாய் வந்து ஈற்றயலடி குறைந்து வரலும், ஈற்றயல் குறைந்து இடை மடக்கலும், முதலும் ஈற்றயலும் இடையிடை குறைந்து வருவனவும், இடையிடை குறைந்து இடைமடக்காய் வருவனவும் என நால்வகை ஆகும்.

பனிக்கால மெக்காலம் பட்டாற்று யென்றன்றே
வினிக்காதல் களித்துவப்ப விளைவேனில் வாராதோ வென்றனே நெஞ்சே
யினிக்காதல் களித்துவப்ப விளைவேனில் வந்தகன்று
துனிக்கால முதிர்வேனிற் சுடச்சுடவந் துற்றதினி யென் செய்வாய் நெஞ்சே.

241 கலித்துறை நெடில்அடி நான்கு ஒத்து அவற்றுள்
இடைநேர் வெண்சீர் இயறசீர் முதல் நான்கு
இடைநிரை வெண்சீர் இறுதிச்சீர் மோனையாய்க்
கடையே கொண்டு இறும் கட்டளைக் கலித்துறை.

கலித்துறை, கட்டளைக் கலித்துறை ஆமாறு உணர்த்துகின்றார்; நெடிலடி நான்கு ஒத்து வருவது கலித்துறை. கட்டளைக் கலித்

துறையின் முதல் நான்கு சீரும் இயற்சீரும், இடையே நேர் வரும் வெண்சீருமாக வர, ஐந்தாம் சீர் நிரையசை இடையில் வரும் வெண்சீராக வந்து, முதற்சீரும் ஐந்தாம் சீரும் மோனைத் தொடர்பு பெற்று இயலும்.

கந்தாரம் பாடிக் களித்தாடும் வண்டினங் காமுறுபூஞ்
சந்தார நாறு நிழற்சோலைக் காவலூர் தங்கியவா
னிந்தாரம் பூண்ட திருவடி கண்டேத்த வெவ்வுயிரும்
வந்தாரக் காண்பேனோ வானலங் கொண்டார வையகமே.

242 வஞ்சித்துறை குறள் அடி நான்கு ஒத்ததே.

நான்கு குறளடி அளவொத்து வருவது வஞ்சித்துறை.

பேரறி வன்னுன்
சார விருந்த
வூரினு மில்லென்
றுர விகழ்ந்தே.

243 குறள் தாழிசை ஒலி குன்றும் குறளும்
அந்தடி குறைதலும் செந்துறைச் சிதைவுமாம்
வெண் தாழிசை எனில் வெண்சிந்தியல் போல்
அண்டாப் பிறதளை அணைந்து வருமே.

குறட்டாழிசையும் வெண்டாழிசையும் உணர்த்துகின்றார். குறட்டாழிசை மூவகைப்படும் - சந்த ஓசை குறைந்து வரும் குறள் வெண்பா, ஈற்றடி குறைதல், செந்துறையின் சிதைவு ஆகியன.

தூற்றுவாய் மதுமலர்காச் சூழ்ந்த காவலூர் நாயகி
யேற்றுவர் வினையாற்றி யிவனுள வெய்தினளே.

சிந்தியல் வெண்பாப்போல வந்து, பிற தளை விரவி வருவது வெண்டாழிசை.

நண்பி தென்று தீய சொல்லார்
முன்பு நின்று முனிவு செய்யா
ரன்பு வேண்டு பவர்.

244 அகவல் தாழிசை அடி மூன்று ஒத்தவாய்
அடுக்கிய மூன்றும் ஒன்று ஆகியும் வருமே.

அகவல் தாழிசை மூன்றடி அளவொத்துத் தனித்தும் மூன்று அடுக்கியும் வரும்.

மீனுடை முடியினை வெண்மதி யடியினை
பானுடை வடிவினை பாரொருங் கோம்பினை
வானுடை அரசிநின் மலரடி தொழுதனம்.

245 கலித் தாழிசையே கடையடி மிக்கு மற்று
அடி எனைத்து ஆகியும் அளவு ஒத்து ஒவ்வாது
ஒருமூன்று அடுசகியும் ஒன்றுமாய் வருமே.

ஈரடி முதலாய்ப் பல அடியானும் வந்து, ஈற்றடி மிக்கு, பிற அளவு ஒத்தும் ஒவ்வாதும் வருவன கலித்தாழிசை. இவையும் தனித்தும் ஒரு பொருள்மேல் மூன்று அடுக்கியும் வரும்.

இருகூற் றுருவத் திருந்தண் பொழிற்றில்லை
யொரு கூற்றின் கூத்தை உணராய் மடநெஞ்சே
யொரு கூற்றின் கூத்தை யுணரா யெனின்மற்றப்
பொரு கூற்றந் தோற்றப் புலம்பேல் வாழி மடநெஞ்சே;

246 வஞ்சித் தாழிசை வரும் குறளடி நான்கு
ஆகித் தான் மூன்று ஆய் அடுக்கும் ஓர் பொருளே.

குறளடிகள் நான்கு, ஒரு பொருள் மேல் மூன்றாக அடுக்கி வருவது வஞ்சித்தாழிசை (தனித்துவரின் வஞ்சித்துறையாய் விடும்).

பருந்துலவப் பார்ப்பினைத்தாய்
பரிந்திறகாற் பகை மறைக்கும்
பெரும்பழியா னெந்தனமே
லிரங்குந்தாய் மனனேகாண் ;
எரிபகரு யிளம்பார்ப்பை
விரிசிறகால் வெயின்மறைக்கும்
விரகத்தா னெந்தனமேற்
பரியுந்தாய் மனனேகாண் ;
இடிந்துழித்தா யிரும்பார்ப்பைக்
கடிச்சிறகான் மழை மறைக்கு
மிடுக்கணு னெந்தனமே
லடுக்குந்தாய் மனனேகாண்.

247 விருத்தம் என்பது விரவிய எல்லாச்
சீரும் அடியும் சிதையாக் கொளினும்
அவை ஒத்தனவாய் அடிநான்கு அணையுமே
மாவிளங்காயே வஞ்சிச்சீர் இடையும்
பொதுச்சீர் இடையும்புணர் மாவிளம் இவை
ஒப்ப வரின சீர் ஒப்புமை ஆகும்.

விருத்த இலக்கணம் உணர்த்துகின்றார். விருத்தம், எல்லாச் சீராலும் அடியாலும் நடக்கும். ஆயின் அளவொத்த சீருடனும் நான்கு அடிகளுடனேயே இயலும். சீர் ஒப்புமையாவது, மாவீற்ற சீரி

ரண்டும் விளவீற்ற சீரிரண்டும் காயீற்ற சீர்நான்கும் தம்முள் ஒத்த சீர் எனப்படும். வஞ்சிச்சீரும் பொதுச்சீரும் தத்தம் இடை நின்ற மாவும் விளமும் பற்றி ஒப்புமை கொள்ளப்படும்.

248 விருத்த விகற்பம் விளக்கிய காலை
வஞ்சி சிந்தடி வரும்கலி அளவடி
அடிதொறும் தனிச்சொல் அணைவது வெள்ளை
அகவல் கழிநெடில் அடிகொள் விருத்தமே.

சிந்தடி நான்கு அளவொத்து வருவது வஞ்சி விருத்தம். அவ்வாறே அளவடியால் வருவது கலிவிருத்தம். இவ்வாறு வந்து அடிதோறும் தனிச்சொலொன்றை ஈற்றில் பெறுவது வெள்ளை விருத்தம். கழிநெடிலடியாலாவது ஆசிரிய விருத்தம்.

ஆலைவா யடுங்கழைத் தேனுஞ்
சோலைவாய்ச் சுவைக்கனித் தேனு
மாலைவாய் வழிமலர்த் தேனும்
வேலைவாய் மடுப்பமீன் மேயும். (வஞ்சி விருத்தம்)

தீய்முகத் திணங்கிலா தில்லைச் செஞ்சுடர்
காய்முகத் திருளிலைக் கழுமுந் நீத்தமே
பாய்முகத் தணியிலை யன்பு பற்றிய
வாய்முகத் தரியதோர் வருத்தமில்லையாள்.(கலிவிருத்தம்)

அங்கட் கமலத் தலர்கமல மேயீரு - நீரேபோலும்
வெங்கட் சுடிகை விடவரவின் மேயீரு - நீரேபோலும்
திங்கட் சடையீருந் தில்லைவனத் துள்ளீரே-நீரேபோலும்.
(வெள்ளை விருத்தம்)

மணிபுரை யரும்பி வான்மீன் வடிவொடு மலர்ந்து வெண்முத்
தணிபுரை மணங்கொ டேன்மெய் யழகல ரன்று வாடித்
துணிபுரை கீழ் வீழ்ந்தாய் தூளினைக் கழன்றுஞ் சென்மப்
பிணியுரை பிணித்த யாமோ பேர்கிலா வாழ்து மென்பாம்.
(ஆசிரிய விருத்தம்)

249 சந்த விருத்தம் தம்முள் ஒத்து எழுத்து அசை
வந்து ஒலி பற்றி வரும் உள பிறவே.

எழுத்து வகையானும் அசை வகையானும் இயையும் பிறிதொரு வகை, சந்தவிருத்தம் எனப்படும். ஓசை இயைபு காரணமாகச் சந்தம் எனும் பெயர் பொருந்தும். எனவே எழுத்துச் சந்த விருத்தமும் அசைச்சந்த விருத்தமும் என இது இருவகைப்படும்.

250 பத்தியம் என்ப பாவொடு பாவினம்
கத்தியம் அவைபோல் கலை அல்லனவே

வண்ணம் என்ப வலி மெலி இடை ஒழுகு
எண் உருட்டென முடுகு ஏந்தல் தூங்கல்
அகைப்புப் புறப்பாட்டு அகப்பாட்டு அளபு
பாவு நலிவு தரவு ஒரூஉக்
குறில் நெடில் சித்திரம் கூறுபாடு இருபதே;

பா, பாவினங்கட்குப் பொதுவிதி உணர்த்துகின்றார். மேற்கூறிய இலக்கண வகையான், பா ஐந்தும், பாவினம் மூந்நான்குமாகப் பதினேழு வகைச் செய்யுளும் பொதுப்பெயராக வடமொழியால் பத்தியம் என்று வழங்கும். இலக்கணம் சிதையினும் இலக்கணப் பாவின் நடையோடு ஒப்ப வருவன எல்லாம் கத்தியம் எனப்படும்; கொன்றை வேந்தன் முதலாயின கத்தியம்.

இருபது வகை வண்ணம் இவையிவை என உணர்த்துகின்றார்.

### செய்யுண் மரபியல்

251 செய்யுள் தெரிவுற முத்தகம் குளகம்
தொகை தொடர்நிலை எனத் தொகுதி நான்கு
அவற்றுள்
முத்தகம் தனித்து ஆய் முடியும் செய்யுளே.

செய்யுள் வகையும் இயலும் தன்மையும் உணர்த்துகின்றார். முத்தகம், குளகம், தொகைநிலை, தொடர்நிலை எனச் செய்யுள் நான்கு. முத்தகம் தனியேநின்று ஒருபொருளைப் பயின்று முடியும்.

மூவா முதலா மூவாளோர் முதலோனைத்
தாவாதோர் மூவுலகுந் தாழ்ந்தேற்றத் - தூவாத
பாவடியைப் பாடிப் பரகதி நாம் சேரச்
சேவடியைச் சேர்ந்தும் தொழுது.

252 குளகம் ஒருவினை கொள்ளும் பல பாட்டே;

ஒவ்வொரு பாட்டும் தனியே வினை கொள்ளாமல், பலவே கூடி ஒரு வினை கொண்டு முடிவன குளகச் செய்யுள்.

253 தொகைநிலைச் செய்யுள் தோன்றக் கூறின்
ஒருவன் உரைத்தவும் பல்லோர் பகர்ந்தவும்
பொருள் இடம் காலம் தொழில் என நான்கினும்
பாட்டினும் அளவினும் கூட்டியது ஆகும்.

தொகைநிலைச் செய்யுள் பல்வகைப்படும். ஒருவன் உரைத்தது - திருவள்ளுவப்பயன்; பல்லோர் உரைத்தது - நெடுந்தொகை.

பொருளால் தொகுக்கப்பட்டது - புறநானூறு. இடம் - களவழி நாற்பது. காலம் - கார் நாற்பது. தொழில்-ஐந்திணை ஐம்பது; பாட்டு - கலித்தொகை. அளவு - குறுந்தொகை.

254 தொடர்நிலைப் பொருளினும் சொல்லினும் ஆகும்
பொருள்தொடர்நிலை தன் பொருள் தரத் தானே
பற்பல பாட்டாய்ப் பயனில் தொடரும்
சொல்தொடர்நிலை எனில் தூக்கு அந்தாதியே.

பலபாட்டு ஆகிப் பொருளானும் சொல்லானும் தொடர்ந்து ஒருப் பட வருவன தொடர்நிலைச் செய்யுளாம். இவற்றுள் ஒரு பொருளை விளக்கத் தம்முள் தொடர்ந்து வரும் பலபாட்டே பொருள் தொடர்நிலைச் செய்யுள் என்ப - இராமாயணம் சிந்தாமணி; செய்யுள் அந்தாதியோடு தொடுத்து வருவன சொற்றொடர்நிலைச் செய்யுள் என்ப - கலம்பகம்.

255 பொருள்தொடர்நிலையே புகலிற் காப்பியம்
பெருங்காப்பியம் எனப் பிரிவு இரண்டு அவற்றுள்
காப்பியம் அறம் முதல் நான்கில் குறைநவும்
புராணம் பற்கதை புனைநவும் என்ப.

பொருள்தொடர்நிலை, காப்பியம் பெருங்காப்பியம் என இரு வகைத்து. காப்பியம் என்பது, அறம் முதலிய நான்கில் குறைந்து வருவனவும், பலகதை கூறும் புராணமும் என இருவகையாம்.

256 பெருங்காப்பிய நிலை பேசுங்காலை
வாழ்த்து வணக்கம் வருபொருள் இவற்றின் ஒன்று
ஏற்புடைத்தாக முன் வர இயன்று
நால் பொருள் பயக்கும் நடை நெறித்து ஆகித்
தன்னிகர் இல்லாத் தலைவனை உடைத்தாய்
மலை கடல் நாடு வள நகர் பருவம்
இரு சுடர் தோற்றம் என்று இனையன புனைந்து
நன்மணம் புணர்தல் பொன்முடி கவித்தல்
பூம்பொழில் நுகர்தல் புனல் விளையாடல்
தேம்பிழி மதுக்களி சிறுவரைப் பெறுதல்
புலவியில் புலத்தல் கலவியில் களித்தல் என்று
இன்னன புனைந்த நல் நடைத்து ஆகி
மந்திரம் தூது செலவு இகல் வென்றி
சந்தியில் தொடர்ந்து சருக்கம் இலம்பகம்
பரிச்சேதம் என்னும் பான்மையின் விளங்கி

நெருங்கிய சுவையும் பாவமும விருமபக்
கற்ருேர் புனேயும் பெற்றிய என்ப
கூறிய உறுப்பில் சில குறைந்து இயலினும்
வேறுபாடு இன்று என விளம்பினர் புலவர்.

பெருங்காப்பிய இலக்கணம் உணர்த்துகின்ருர்.

257 பிள்ளைக் கவியின் பெற்றியைக் கூறச்
சுற்ற வகுப்பொடு தெய்வம் கொலே காப்ப
ஒற்றைப்பட மூன்று ஆதி மூஎழு
ஈறு ஆய் மதியினும் ஐந்து எழு ஆண்டினும்
காப்புச் செங்கீரை தால் சப்பாணி
முத்தம் வாரானே அம்புலி சிறுபறை
சிற்றில் சிறுதேர் ஆடவர்க்கே கடை
மூன்று ஒழித்து அரிவையர்க்கு ஆம் கழங்குஅம்மானே
ஊசல் என்று இவை அவ் இரு பாற்குப்
பத்து உறுப்பாய் ஒவ்வொன்று விருத்தம்
பப்பத்தாகப் பாடல் என்ப.

பிள்ளைக்கவி என்னும் பிரபந்த இலக்கணம் உணர்த்துகின்ருர் பிள்ளை பிறந்த மூன்ரும் மாதம் முதற்கொண்டு இருபத்தொன்று எல்லையாக ஒற்றைப்படையான பத்து மாதங்களிலும் ஐந்து ஏழு ஆண்டுகளிலும் பாடுவர். காப்பு முதலிய பத்து உறுப்பு ஆடவர்க்கும் இறுதி மூன்றில் கழங்கு, அம்மானே ஊசல் பெண்பாற்கும் உரியன. உறுப்பு ஒன்று பத்து விருத்தத்தால் வரும்.

258 கலம்பகத்துள் புயம் கைக்கிளைத் தவமே
காலம் வண்டு அம்மானே காற்றுப் பாணன்
குறம் சித்து இரங்கல் குளிர் தழை சம்பிரதம்
மறம் தூது ஊசல் மதங்கம் மடக்கு என
விரவி மூவாறும் வேண்டும் உறுப்பா
ஒருபோகு வெண்பாவுடன் கலித்துறை இவை
நிரையே முதற்கண் நின்று பின் கலந்த ஐம்
பாத் துறை விருத்தம் அந்தாதி வருமே
வந்தால் ஈசர்க்கு வரும் நூறு முனி மெய்யர்க்கு
ஐந்து அஃதும் அரசர்க்காம் தொண்ணூறும்
அமைச்சர்க்கு எழுபதும் ஐம்பதும் வணிகர்க்கு
அமைந்த ஏனேயோர்க்கு ஆறைந்து அளவே

கலம்பக இலக்கணம் உணர்த்துகின்றார். புயம் முதல் மடக்கு ஈறாக உள்ள பதினெண் உறுப்பும் கலந்து கலம்பகம் நடக்கும். ஒரு போகு வெண்பா கலித்துறை இவை நிரையே முதலில் வந்து பின் ஐம்பாவும் இனமும் கலந்து அந்தாதித் தொடையுடன் வரும். பாடல் தலைவருக்குத்தகப் பாடல் எண்ணிக்கை நூறு முதல் முப்பது வரை வேறுபடுகின்றது.

259 பரணிக்கு ஆயிரம் பகடு கொன்ற
தெரிவரும் தலைவனைத் தேவ வாழ்த்து ஆதி
கடை திறப்பும் கனல்காய் நிலம் பாலையும்
புடையில் காளி பொலிந்த கோயிலும்
பேயோடு காளி பேய்கள் காளியோடு
ஓயில உரைத்தலில் ஓர்ந்தவன் கீர்த்தி
புகறலும் அவன்வழி புறப்பொருள் தோன்றவும்
மிகவெம் சமரும் விரும்பலும் என்று இவை
அளவடி முதல் பல அடியான் ஈரடி
உள பஃறாழிசை உரைப்பது நெறியே.

பரணி யாமாறு உணர்த்துகின்றார். பரணித் தலைவன் ஆயிரம் யானை கொன்ற வீரன். கடவுள் வாழ்த்து, கடைதிறப்பு, பாலை வருணனை, காளி கோயில், பேயொடு காளியும் காளியொடு பேய் களும் உரைப்பதால் தலைவன் புகழ் விளங்கல், போர் என்பன பல தாழிசையால் வரும்.

260 உலா என மலை நதி உயர்நாடு ஊர் மாலை
குலாவிய பரி கரி கொடி முரசு உயர் கோல்
இயைந்த தசாங்கமும் ஏழ்பருவத்தார்
வியந்து தொழுதலும் வேண்டு உறுப்பாய் அக்
கலிவெண்பாவால் குலமகன் புகழ்தலே.

உலா இலக்கணம் உணர்த்துகின்றார். தலைவனுக்கு உரிய மலை நதி முதலிய தசாங்கங்களைப் பாடி, ஏழு பருவ மங்கையர் அவனை விழுந்து தொழுதலைக் கூறி, கலிவெண்பாவில் அமைவது உலா.

261 மடல் என்பது உலாப் போல் வழங்கினும் கண்ட
மடவார் மயலும் வரும் தலைமகன் பெயர்ப்
பட மாறா எதுகையும் பகர்தல் உரித்தே.

மடல் என்பது, உலா உறுப்பு அன்றிப் பாட்டுடைத் தலைவனைக் கண்ட மாதர்க்கு எழுந்த இனிய காதலும் மற்றோர் உறுப்பாகக்

கூட்டி, அவன் பெயர் எதுகையாகக் கொண்டு ஓர் எதுகையோடு பா வந்து உலாப் போல் கலிவெண்பாவால் வரல் மடலாம்.

262 அங்க மாலையே அங்க வகுப்பு எலாம்
பாதாதி கேசமும் கேசாதி பாதமும்
கலி வெண்பா வாதல் வெளிவிருத்தம் ஆதல்
வலிது எனப் புகழ்ந்து வகுத்த செய்யுளே.

கலிவெண்பாவால் ஆயினும் வெளிவிருத்தத்தால் ஆயினும் உடலிலுள்ள உறுப்புஎல்லாம், அடிமுதல் முடிவரை ஆயினும் முடி முதல் அடிவரை ஆயினும், ஒவ்வொன்றாக விரித்துப் புகழ்ந்து பாடல் அங்கமாலையாம்.

263 சின்னப்பூ எனத் தெளி நேரிசை வெண்பா
நூறுதொண்ணூறு எழுபது ஐம்பது ஆறைந்தும் ஆய்ப்
பாடித் தசாங்கம் பற்றிப் புகழ்வதே.

மலைமுதல் தசாங்கத்துப் பத்துப் பொருளையும், நேரிசை வெண்பா வால் நூறு முதலிய தரப்பட்ட எண்ணிக்கையுடைய பாடல் களில் பாடுவது சின்னப் பூவாம்.

264 ஒருபா ஒருபதாம் உரைப்ப அரும் வெண்பா
அகவல் கலித்துறை அவற்றுள் ஒன்றால்
பத்து எனப் பாடிப் பகுத்த செய்யுளே.

எப்பொருள் மேலும் பத்து வெண்பா ஆயினும், பத்து ஆசிரியம் ஆயினும், பத்துக் கலித்துறை ஆயினும் பாடிய செய்யுள் ஒருபா ஒருபது எனப்படும்.

265 இருபா இருபதாம் இணைந்த நால் ஐந்து ஆய்
வெள்ளை அகவல் விரவிப் பாடலே.

வெண்பாவும் அகவலும் முறையே கலந்து இருபது பாடலால் முடித்த செய்யுள் இருபா இருபதாம்.

266 ஆற்றுப்படை என்ப ஆற்று எதிர்ப்படுத்திய
புலவர் பாணர் பொருநர் கூத்தர்
பலபுகழ் அகவல் பாவொடு பாடலே.

அகவல் பாவால், எதிர்ப்பட்டு வழிப்படுத்திய புலவர், பாணர், பொருநர், கூத்தர் போன்றோர் பாடுவது ஆற்றுப்படையாம்.

267 வருக்க மாலையாம் வருக்க எழுத்துஎன
உயிரோடு கசதநபமவ என எண்
வரி முதல் வந்து வரும் எண் அகவலே;

கசதநபமவ எனும் மெய்யும், உயிரெழுத்தும் ஆகிய எட்டு எழுத்து வகைகளும், அடி முதற்கண் வந்து வழங்க எட்டு ஆசிரியப்பாவை எப்பொருள் மேலும் பாடுவது வருக்க மாலையாம்.

268 மாலையே அகவலால் வழங்கும் அவற்றுள்
தானை போர் வெற்றி தனித்தனி புகழ்வது
தானை வஞ்சி வாகை என மூன்றும்.

மாலை எனப் பெயர்பெறும் மூன்று இலக்கியங்களைச் சுட்டுகின்றார். ஆசிரியப்பாவால், நால்வகை வீரப்படையைப் புகழ்வது தானை மாலை எனவும், பகைவரைத் தாக்கச் செல்லும் வீரத்தைப் புகழ் வது வஞ்சிமாலை எனவும், பகைவரைச் செகுத்துக் கொண்ட வெற்றியைப் புகழ்வது வாகை மாலை எனவும் வழங்கும்.

269 புகழ்ச்சி மாலையாம் பூங் குழலாரை
இகழ்ச்சி இல் குலம் இயை வஞ்சி பாடல்
நாம மாலையாம் நம்பிகண் புகழ்தலே.

புகழ்ச்சிமாலை, நாமமாலை என்பனவற்றை உணர்த்துகின்றார். வஞ்சிப்பாவால் விளங்கித் தோன்ற மாதரைப் புகழ்வது புகழ்ச்சி மாலை எனவும் அங்ஙனம் ஆடவரைப் புகழ்வது நாமமாலை எனவும் வழங்கும்.

270 செருக்கள வஞ்சியாம் செருமுகத்து ஆயவை
சுருக்கிய வஞ்சி தொடுத்துப் பாடலே.

போர்க்களத்து ஆயின யாவும் தோன்றப் பற்பல வஞ்சிப் பாவொடு தொடுத்த செய்யுளே செருக்கள வஞ்சி எனப்படும்.

271 வரலாற்று வஞ்சியாம் வல் அறம் முதல் நான்கும்
வருமாறு உரைத்து வஞ்சிப் பாடலே.

அறம் பொருள் இன்பம் வீடு என நான்கும் ஆமாறு உணர்த்தி வஞ்சிப்பாவால் முடிந்த செய்யுள் வரலாற்று வஞ்சியாம்.

272 நான்மணி மாலையே நாற்பது அந்தாதி ஆய்த்
தண் மணிக்கு ஒத்தன தந்தன் மனவிருத்தமே.

ஆசிரிய விருத்தம் நாற்பது அந்தாதித் தொடையுடன், ஒவ்வொரு பாடலும் ஒவ்வரு மணிபோன்று அமைவது நான்மணி மாலையாம்.

273 விருத்த இலக்கணம் விளம்பும் காலைக்
குடை ஊர் நாடு கோல் பரி கரி வில் வடி
வாள் வேல் ஒன்பான் வகுப்பு மன விருத்தம்
ஈரைந்து அவ் அவற்று இயற்பெயர் கொள்ளுமே.

பாட்டுடைத் தலைமகனுடைய குடை, ஊர், நாடு, செங்கோல், குதிரை, யானை, வில், வடிவாள், வேல் ஆகிய ஒன்பது உறுப்பும் விளங்கித் தோன்றப் புகழ்ந்து ஒவ்வொரு வகுப்பிற்குப் பத்து ஆசிரிய விருத்தமாகப் பாடல் விருத்த இலக்கணம். ஒவ்வொரு உறுப்பைப் பாடும் நூலும் அவ்வப் பெயர்பெறும். குடைவிருத்தம், வேல் விருத்தம் போன்றன.

274 அட்ட மங்கலம் எட்டு மன விருத்தம்
கவி தொறும் தெய்வம் காப்ப என்று உரைப்பது
நவமணி மாலை அந்நடைய என்ப.

அட்டமங்கலம், நவமணி மாலை ஆகிய இரு இலக்கியங்களை உணர்த்துகின்றார். பாட்டுடைத் தலைவனைத் தெய்வம் காக்க என்று கவிதோறும் பாடும் எட்டு ஆசிரிய விருத்தம் அட்ட மங்கல மாம். நவமணி மாலை இந் நடைத்து ஆகி ஒன்பது பாடலால் வரும்.

275 பல சந்த மாலை பப்பத்து ஒரு சந்தம்
சில அந்தாதியாய்ச் செப்பும் மன விருத்தமே.

அந்தாதியாக நூறு ஆசிரிய விருத்தம் பாடி, பத்துப்பாடல் ஒரு சந்தமாக, வேறுபட்ட பத்துச் சந்தங்களில் தொடுத்த செய்யுள் பல சந்தமாலையாம்.

276 ஊசல் என்ப ஊசலாய்க் கிளை அளவு
ஆசிரிய விருத்தம் ஆகப் பாடலும்
தன் ஒலி வரும் கலித் தாழிசைப் பாடலும்
வண்ணகம் முதற்கண் வரினும் இயல்பே.

ஊசலைப் பாடிப் பாட்டுடைத் தலைமகனது சுற்றத்தார் அளவாக ஆசிரிய விருத்தம் ஆயினும் கலித்தாழிசை ஆயினும் பாடுவது ஊசல் எனப்படும். அவற்றின் முதலில் வண்ணகம் ஒன்று வரினும் இயலும்.

277 கோவையே அகப்பொருள் கூறுபாடு இசைப்பட
நாவலர் கலித்துறை நானூறு உரைத்தலே.

பொருள் அதிகாரத்தின் கண்ணே காட்டிய தன்மையில் களவு

கற்பு என இரு பகுதியையுடைய அகப்பொருள் திணைகள் ஏழும் விளக்கிக் கலித்துறை நானூறாகப் பாடல் கோவையாம்.

278 இரட்டை மாலையாம் இணைந்த பப்பத்தாய்
வெண்பா கலித்துறை விரவிப் பாடலே.

எப்பொருள் மேலும் முறையே கலந்த பத்து வெண்பாவும் பத்துக் கலித்துறையும் வருவது இரட்டை மாலையாம்.

279 மணிமாலை வெண்பா வகை நால் ஐந்துடன்
இணையாய்க் கலித்துறை இரட்டைப் பாடலே.

வெண்பா இருபதும் கலித்துறை நாற்பதும் கலந்து வருவது மணிமாலை எனப்படும்.

280 பன்மணி மாலை பன்னிற் கலம்பகத்து
ஒருபோகு அம்மானை ஊசல் இவை நீத்து
அகவல் வெள்ளை அரும் கலித்துறை என்று
அவை செறி நூறு அந்தாதியாய் வருமே.

மேலே காட்டிய கலம்பகத்தின் முதலில் வரும் ஒருபோகும், அம்மானை ஊசல் எனும் உறுப்புக்களும் ஒழித்து, பிற உறுப்புக் கள் வந்து, அகவல், வெண்பா, கலித்துறை என்பன பாவாகி, நூறு பாடல் அந்தாதித்து வருவது பன்மணிமாலை.

281 மும்மணிக் கோவையே முப்பது அந்தாதி ஆய்
அகவல் வெள்ளை கலித்துறை முறை வரும்
மும்மணி மாலையாம் முறைமாறி வெள்ளை
கலித்துறை அகவல் கதி பெறும் செய்யுளே.

மும்மணிக்கோவையும் மும்மணிமாலையும் உணர்த்துகின்றார்; அந்தாதி பெற்ற முப்பது பாடல், அகவல் - வெண்பா - கலித் துறை என்ற முறையில் வருவது மும்மணிக்கோவை. அம் முறை மாறி, வெண்பா — கலித்துறை — அகவல் என அமைவது மும் மணி மாலையாம்.

282 இணைமணி மாலை இணை வெண்பாக் கலித்துறை
அகவல் மன விருத்தம் தொடர்ந்து நூறு இயம்பலே
அலங்கார பஞ்சகம் அந் நால்வகைப் பாக்
கலந்து அவ்ஐந்து ஆய்க் கதிபெறப் பாடலே.

இணைமணிமாலை, அலங்கார பஞ்சகம் ஆகிய இரு இலக்கியங்களை விளக்குகின்றார். வெண்பா, கலித்துறை, ஆசிரியம். ஆசிரிய விருத்தம் ஆகியன நான்கும் இணைந்து நூறு பாடலாய் வருதல்

இணைமணிமாலை. அந் நான்கு பாவும், வகைக்கு ஐந்தாகக் கலந்து வருவது அலங்கார பஞ்சகமாம்.

283 பாப் பொருள் அளவு ஆதி பலபெயர் உள பிற.

மேற்கூறியன அன்றிப் பாவாலும், பொருளாலும் அளவாலும், பிற காரணங்களாலும் வேறுபடப் பெயர் பெறுவனவும் உள: பா — ஆசிரிய மாலை; பொருள் — இனியவும் இன்னாவும் பாடும் இருமொழி மாலை; அளவு — நயனப்பத்து, இனியவை நாற்பது. பிற என்ற மிகையால், ஐந்திணைச் செய்யுள், வருக்கக்கோவை, அநுராக மாலை பெருமகிழ்ச்சி மாலை, மெய்க்கீர்த்தி மாலை, காப்பு மாலை வசந்தமாலை, உற்பவமாலை, வீரவெட்சிமாலை, தண்டகமாலை போன்று சுமார் ஐம்பது வகைகளை உரையில் தருகின்றார்.

284 முதன்மொழிப் பொருத்தம் தந்திடும் காலை
மங்கலம் சொல் எழுத்துத் தானம் பால் உணாக்
கங்கில் வருணம் நாள் கதி கணம் ஈர்ஐந்தே.

செய்யுட் கெல்லாம் முதன்மொழியில் பொருந்த வேண்டியனவாக, விதிக்கப்பட்ட பத்துப் பொருத்தங்கள் மங்கலம் முதலியனவாம்.

285 மங்கலப் பொருத்தமே கங்கை மலை நிலம்
கார் புயல் பொன் மணி கடல் சொல் கரி பரி
சீர் புகழ் எழுத்து அலர் திங்கள் தினகரன்
தேர் வயல் அமுதம் திரு உலகு ஆரணம்
நீர் பிற வரும் முதல் நிலைச் சொல் இயல்பே.

பாடலின் முதலில், மங்கலச் சொல்லாகிய மேற்கூறிய சொற்கள் இருபத்து நான்கும் வரல் இயல்பு பிற என்றமையால் இவை யொழிய வேறும் வரலாம்.

திங்களைப் போற்றுதும் — சிலம்பு.
உலகம் யாவையும் — கம்பன்.

286 சொல்லின் பொருத்தம் சொல்லும் காலை
அரிது உணர் சொல்லும் அரும் திரிசொல்லும்
திரிபு உடைச் சீரும் தீதுஆம் முதற்கே.

சொல்பொருத்தம் உணர்த்துகின்றார். கற்றோராலும் எளிதில் புலப்படாச் சொல்லும், பல பொருள் குறித்துப் பொருள் மயக்கம் உருவாக்கும் திரிசொல்லும், முதல் சீர் ஈற்றெழுத்தே சந்தி வகையால் திரிந்த சொல்லும், பாடலின் முதற்கண் வரின் தீதாம்.

287 எழுத்தின் பொருத்தமே எழுவாய்ச் சீர்க்கண் மூன்று
ஐந்து ஏழு ஒன்பது வியநிலை நன்று ஆம்
இரண்டு நான்கு ஆறு எட்டுச் சமநிலை வழுவாம்.

முதற்சீராக அமையும் சீரின்கண் உயிரும் ஒற்றும் உயிர்மெய்யும் எண்ணினால் மூன்று ஐந்து ஏழு ஒன்பது ஆகிய ஒற்றைப்படை எண்கள் வரின் நன்றாம். இரட்டையாக வரின் தீது.

288 தானமே
குறில் நெடில் தம்முள் இணைந்து இ உவ் உடன்
ஐ ஒளவும் சேர்புழி ஐந்து ஆம் அவற்றுள்
தலைமகன் இயற்பெயர் தானம் முதலாப்
பாலன் குமரன் இராசன் மூப்பு
மரணம் முறை எண்ணி வரும் முதல்எழுத்தின்
தானம் ஈற்று இரண்டு எனில் தவிர்க என்ப.

குற்றெழுத்து ஐந்தையும் அவற்றவற்று ஒத்த நெடிலையும் கூட்டி, இ வரும் தானத்தில் ஐயையும், உ வருமிடத்து ஒள வையும் சேர்த்தால் ஐந்தானம் ஆகும். பாட்டுடைத் தலைவன் இயற்பெயர் முதலெழுத்தின் தானம் முதற்கொண்டு எண்ணி, முறையே ஐந்து தானங்களுக்குப் பாலன், குமரன், இராசன், மூப்பு, மரணம் என்னும் ஐம்பெயர் இட்டு, மங்கலச்சொல் முதல் எழுத்து மூப்பு,மரண தானங்களில் வராது காத்தல் வேண்டும்.

இராமன் — இகரம் பாலதானம்; உலகம் — எனும் கம்பராமாயண முதற்சொல் உகரம் குமரதானம் எனவே பொருந்தும்.

289 பால் எனக்
குறில் ஆண் நெடில் பெண் மற்று உயிர் ஆண் உயிர்
மெய் பெண் என்மரும் உளரே அவைதாம்
பா இயல் கெடினும் ஆம் மற்றவை அலியே.

குற்றெழுத்தெல்லாம் ஆண்பால் எனவும் நெடிலெழுத்து எல்லாம் பெண்பால் எனவும் கூறுவர். அன்றி, உயிரெல்லாம் ஆண் எனவும் உயிர்மெய் பெண் என்று கூறுவோரும் உளர். பிற எழுத்து— ஒற்று, ஆய்தம்-அலியாம். ஆடவரைப் புகழ ஆண்பால் எழுத்தும், பெண்டிரைப் புகழப் பெண்பால் எழுத்தும் முதலில்வரின் பால் ஒன்றிச் சிறப்பாம் ஆயினும் அவையே மயங்கி வரினும் இழுக்காகா.

290 உணவு எண்
அ இ உ எ கச தந பமவ என்று

அமுது எழுத்து ஆகி ஆதிச் சீர்க்கும்
தசாங்கத் தயற்கும் தருவன என்ப
யாயோ ராரோ லாலோ அவற்று ஒற்றும்
அளபெடை மக்குறள் ஆய்தம் நஞ்சு எழுத்தே;

இங்குக் கூறிய நாலுயிரும் ஏழு ஒற்றும் அமுது எனப்படும். இவை முதல் சீருக்கும், மலை முதல் மேற்காட்டிய தசாங்கத் தயற்கும் ஆகும். யரல எனும் மூவொற்றும் யா முதல் இங்குக் கூறிய ஆறு உயிர் மெய்யும், அளபும், மகரக் குறுக்கமும், ஆய்தமும் நஞ்சாகி, மேற்கூறிய விடத்து வாரா.

291 வருணப் பொருத்தமே வரும் உயிர் அடங்கலும்
கம் முதல் ஆறும் கைசிகர்க்கு ஆகும்
தம் முதல் ஆறும் தகும் மன்னவர்க்கே
லவறன லணிகர்க்கு ஆம் ளச் சூத்திரர்க்கே
இம்முறை நஞ்சு எழுத்து இயலினும் இழுக்கா.

ஒவ்வொரு வருணத்துக்கு உரிய எழுத்து இவை இவை எனப் பிரிக்கின்றார். இம்முறையோடு, நஞ்சு என விலக்கின எழுத்து வரினும் வழுவன்று எனக் கொள்க.

292 நாளின் பொருத்தம் நவிலும் காலை
நான்கும் ஐந்தும் மூன்றும் ஆய்ப் பிரிஉயிர்
கார்த்திகை பூராடம் உத்திராடம்மே
கவ்வரி நான்கு இரண்டு இருமுறை மூன்று இவை
ஓணம் ஆதிரை முறை இரு பூசமே
சவ்வரி நான்கு ஐந்தும் தகும் கடை மூன்று என
அவ் அவை இரேவதி அசுவதி பரணியே
ஞவ்வரி ஞாஞே ஞொவ்வாம் அவிட்டமே
தவ்வரி இரண்டு ஏழு தன்கடை மூன்று
சோதி விசாகம் தூயோன் இச் சதையமே
நவ்வரி ஆறும் நண்ணும் இரு மூன்றும்
பொன்பனை கேட்டை பூரட்டாதியே
பவ்வரி நான்கும் பின்பகர் இரண்டு ஆறு
என உத்திரம் அத்தம் மௌளி சித்திரையே
மவ்வரி ஆறும் மற்று இருமூன்றும்
மகம் ஆயிலியம் மகம்தொடர் பூரமே
யயா உத்திரட்டாதி யூயோ மூலமே

வவ்வரி நந்நான்கு உரோகணி இந்திரன்
அவ்அவ் எழுத்திற்கு அவ்வகை குறித்தபின்
நாள் மூ ஒன்பது ஆம் நாயகன் இயற்பெயர்
நாள் முதல் மங்கலம் நவில் சொல் ஈறு
எண்ணி இரண்டு நான்கு ஆறு எட்டு ஒன்பது ஆம்
அன்றி ஒன்று மூன்று ஐந்து ஏழு ஆகா.

ஒவ்வொரு எழுத்திற்கும் உரிய நட்சத்திரங்கள் இவையிவை என இந்நூற்பா வகுக்கின்றது. நாயகன் இயற்பெயர் ஆதி எழுத்தின் நாளே முதற்கொண்டு ஒன்பது ஒன்பதாக எடுத்த மங்கலச்சொல் முதலெழுத்து நாளளவும் எண்ணி, இரண்டும் நான்கும் ஆறும் எட்டும் ஒன்பதும் நல்லன எனவும், ஒன்று மூன்று ஐந்து ஏழு ஆகி யன தீது எனவும் கொள்க.

293 கதியின் பொருத்த விதியைக் கூறில்
ஒவ் ஒழி குறிலே றவ் ஒழி வலியே
செவ்விது ஆகும் தேவர் கதியே
னவ் ஒழி மெலியே நெடில் முதல் நான்கும்
வவ்வல ஆஃது ஆகும் மக்கள் கதியே
ஒஓ யரல ழறவும் விலங்கின் கதியே
ன வ ள ஐ ஔவும் நரகர் கதியே.

எழுத்துக்களைத் தேவர், மக்கள், விலங்கு, நரககதி என நான்காகப் பகுக்கின்றனர். இவற்றுள் தேவர், மக்கட்கதிகள் நல்லன எனவும் பிற அல்லன எனவும் கொள்வர். எனவே இந் நல்லனவே மொழிமுதலில் வரற்கு உரித்தாம்.

294 கணம் இயல் பொருத்தமே கணம் எனும் சீரின் உள்
முன்நேர் இந்திரன் முள்நிரை நிலனே
நிரைநேர்நேர் மதி நேர்நிரை நிரை நீர்
இந்நாற் கணம் நன்று ஆம் இவை முதல் சீர்க்கே
இருவிளங்காய் முறை அந்தரம் சூரியன்
இரு மாங்கனி முறை வாயு தீ இவை
வரும் முதல் சீர்க்கு வழுக் கணம் என்ப.

பாடலின் தொடக்கத்தில் வரவேண்டிய சீர்களைக் கணப் பொருத்தத்தில் நினைக்கின்றார். நேர்நேர்நேர் எனும் இந்திர கணமும் நிரைநிரைநிரை எனும் நிலக் கணமும் நிரைநேர்நேர் எனும் சந்திரகணமும் நேர்நிரைநேர் எனும் நீர்க் கணமும் நன்று.பிறதீது.

295 சாதி நிலம் நிறம் தரும்நாள் இராசி கோள்
ஓதினர் ஆறும் ஒவ்வொரு பாவிற்கே
வெண்பா முதல்குலம் முல்லை வெண்மை
கார்த்திகை முதல் ஏழும் கடகம் விரிச்சிகம்
அயிலை மதிகுரு வழங்கும் இயல்பே.

ஒவ்வொரு பாவிற்கும் சாதி முதலிய ஆறு இயல்புகள் வகுக்கின்றனர். வெண்பா: சாதி - முதற்குலம்; நிலம் - முல்லை; நிறம் - வெண்மை; நாள் - கார்த்திகை முதல் ஏழு; இராசி - கடகம்; விரிச்சிகம், அயிலை; கோள் - மதி, குரு.

296 அகவற்கு அரசர் அருங்குலம் குறிஞ்சி
குருதி மகம் முதற்கொண்டு எழும் மேடம்
அரி தனுச் செவ்வாய் ஆதவன் இயல்பே.

ஆசிரியப்பாவுக்குரிய சாதி முதலியன உணர்த்துகின்றார்; அரச சாதி, குறிஞ்சி நிலம், குருதி நிறம், மகம் முதலிய ஏழு நாள், மேடம் சிங்கம் தனு என இராசி, ஞாயிறு செவ்வாய் ஆகியகோள் என.

297 கலிக்கே வணிகம் கழனி பொன்மை
குலாம்பனி முதல் ஆறும் குடமொடு மிதுனம்
துலாம் புதன் சனி எனத் தொகுத்து இவை ஏற்கும்.

கலிப்பாவிற்கு வணிகர் சாதி, மருத நிலம், பொன் நிறம், அனுடம் முதலிய ஆறு நாள், மிதுனம் துலாம் கும்பம் எனும் இராசி, புதன் சனியெனும் கிரகங்கள் இவை உரித்தாம்.

298 வஞ்சிக்கு ஈறது இயல் வருணம் நெய்தல்
அஞ்சனம் அவிட்டம் ஆதி ஏழும்
விடை பெண்கலை புகார் விடதரம் இயலுமே.

வஞ்சிப்பாவிற்கு, இறுதிக்குலம், நெய்தல் நிலம், அஞ்சன நிறம், அவிட்டம் முதல் ஏழு நாள், விடை பெண்கலை எனும் இராசி, சுக்கிரன் பாம்பு எனும் கோள் ஆகியன உரிய.

299 ஆசு மதுரம சித்திரம் வித்தாரம்
ஏசில் கவி நான்கு இவை என்பவற்றுள்
எடுத்த பொருளில் தொடுத்த இன்பத்தில்
அடுத்த பொழுதில் பாடுவது ஆசே
உடைப் பொருள் பொலிவும் உரிச்சொல் செல்வமும்

தொடைப் பொலி விகற்பமும் தொடர் அணிச்
சிறப்பும்
இசை பெற ஓசையும் இயலப் பாடி
வசையில் வரும் கவி மதுரம் ஆமே
கோமூத்திரி முதல் கூறிய மிறைகவி
சித்திரம் என்பர் சிறுபான்மை அவை எனப்
பத்திரம் முதல் நுண் பத்தியில் பாடிச்
சித்திரம் போல்வன சித்திரக் கவியே
தொடர்நிலை தொகைநிலை தொடுத்த பல் பாவும்
தொடை பலவாகத் தொடுத்த ஒரு பாவும்
வித்தாரக் கவிஎன விளம்பினர் புலவர்.

கவிஞனும் கவிதையும் ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம் என நான்காம். பொருளும் அடியும் பாவும் அணியும் முதலிய வற்றை மற்றொருவன் குறித்துப் பாடுக என்றவுடனே பாடுவது ஆசு எனப்படும்.

பொருட்பொலிவு முதலியன அமையும்படி பாடப்பட்டு, அமுது ஊட்டினாற்போலக் கேட்போர் உவப்ப இன்பம் மிகுத்து வரும் கவி மதுரமாம்.

கோமூத்திரி முதலிய இருபது மிறைக்கவியைச் சித்திரக்கவி என்மரும் உளர். ஆயினும், அவை சிறுபான்மை என்று மதியார் புலமையின் மிக்கோர். ஆகையில் ஓரிலை முதலா நுணுக்கத்து அனைத் தும் ஒழுங்கொடு தோன்ற எழுதிய சித்திரப் படத்தைக் காட்டின தன்மையில் பாடிய கவியைச் சித்திர மென்பர்.

பல பாட்டாக வந்து மேற்காட்டிய தொடர்நிலைகளும், தொகை நிலைச் செய்யுளும், அன்றி ஒரு பாட்டாக வரினும் பல தொடையாகத் தொடுத்து நடக்கும் செய்யுளும் எல்லாம் வித் தாரக்கவி.

300 ஈரசை ஐஞ்சீர் எழுதலை ஐஅடி
ஆறெழு ஒரு தொடை ஐம்பா மூஇனம்
செய்யுள் நான்கும் செய்யுள் விகற்பமும்
ஐஇரு பொருத்தமும் ஆக
மெய் உரை யாப்பை விளக்கிய தொகையே.

யாப்பதிகாரத்துள் விளக்கிய பொருள் எல்லாம் தொகுத்துக் கூறுகின்றார்.

## அணியதிகாரம்

301 கலை அணிச் செல்வன் கமலச் சேவடி
தலை அணி புனைந்து சாற்றுதும் அணியே.

கடவுள் வாழ்த்துக் கூறுகின்றார். வேதநூல் முதல் எந்நூலும் நலம்பெறக் காரணமாக நிற்கும் மெய்க்கடவுளின் திருக்கமலப் பாதங்களை என் தலை அணியாகக் கொண்டு ஏத்தி அணியிலக்கணத்தை விளக்குதும்.

302 அணி எனச் சொல் பொருளாம் இரண்டு அவற்றுள்
வேற்றுரை வரக் கெடும் அணி சொல்லணி உரை
மாற்றினும் தோன்றிய அணி பொருளணியே.

அணி, சொல்லணி என்றும் பொருளணி என்றும் இருவகைப்படும். வந்த சொல்லே மாறின தன்மையால் அவ் அணி கெடும் எனின் சொல்லணி எனப்படும். முல்லை நகைத்தன என்றதற்கு முல்லை பூத்தன எனில் அணி நில்லாது.

சொல்லே மாறினும் அச்சொல்லால் வழங்கிய பொருள் மாறுதாயின் அணியும் கெடாதெனின் பொருளணி எனப்படும். பவளவாய் என்றதற்கு துகிற்போற் செவ்வாய் எனச் சொல் மாறினும் பொருளும் அணியும் மாறுமை.

### சொல்லணியியல்

303 சொல்லணி மறிநிலை மிகல் எஞ்சல் ஒப்பு என்று
ஒல் அணித் தொகுதி ஒருநான்கு என்ப.

சொல்லணி நால்வகைப்படும். மறிநிலை அணி, சொன்மிக்கணி, சொல்லெஞ்சணி, சொல்லொப்பணி என.

### மறிநிலை அணி

304 மறிநிலை உரிமை மாறு அணியாய் அவை
குணம் முதல் காரணம் குறிப்பு ஒழுக்கம் ஐந்தே.

குணம் முதல் காரணம் குறிப்பு ஒழுக்கம் ஐந்தே. ஒன்றற்குரியதைப் பிறிதொன்றற்கு உரைப்பது மறிநிலை. ஒன்றன் குணம் மற்றொன்றற் குரைப்பது பண்பு மறிநிலை - சினத்தில் காய்ந்தான்; சினைப்பெயர் முதற்கும் முதற்பெயர் சினைக்கும் செல்ல உரைப்பது முதன் மறிநிலை - நறும் பொழில். காரணமும் காரியமும் தம்முள் மாற உரைப்பது காரண மறிநிலை - ஏரினும் நன்றும் எருவிடுதல். உழும்தொழிலைக் காட்டக் காரணமான ஏரைக் கூறினார். சொல் வேறு உணர்ந்த குறிப்பு வேறாகத் தோன்ற உரைப்பது குறிப்பு

மறிநிலை -ஆறு மாதம் என்பதற்கு ஆறு திங்கள் எனல். உலகின் ஒழுக்கம் மாற உரைப்பது ஒழுக்க மறிநிலை – முகிற்கை அயிற் கண் வரைத்தோள்.

305 பொருள்கோளும் மறிநிலை போல்வனவாம் அவை
யாற்றுநீர் மொழிமாற்று நிரனிறை விற்பூண்
தாப்பிசை அளைமறிபாப்பு கொண்டுகூட்டு
அடிமறிமாற்று என ஆகும் எட்டு என்ப.

எட்டுப் பொருள்கோளை மறிநிலை அணி என அடக்கினர்.

306 யாற்றுப் புனலே அடிதொறும் பொருள் அற
ஏற்று அடி நோக்கா விளம்பலின் ஆகும்.

மற்றபடி நோக்காது அடிதோறும் பொருள் அற்று வருவது யாற்று நீர்ப் பொருள்கோள் எனப்படும்.

விலைப்பாலி னீர்கலந்து விற்றலுங் குற்ற
மலைப்பாரைப் பேணு மறுத்தலுங் குற்றம்...

307 மொழிமாற்று என்ப மொழிகள் தம் பயன்படும்
வழி பெயர்த்து ஓர்அடி வரையுள் கொளலே.

ஓரடி எல்லையுள் தத்தம் பொருளுக்கு ஏற்ற மொழிகள் தன் நிலை தப்பி ஒழுங்குமாறச் சொல்லுவது மொழிமாற்றுப் பொருள்கோள்.

கரையாடக் கெண்டை கயத்தாட மஞ்ஞை
சுரையாழ வம்மி மிதப்ப...

308 நிரநிறையாம் நிரை நிறீஇய பெயர் வினை
இரண்டும் வேறு அடுக்கி எதிரினும் வைத்த
நிரையினும் பொருளை நேர்தல் என்ப.

பல பெயர்ச்சொல்லையும் பல வினைச்சொல்லையும் வேறாய் அடுக்கிய பின்னர் அவற்றிற்குப் பொருளாய் வரும் சொற்களைமுறையே யாயினும் எதிரேயாயினும் அடுக்குவது நிரனிறை.

கொடிகுவளை கொட்டை நுசுப் புண்கண் மேனி...

309 பூட்டுவில் என்ப பூட்டிய வில்போல்
பாட்டு இருதலை ஒருங்கால் பொருள் கொளலே.

பொருளைக் கொள்ளும்படி பாவின் முதலினும் ஈற்றினும் நின்ற இருமொழி கூட்ட வேண்டுழி அது பூட்டுவில்லாம்.

"திறந்திடுமின் ... ... ...
... ... ... ... ...
தண்ணூரக் காணக் கதவு."

310 தாப்பிசை முதல் கடை தன் பொருள் தரும் மொழி
யாப்பு இசை இடையே இயம்புதல் என்ப.

பாவின் நடுவே நின்ற மொழிமுதலினும் ஈற்றினும் கூட்டிய பொருளைக் கொள்வது தாப்பிசைப் பொருள்கோள் எனப்படும்.

நோயிடு மென்றஞ் சிறுதலற்கத் தீயவையே
நோயிலதாஞ் செய்யாத கால்.

311 அளைமறி பாப்பே அந்த மொழி மற்று
உள இடத்து உய்த்துத் தன் உரைப்பொருள்
கொளலே;

செய்யுள் ஈற்றின் நின்றமொழியே இடையினும்முதலினும் கூட்டிப் பொருளைக் கொள்வதே அளைமறிபாப்புப் பொருள்கோள்.

தாழ்ந்த வுணர்வினராய்த் தாளுடைந்து தண்டூன்றித்
தளர்வார் தாமுஞ்
சூழ்ந்த வினையாக்கை சுடவிளிந்து தீநரகிற் சூழ்வார் தாமு
மூழ்ந்த பிணிநலிய முன்செய்த வினையன்றே முனிவார் தாமும்
வாழ்ந்த பொழுதின்னே வானெய்து நெறிமுன்னி
முயலா தாரே.

312 கொண்டு கூட்டு என்ப கொள்பொருட்கு ஏற்ப
விண்டு அடி பலவினும் வினைகொள் மொழியே;

பாவின் பல அடிக்குள்ளும் நின்ற மொழிகளைப் பொருள் ஏற்கும் இடத்துக் கொண்டு கூட்டல் இவ்வகையாம்.

ஆலின் மேற் பாயுங் குவளை குளத் தலரும்
வாலின் நெடிய குரங்கு.

313 அடிமறி மாற்றே அடி பெயர் பொருளவும்
அடி இடம் மாறினும் அழியாப் பொருளவும்;

பொருள் கொள்ளும்படி ஓரடி எடுத்து ஏற்புழிக் கொண்டுகூட்ட வேண்டியதாகவும், செய்யுள் அடி எலாம் தன்னிலை மாறி முதலினும் இடையினும் ஈற்றினும் உச்சரிப்பினும் ஓசையும் பொருளும் வழுவாது வருவதும் இவ்வகையாம்.

கற்ற கழி நூலுங் கைகூடா முற்றிற்கு
முற்ற பொருளு மொழிந்தகலு - நற்சுருதி
யோதலும் பொய்ப் பெற்ற வொளிநீத் திகழ்வாங்கு
காதலுளத் திழன்றக் கால் ஈற்றடி பிற அடியுடன் கூடிப் பொருள் விளக்கியது.

சொன்மிக்கணி

314 சொன்மிக்கணி என்ப சொல் மறிதரல் அவை
மடக்கு இசை அந்தாதி அடுக்கு என மூன்றே.

மடக்கு இசை அந்தாதி அடுக்கு என மூன்றே வந்த சொல் மீண்டும் மீண்டும் வருவது சொன்மிக்கணி. அவையே மடக்கும் இசையந்தாதியும் அடுக்கும் என மூன்றும்.

315 மடக்கணி ஓர்மொழி மடங்கி வரல் அவை
இடையிடு முதல் கடை இருவழி மடக்கும்
இடையிடா மடக்கும் என நால்வகையே.

ஒருசொல்பெயர்ந்து மீண்டு வருவது மடக்கணி எனப்படும். இதுவே இடையிடா வரவும் இடையிட்டு வரவும் பெறுமே. அன்றியும் இடையிட்டு வருங்கால் முதலினும் ஈற்றினும் இருவழியிலும் வரப்பெறும். வரின், முதல்மடக்கு எனவும் கடைமடக்கு எனவும் இருவழி மடக்கு எனவும் வழங்கும்.

இனியா ரினியா ரெனைக்காப்ப - இடையிடா மடக்கு.

இனியா ரெனைத் தாங்கி யென்றுயரை நீப்பா
ரினியார் மறைநூலா லென்னைத் தெளிப்பார்...

இடையிடு மடக்கு.

இடையிடுதல் இடையிடாமை என்பதாலும், வருமிடத்தாலும் மடக்கு 315 வகைப்படும் என உரையில் உணர்த்துகின்றார்.

316 இசை அந்தாதியே ஈற்றுச் சொல் மீண்டு
இசை பெற உருபு வேறு எனினும் இயைதலே.

உரைநடையில், ஒரு வசனத்து ஈறாக நின்றமொழி மற்றொரு வசனத்து ஆதியாக வருவது இசையந்தாதி எனப்படும். உருபு ஒன்றாயினும் வேறாயினும் ஏற்புடைத்தாம்— 'மாந்தர்க் கெல்லாங் கோள்வியா லறிவு மறிவினாற் கல்வியுங் கல்வியாற் புகழும், புகழாற் பெருமையும் விளைந்து வளருமன்றோ.'

317 அடுக்கணி ஒரு பொருட்கு அடுக்கிய திரிசொல்
அடுக்கி வைப்பது அடுக்கணி எனப்படும.

சிறப்புக் காட்டவும், அன்பு துயர் களிப்பு இவற்றை மிக்கெனத் தோற்றவும் ஒரு பொருளைத் தரும் பல திரிசொல் அடுக்கி வைப்பது அடுக்கணி எனப்படும்.

என்னுயிர் காத்துப் புரந்தாண்ட வென்னிறைவன்
தன்னுயிர்பட் டிறந்து சாய்ந்தொழிந்தான் - பின்னுயிராய்
மீண்டென்னைக் காத்தோம்ப மேவிப்புரந் தளிப்ப
யாண்டையும் யார்யா ரெனக்கு.

### சொல்லெஞ்சணி

318 எஞ்சணி என்ப எளிது உணர் பலமொழி
துஞ்சில் சிறப்பில் தோன்றுது ஒழித்தலே.

உணர்தற்கு எளிதாய விடத்துப் பெயர் வினை முதலிய சொல் ஒழித்து உரைப்பது சொல்லெஞ்சணியாம். இவை பத்து வகை என அடுத்த நூற்பா உணர்த்தும்.

319 பெயர் வினை உம்மைச் சொல் பிரிப்பு என ஒழியிசை
எதிர்மறை இசைக் குறிப்பு எஞ்சணி பத்தே.

எச்சம் பத்துவகை என முன்னோர் மொழிந்ததை இவர் எஞ்சணி எனக் கொண்டார் இவை, பெயர் எஞ்சணி முதல் குறிப்பு எஞ் சணி வரை, பத்தாம்.

கொன்றன்ன வின்னா செயினும் அவர் செய்த
வொன்றுநன் றுள்ளக் கெடும்.

பிறரும், தானும் என எஞ்சிய இருபெயர் கொண்டு முடிக்க வேண்டலின் பெயரெஞ்சணி யாயிற்று. பிறவுமன்ன.

### சொல்லொப்பணி

320 ஒப்பணி திரிபியைபு ஒழுகிசை இயைபிசை
தப்பில் சமம் எனத் தகும் நால்வகையே.

ஒப்புமை பற்றி வருவன ஆகையால் சொல்லொப்பணி எனப்படும். வகைகள் பின் நூற்பாக்களில் விளக்கப்படுகின்றன.

321 திரிபியைபு ஒருமொழி சேர் பல் உருபும்
உருபு ஒன்று அணை பல உரையும் என்ப.

ஒப்பணியின் முதல்வகையான திரிபியைபு ஆமாறு-ஒரு பெயரும் ஒரு வினையும் பல்வேறு உருபு பெற்றும், பலவினை பலபெயர் ஒருருபு பெற்றும் வரத் தொடுப்பது. 'விரைவினாற் காற்றெனவும் முழக்கத்தாற் கடலெனவும் அச்சத்தால் இடியெனவும் செய்குலை யாற் கூற்றெனவும் மதகரி வந்து எதிர்த்த படை முருக்கினதே'— பலபெயர் ஒருருபு பெற்று வந்தன.

322 ஒழுகிசைச் சீர் ஒத்து ஒழுகிய செய்யுள் போல்
வழு இல இயல்தமிழ் வருதலும் ஆகும்.

மேற் காட்டிய செய்யுள் இலக்கணத்தால், ஒத்த சீரொடு வருவது ஒழுகிய ஓசை என்பதுபோல, இயற்றமிழிடத்தும் பெயரும் வினையெச்சமும் உரிச்சொல் முதலியனவும் பலபல ஒப்பவந்து ஒன்றுதல்

ஒழுகிசையணியாம். 'விடாது நறு நெய்பூசி நீங்கா தொளிமணி சேர்தது மங்கா மதுமலர் சூடி...'

323 இயைபிசை சொல்லுருபு ஈற்றில் ஒத்து ஆதலே.

பற்பல வசனத்து இறுதி மொழிகள் தம்முள் உருபின் ஒப்புமையால் இயைந்து வருவது இவ் அணி. 'செங்கதிர் நெடுங்கை நீட்டி மல்கிருட் கங்கு லோட்டிப் படரொளி முகத்தைக் காட்டிப் பருதியே கடல்மேல் எழுந்துழி...'

324 சமம் என்ப மாத்திரை தவுதல் வேற்று எழுத்து
ஒன்றுதல் அன்றி ஒன்றிய சொல்லே
மற்றவற்று இனமாம் மாத்திரைச் சுருக்கம்
திரிபதாதி சேர்ந்தன பிறவே.

இருமொழி பலமொழி தம்முள் மாத்திரையானும் ஓர் எழுத்தானும் வேறுபாடுடைய ஆதல் அன்றித் தம்முள் ஒப்ப வருவது சமவணி யெனப்படும்.

கந்தரக் கந்தாரத்தின் புகுக்குங் காந்தாரம்—மாத்திரை.
வீதிமந்திர நூலியே, யாதி தந்திர வேலியே—எழுத்து.

மாத்திரை வேறுபட வரும் சமம் மறைத்து உரைப்பது மாத்திரைச் சுருக்கம்-'நேரிழையார் கூந்தலி னோர் புள்ளிபெற நீண்மரமாம்...' ஓதி-ஒதி. அன்றியும், எழுத்து வேறுபட வரும் சம அணி வகையில், நடு ஒழித்துள மொழியே ஒரு பொருளாகவும், முதல் ஒழித்து ஒழிந்த எழுத்துப் பிறிதொரு மொழியாகவும் வரும் சொல்லாகிய திரிபதாதியும் அடங்கும். கமலம் > கலம், மலம், பாசடை > பாடை, சடை.

325 சொல்லணி மறிநிலை ஐந்தும் கோள் எட்டும்
சொன்மிக்கணி மூன்றும் சொல்லெஞ்சணி பத்தும்
சொல்லொப்பணி நான்கும் தொகை ஆறைந்தே.

சொல்லணி நால்வகையாகவும், முப்பது விரியாகவும் அமைந்த வாறு இயல் இறுதியில் தொகுத்துக் கூறப்படுகின்றது.

## பொருளணியியல்

326 பொருளணி ஆறைம் புணர்ப்பு எனத் தன்மை
உரிய பல விகற்ப உவமை உருவகம்
வேற்றுப்பொருள் வைப்பே வேற்றுமை தானே
ஒட்டணி அவநுதி ஊகாஞ்சிதமே
நுட்பம் புகழ் மாற்றே தன் மேம்பாட்டுரையே

பின்வரு நிலையே முன்ன விலக்கே
சொல்இலக்கு இலேசம் சுவையே உதாத்தம்
ஒப்புமைக் கூட்டம் ஒப்புமை ஏற்றம்
விபாவனை விசேடம் விரோதப் பிறிதுரை
விடையில் வினவே வினவில் விடையே
சித்திரம் ஒழிபு அமைவு சிலேடை சங்கீரணம்
இத்திறத்து அனையவும் இயம்பினர் கற்றோர்.

செந்தமிழ் நன்குணர்ந்தோர் முன் தந்தவற்றுள் வேண்டாதன சில ஒழித்து வேண்டிய சிற்சில கூட்டித் தன்மை முதற்கொண்டு முப்பது அணிகள் உரைக்கின்றார்.

327 தன்மை அணியே தன் பொருட்கு உரிய
வன்மை பலவும் வழுவாது உரைத்தலே.

ஒரு பொருளின் தன்மையை, அப்பொருட்கு உரிய வன்மைகளை எடுத்துரைத்தல் தன்மை அணியாம்; பொருள், குணம், சாதி, தொழில்களால் இத்தன்மை வழங்கும்.

உள்ளங் குளிர வுரோமஞ் சிலிர்த் துறையுந்
தள்ள விழி நீர்த் ததும்பத் தன்மறந்தாள்...

328 உவமை என்பது உரிக் குணத் தொழிற் பயன்
இவற்று ஒன்றும் பலவும் இணைந்து தம்முள்
ஒப்புமை தோன்றச் செப்பிய அணியே.

இருபொருள் தம்முள் குணத்தாலும், தொழிலாலும், பயனாலும் ஒத்தனவாகக் காட்டல் இவ் அணி - பவளத் தன்ன செவ்வாய்.

329 உவமை விகற்பித்து உரைக்கும் காலை
விரிவே தொகை இதரேதரம் விபரீதம்
மறுபொருள் நியமம் ஐயம் இன்சொல்
கூடா உவமை கோத்த மாலை
உண்மை என இவை உவமை வகையே.

உவமையைப் பிரித்து, விரிவு முதல் உண்மை ஈறாகப் பதினொரு விகற்பங்களாக வகுத்தார் ஆசிரியர். அவை முறையே விளக்கப் படுகின்றன.

330 விரிவு என இரு பொருள் விதித் திறம் உருபு இவை
தெரிவுற விரித்துச் செப்புதல் மற்றும்
தொகை ஒப்பாம் குணம் தொழில் பயன் தொகவே

விரிவுவமையும் தொகையுவமையும் உணர்த்துகின்றார். உவமைப் பொருளும் உவமித்த பொருளும் குணம் முதல் உவமைக் காரணம் மூன்றும் உவமை உருபும் என இவை எல்லாம் தோன்றவரின் விரிவு. மற்றவை தோன்றி உவமைக் காரணம் மூன்றும் தோன்றாது உரைப்பின் அது தொகை.

பவளம் போலும் செவ்வாய்; பவளம் போலும் வாய்.

331 இதரேதரம் என்ப இருபொருள் மாறலே.

உவமைப் பொருளும் உவமித்த பொருளும் தம்முள் மாறிப் பொருளே ஒருகால் உவமையாகவும் உவமை ஒருகால் பொருளே யாகவும் வேறுவேறாய்த் தொடர்ந்து வருவது இது.

தாமரை போன் மலரு நின்முக நின்முகம் போற்
றாமரையுஞ் செவ்வி தரும்.

332 விபரீத பொருளாம் விளம்பிய உவமையே.

காட்ட எடுத்த பொருளை உவமைப் பொருட்கு ஓர் உவமையாக மாறுபாடாய் உரைப்பது இது. 'திருமுகம் போன் மலருஞ் செய்ய கமலங், கருநெடுங்கண் போலுங் கயல்.'

333 மறு பொருளாம் பொருள் வந்து ஒப்பு உரைத்தலே.

பொருளைக் கூறிய பின் அதற்கு உவமை கூறுவது இவ்வகை.

அன்னையா யெவ்வுயிர்க்கு மாதரவா யன்பருளு
நின்னையா ரொப்பார் நிலவேந்த-ரன்னதே
பாரிடையே தோன்றிப் பயன்றருதற் கில்லையாஞ்
சூரியனே போலுஞ் சுடர்

334 நியமமாம் பிரிநிலை ஏகாரம் வந்து
இயல் நிகர் ஒன்று உரைத்து ஏனைய நீக்கலே.

எடுத்த பொருளுக்கு இன்னது உவமை யன்றி மற்றொன்றில்லை என்று காட்டி ஏகாரத்துடன் முடிவது 'செங்கமல வாயொழுகுந் தேனே யுன் சொற்கிணையாம்.'

335 ஐயம் கொண்டன இருபொருள் அறைதல்
ஐய உவமை ஆகும் என்ப.

உவமையோ பொருளோ என்று உளத்து ஐயம் தோன்றினதாகக் கூறுவது ஐய உவமை. 'தாதளவி வண்டு தடுமாறும் தாமரை கொல், மாதர் விழியுலவும் வாண்முகங் கொல்...'

336 இன்சொல் உரிமையாம் இணை இவை என்ற
பின் சொல்லிய பொருள் பெற்றிமை யுரைத்தலே.

ஒன்றை உவமித்த பின்பு பொருளின் சிறப்பெலாம் உவமைக்கு இல்லை என்று காட்டுவது இன்சொல்லுவமை.

*மான் விழி தாங்கு மடக்கொடியே நின்வதன*
*மான்முழுதுந் தாங்கி வருமதிய மானுலு*
*முற்றிழை நல்லாய் முகமொப்ப தன்றியே*
*மற்றுயர்ச்சி யுண்டோ மதிக்கு.*

337 கூடா உவமையே கூறிய நிகர்க்கண்
ஊடாது அவை பொருட்கு உரியன எனலே.

உவமைப் பொருட்கண் கூடாதவை தான் எடுத்த பொருட்கண் கூடும் என்று காட்டல் இது. 'சந்தனத்தில் செந்தழலும் தண் மதியில் வெவ்விடமும் வந்தனவே போலுமால் நின்மாற்றம்...'

338 மாலை உவமையாம் மருவிய பல நிகர்
மாலையாக் கோத்தபின் வனை பொருள் இயம்பலே.

படலை மாலை போல் ஒரு பொருட்குப் பலபல உவமை தொடர்ந்து கூறிக் கடையில் பொருளை உரைப்பது இவ்உவமை வகை.

*நீரெழுங் குமுழி போன்று நெடியதேர் நேமி போன்றுங்*
*காரெழு மின்னுப் போன்றுங் கடலெழுந் திரைகள்போன்றும்*
*பாரெழுஞ் செல்வத் தில்லைப் பதியுமோர் நிலையு மென்றுர்*
*சீரெழு ஞானத்திற்குந் திரைதிரண் டலைவ துண்டோ.*

339 உண்மை உவமையாம் உவமை மறுத்தென
நுண்மையில் பொருள் திறம் நுவன்று விளக்கலே.

உவமையை மறுத்துப்பொருளைக் கூறுவது உண்மை உவமை. 'தாமரை யன்று முகம்',

340 உவமை வழு என்ப உரிய பால் மாறல்
தவல் மிகல் உயர்தல் தாழ்தல் என்று ஐந்தே.

உவமை வழு உணர்த்துகின்றுர். ஆண்பால் முதல் பால் ஐந்தும் தம்முள் மாறி வருதலும், பொருட்கண் உள்ளதின் குறைந்ததும் மிக்கதும் உவமைக்கண் வருதலும், உயர்ந்த உவமையோடு இழிந்த பொருள் உவமித்தலும், இழிந்த உவமையோடு உயர்ந்தபொருள் உவமித்தலும் என்று இவ் ஐந்தும் ஓரோவிடத்து ஓர் சிறப்புக் காட்டுதற்கு ஒழிய வழுவாம்.

341 உருவகம் என்ப உவமை வேறு
பொருள் வேறு இன்றிப் புணரத் தொடுத்தலே.

உவமையும் பொருளும் வேறுபடாமல் குணம் தொழில் பயன் என

முக்காரணம் தோன்றுமலும் உவமை உருபு இல்லாமலும் ஒன்று பட வரும் உவமை உருவகம் எனப்படும்.

அங்கை மலரும் அடித்தளிரும் கண் வண்டும்
கொங்கை முகிழும் குழற்காரும்—தங்கியதோர்
மாதர்க் கொடியுள தாம்...

342 வேற்றுப் பொருள் வைப்பே விளங்கினது தொடங்கி
ஈற்றின் நுதலிய ஏற்றி உரைத்தலே.

எவரும் அறிந்த ஒன்றைக் கூறிய பின்னர் எடுத்ததன் பொருள் அத்தன்மைத் தாகும் எனக் கூறுவது வேற்றுப்பொருள் வைப்பு.

வெய்ய குரரேன்றி வெஞ்சின வேறுட் கொளினும்
பெய்யு மழை முகிலைப் பேணுவரால்-வையத்
திருள் பொழியுங் குற்றம் பலவெனினும் யார்க்கும்
பொருள் பொழிவார் மேற்றே புகழ்.

343 வேற்றுமை என்பமுன் ஆற்றிய இருபொருள்
சாற்றிய உவமையில் வேற்றுமைப் படுத்தலே.

இருபொருளைத் தம்முள் உவமித்து, பின்ன ரவற்றுள் வேற்றுமை தோன்றக் கூறுதல் வேற்றுமை அலங்காரம் எனப்படும்.

மலிதோரான் கச்சியு மாகடலுந் தம்மு
ளொலியும் பெருமையு மொக்கு - மலிதேரான்
கச்சி படுவ கடல் படா கச்சி
கடல் படுவ எல்லாம் படும்.

344 ஒட்டு எனத் தன் பொருள் உரையாது உவமை
சுட்டலில் அப்பொருள் தோன்ற இயம்பலே.

தான் கருதிய பொருளை வெளிப்படுத்துதற்கு அதனைச் சொல்லாது அதற்குத் தக்க மற்றோர் உவமைப் பொருளைச் சொல்வதே ஒட்டு.

பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்
சால மிகுத்துப் பெயின்.

345 அவநுதி என்ப வாய்மெய் மறுத்து மற்று
இவறிய ஒன்றனை ஏற்றி இயம்பலே
உருவகம் கூட்டின் ஒண் சிறப்பாகும்.

எடுத்த பொருள் மிகத் தோன்ற அதற்குள்ள சிறப்பியல் குணம் முதலாய் அவற்றின் உண்மை மறுத்து எதிர்மறையாக மற்றொன் றினை உரைப்பது இவ் அணி. இதனோடு உருவகம் கூட்டின் சிறப் பாம்.

பொங்களக மல்ல புயலே இவையிவையுங்
கொங்கை யிணையல்ல கோங்கரும்பு - மங்கை நின்
மையரிக் கண்ணல்ல மதர்வண் டிவையிவையும்
கையல்ல காந்தள் மலர்.

கண்ணல்ல வண்டென்று பொருளை மறுப்ப அவநுதி யுருவகம்.

346 ஊகாஞ்சிதம் என்ப உரிமை ஒழித்து மற்று
ஆங்கோர் குறிப் பொருள் அறைந்து பொருத்தலே.

எடுத்த பொருட்கண் இயல்பானவற்றைக் கூறினும் அவற்றிற்கு உரிய காரணத்தை ஒழித்து, மற்றொன்றன் சிறப்புத் தோன்றக் கவி தான் கருதிய மற்றொரு காரணத்தைக் கூறும் இவ் அணி தற் குறிப் பேற்றம் எனவும் படும்.

மண்படி தோட்கிள்ளி மதயானை மாற்றரசர்
வெண்குடைக்கே வைத்த வெகுளியான் - விண்படர்ந்து
பாயுங்கொ லென்று பனிமதியம் போல்வதூஉம்
தேயுந் தெளிவிசும்பி னின்று.

347 நுட்பமாம் தெளிவுற நுவலாத வற்றையும்
உட்படுத்திடும் குறிப்புரை அரிது உணர்த்தலே.

எடுத்த பொருளை வெளிப்படக் கூறாது அதுவே தோன்ற உவமையா லாயினும் முன்பின் வருவதைக் கொண்டாயினும் அதனைக்காட்டும் குறிப்பினை உரைப்பது நுட்பவணி. 'நீர்வற்றிய பொய்கையில் மலர்க்கொடிகள் அகலாமலிருக்கப் புள் நீங்கல் நீசர் உறவை ஒத்தது'—எனக் கூறும்போது நல்லோர் உறவு மலர்க்கொடி போன்றது என்ற மறைக் குறிப்பு அமைதல் இது.

348 புகழ்மாற்று என்ப புகழ்வது போல் இகழ்ந்து
இகழ்வது போல் புகழ்ந்து இயம்பிய நிலையே.

ஒன்றனைப் புகழ்ந்தாற்போல அதனைப் பழித்தலும், பழித்தாற் போல அதனைப் புகழ்தலும் என இருவகையும் புகழ்மாற்றணி யாம்.

எற்றிற்குரியர் கயவ ரொன்றுற்றக்கால்
விற்றற் குரியர் விரைந்து.

349 தன்மேம்பாட்டுரை தான் தன் புகழ்தலே.

ஒருவன் தனக்கு மேம்பாடாகத் தோன்றத் தன்னைத்தானே புகழ் வது தன்மேம்பாட்டுரை எனப்படும்.

யானுமென் னெஃகமுஞ் சாலு மவனுடை
யானைக்குஞ் சேனைக்குநேர்.

350 பின்வருநிலையே பிறழ்க்தெனப் பல வயின்
முன் வரும் சொல் பொருள் பின்னும் வருவதே.

மேற்சொன்ன மடக்கணி பற்றிய ஒழுக்கு இல்லாமையும் முன்னர் வந்த சொல்லாயினும் பொருளாயினும் பின்னர் பல இடத்து அவை வரின் பின்வருநிலையாம்.

மலர் விழியே வாய்மலரே வாய்ந்த வதன
மலரே கை கண் மலரே...

351 முன்னவிலக்கு என்ப முன்னத்தின் மறுத்தலே.

ஒன்றைச் சொல்லி மற்று அதைக் காட்டிய குறிப்பினுன் மறுத்து விலக்கல் முன்னவிலக்கணியாம்.

இன்னுயிர் காத்தளிப்பாய் நீயே விளைவேனில்
மன்னவனுங் கூற்றுவனு வந்தக்கா - லன்னோர்
தமக்கெம்மைத் தோன்ரு தகைமைத்தோர் விஞ்சை
யெமக்கின் றருள்புரிந்தே யேகு.

352 சொல்விலக்கு ஒன்றனைச் சொல்லிய பின் அஃது
அல்லெனை மறுத்தல் போல் அது மிக விளக்கலே.

புகழினும் இகழினும் தானே உரைத்த சொல் ஆராயாது உரைத்தல் மறுத்து மற்றதின் மிக்க பிறிதொன் றுரைப்பது சொல் விலக்கு அணியாம்.

தானைவேந் தென்பான்முன் ருனமா யொன்றீயான்
யானென் ரெுன்றீயா னவனென்றே - னேனையவர்
கொள்பொருள் கொள்வான் குடியலைத்து நோயீவான்
றெள்பொரு டேற்ருச் சினத்து.

353 இலேசமே கருத்து ஒளித்திட அதைக் காட்டும்
சந்துவம் பிறிதில் சாற்றி மறைத்தலே.

மனத்தில் கருதியவற்றை வெளிப்படுக்கும் புறத்தடையாளங்கள் பிறிதொன்ருல் வந்தனவாகக் கூறித் தன் கருத்தினை மறைப்பது இலேச மெனப்படும்

மதுப்பொழிதார் மன்னவனை மால்கரி மேற் கண்டு
விதுப்பு மயிரரும்பு மெய்யும் - புதைத்தாள்
வளர்வா ரணநெடுங்கை வண்டுவளை வாய்த்த
விளைவாடை வந்ததே னின்று.

354 சுவையணி என்ப சுடுஞ்சினம் காமம்
வியப்பு அவலம் இழிவு அச்சம் வீரம் நகைஎன

எண் மெய்ப்பாட்டின் இயைவன கூறி
உள் மெய்ப்பாட்டை உணர்த்தித் தோற்றலே.

நெஞ்சங் கடுத்தவற்றைக் காட்டும் புறக்குறி விரித்துக் கூறல் சுவையணி.

355 உதாத்தம் பொருளில் பதார்த்தம் மிகலே.

கேட்போர் வியப்புறத் தன் பொருட்டன்மையின் மேலும் சொற் பயன் மிகக் கடந்துரைப்ப துதாத்தம். 'பேதை நொந் தழுத கண்ணீர் பெருங்கடல் வெள்ள மாற்று'.

356 ஒப்புமைக் கூட்டம் ஒத்த குணத்தவை
செப்பித் தன்பொருள் தெளிவுறக் கூறலே.

எடுத்த பொருளை விளக்க அதனோடு நற்குணத்தானும் தீக்குணத் தானும் ஒத்த பலவற்றைக் கூட்டி ஒருபடக் கூறுவது இவ் அணி.

வேத மோதிய வேதியர்க் கோர்மழை
நீதி மன்னர் நெறிதனக் கோர் மழை
காதன் மங்கையர் கற்பினுக் கோர்மழை
மாத மூன்று மழையெனப் பெய்யுமே.

357 ஒப்புமை ஏற்றம் ஒன்றற்கு ஒன்று மிகச்
செப்பிய பலவின்மேல் செய்பொருள் ஏற்றலே.

நற்குணத்தானும் தீக்குணத்தானும் ஒன்றற்கொன்று மிக்கதாகப் பலவற்றைக் கூறி எல்லாவற்றிலும் மேல் தானெடுத்த பொருளே நிற்பதாகக் கூறுவது இவ்அணி.

பயனில் சொல்லின்ஞ மிக்கின்ஞ மெய்ப்பாட்டி
னயனில்சொன்னன்ஞடா தன்னை - வியந்தன சொல்
ஆங்கின்ஞ பின்னின்றே யம்புற்சொல் லம்மூன்றி
னூங்கின்ஞ வாழு முயிர்க்கு.

358 விபாவனை என்ப விளங்கிய உலக
சுபாவனை யலந்திறம் தோற்றி இயம்பலே.

உலகின் ஒழுக்கத்து ஏற்ற காரணம் ஒழிய நீக்கி இயல்பினுனும் குறிப்பினுனும் பிறிதொரு காரணம் தோன்ற உரைப்பதுவிபாவனை

பூட்டாத விற் குனித்துப் பொங்குமுகி லெங்கும்
தீட்டாத வம்பு சிதறுமால்...

359 விசேடம் எனக் குறை விளர்பி அவற்றல்
மேன்மை படப் பொருள் விளக்கிய நெறியே.

எடுத்த பொருட்குக் குணம் தொழில் போன்றவற்றால் குறைபாடு உள்ளதாகக் காட்டி அக்குறை காரணமாக அதற்கு மேன்மை தோன்ற உரைப்பது இது. 'யானை இரதம் குதிரை இன்றி, கரும்பு வில் மலர் அம்புகளால் மாரன் உலகைக் கைக்கொண்டான்' எனல் இது.

360 விரோதம் என்ப விகற்பம் முரண்படு
மன்னிய சொற்பொருள் உன்னியம் ஆக்கலே.

மாறுபட்ட சொல்லும் பொருளும் ஒன்றுபட்டு இயலும்படி வைத்து உரைப்பது விரோதம்.

உருவில்லா னுருவாகி யுலகிலொரு மகனுதிப்பக்
கருவில்லாக் கருத்தாங்கிக் கன்னித்தா யாயினையே.

361 பிறிதுரையணியே பெருந்துயர் முதற் காட்ட
முன்னிலையாரொடு மொழிதல் ஒழித்துப்
பல் நிலையாரொடு பகர்தல் என்ப.

ஒருவரை முன்னிலையாகப் பேசுங்காலை அவர்களை நீக்கி, அகன்ற வராயினும் நல்லறிவில்லா விலங்கு பறவை மலை மரம் முதலியன வாயினும் முன்னிலையாகப் பேசுவது பிறிதுரை யலங்காரம் எனப் படும்.

கயலாம் விழியே கடலா மவனை
யயலா டலிலா கியகன் றனனே
யியலாத விடுக்க ணியைந் தினிநா
னுயலாம் வழியொன் றுளதே லுரையீர்.

362 விடையில் வினுவே விடை வேண்டாமையும்
அடைய லாரையும் அஃறிணை அவற்றையும்
மன வியப்பு ஆதி வழங்கப் பல குணம்
வினவினாற் போல விளம்பிய நிலையே.

மறுமொழி வேண்டாமையும், முன்னிலை யல்லாரையும் அஃறிணை யையும் வினவினாற்போல உரைத்தலும் இவ் அணியாம். வியப்பு முதலிய மன இயல்புகளை வெளிப்படுத்தற்கு இவ் அணி வாயிலாம்

கெட்டோ நாமோ மின்னென வொல்கிக் கெடு நன்றி
யிட்டோ நாமோ விட்டதி னிஃதோ பயனந்தோ
பட்டோ நாமோ புன்னய நக்கிப் பரவீட்டை
விட்டோ நாமோ வேகு துரைமோ வெனவேவார்.

363 வினவில் விடையே வினவினல் எனப் பிறர்
மன உணர்வு உரைத்து மறுஉரை கூறலே;

ஒன்றை உரைக்குங்கால் பிறரெதிர் பிறிதொன்றை உணர்ந்து வினவினதாகச் சொல்வித் தன்பொருள் விளங்க மறுமொழி உரைப்பது இது.

நெடிதுநா ளூற்றநோய் மருந்தி னீர்மையாற்
கடிதுதீ தரலருங் கருமமா மென்பாய்
நெடிதுநா ளூற்றநோய் நீளமீண் டுயர்
கடிதுமாய்ந் தொழிதரக் கடுவுண் பாவதேன்.

364 சித்திர அணியே தீட்டிய படவடிவு
அத்திறத்து அனைத்தையும் ஐயென வகுத்தலே.

காதா லுணர்ந்தவை கண்ணுற் கண்டாற்போலப் பிறர் தெளிந்து உணர்வுற நுட்பவிபரத் தெடுத்த பொருளை விரித்துக் காட்டல் சித்திர அணியாம்.

365 ஒழிபணி பலவற்றை ஒழித்தன உரைத்தலே.

தம்பொருள் விளக்கற்குரிய பற்பலவற்றை உரைக்க மாட்டாது ஒழிந்தாற்போல அவற்றைச் சுருங்கக் காட்டல் இவ்வணி.

நூனலமுஞ் சீர்நலமு நொந்தொன்று ரேற்றியதன்
வேனலமு மாற்று விளம்பனே - தேனலமுண்
பீன்ற வருண்முகிற்கை யெங்கோன் கொடையொன்றே
தோன்ற வுரைப்பேன் தொழுது.

366 அமைவணி அல்லவும் ஆம் என்றதுபோல்
சமைந்து மற்றொன்றன் தகவுஎழ இயம்பலே

நன்மை யல்லனவும் மெய் யல்லனவும் பிறர்க்கு உபகாரமாய் நல்லவாகவும் உள்ளவாகவும் ஒப்பித்தாற் போலமைந்து பிறிதொன்றனை மிக்கு உரைத்து ஒறுத்தல் அமைவணி எனப்படும்.

பொய்யுங் களவும் புறக்காமத் தீதிழிவு
நையு முயிர்க்கே நவையன்றே - செய்யுள்
குலத்துரிமை யென்றுயுள தெனினுஞ் செந்தீத்
தலத்துரிமை தானே வுனக்கு.

367 சிலேடை என்ப திரிசொல் பல இணைந்து
இரு பயனாக ஒருதொடர்பு உரைத்தலே

பலபொருள் குறித்த ஒரு சொல்லாகிய திரிசொல் கொண்டு இரு பயனைக் கொள்ளும் பாட்டை முடிப்பது சிலேடை எனப்படும்.

பாடல மேறிப் பகைக்கிள்ளை யார்த் தோட்டிச்
சேடலர்தன் பூத்த தினைகாத்தா - னுடக

மார்ந்த கவிகையால் யாதனையு மாங்கோட்டி
யோர்ந்துறைமே லுற்று ெனளி.

பாடல மரத்திலேறிக் கிளிகளைக் கூப்பிட்டோட்டிப் பூத்த தினைப் புனம் காத்தான்; துவரங் காட்டி னிறைந்த குரங்குகள் யாவையுங் கையா லோட்டினுன் என்பது ஒருபயன். குதிரை ஏறி பகைவர் பரிப்படையைப் பொருதோட்டித் தன்னுட்டுச் சிறுமை காத்தான்; அளித்த பொன் னிறைந்த கொடையா லாங்கில்லாம்படி துன்பங் களை ஓட்டினுன் என்பது பிறிதொரு பயன்.

368 சங்கீரணம் என்ப தகும் பல அணி வகை
கொங்கீரத் தொடை எனக் கூட்டிக் கூறலே

மேற்கூறிய அலங்காரங்கள் பலவும் கலந்து கூடிவரத் தாம் உரைப்பது சங்கீரணமாம்.

369 சொல்லணி ஆறைந்தும் பொருளணி ஐயாறும்
புல்லணி இருவகை புணர்ந்த தொகை என
முத்தமிழ்க்கு இவை எலாம் முகம் மறை சிகை பொறை
அத் தகைத்து ஆகா அணிகளுகக் கொண்டு
எந்நூற்கும் முதலாம் யுத்தி அஃது இல்லால்
அந்நூல் பித்தன் அகங்கை வாள் என்ப.

இவ் அதிகாரத்துள் விளக்கிய சொல்லணி முப்பதும் பொருளணி முப்பதும் இயலிசை நாடகம் என்னும் முத்தமிழ் அழகுறப் புனைதற்கு உரியன. ஒழுங்கும் மட்டும் இன்றி இவ் அணிகள் வராமல், உரைக்கும் பொருட்கு இருள் உறுமை பேணிப் பயன் கொளல் வேண்டும். இவற்றிற் கெல்லாம் யுத்தியே முதற்காரண மாக வேண்டிற் றென்றது. அஃது இல்லா தாயின் கற்ற நூலெலாம் தன்னைக் கொல்வதற்கு ஏதுவாக நிற்கும் பித்தன் கை வாளே ஒக்கும் என்றுர் புலவர்.

370 எந்நூல் நிலையினும் இயைபெலாம் உணர்த்தும்
அந்நூல் அரியது என அஃதினும் ஒருநூல்
காட்டிய பலநடைக் கடைப்பிடித்து அவற்றொடு
கூட்டிய மற்றவை கொள்ப நல்லோர் என
எழுத்துச் சொல் பொருள் யாப்பு அணி என்று இவண்
வழுத்திய ஐம்பொருள் வழக்கம் சுருக்கித்
தொன்னூல் நடையொடு சிறந்த புறநிலை.

பல்நூல் நடையில் பழையன கழிதலும்
புதியன புகுதலும் புலமையின் மிக்கோர்
விதி என இம்முறை விரும்பி வழுவில
முந்நூல் விளக்கிய முத்தமிழ்த்
தொன்னூல் விளக்கம் துலங்கிய வாறே.

எவ்வகை நூலினும் அவ்வவற் றுரியன எல்லாவற்றையும் முழு துரைத்து முடிவது முற்றுணர்ந்தோர்க்கும் ஏலா அருமையாகையில் இங்கண் உரைத்தவற்றைப் பற்றுக் கோடாகக் கொண்டு உரையாதனவும் உணர்வது அறிவோர் தொழில். அன்றியும் தொன்னூலை விளக்கிய புதுநூலாக ஈண்டுச் சொல்லப்பட்ட ஐந்திலக்கண வழியே தொன்மையில் செந்தமிழ் நூலில் வழங்கிய சிற்சில ஒழிப்பினும் இன்று அந்நூலிற் புதியன சிற்சில விதிப்பினும் அவையெல்லாம் கால வேற்றுமை யானும் புறநிலை நூலின் வழி வந்தமையானும் வழுவென்று இகழப்படா.

மாணுக்கன் தொழுது உரைத்தவாறு;

மெய்ப்பொரு ளொருபொருண் மேவி யேத்தவுஞ்
செப்பரு மறைப்பொரு டிசையெலாம் வழங்கவும்
வேதப் பயின்றரும் வெளிறில வாயா
லோதித் தொன்னூ லுடைப்பயன் பொதுப்படச்
செந்தமி ழுணர்ந்து தெளிந்த முன்னோர்
தந்த நடையொடு சிலபுற நடையியைந்
தெண்ணைந் தெழுத்துஞ் சொன்னூற் றிரண்டு
மெண்ணே ழிரண்டு பொருள் யாப் பொருநூறு
மெண்ணெட் டாறணி யெனச்சூத் திரத்தொகை
யெண்ணூற் பத்தைந்து மீரைந்து மாக
வருந்தமி ழிலக்கண மைந்தையும்
விரித்து விளக்கினன் வீரமா முனியே.

ஆதி நூலோதிய வோராதிப் பொருடேரா
ஞேதி நூலாய்ந்து முணர்வானே - கோதினூற்
கற்றூலுங் கற்ற பயனுண்டோ வக்கடவு
ளெற்றூலு மேத்தாக் கடை.

இந்நூற்குக் கலைவல்லவர் தெருட்குரு வென்னுஞ் சிறந்த நாமஞ் சூட்டினர். அஃது என்னையோ வெனின்:

அருட்கலைஞேர் முத்தமிழ் நூலுரைத்த வறமுதனூற்
பொருட்களை யாய்ந்துழி எல்லோர் தெரித்த புதைபொருளின்
மருட்களை நூக்கிப் பொருட்பயன் சூட்டி வழுத்துதலாற்
றெருட்குரு நாமந் தொன்னூல் விளக்கிற்குச் சிறந்ததுவே.

# வீரமாமுனிவர் நூற்றொகை


1. *அர்ச் கித்தேரி அம்மாள் அம்மானை:*
   (அ) ஜே.ஜி. சுந்தரம் (உரை); ஆர்: ஞானப்பிரகாசம் (பதி) தே. நொபிலி பிரஸ்; மதுரை; 1947; 10+114 பக்
   (ஆ) இறைக்குருவனார் (உரை); கழகம்: மு.ப. மார்ச்: 1977; 14+151
2. *சதுரகராதி:*
   (அ) வீரமாமுனிவர்; சென்னை சங்கம், 1824: 399.
   (ஆ) சென்னை, பப்ளிக் இன்ஸ்டரக்ஸன் பிரஸ்; 1860; 6+506.
3. *சுவாமி வீரமாமுனிவர் நினைவு மலர்:*
   கத்தோலிக்க சேவா சங்கம்; தல்லாகுளம்; மதுரை; 1944; 82 ரூ 1-25
4. *தமிழ் உரைநடையும் வீரமாமுனிவரும்:* (கட்டுரை)
   தமிழ் மறுமலர்ச்சி; பிரான்சிஸ் முராயிஸ்; அமுத நிலையம்; ஏப் 1961; 42-45 பக்.
5. *தமிழ்த் தொண்டர்* (வீரமா முனிவர்)
   ஜே,ஜி. சுந்தரம்; தமிழ் இலக்கியக் கழகம்; தூத்துக்குடி; இ.ப. 1950; 6+110.
6. *தமிழ் நூல் விவர அட்டவணை:* தொகுதி: 1; பகுதி:1,
   மு. சண்முகம் (பதி) 1961; பக் 327
7. *தமிழ் வளர்த்த தைரியநாதர் என்னும் வீரமாமுனிவர்:*
   பண்டராம் நம்பியார்; ஜெயகுமாரி ஸ்டோர்ஸ்; நாகர் கோவில்; மு.ப. 1955; 1968; 1970; 188; ரூ 2-50.
8. *தித்திக்கும் தேம்பாவணி:* (கட்டுரை)
   எட்டாவது கருத்தரங்கு ஆய்வுக் கோவை-1;
   பா. வளன் அரசு; மைசூர் இந்திய மொழிகள் மைய நிறுவனச் சார்பு வெளியீடு; 1976; 426-430; ரூ 18
9. *திருக்காவலூர்க் கலம்பகம், அன்னை யழுங்கலந்தாதி, தேம்பா வணியிற் சில பாடல், வண்ணம், வாமன் சரித்திரம்; அ. முத்து சாமி பிள்ளை எழுதிய வீரமாமுனிவர் சரித்திரம்.*
   அப்பாவுபிள்ளை+ஞானதிக்கப்பிள்ளை (பதி); 1843; 103.
10. *திருக்காவலூர்க்கலம்பகம் மூலமும் உரையும்:*
    அருளப்ப முதலியார் (உரை); தத்துவ போதினி அச்சுக் கூடம் சென்னை; 1872; 12+124.

11. திருக்குறள் இலத்தின் மொழி பெயர்ப்பு (ஐந்து அதிகாரங்கள்)
வி.மி. ஞானப்பிரகாசம் (மொழி); வீரமா முனிவர் தமிழாய்வுக் கழகம்; கருமாத்தூர்; பிப் 1977; 32.

12. திருக்குறளும் தேம்பாவணியும்; (கட்டுரை)
ஆராய்ச்சிக் கட்டுரைகள்; ரம்போலா மாஸ்கரேனஸ்; ஒற்றுமை நிலையம்; தி. நகர்; சென்னை: 1966; 115-132; ரூ 2

13. தேம்பாமாலை (தேம்பாவணி தொகுப்பு):
புதுவை சன்ம விராக்கினி மாதாகோயில் அச்சுக் கூடம்; 242 பக்.

14. தேம்பாவணி: (கட்டுரை)
மணியும் அணியும்; ஆர்.எல். ஆரோக்கியம் பிள்ளை + ஜி. பொனிபாஸ்; தமிழ் இலக்கியக் கழகம்; தூத்துக்குடி; மு. ப 1959: 1961 1962; 52-111; ரூ 1.

15. தேம்பாவணி (சுருக்கம்)
வி. மரிய அந்தோணி (உரை); தமிழ் இலக்கியக் கழகம் மு.ப. 1960: 653;

16. தேம்பாவணி (1,2,3 காண்டங்கள்)
(அ) புதுவை சன்ம விராக்கினி மாதாகோவில் அச்சுக் கூடம் 1851-1853; 502; 395; 579;
(ஆ) ரா.லே. ஆரோக்கியம்பிள்ளை (உரை); தமிழ் இலக்கியக் கழகம்; மு. ப. 1961-1964: 396: 250; 356; ரூ 4-50; 3; 3.50

17. தேம்பாவணி விருத்தியுரை; (1 காண்டம்)
ஏ.எஸ். ஜெகராவு முதலியார் (உரை); 1901; 804.

18. தேம்பாவணி – நாட்டுப்படல விளக்க உரை
சங். ரா. ஞானப்பிரகாசம் சே. ச + ரா. லே. ஆரோக்கியம் பிள்ளை (பதி): தே. நொபிலி அச்சகம்: மதுரை; 6+94.

19. தேம்பாவணி வசனகாவியம்;
ச. ஜெகராவு முதலியார் 1887; 311.

20 தேம்பாவணி வசன பாடம்:
ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம்; சென்னை; மு.ப. 1940;1947; 1957; ஜூலை 1958; 87: அணா 10.

21. தேம்பாவணி வசனம்
எம். ரம்போலா மாஸ்கரேனஸ்; ஒற்றுமை ஆபிஸ்; 8. வியாசராவ் தெரு; தி. நகர்; சென்னை: 1953;75; அணா 10.

22. தேம்பாவணி ஆராய்ச்சி:
ஜே. ஜி சுந்தரம்; தமிழ் இலக்கியக் கழகம்; மு.ப. 1945;1959 91; அணா 12.

23. தேம்பாவணியில் உவமையின் பங்கு: (கட்டுரை)
ஆய்வுத் தொகை-2. சா. மேரி புஷ்பராணி; கேரளப் பல்கலைக் கழகத் தமிழ் துறைப் பழைய மாணவர் மன்ற ஆண்டு வெளியீடு. தொகுப்பு-டாக்டர் ச.வே. சுப்பிரமணியன்; மு.ப. சூன் 1974; 68-74; ரூ 10.

24. தேம்பாவணிச் செல்வம்:
புலவர் செந்துறை முத்து; சேகர் பதிப்பகம்: போஸ்ட் ஆபீஸ் தெரு; சென்னை-1; மு.ப. மார்ச் 1965; 117; ரூ 3.

25. தேம்பாவணிச் சொற்பொழிவுகள்;
தமிழ் இலக்கியக் கழகம்; மு ப. 1960; 22+130+8. ரூ 1-40.

26. தேம்பாவணிக் கீர்த்தனை:
பு.ஆரோக்கிய நாதர்; பு. ஞானதிகநாயகர் (பதி); செயின்ட் ஜோசப் ஆர்ப்பனேஜ் அச்சுக் கூடம், செங்கல் பட்டு; மு. ப. 1863; இ. ப. மார்ச் 1931; 14+240+2.

27. தொன்னூல் விளக்கம் (மூலமும் உரையும்)
ஜி. மெக்கன்ஜி. காபன் அய்யர் (பதி); அர்ச். சூசையப்பர் அச்சுக் கூடம்; சென்னை; இ. ப. 1891; 8+268.

28. தொன்னூல் விளக்கம் (கட்டுரை)
இலக்கண வரலாறு; சோம. இளவரசு; தொல்காப்பியர் நூலகம்; 107, கனகசபை நகர்; சிதம்பரம்; மு. ப. செப் 1963; 206-208; ரூ 4-75.

29. தொன்னூல் விளக்கம்-நுண் மதிப்பீடு (கட்டுரை)
இலக்கண ஆய்வுக் கட்டுரைகள்; டாக்டர் ச. வே. சுப்பிரமணியன், அண்ணாமலைப் பல்கலைக் கழகம்: மு. ப. 1974; 209-218; ரூ 12.

30. தொன்னூல் விளக்கம்-விளக்கவியல் இலக்கணமும் சொல்லடைவும்:
ஏ. ஜே. காட்வின்: முதுகலைத்தேர்வுப் பொருட்கட்டுரை: கேரளப் பல்கலைக் கழகம்; 1973; 78+255.

31. நாட்டுக்கு உழைத்த நல்லவர்—வீரமாமுனிவர்:
பூவண்ணன்; பழனிப்பா பிரதர்ஸ்; மு. ப. நவ. 1976; 39; ரூ 2.

32. பரமார்த்த குருவின் கதை:
(அ) பெஞ்சமின் பேபிங்டன் (ஆங்கில மொழி) ஜே. எம். ரிச்சர்டுசன்; 23, கார்ன்ஹில்; 1522; 12+143
(ஆ) கழகம் மார்ச் 1951; ஏப் 1954. சூன் 1957; ஆக. 1960;63
(இ) வீரமாமுனிவர் ஆய்வுக் கழகம்: அருள் ஆனந்தர் கல்லூரி: கருமாத்தூர்; 1975; 8+71; ரூ 2-50.

33. வித்தகர் வீரமாமுனிவர் சிறப்புமலர் (மூன்றும் நூற்றுண்டு நினைவு விழா)
பாளையங் கோட்டை; நவ 1977.

34. வீரமாமுனிவர்; (கட்டுரை)
(அ) கிறித்துவமும் தமிழும்; மயிலை சீனி. வேங்கடசாமி; கழகம்; மு.ப. 1936: ஆ.ப. ஆக. 1971: 74-87.
(ஆ) கிறிஸ்தவத் தமிழ்த் தொண்டர்; எஸ். ஆர். சுப்பிரமணியபிள்ளை: பப்ளிஷர்ஸ்; திருநெல்வேலி ஜங்ஷன் மு. ப. 1946; 1947: 1-10: ரூ 1-25
(இ) தமிழ்ப்பணி: ஆ. குருசாமி ஐயர்: தமிழ் நாடு நூற்பதிப்பகம்; இலிங்காயத்தார் தெரு; உறையூர்; திருச்சி; 1960; 88-99; ரூ 1-25.
(ஈ) தமிழ் மறுமலர்ச்சி: சே. ச. பிரான்சிஸ் முராயிஸ்; அமுத நிலையம் பிரைவேட் லிமிடெட்; தேனும்பேட்டை; சென்னை-18 ஏப் 1961; 34-41;
(உ) கிறிஸ்தவத் தமிழ்ந் தொண்டர்கள்; ரம்போலா மாஸ்கரேனஸ்; தமிழ்த் இலக்கியக் கழகம்; திருச்சி; மு. ப. ஜூன் 1972; 81-95; ரூ 3.

35. வீரமாமுனிவர்:
ஆ. மாரிமுத்து; வள்ளுவர் பண்ணை; 19,2 வது மெயின் ரோடு சி.ஐ.டி. நகர்; சென்னை; செப் 1970; 78; ரூ 1-75

36. வீரமாமுனிவர் நாடு; (கட்டுரை)
கரந்தைக் கட்டுரை வெள்ளிவிழா நினைவு மலர்; ரா.பி. சேதுப்பிள்ளை; கரந்தைத் தமிழ்ச் சங்கம்; தஞ்சை; 1938; 31-35.

37. வீரமாமுனிவரின் கொடுந்தமிழ் நடை: (கட்டுரை)
உரை நடைத்திறன்; சூ. சோசபு சுந்தரராசு; எழிலரசுப் பதிப்பகம்; 7, தேவலோகத் தெரு; பாளையங் கோட்டை; நவ. 1973; 59-88; ரூ 5.

38. வீரமாமுனிவர் கலம்பகம்:
துரை. சுந்தர மூர்த்தி (எழில் வண்ணன்); தமிழ். இலக்கியக் கழகம்; திருச்சி; மு.ப. 1977; 26+48; ரூ 2.

39. வேதவிளக்கம்:
வீரமாமுனிவர்; புதுவை மாதாக் கோயில் அச்சுக் கூடம் மு.ப. 1918; 281.

40. வேதியரொழுக்கம்:
ஜே. பெஸ்கி: தி ரிலிஜியஸ் ட்ராக்ட் அண்டு புக் சொசைட்டி; எஸ். பி. சி. கே. பிரஸ், வெப்பேரி: 1898; 8+159.

41. A Catalogue of the Tamil Books in the Library of the British Museum :
Compiled by L. D. Barnett & G. U. Pope; The British Museum; 1909; 52-55.

42. A Grammar of the Common Dialect of the Tamil Language called கொடுந்தமிழ்.
அ Kal. Julii (edi;, in Latin) 1843, 8+218+28.
ஆ George William Mahon (Tr); The Christian Knowledge Society's Press; Vepery; 1848; 7+147.
இ Saraswathi Mahal; 1971; 11+248; Rs. 15.

43. A Grammar of the High Dialect of the Tamil Language called செந்தமிழ்:
Benjamin Guy Babingtion (Tr), Saraswathi Mahal, 2nd edi, 1974, 8+186.

44. Beschi the Tamil Scholar and Poet (Essay)
Tamil culture. Vol. III; Srinivasan Thomas; 1854; 297-313

45. Constantius Beschi (Essay)
Christian College Magazine; G Mackenzie Cobben; Oct, 1891. 272-278.

46. Dissertations on Tamilology :
Dr. Annie Thomas, International Institute of Tamil Studies. Adaiyaru; Madras, 1st edi, March 1977, Rs. 10.
1. Contribution of Father Beschi to Tamil, V. M. Gnana-Pragasam, Ph. D. Thesis; Madras University, 1965.
2. Language of Paramartta Kurukatai, A. V. Josephine Dorothy; M. A. Thesis, Kerala University, 1969, 10+134+121,
3. Tēmpāvani Oru tiraṉāyvu, M. A. Thesis, Madurai University; 58.
4. Tempavaniyil Kappiyap panpukal, M. Pascal Arun Ilango, M. A. Thesis; Madurai University. 1971;60.
5. Tēmpāvaniyil uvamikal. S. Mary Pushparani; M. A. Thesis, Karala University, 1972, 4+184.

57, Father Beschi of the Society of Jesus His Times & his Writings.
L. Besse. St. Joseph's Industrial School Press. Trichiropoly, 1918, 4+246, R.1.

48. The Sacred Kural of Tiruvalluvanāyanār with Introduction grammar, Translation, Notes, Lexicon, and concordance (In which are reprinted Fr, C. J. Beschis and F. W. Ellis Versions.)
G. U. Pope, Henry Frowde (edi) Oxford University Press Warehouse: Amen Corner; Newyork; 1886, 28+328+80.

## சூத்திர முதற்குறிப்பு அகராதி

*[எண்கள் நூற்பா எண்களாகும்]*


அ

அஇஉம் முதல் 100
அகத்திணை யியல்பே 151
அகப்பொருள் 199
அகவற்கரசர் 296
அகவற்ருழிசை 244
அங்கமாலையே 262
அசைநிலை பொருணிலை 198
அசையே நேர்நிரை 204
அட்ட மங்கலம் 274
அடிமறி மாற்றே 313
அடியிணைப்பொழிப் 218
அடியென்பதளைத்த 211
அடுக்கணி 317
அடைசினை 93
அடைமொழி 28
அண்மையினியல்பு 78
அணியெனச் சொல் 302
அத்தந்திலன்றம்ம 137
அதனேடைம்முதல் 63
அந்தாதியடிக் கடை 217
அம் ஆம் என்பன 106
அம்போதரங்கம் 231
அம்முதலீராறு 8
அமைவணியல்லவு 365
அருட்கலைஞோர்
அல்வழி 22
அவநுதியென்ப வாய்மெய் 345
அவற்றுள் 152
அளவின் ரெழுகையா 98
அளைமறி பாப்பே 311
அறப்புறங் காவலனைவர்க்கு 185
அறிவருளாசை 139
அன் ஆன் அள் ஆள் 84
அன்மை வினை 126

ஆ

ஆகுபெயரென்ப 40
ஆசிரியத்துறை 240
ஆசிரியத்தொலி 223
ஆசுமதுரஞ் 299
ஆதிநூலோதிய
ஆமாகோனவ் 67
ஆமாவல்வழி 32
ஆய்தங்குறில் 13
ஆற்றுப்படையென்ப 266
ஆறனுருமை 61

இ

இசையந்தாதியே 316
இடனெனப்படுவது 181
இடுகுறி காரணம் 7
இடைச்சொற்றணி 130
இணைக்குறண் 225
இணைமணிமாலை 282
இதரே தரமென்ப 331
இயற்சொல் 43
இயைபிசை சொல் 323
இரட்டை மாலை 278
இரண்டாவதனுருபை 57
இருதிணை மூவிட 142
இருபா விருபதாம் 265
இருமொழி 38
இலேசமே கருத்தொளி 353
இறந்தகாலத்திடைநிலை 108
இன்சொல்லுரிமை 336

ஈ

ஈதா கொடுவெனும் 115
ஈரசையைஞ்சீர் 300
ஈறுபோயிடை 39

உ

உண்மை யுவமை 339
உணவெண் 290
உதாத்தம் பொருளிற் 355
உம்மீற்ற வெச்சத் 118
உம்மையே யெதிர்மறை 134
உயிர் கசபத 10
உயிர்நெடி 18

உயிர்ம விலாறும் 48
உயிரிடை 3
உயிரே மெய்யணை 11
உயிரே குறினெடி 40
உரிச்சொல்லென்ப 138
உருவகமென்ப 341
உலாவென மலைநதி 260
உவ்வீறு 65
உவமையென்ப 328
உவமை யெனப்பிறி 155
உவமை வழுவென்ப 340
உவமை விகற்பித் 329
உறுப்புச் செய்யுள் 192

ஊ

ஊகாஞ்சித மென்ப 346
ஊசலென்ப ஆசலாய் 276

எ

எ,ஒவ்வும் 6
எச்சமே தொழில் 117
எச்சொல்லும் 42
எஞ்சணி யென்ப 318
எட்டனுருபே 69
எண்வகை எட்டனுள் 136
எதிர்கால விகுதி 111
எதிர்மறைக்கிடை 112
எதிர்மறைப் பகுபதத் 87
எதிர்மறை யெச்சத் 121
எதிர்மறை யேவற் 114
எதிர்வருங் காலத் 110
எதுகையென்ப 214
எந்நூனிலையினும் 370
எப்பெயர்க்கண்ணும் 70
எப்பொருளெச்சொலின் 82
எப்பொருளெவ்வழி 165
எயா முதலும் 102
எல்லாமென்பது 66
எழுத்தசை சீர்தளை 203
எழுத்தின் பொருத்தமே 287
எழுவா யுருபாம் 56
என வென்பதுவமை 133
எனவொழித் தொழிந்த 120

ஏ

ஏயென்னிடைச்சொல் 131
ஏவலொருமை 113
ஏழனுருபு 62

ஐ

ஐஆன்கு 64
ஐத்தனித்தளவு 16
ஐந்தாவதனுருபு 60
ஐயங் கொண்டன 335
ஐயந்திணைபாலணையும் 128
ஐயிறுங்குணப் பெயர் 92
ஐயிறு பொதுப் பெயர் 71

ஒ

ஒட்டெனத்தன் 344
ஒப்பணி திரிபியை 320
ஒப்புமைக் கூட்ட 356
ஒப்புமை யேற்ற 357
ஒருங்குமுன் விரித்துரை 163
ஒருசார்னவ்வீற் 72
ஒருபா வொருபதாம் 264
ஒருமையிற் பன்மை 81
ஒருமொழி 45
ஒழிபணி பல 365
ஒழுக்க மென்ப 190
ஒழுகிசைச்சீர் 322
ஒன்பதொழித்த 97
ஒன்று துவ்வுறின் 80
ஒன்று முதலீரைந் 95
ஒன்று முதலெட் 96

ஓ

ஓபிரிப்பசை நிலை 132
ஓரொரு வீரிரு 94

க

கட்டளைக் கலிப்பா 236
கண்ணிம்மை 19
கணமியல் பொருத்தமே 294
கதியின் பொருத்தம் 293
கலம்பகத்துட் புயங் 258
கலிக்கே வணிகங் 297
கலித்தளை வெண்சீர் 209
கலித்தாழிசையே 245
கலித்துறை நெடிலடி 241
கலி முதலுறுப் பாந்தரவு 228
கலியொலி துள்ளல் 227
கலையணி 301

கா

கார் காலத் துரிமை 167
காரக மென்ப 159
காரண நான்கும் 158
காரண மில்லன 54
காரண வழியென 150
காலமே பருவம் 166

கு

குளகமொரு வினை 252
குறட்டாழிசை 243

குறள் சிந்தின்னிசை 222
குறிஞ்சிக் கருப்பொருள் 176
குறிஞ்சிபாலை முல்லை 174
குறித்தவை காட்ட 157
குறிப்பு மொழி 195
கூ
கூடாவுமை 337
கூதிர்க்குரிமை 168
கொ
கொங்கண மகதங் 193
கொச்சகக்கலி 234
கொண்டு கூட்டென்ப 312
கோ
கோவையே யகப் 277
ச
சங்கீரணமென்ப 368
சஞயவரின் 27
சந்தவிருத்தந் 249
சமமென்ப மாத்திரை 324
சா
சாதிநிலநிறந் 295
சாரியை யென்ப 52
சி
சித்திர வணியே 364
சிறை முதல் யாப்புற 202
சிலபல தம்மொடு 31
சிலேடையென்ப 367
சிறப்பணி 129
சிறப்புப் பெயர் 187
சின்னப் பூவென 263
சு
சுரிதகமென்ப 232
சுவையணி யென்ப 354
செ
செந்தமிழ் வழக்குரை 194
செய்யுடெரிவுற 251
செய்யுமென் முற்றே 107
செருக்கள வஞ்சி 270
சொ
சொல்லணி மறிநிலை மிகலெஞ்ச 303
சொல்லணி மறி நிலையைந்துங் 325
சொல்லணி யாறைந்தும் 369
சொல்லின் பொருத்தம் 286
சொல்லெனப் படுவதன் 191
சொல் விலக்கொன்றனே 352
சொன் மிக்கணியென்ப 314
சொன்னூலடையா 1
ண
ணன முன் தகரம் 24
த
தமிழ் வேற்றுமை 34
தரவு தாழிசை 229
தலையாகெதுகை 215
தளையாஞ்சீர் 207
தன்மேம்பாட்டுரை 349
தன்மையணியே 327
தனிக்குறிலல்லவற் 15
தனிக்குறிலீற்று 33
தனிக்குறின்மெய் 36
தனி வழி ஐயுந் 35
தா
தாப்பிசை முதற்கடை 310
தான்தாம் நாமுதல் 68
தானமே 288
தி
திசையொடு திசையும் 99
திணை நிலஞ்சாதி 197
திணையிரண்டென 50
திரிசொல் 44
திரி பழி 21
திரிபியை 321
து
துறைதாழிசை 239
தெ
தெய்வஞ் செல்வர் 175
தெய்வ வணக்கமுந் 148
தெவ்வென்ப 29
தே
தேனெனு மொழி 25
தொ
தொகுபெயர் வேற்றுமை 91
தொகைநிலைச் செய்யுள் 253
தொகைநிலை யென்ப 88
தொகைநிலை வகைப்படின் 89
தொகைநிலை விரித்து 90
தொகை விரித்துரைத்தல் 153
தொடர் அ இ உ 101
தொடர்நிலைப் பொருளினுஞ் 254
தொடையென்ப தீரடி 212
தோ
தோற்றமும் வகுப்பும் 2
தோன்றன் மறைதல் 141
ந
நஞ விடைப் பகுத்த 85

நா
நாளின் பொருத்தம் 292
நான்கா வதற் குருபு 59
நான்மணி மாலையே 272
நி
நிகழ் பொழுதா நின்று 109
நியமமாம் பிரிநிலை 334
நிரனிறையா நிறை 308
நிலமண்டிலத் தெங்கு 226
நீ
நீட்டல் சுழித்தல் 12
நீதி வழங்கலு நிலை 146
நு
நுட்பமாந் தெளிவுற 347
நெ
நெய்தற் கருப்பொருள் 180
நே
நேரிசைச் சிறுமை 224
நேரிசை யம்போதரங்க 233
நேரே நிரையே 205

ப
பகாப்பத மென்ப 46
பகுபத மொன்றுய்ப் பல வொருங் குணர்த்திப் 47
பகுபத மொன்றுய்ப் பலவொருங் குணர்த்திற் 83
படைக்கலம் பயிறலும் 184
பண்பெனச் சாதியும் 182
பத்திய மென்ப பாவொடு 250
பதிகங் காரணம் 147
பரணிக் காயிரம் 259
பல்வகை வடிவிரு 140
பலசந்தமாலை 275
பலர்பால்ரவ்வுங் 79
பலவினைக்குரிய 196
பன்மணிமாலை 280
பன் மனந்துணிய 164
பா
பாப் பொருளளவாதி 283
பாயிரத்துப் பொருள் 149
பாலெனக் 289
பாலைக் கருப்பொருள் 177
பி
பிள்ளைக்கவியின் 257
பிறிதுரையணியே 361
பின் பனிக்குரிமை 170
பின் வரு நிலையே 350

பு
புகழ்ச்சி மாலையாம் 269
புகழ் மாற்றென்ப 348
புறத்திணை யொழுக்க 161
புறநிலை யொப்பிழி 156
பூ
பூட்டு வில்லென்ப 309
பெ
பெயர் வினையும்மை 319
பெயரே யேற்றி 104
பெயரே வேற்றுமை 53
பெருங்காப்பிய நிலை 256
பொ
பொதுச் சீரிறு தியு 206
பொதுவெனப் 154
பொருட்டொடர் 255
பொருணூலென்பது 144
பொருள்கோளு 305
பொருளணியாறைம் 326
பொழுது கொள்வினை 105
பொழுதெனமாலைக் 173
ம
மகரம் லளக்கீழ் 17
மங்கலப் 285
மடக்கணியோர் 315
மடலென்பது 261
மணிமாலை வெண்பா 279
மருட்பா 238
மருதக் கருப்பொருள் 179
மறிநிலையுரிமை 304
மறுபொருளாம் 333
மா
மாலையுவமை 338
மாலையே யகவலால் 268
மு
முச்சயத் தொழிற் 41
முதல் சார்புயிரே 4
முதலீற்றுயிரிரு 20
முதலெழுத்துயிரீ 5
முதன் மொழி 284
முப்பொருளை வழி 200
மும்மணிக் கோவையே 281
முல்லைக் கருப் பொருள் 178
முன்பனிக் குரிமை 169
முன்ன விலக்கென்ப 351
முன்னவை பின்னவை 160
மூ
மூவிடந்தன்மை 51

மூன்றுவதனுரு 58
மெ
மெய்ப் பொருள் 143
மெலிவுறி ற்பாவிடை 37
மொ
மொழி மாற்றென்ப 307
மோ
மோனேக்கினமே 213
மோனே முதலடி 216
ய
யம்முதலிய்யா 14
யரழ முன் வலிவரின் 30
யா
யாப்புற நலமெலா 201
யாற்றுப் புனலே 306
ர
ரவ்வீற்றுயர் 74
ல
லகாரவீற்றுயர் 75
ளவீற்றஃறிணைப் 77
லள வேற்றுமைபிற் 25
வ
வசந்தத்துரிமை 171
வஞ்சிக் கீறதியல் 298
வஞ்சிக் கோசை 237
வஞ்சித் தளையாம் 210
வஞ்சித் தாழிசை 246
வஞ்சித் துறை 242
வட நடைப் பகுபதம் 86
வடிவளவூறு 189
வண்ணக மளவடி 230
வரல்தரல் 122
வரலாற்று வஞ்சி 271
வருக்கமாலையாம் 267
வருணப் பொருத்தமே 291
வரைப்படு மெண்ணும் 135
வலிகசடதபற 9
வலிவரின் மஃகான் 23
வழக்குந் தேற்றந் 145
வழுவா முரிமை 127
வன்னியர் மன்னர் 183
வி
விசேடமெனக் 359
விடையில் வினுவே 362
விபரீத பொருளா 332
விபாவனையென்ப 358
வியங் கோளியலும் 116
விரிவென வணி வழி 162
விரிவென வருபொருள் 330
விருத்தமென்ப 247
விருத்த விகற்பம் 248
விருத்த விலக்கணம் 273
விரோத மென்ப 360
வினவில் விடையே 363
வினைக் குறிப்பென்ப 123
வினைக் குறிப்பெஞ்சி 125
வினைக் குறிப்பொன்றன் பால் 124
வினை முற்றொரு 103
வினையெச்சங் கொள் 119
வெ
வெண் கலிக் களவடி 235
வெண்டளை யென்பது 208
வெண்பாவகவல் 219
வெள்ளைக்கியற்சீர் 220
வெள்ளையுட் பிறதளை 221
வெறுப்புவப் 188
வே
வேத மாந்தர் 186
வேற்றுப் பொருள் 342
வேற்றுமைப் படுத்தலின் 55
வேற்றுமை யென்ப 343
வேனிற் குரிமை 172
ள
ளஃகானுயர் 73
ன
னவ்வீற்றுயர் 76

## ஆசிரியரின் நூல்கள்

| | | Rs. | P. |
|---|---|---|---|
| 1. | Descriptive Grammar of Chilappathikaram | 18 | 00 |
| 2. | Grammar of Akanaanuuru | 15 | 00 |
| 3. | Studies in Tamil Language and Literature | 5 | 00 |
| 4. | இலக்கணத் தொகை—எழுத்து | 7 | 00 |
| 5. | இலக்கணத் தொகை—சொல் | 10 | 00 |
| 6. | மொழிக் கட்டுரைகள் | 5 | 00 |
| 7. | காந்தி கண்ட மனிதன் | 3 | 00 |
| 8. | இலக்கிய நினைவுகள் | 3 | 00 |
| 9. | சிலம்பில் சில பரல்கள் | 3 | 00 |
| 10. | மாந்தர் சிறப்பு | 3 | 00 |
| 11. | இலக்கியக் கனவுகள் | 4 | 00 |
| 12. | தமிழில் விடுகதைகள் | 10 | 00 |
| 13. | அடியார்க்கு நல்லார் உரைத்திறன் | 12 | 00 |
| 14. | ஒன்று நன்று | 8 | 00 |
| 15. | வீர சோழியம்—ஒரு திறனாய்வு மூலமும் கருத்தும் | 5 | 00 |
| 16. | தாயுமானவர் | 3 | 00 |
| 17. | சிலம்பும் சிந்தாமணியும் | 8 | 00 |
| 18. | இலக்கணத் தொகை—யாப்பு -பாட்டியல் | 34 | 00 |
| 19. | தொன்னூல் விளக்கம் | 6 | 00 |
| 20. | கம்பன் கற்பனை | 10 | 00 |

## பதிப்பாசிரியர்

| | | | |
|---|---|---|---|
| 21. | இளவேனில் - தொகுதி 1 | 4 | 50 |
| 22. | இளவேனில்—தொகுதி 2 | 6 | 00 |
| 23. | இளவேனில் - தொகுதி 3 | 10 | 00 |
| 24. | ஆய்வு மலர் | 10 | 00 |
| 25. | ஆய்வுத் தொகை | 10 | 00 |
| 26. | யார் - எவர் | 1 | 00 |
| 27. | ஆராய்ச்சி நெறிமுறைகள் | 5 | 00 |
| 28. | தமிழ் இலக்கியக் கொள்கை—தொகுதி 1 | 10 | 00 |
| 29. | தமிழ் இலக்கியக் கொள்கை—தொகுதி 2 | 10 | 00 |
| 30. | தமிழ் இலக்கியக் கொள்கை—தொகுதி 3 | 10 | 00 |
| 31. | திறனாய்வுக் கட்டுரைகள் | 10 | 00 |
| 32. | கம்பன் ஆய்வடங்கல் | 15 | 00 |